# DJH3A - HISTORY OF INDIA FROM 1858 TO 1964 A.D

Unit - I

Constitutional Developments in India after Mutiny of 1857- Queen Victoria's Proclamation of 1858-India Council Act of 1861, 1892 and Minto- Morley Reforms Act of 1909- Government of India Act of 1919 – Introduction of Dyarchy-Govt. of India Act of 1935 – Provincial-Indian Independence Act of 1947 – Transfer of power-Relation with Foreign powers-Afghanistan- Burma-Nepal

Unit - II

Princely States-Major Princely States a survey- British policies towards Princely States- Integration of the Indian States- Development of Education- Women's Movement – Dalit upsurge- Peasants and workers Movements – Communal and Separatist Movements- Indian Civil Servants – Development of Press in India.

Unit - III

Major Developments since 1858- Local self Government-Development of Trade and Commerce- Industry, Transport and Irrigation- Development of Science of Technology- Socio – Religious Reform Movement- Brahmo Samaj- Arya Samaj- Ramakrishna Mission – The Theosophical Society- Christian Missionary – Societies.

Unit - IV

Freedom Movement- Indian National Congress- Moderates and Extremists- Muslim League- M.K. Gandhi and M.A. Jinnah-The Gandhian Era- The Amirstar Massacre of 1919- Non- Co-operation movement- Nehru Report 1928- Simon Commission- Civil disobedience movement- Round table conference Communal Award – Poone a Part.

Unit - V

Final Phase- World War II and its impact- Quit India movement- Crips mission, Wavel plan and Cabinet mission- Partition and distribution of power - Reorganisation of Linguistic States - The Post - Independence Era - Five year plans and Economic Developments - Science and Technology-Growth of higher education - India's foreign policy.

Reference Books:

1. A.R. Desai -Social Background to India's nationalism
2. India's Struggle for Independence - Bipan Chandra.
3. Percival Spear - The Oxford History of India.
4. S.Batacharya - Economic Foundation of the British Raj.
5. Selchar Bandopadhyaya from Plasey to Paratition
6. Stanley Welpert - A New History of India (Oxford University Press)
7. Sumit Sankar- Modern India 157-1947 (Macmillan)

# இந்திய வரலாறு (1858 - 1964)

## அலகு - I

## பேரரசியாரின் பேறிக்கை - 1858

1857-ம் வருட சிப்பாய் கலகத்திற்குப் பிறகு கம்பெனியின் ஆட்சியை நீக்கிவிட்டு இந்தியாவைஇங்கிலாந்து ஆட்சியின் கீழ் நேரடியாக கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1858-ம் வருடம் ஆகஸ்டு மாதம் இரண்டாம் தேதி ஒரு சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது 'இந்தியாவில் மிகச் சிறந்த அரசை உண்டாக்குவதற்கான சட்டம்' என வழங்கப்பட்டது. "அரசியாலும், அரசியார் பெயரிலும், நாட்டின் முக்கிய காரியதரிசிகளுள் ஒருவர் மூலம் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபை உதவியுடன் இந்தியா ஆட்சி செய்யப்படும்" என்று அந்த சட்டம் கூறியது.

இந்திய அரசாங்கத்தை கம்பெனியிடமிருந்து இங்கிலாந்து தனது நேரடி ஆட்சியின் கீழ் ஏற்றுக்கொண்டதை இந்திய மக்களுக்கு முறைப்படி அறிவிக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி அப்போது இங்கிலாந்தை ஆண்டு வந்த பேரரசி விக்டோரியாவின் பெயரால் அலகாபாத் நகரில் நடைபெற்ற ஒரு பிரமாண்டமான தர்பாரில் வைசிராய் கானிங் பிரபு ஒரு ணபிரகடனத்தின் மூலம் 1858 நவம்பர் 1ம் தேதி இந்தியாவிலுள்ள பத்து கோடி மக்களுக்கு அறிவித்தார். அதுவே மகாராணியாரின் பேரறிவிப்பு எனப்படுகிறது. 'இந்திய மக்களின் மகாசாசனம்' என்று அது புகழப்படுகிறது.

**மகாராணியாரின் பேரறிவிப்பின் முக்கிய அம்சங்கள்** :

மகாராணியாரின் பேறிக்கை டெர்பி பிரபு என்பவரால் தயாரிக்கப்பட்டு விக்டோரியா மகாராணியால் அங்கீகாரம் செய்யப்பட்டது. இந்த பேரறிவிப்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைனளையும் இந்தியா எதிர் காலத்தில் எவ்விதமாக ஆளப்படும் என்ற உறுதி மொழியையும் கொண்டிருந்தது. அதில் காணப்பட்ட முக்கியமான சாராம்சங்கள் பின்வருமாறு:

1. இதுவரை ஈங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியால் ஆளப்பட்டு வந்த இந்தியா இனி பிரிட்டிஷ் பேரரசியால் நேரடியாக ஆட்சி செய்யப்படும்.

2. இந்திய சுதேச அரசர்களுடன் கம்பெனி செய்து கொண்ட உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் பிரிட்டிஷ் அரசு அப்படியே ஏற்றுக்கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளும்.

3. கானிங் பிரபு பிரிட்டிஷ் நேரடி ஆட்சியின் கீழ் முதல் இந்திய வைசிராயாகவும் கவர்னர் ஜெனரலாகவும் நியமனம் செய்யப்படுவார்.

4. இந்திய சுதேச அரசர்களின் உரிமைகள், மதிப்பு, அந்தஸ்து ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மதித்து நடக்கப்படும்.

5. இந்தியாவின் பழமையான உரிமைகள், வழக்கங்கள்,வழக்காறுகள், நம்பிக்கைகள் ஆகியவைகளுக்கு உரிய மதிப்பு மரியாதையும் கொடுக்கப்படும்,

6. கிறிஸ்துவ மதக் கொள்கைகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசு கிறிஸ்துவ மதக் கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் இந்திய மக்கள் மீது திணிக்காது.எனவே மதத்தின் பெயரால் எந்த இந்தியருக்கும் சலுகை வழங்காது. யாருக்கும் இடையூறோ, அமைதியின்மையையோ ஏற்படுத்தாது. சுட்டப்படி எல்லோருக்கும் பாரபட்சமற்ற பாதுகாப்பு கொடுக்கப்படும்.

7. இந்திய மக்களின் மத வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும் பிரிட்டிஷ் அரசு தலையிடாது முழுமையான மத வழிபாட்டுரிமை வழங்கப்படும்.

8. இப்போழுது இருக்ககூடிய பிரிட்டிஷ் இந்திய பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் ஆசை பிரிட்டிஷ் அரசுக்கு கிடையாது. அதாவது நாடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை

9. இந்திய மக்கிள்ன நல்வாழ்வே பிரிட்டிஷ் அரசின் நோக்கமாகும். மக்களின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தப்படும். கடவுளின் ஆசிர்வாதத்துடன் உள்நாட்டு அமைதி ஏற்படுத்தப்படும்.. நாட்டில்' அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதே எங்கள் தணியாத ஆசை பொது நன்மைக்கான வளர்ச்சி பணிகளுக்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

10. இனம், மொழி, மதம் ஆகிய வேறுபாடுகள் இல்லாமல் கல்வித்திறமை, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியர்களுக்கு அரசுப்பதவிகள் கொடுக்கப்படும். மேலும் கடமையாற்றுவதில் திறமை நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதவியிலமர்த்தும் கொள்கை கடைபிடிக்கப்படும்.

11. ஆங்கில குடிமக்களின் கொலைகளில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் தவிர, 1857-58ம் வருட புரட்சியில் பங்குகொண்ட எல்லா மக்களுக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்படும்.

12. மகாராணியாரின் பேரறிவிப்பால் கடைசிக்கு முந்தின வரி மிகவும் புகழ் பெற்ற வரிகளாகும்.'அவர்களின் வளம், அபிவிருத்தி முன்னேற்றத்திலேயே எங்கள் வல்மை, அவர்களின் மனத்திருப்தியே எங்கள் பாதுகாப்பு, அவர்களது நன்றி உணர்வே எங்களுக்கு கிடைக்கும் சன்மானம் ஆகும்,

**மகாராணியாரின் பேரறிவிப்பு பற்றிய மதீப்பீடு**

மகாராணியாரின் பேரறிவிப்பு இந்திய மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்தது: பிரிடடிஷ் அரசின் பெருந்தன்மையால் மக்கள் பூரித்துப் போய்விட்டனர். வைசிராய் கானிங் பிரபுவை கருணைமிக்க கானிங் என்று போற்றி கொண்டாடினர். வானமே பூமிக்கு வந்து விட்டதை போன்று பெருமகிழ்ச்சியடைந்தனர்.

ஆனால் உண்மையில் மகாராணியாரின் பேரறிவிப்பு வெற்று வார்த்தைகளின் பத்திரம் என்று தான் கூறவேண்டும். "பெருதன்மையான வார்த்தைகளைக் கொண்டது. ஆனால் கருமித்தனமாக நடைமுறைப்படுத்தப்பட்டது" என்று குறை கூறப்பட்டது.

நாட்டின் உயர் பதவிகளில் நிறம், இனம், மொழி வேறுபாடில்லாமல் தகுதி பெற்றவர்களேன நியமனம் செய்யப்படுவர் என்பது வெறும் ஏட்டளவில் தான் இருந்தது. நடைமுறைக்கு வரவேயில்லை. உயர்பதவிகளில் ஆங்கிலேயர் நியமிக்கப்பட்டனர். இந்தியர்கள் எடுபிடி வேலைக்கும், தண்ணீர் இறைப்பதற்கும் தகுதியானவர்கள் என்று

ஆங்கிலேயர் கருதினர். முதல் உலகப் போர் வரை படையிலும் இந்தியர்களுக்கு உயர் பதவி கொடுக்கப்படவில்லை.

நாடு பிடிக்கும் ஆசையில் நாட்டம் இல்லை என்று கூறப்பட்டாலும், சுதேச அரசர்களின் உரிமை அந்தஸ்து ஆகியவை காக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தாலும் நடைமுறையில் சுதேச அரசர்கள் பிரிட்டிஷ் அரசின் மேலாண்மையின் கீழ் செல்வாக்கிழந்தே காணப்பட்டார்கள். பிரிட்டிஷ் அரசின் கைகளில் உள்ள பொம்மைகள் போன்றே விளங்கினர். தங்கள் மதிப்பு கௌரவம் ஆகியவற்றை இழந்துவிட்டனர்.

1858-ம் வருடத்திற்குப் பிறகு உள்ள இந்திய வரலாற்றைப் படித்தால் பேரரசியாரின் பேரறிக்கையில் காணப்படும் எந்தக் கொள்கை செயல்படுத்தப்படவில்லை என்பது புலப்படும்.

## இந்திய கவுன்சிங் சட்டம் 1186

1857ம் ஆண்டு புரட்சி ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையில் இருந்த வேறுபாடுகளை அதிகப்படுத்தி அதிருப்தியை ஏற்படுத்தியது. இவை தவிர நிர்வாகத் துறையிலும் சட்டமியற்றுவதிலும் பல காரணங்களால் சிக்கல்கள் ஏற்பட்டன.

- நாட்டு நிர்வாகத்தில் குறிப்பாக சட்டமியற்றும் பணியில் இந்தியர்களை சேர்த்து கொள்ளாததால் இந்திய மக்களின் மனோபாவங்களையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளாது சட்டங்கள் இயற்றப்பட்டன. நோயாளியை புரிந்து கொள்ளாமலே மருத்துவம் செய்யப் புறப்பட்ட டாக்டர் போல் ஆளப்படுவோரைப் புரிந்து கொள்ளாத ஆட்சியாளர்கள் சிரமப்பட நேர்ந்தது. சட்டகவுன்சிலில் இந்தியர் எவராவது இருந்திருந்தால் 1857 ம் ஆண்டு புரட்சியே நிகழ்ந்திருக்காது என்ற கருத்து அன்னிய ஆட்சியாளர்களைச் சிந்திக்க வைத்தது மான்டேகும், செமஸ் போர்டும், நாட்டின் சட்டமியற்றும் பணியிலிருந்து இந்தியர்களை அறவே நீக்கி வைத்ததினால் எழுந்த அபாயமே சிப்பாய்க் கலகம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
- சட்டமியற்றும் முறையிலும் சில குறைப்பாடுகள் காணப்பட்டன. தலைமை ஆளுநரின் சட்டக் கவுன்சில் ஒரு சிறு பாராளுமன்றம் போல் செயல்பட ஆரம்கித்தது. ஆங்கில பாராளுமன்றம் சம்பிரதாயங்களைக் கடைபிடித்தது. அதனால் கால தாமதம் நேர்ந்தது.
- சட்டக் கவுன்சிலில் அரசு அதிகாரிகளே உறுப்பினர்களாக இருந்ததால் மக்கள் கருத்துக்கள் அங்கு நுழையவாய்ப்பில்லாது போயிற்று.
- 1833ம் ஆண்டு சாசனச் சட்டம் சட்டமியற்றுதலை ஒருமுகப்படுத்தி தலைமை ஆளுநரின் குழுதான் நபடு முழுமைக்கும் சட்டமியற்ற வகைச்செய்தது. மாநிலங்கள் தனியே சட்டமியற்றும் முறை ஒழிக்கப்பட்டது. இதுமாநில, நலன்களை பாதித்தது.
- இறுதியாக தலைமை ஆளுநரின் சட்டக்கவுன்சிலின் பணி தெளிவாக வரையறுக்கப்பட்டததால் சில மோதல்கள் ஏற்பட்டது. அவருக்கு இந்திய விவகார அமைச்சருக்குமிடையில் நடைபெறும் அனைத்துக் கடிதப்போக்குவரத்துக்களையும் கவுன்சிலின் முன் வைக்க வேண்டுமென உறுப்பினர் கோரினர். இதற்கு உடன்பட தலைமை ஆளுநர் மறுத்ததால் சட்ட சம்பந்தமான சிக்கல் ஏற்பட்டது.

இத்தகைய நிர்வாகச் சிக்கல்களை நேரடியாக அனுபவித்துக் கொண்டிருந்த தலைமை ஆளுநா் கானிங்பிரபு நிர்வாகத்தை சீர்யமைக்க சில கருத்துக்களை அமைச்சர் முன் வைத்தார். அக்கருத்துக்களின் அடிப்படையில் இயற்றப்பட்டதே 1861ம் ஆண்டு கவுன்சில் சட்டம்.

**1861ம் கவுன்சில் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- **தலைமை ஆளுநரின் நிர்வாகக் கவுன்சின் பற்றியது**

1)தலைமை ஆளுநரின் நிர்வாகக் கவுன்சில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். அவர்களில் மூவர் இந்திய அமைச்சரால் நியமிக்கப்படவேண்டும். அவர்கள் குறைந்த பட்சம் பத்தாண்டு காலம் இந்தியாவில் தங்கி அரசுப்பணிபுரிந்திருக்கவேண்டும். மற்றுமிருவருள் ஒருவர் சட்ட உறுப்பினர். மற்றவர் நிதி உறுப்பினர். இவர்களை மன்னர் நியமிக்க வேண்டும். சட்ட உறுப்பினராக நியமிக்கப்படுவர். இங்கிலாந்திலோ, ஸ்காட் அல்லது அயர்லாந்திலோ ஐந்தாண்டு வழக்கறிஞராகப் பணிபுரிந்திருக்கவேண்டும். 2) தலைமைத் தளபதி சிறப்பு உறுப்பினராக கருதப்படுவார். கவுன்சில் கூட்டம் கல்கத்தாவில் நடைபெற்றால் வங்காள ஆளுநரும், சிம்லாவில் நடைபெற்றால் பஞ்சாப் ஆளுநரும் சிறப்பு உறுப்பினராக கலந்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். 3)கவுன்சிலின் செயல்முறை ஒழுங்குகளை வகுக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் தரப்பட்டது. இவ்விதியை பயன்படுத்தி அவர் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குறிப்பிட்ட நிர்வாகத் துறையைக் கவனிக்க வேண்டும் என ஏற்பாடு செய்தார். இவ்வாறு கவுன்சிலில் “இலாகா முறை” புகுத்தப்பட்டது.

- **மத்திய சட்டமியற்றும் குழு பற்றியவை**

- சட்டமியற்றுவதற்காக தலைமை ஆளுநரின் நிர்வாகக் கவுன்சிலில் ஆறுக்கு குறையாத ஆனால் பன்னிரண்டுக்கு மேற்படாத கூடுதல் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இப்போது அக்கவன்சிலில் சட்டமியற்றும் குழு என அழைக்கப்பட்டது.

2.கூடுதல் உறுப்பினர்களில் பாதிக்கு மேல் அரசுப் பதவியில் இல்லாதவர்களாக வேண்டும். அவர்களுள் சிலர் இந்தியர்களாக இருக்கவேண்டும். இவர்களின் பதவி காலம் இரு ஆண்டு களாகும்.

3. சட்டமியற்றும் குழுவின் நடவடிக்கைகள் முழுவதும் ட்டமியற்றுவது சம்பந்தமாகவே இருக்க வேண்டும் வேறு எந்தவித தீர்மானங்களும் கொண்டு வரப்படுவது தடை செய்யப்பட்டது.

4. இச்சட்டக்குழு பிரிட்டிஷ் இந்தியப் பகுதிகளில் வாழும் அனைத்து மக்கள், நீதிமன்றங்கள், இடங்கள், பொருட்கள் பற்றி சட்டமியற்றலாம். ஆனால் பொதுக்கடன், இந்திய வருவாய் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் குடிகளின் சமயம், சமயப் பழக்கவழக்கம், படைவிதிகள் இந்திய அரசுக்கும் சுதேச அரசுகளுக்குமிடையே நிலவும் உறவு ஆகியவை பற்றிய விஷயங்கள் தலைமை ஆளுநரின் அனுமதியின் பேரிலே கொண்டுவரப்பட வேண்டும். பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தியா சம்பந்தமாக இயற்றிய சட்டங்களுக்கு விரோதமாக

எச்சட்டமும் இயற்றபடக் கூடாது. நிறைவேறும் எல்லாச் சட்டங்களும் தலைமை ஆளுநரின் இசைவு தேவை.

5. தலைமை ஆளுநருக்கு அவசரச்சட்டங்கள் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் அது பிறப்பிக்கப்பட்டதன் காரணங்களை இந்திய அமைச்சருக்கு விளக்கவேண்டும். அச்சட்டம் ஆறு மாத காலம் வரை அமுலில் இருக்கலாம்.

3. **மாநில அரசு சம்பந்தப்பட்டவை**

1. சென்னை, பம்பாய் மாநிலங்களில் தலைமை ஆளுநரின் சட்டமியற்றும் குழு போன்ற சட்டமியற்றும் குழுக்கள் அமைக்கப்பட்டன. (1833 ஆண்டு சாசனச் சட்டம் மாநிலங்களின் சட்டக் குழுக்களைக் கழலத்து மத்தியில் ஒருங்கிணைந்த குழு ஒன்று அமைத்தது நினைவிருக்கலாம்)

2. மாநிலங்களில் நிர்வாகக்குழுவில், அட்வகேட் ஜெனரல் ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சட்டமியற்றும் பணிக்கென நான்கிற்கு குறையாக எட்டுக்கும் அதிகமாகாத கூடுதல் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுள் பாதிக்கும் குறையாதோர் அரசுப் பதவியில் இல்லாதவர்களாக இருக்கவேண்டும். இவர்களின் பதலிக் காலம் இரு ஆண்டுகள்.

3. சட்டமியற்றுவதைத் தவிர வேறு பணியில் ஆடுபடாதபடி தடை செய்யப்பட்டது மாநில சம்பந்தமான விஷயங்களில் ம்டடும் சட்டமியற்ற அனுமதிக்கப்பட்டனர். அவை மாநில ஆளுநர் மற்றும் தலைமை ஆளுநர் இசைவு பெற்ற பின்னரே அமுல் செய்யப்படும் பிற மாநிலங்களுக்கும் இது போன்ற சட்டமியற்றும் குழுக்களை அமைக்கும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு வழங்கப்பட்டது.

**1861ம் ஆண்டுச் சட்டத்தின் திறனாய்வு** :

ஆசிரியர் ஜி.என்.சிங் என்பவரின் கருத்துப்படி 1861ம் ஆண்டு கவுன்சில் சட்டம் இரு வகைகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

- சட்டமியற்றும் பணியில் முதல் தடவையாக இந்தியர்களைச் சேர்த்துக் கொண்டது.
- சட்டமியற்றும் உரிமையைப் பரவலாக்கியது. அதாவது மாநிலங்களின் சட்டமியற்றும் உரிமை புதுப்பிக்கப்பட்டது.

அவை தவிர மேலும் மூன்று முக்கிய விரும்பதக்க மாறுதல்களைப் புகுத்தியுள்ளது.

- நிர்வாகக் கவுன்சில் உறுப்பினர்களுக்கு தனிதனி நிர்வாகத் துறைகளை ஒதுக்கியது.
- அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளித்தமை.
- அரசுப் பதவியில் இல்லாதவர்களைச் சட்டமியற்றும் பணியில் சேர்த்துக் கொண்டது.

ஒன்றும் இல்லாத நிலையில் ஏதோ கோஞ்சம் சலுகைளை வழங்கியுள்ளார்கள் என்ற வகையில் தான் இச்சட்டத்தை வரவேற்கமுடியுமே தவிர மற்றபடி அது உண்மையிலே மக்கள் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் சட்ட மன்றத்தை உருவாக்கியது என்ற முறையில் அதனைப் பாராட்ட முடியாது. ஏனேில் சட்டமியற்றும் பணியில் சேர்த்துக்கொண்ட ‘இந்தியர்கள்’ என அழைக்கப்பட்டவர்கள் இந்திய மக்களின் பிரதிநிதிகள் அல்லர். தலைமை ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டவர்கள் ஆவர். இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த சர்.

சார்லஸ்வுட் 'இப்போதிருக்கும் சூழ்நிலையில் இந்தியாவில் பிரதிநிதித்துவ குழுக்களை ஏற்படத்துதல் இயலாத காரியம் என்று குறிப்பிட்டார். தாராளக் கோட்பாட்டினரான ஜான் ஸ்டூவர்ட், ஜான் பிரைட் போன்றோர் கூட பிரதிநிதித்துவ முறை அரசுக்கு இந்தியா போதிய தகுதி பெறவில்லை என்றே கூறியுள்ளனர்

இரண்டாவதாக, தலைமை ஆளுநர் சட்டகுழுவிற்கு நியமித்த இந்தியர்கள் இளவரசர்களாகவோ, திவான்களாகவோ, பெரும் நிலச்சுவான் தார்களாகவோ ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகளாகவோ தான் இருந்தனர். இவர்கள் மக்களோடு தொடர்பு கொண்டவர்களுமல்லர், மக்கள் தலைவர்களுமல்லர், எனவே மக்கள் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை. கட்டாயத்தின் பேரில் கவுன்சில் கூட்டங்களில் கலந்துக் கொண்டனர். "கூட்டத்திற்கு வருவதில் எவ்வளவு தயக்கம் காட்ட முடியுமோ அவ்வளவு தயக்கம் காட்டினர். ஆனால் வெளியேறுவதில் எவ்வளவு விரைவு காட்டமுடியுமோ அவ்வளவு விரைவு காட்டினர்" என்று அவர்களைப் பற்றி புன்னையா என்பவர் சரியாகக் கணித்துள்ளார். தங்களை தேர்ந்தெடுத்த தலைமை ஆளுநருக்கே அவர்கள் விசுவாசமாக இருந்தனர். இத்தகைய நியமன உறுப்பினர்களின் நன்மையை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் உறுப்பினர் மெகதீல் என்பவர் அழகாக படம் பிடித்துக்காட்டியுள்ளார். ஆங்கிலம் தெரியாத ஒருமகா ராஜா நியமன உறுப்பினராக ஆக்கப்பட்டார். ஆங்கிலம் தெரியாத சபை நடவடிக்கைகளில் எவ்வாறு கலந்து கொண்டீர்கள் ஏ்னறு கேட்கப்பட்ட கேள்விக்கு ' என்னை தேர்ந்தெடுத்த தலைமை ஆளுநர் கையை உயர்த்தும் போது நானும் கையை உயர்த்தினேன். ஆவர் கையை கீழே போடும் போது நானும் கீழே போட்டேன்' எனப்பளிச்சென்று பதிலளித்தார். இத்தகைய பிரதி நன்றி பாராட்டக் கூடியவர்களே நியமனம் பெற்றனர்.

மூன்றாவதாக, சட்டமியற்றும் சபையின் நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டன. அது ஒரு சின்னஞ்சிறு பாராளுமன்றமாக ஆகிவிடக் கூடாது என்ற எண்ணத்தோடு பல கட்டுபாடுகள் விதிக்கப்பட்டன. பொது நிர்வாகம் பற்றி கேள்வி எழுப்பவோ, விவாதிக்கவோ அனுமதிக்கப்படவில்லை. சுயமாக மசோதா தாக்கல் செய்யும் உரிமை அளிக்கப்படவில்லை. அரசு கொண்டுவரும் மசோதாக்கள் மீது தங்கள் கருத்தினை மட்டுதான் தெரிவிக்க அனுமதிக்கப்பட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, தலைமை ஆளுநரின் ரத்து ஆணை எந்த நிமிடமும் சபை அலுவல்களுக்கு 'வாய்பூட்டு' போட்டு விடும் அபாயமிருந்தது. இன்றுசட்டமன்றங்கள் செயல்படுவது போல் அவை செயல்படவில்லை. எனவே சட்டமன்றம் என்ற பெயருக்கே தகுதி இல்லாதவை கோவெல் என்பவர் கூறியது போல் அவை நிறைவேற்றிய சட்டங்கள் அரசு ஆணைகளன்றி வேறில்லை.'

இறுதியாக, மாநிலங்களுக்கு சட்டமியற்றும் அதிகாரம் மீண்டும் அளிக்கப்பட்டு சட்டமியற்றும் அதிகாரம் பரவலாக்கப்பட்டாலும், அவை கடுமையான வரையறுக்குள்ளாக்கப்பட்டது. அது 'இரட்டை ரத்து அதிகாரத்திற்கு' (ஒன்றுதலைமை ஆளுநர், மற்றொன்று மாநில ஆளுநர்) உட்பட்ருந்தது. மேலும் 1861ம் ஆண்டு சட்டம் சென்னை,

பம்பாய் மாநிலங்களுக்கு தான் சட்டமியற்றும் அதிகாரம் அளித்ததேயன்றி பிற மாநிலங்களுக்கல்ல.

## 1892ம் ஆண்டு கவுன்சில் சட்டம்

1861ம் ஆண்டு கவுன்சில் சட்டம் இந்தியாவில் எவ்வாறு பிரதிநிதித்துவ அரசை ஏற்படுத்தியது? (1978)

1892ம் ஆண்டு கவுன்சில் சட்டம் மிக அதிக காலம். முப்பதாண்டு காலத்திற்கு மேலாக எவ்வித மாற்றமும் இன்றி நடைமுறையிலிருந்தது. கம்பெனி ஆட்சி காலத்தில் இருபதாண்டு காலத்திற்கொரு முறையாவது, சாசனம் புதுப்பிக்கப்படும் பிரச்சனை பாராளுமன்றத்தின் முன்வரும் போது, இந்திய அரசியல் நிலை பற்றி விரிவான விவாதம் நடத்தப்பட்டடு சீர்திருத்த அம்சங்கள் பல புகுத்தப்படும். கம்பெனி ஆதிக்கத்தின் மீதுள்ள பொறாமை காரணமாக உறுப்பினர்கள் இந்தியர் நலன்களை பாதுகாக்க முன் வருவர். இப்போது பிரிட்டிஷ் பாராளுமன்ற நேரடி ஆதிக்கத்தின் கீழ் இந்தியா வந்தபின் அந்த வாய்ப்பும் பறிபோனது போல் தோன்றியது. எனவே, முப்பதாண்டு காலம் இந்திய அரசியலரமப்பு எவ்வித மாற்றமுமின்றி செயல்பட்டது. ஆனால் இந்த முப்பதாண்டு காலத்தில் இந்தியர்களின் அரசியல் சமுதாய சிந்தனைகளில் மகத்தான மாறுதல்கள் துளிர்விட்டன. கால மாறுதல்களையொட்டி கருத்து மாறுதல்கள் ஏற்படுவது இயல்பு. அக்கருத்து மாறுதலையொட்டி அரசியலில் விழிப்புணர்வு தோன்றுவதும் இயல்பு: அந்த அரசியல் விழிப்புணர்வுகளுக்கெற்ப ஆட்சி முறைகளின் மாறுதல் புகுத்தப்படுவது தவிர்க்கமுடியாதது ஆகும் தவிர்க்க முடியாத அந்த மாறுதல்கள் தள்ளிப் போடபட்டால்

புரட்சி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். ஆத்தகைய நிலை இந்தியாவில் ஏற்பட்டு விடும் என்ற அச்சம் தான் ஆங்கில அரசியல் வாதிகளை இந்தியாவிற்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று தூண்டியது. அதன்விளைவே 1892ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம்.

### 1892ம் ஆண்டு சட்டம் இயற்றப்படுவதற்கு காரணமான சூழ்நிலைகள்

**1. சமூக ஆன்மீக துறைகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி:**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிற்பகுதியில் 'நவீன இந்தியாவின் முன்னோடி' ராஜாராம் மோகன்ராயின் பிரம்ம சமாஜம் தயானந்த சரஸ்வதியின் ஆரிய சமாஜம் மற்றும் ராம கிருஷ்ணாமிஷன்,பிராத்தினா சமாஜம், பிரம்ம'ன சபை ஆகிய இயக்கங்களின் பணி காரணமாக இந்தியர்களின் சமூக ஆன்மீகத் துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக இந்தியர்களின் உள்ளத்தில் தேசிய மனப்பான்மை தோன்றியது. இது அரசியலில் உரிமை வேட்கையை தூண்டியது.

**2. ஆங்கில கல்வி முறையின் ஆக்கபூர்வமான பணி:**

வில்லியம் பெண்டிங்கின் காலதொட்டு மேனாட்டு கல்வி இந்தியாவில் பரவ தொடங்கியது. அக்கல்வி முறையின் 'இரட்டை குழந்தைதளான' தேசியமும் தாராள கோட்பாடும் இந்திய

மண்ணில் வேரூண்றியது. ஆவை அரசியலில் சீர்திருத்தங்களில் இந்தியர்களை நாட்டங் கொள்ளச் செய்தது.

3. **விட்டன் பிரபுவின் ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைவு:**

விட்டன் காலத்தில் சில நிகழ்ச்சிகள் இந்தியர்கள் மனதில் ஆங்கில எதிர்ப்பிணர்வைக் கிளறின.

- ஆப்கானிய போர்கள்
- சுதேச மொழி செய்தித்தாட்கள் மீது விதித்தக் கட்டுபாடு.
- பயங்கரமான பஞ்சங்கள்
- பிரிட்டிஷ் ஆலைத் தொழிலுக்கு ஆதரவான சுங்கவரிகள்.

மேற்கூறப்பட்ட கொடுமைகளிலிருந்து விடுதலை அளிக்கும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அதன்மூலம் தங்கள் உரிமைகள் காக்கப்பட வேண்டும் என விரும்பினர்.

**4. இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் :**

1885இல் தோற்றவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் அன்றைய இந்திய மக்களின் அரசியல் உரிமைகளை ஆக்கபூர்வமாக எடுத்துக்காட்டியது. 1885ல் கூடிய முதல் காங்கிரஸ் மாநாட்டு தலைவர் டபிள்யூ. சி.பானர்ஜி காங்கிரசின் அரசியல் நோக்கங்களை தெளிவாக்கினார். கவுன்சிலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்கள் உறுப்பினராதல் வேண்டும். நிதி நிலை அறிக்கை பரீசிலனை செய்யப்பட சமர்ப்பிக்கபடவேண்டும். உறுப்பினர்களுக்கு பேச்சுரிமை வழங்கபட வேண்டும் பஞ்சாபிற்கும் வடமேற்கு மாநிலத்திற்கும் மாநிலக் கவுன்வில்கள் நிறுவப்பட வேண்டும். என்பன போன்ற அரசியல் சீர்திருத்தங்களை கோரினர்.

5. தாராளக் கோட்பாட்டில் நம்பிக்கையுள்ள அரசுப் பிரதிநிதிகளின் முயற்சி

1.மேயோ பிரபு(1869-72): தம் கவுன்சில் உறுப்பினர்கள் அச்சமின்றி அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டினார். மாநில நிதிநிலை அறிக்கைகளை மாநிலக் கவுன்சில்கள் பரிசீலிக்க அனுமதியளித்தார்.

2. ரிப்பன் பிரபு(1880-84) ஆட்சித்துறை சீர்திருத்தங்களை “மிகவேகமாக அமுல்படுத்துவது ஆபத்தானது தான் ஆனால் அவைகளைமிகவும் தாமதப்படுத்துவது அதைவிட ஆபத்தானது” என எடுத்துக்கூறி நிர்வாக கவுன்சில்களை ஓரளவிற்காவது ஜனநாயக படுத்தக் கோரினார். அவரது நல சுய ஆட்சித்திட்டம் சுதேச மொழிப் பத்திரிக்கைக் கோட்பாடு நீக்கம், இல்பர்ட் மசோதா ஆகிய நடவடிக்கைகள் நாட்டு மக்களிடையே அரசியல் உரிமை உணர்வை ஊட்டின.

3. டப்ரின் பிரபு(1884-88): அரசியல் சீர்திருத்தங்களை பரிசீலிக்க ஒரு குழு ஒன்று நியமித்தார். அக்குழுவின் பரிந்துரைகளின்படி 1888ல் இந்திய கவுன்சிலை ஒரு சிறிய பாராளுமன்றமாக மாற்ற சில ஆலோசனைகளைத் தெரிவித்தார். அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர் சிலர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தார். அவரது கருத்துகளையொட்டி 1892ம் ஆண்டு கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**1892ம் ஆண்டு இந்திய கவுன்சில்சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

**1 மத்திய சட்டசபையின் விரிவாக்கம்**

- தலைமை ஆளுநரின் நிர்வாக சபையின் சட்டமியற்றும் பணியில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை பத்திற்கு குறையாமல், பதினாறுக்கு அதிகபடாமலிக்க வேண்டும்.
- 16 கூடுதல் உறுப்பினர்களின் 10 பேர் அரசுப் பதவி வகிக்காதவர்களாக இருக்க வேண்டும். அந்த பத்து பேரில் நால்வர் நான்கு மாநிலங்களிலும் உள்ள அரசுப்பதவி சாராத உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்பட்டு தலைமை ஆளுநரால் நியமனம் செய்யப்படவேண்டும் மீதமுள்ள ஐவர் நாட்டில் உள்ள நிலச்சுவான்தார் போன்ற பல்வேறு பிரிவினருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கும் வண்ணம் தலைமை ஆளுநரால் செய்யப்படுவர்.

2. **மாநில சட்டசபைகளின் விரிவாக்கம்**

1. சென்னை, பம்பாய் மாநிலங்களில் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை எட்டிற்கு குறையாமல் இருபதிற்கு அதிகப்படதமலும் இருக்கவேண்டும். வங்காளத்திற்கு 20 ஆகவும் வடமேற்கு மாநிலத்திற்கு 15 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

2. அவர்களில் பெரும்பான்மையினர் அரசுப்பதவி அற்றவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் நகரசபைகள், நிலச்சுவான்தார்கள், பல்கலைக்கழங்கள் ஆகியவைகளின் பரிந்துரைகளின் படி ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

3. **சட்டசபையின் உரிமைகள்**

சட்டசபைகளின் அதிகார உரிமைகளும் விரிவாக்கப் பெற்றன.

1.ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவாதிக்கும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அதன்மேல் வாக்கெடுப்பு நடத்தும் உரிமை மறுக்கப்பட்டது.

2.பொதுவாக அக்கறையுள்ள பிரச்சனைகள் பற்றி கேள்வி கேட்கும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அதையொட்டிய துணைக் கேள்விகள் மறுக்கப்பட்டது.

3. எந்த கேள்வியையும் காரணம் காட்டாது தள்ளுபடி செய்யவும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கும், மாநில ஆளுநர்களுக்கும் உண்டு.

4. மாநிலச்சட்டமன்றங்கள் தலைமை ஆளுநர் ஒப்புதலோடு புதிய சட்டங்கள் இயற்றவும் பழைய சட்டங்களை தள்ளுபடி செய்யவும் அதிகாரம் பெற்றன.

4. **காலியடங்களை நிரப்பும் உரிமை**

ஒரு உறுப்பினர் தொடர்ந்து இரு மாறங்கள் வாராதிருந்தாலோ, இறந்தாலோ, பதவி விரகினாலோ, காவியாகும் இடங்களில் உறுப்பிகர்களை நியமிக்கும் உரிமை மத்தியில் தலைமை ஆளுநருக்கும் மாநில ஆளுநருக்கும் அளிக்கப்பட்டன.

**இச்சட்டம் பற்றிய மதீப்பீடு**

ஆசிரியர் ஜோர் பிரசாத்சுதா கருத்துப்படி 1892ம் ஆண்டு சட்டம் மூன்று சாதனைகள் புரிந்திருக்கிறது.

- மத்திய மாநில சட்டசபைகளில் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

- பரிந்துரையின் பேரில் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுதல் என்ற முறையில் தேர்தல் என்பது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சட்டசபையின் அலுவல்களும் விரிவாக்கப்பட்டது.

உண்மையிலேயே இம்மூன்று தாராளக் கோட்பாடுகளின் அடிப்படையில் இயற்றப்பட்ட முற்போக்கு சீர்திருத்தங்கள் தாம் அரசியலமைப்பு வளர்ச்சியில் இது ஒரு முன்னேற்றமாகவும் அமைகிறது. இதுவரை இல்லாத சில உரிமைகள் புதிதாக கொடுக்கப்பட்டதால் புதுமையான சீர்திருத்தம் எனப் போற்றபடுவது உண்மைதான். ஆனால் இந்த அரசியல் உரிமைகள் அனைத்தும் கடுமையான வரையறைக்குள்ளாக்கப்பட்டுவிட்டன. அதனால் அதன் உ்ளளுணர்ச்சிகள் சிதைக்கப்பட்டு விட்டன.

முதலாவதாக கூடுதல் உறுப்பினர்களின் அதிகரிப்பு பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஷ்வானா என்பாரின் கூற்றுப்படி அற்பமானது.பரிதாபத்திற்குரியது நாட்டின் பல்வேறு தரப்பினரின் பிரதிநிதியாக பதினாறு பேர்களை மட்டும் கொள்வது அற்பமானதுதான் முப்பது கோடிக்குமேல் மக்கள் தொகையுள்ள நாட்டின் தழலவிதியை பதினாறு பேர் கொண்ட குழுவிடம் ஒப்படைப்பது உண்மையில் பரிதாபத்திற்குற்குரியது தான்.

இரண்டாவதாக, சட்டமன்றங்களில் நிர்வாகத் தலைமையினரின் பெரும்பான்மை சட்டபூர்வமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் சபை நடவடிக்கைகளில் தன்னிச்சையாகத் தலையிட்டு தள்ளுபடி செய்யும் அதிகாரத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். இவிவரண்டு வரையறைகளும் ஜனநாயகக் கருத்துக்களுக்கு முரணானவை. ஆசிரியர் ஆர்.சி.அக்வாலாவின் கருத்துப்படி மத்திய சட்டசபையின் மொத்தமுள்ள 24 பேரில் 14 பேர் அரசு அலுவலர்கள்: ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவி சாராதார். முற்றும் ஐவர் நியமனம் பெறும் பதவி சாராதார். அதுபோல் பம்பாய் மாநில சட்டசபையின் வெற்றுதன்மையை கோகலே அழகாக விளக்கிறார். மொத்தமுள்ள எட்டு இடங்களில் பம்பாய் நகரசபைக்கும் பல்கலைகழகத்திற்கும் ஒவ்வொன்றும், ஐரோப்பிய வர்த்தக சமூகதர்திற்கு இரண்டும் தக்காண சர்தார்களுக்கு ஒன்றும், சிந்து ஜமீன்தார்களுக்கு ஒன்றும், நீங்கலாக மீதமுள்ள இரண்டு இடங்கள் தான் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்டது. எனவே மத்திய மாநில சட்ட சபைகள் பிரதிநிதித்துவ அமைப்புகள் என்ற பெயருக்கு முற்றிலும் தகுதியற்றமை.

மூன்றாவதாக, தேர்தல் என்பது வெறும் கண்துடைப்பு காரியமாக ஆக்கப்படுகிறது. மறைமுகத் தேர்தல் மூலம் சில சுயநல அமைப்புக்களின் பிரதிநிதிகள் நுழைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. கல்கத்தா வர்த்தக சபை, தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் நபர்களுள் ஒருவதை தலைமை ஆளுநர் நியமனம் செய்வார். அதுபோன்று மாநிலங்களில் பல்கலைகழகங்கள், நகரசபைகள், நிலச்சுவான்தார்கள், மாவட்ட சங்கங்கள் தேர்ந்தெடுக்கும் நபர்களை ஆளுநர் நியமனம் செய்வார். இவ்வாறு தல அமைப்புகளின் தேர்தல் ஆளுநரின் நியமன உரிமைக்கு உள்ளாக்கப்படுகிறது. தேர்தல் என்னும் சொல் அக்கால ஏகாதிபத்திய அரசிற்கு புரட்சிகரமானதாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.

நூன்காவது, நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு உள்ளாக்கப்பட்ட போதிலும் திருத்தங்களுக்கு இடமளிக்கப்படவில்லை. அரசின் நிதிக்கொள்கை விவாதித்து திறனாய்வு

செய்யும் உரிமை மட்டும்தான் அளிக்கப்பட்டது. அரசிற்கு தம் கொள்கைகளை விளக்கவும் தப்பெண்ணங்களை போக்கவும் வாய்ப்பளித்தது. ஆனால் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் அதற்கு இன்னும் வரவில்லை. கேள்வி கேட்கும் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அதற்கு அரசு என்ன பதில் அளித்தாலும் உறுப்பினர்கள் அதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். ஏனெனில் விளக்கம் பெற துணைக் கேள்விகள் கேட்க அனுமதி மறுக்கப்பட்டது. எந்தக்கேள்வியையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்தினருக்கு உண்டு. எனவே சில சமயங்களில் 'வாயிருந்தும் ஊமையராய் இருக்கும் பரிதாப நிலை ஏற்பட்டது. நிர்வாகத்தினருக்கு 'காதிருந்தும் செவிடராய்' இருக்கும் சௌகரியம் கிடைத்தது.

எனவே 1892ம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு, இச்சட்டம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைக் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கும் உரிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. என வருத்தம் தெரிவித்தது. பிரோஷ்ஷாமேத்தா இச்சட்டத்தை ஒரு சிறந்த நிராவி இயந்திரத்திற்கு ஒப்பிட்டு, அந்த இயந்திரத்தில் நீராவி உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் முன்னேச்சரிக்கையாக நீக்கப்பட்டுள்ளது என விளக்கம் தந்தார். 1892ம் ஆண்டுச்சட்டம் 1861ம் ஆண்டுச்சட்டத்திற்கு ஒரு திருத்த மசோதாவாகத்தான் அமைந்தது. எனவே இது மாபெரும் பிரமிக்கதக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கவில்லை என கிளாட்ஸ்டன் கூறியது பொருள் படைத்தது. இந்தச் சட்டம் ஒருவேளை பெரிதாக இல்லாதிருக்கலாம் பெரும் சாதனையொன்று கூறமுடியாததாகவும் இருக்கலாம். ஆனால் அது ஒரு தெளிவான படி, முன்னேற்றத்தை நோக்கி எடுத்து வைத்த அடி' என்று கர்சன்பிரபு கூறியதும் சிந்திக்கதக்கது.

எது எவ்வாறெனினும் இச்சட்டத்தால் ஒரு மாபெரும் நன்மை ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது. மத்திய சட்டசபையில் கோபாலகிருஷ்ண கோகலே, பிரோஷ்ஷா, மேத்தா போன்ற மாபெரும் அரசியல் மேதைகளின் ஆணித்தரமான வாதங்களையும், தொலை நோக்குள்ள ராஜதந்திரத்தையும், சொல்லாற்றல் மிகு அரசியல் தத்துவங்களையும் வெளிப்படுத்துவதற்கு இச்சட்டம் பொன்னான வாய்ப்பளித்தது.

## 1909ம் ஆண்டு கவுன்சில் சட்டம்
## அல்லது
## மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் சட்டம்

பாராளுமன்ற பிரதிநிதித்துவ அரசை நோக்கிய தெளிவான முன்றேற்ம் எனப் போற்றப்படும் 1909ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் உண்மையிலேயே இந்திய அரசியலமைப்பில் முக்கியமானதொரு கட்டமாகும். 'முதன்முதல' என்ற அடை மொழிக்கேற்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டியங்கியதால் பல்வேறு அரசியல் மாற்றங்களுக்கு அடிப்படையாய் அமைந்தது. எனவே இந்திய அரசியல் வரலாற்றிலும் சிறப்பான இடத்தை வகிக்கின்றது.(அன்றைய அரசுப் பிரதிநிதியான மிண்டோபிரபும், இந்திய அமைச்சரான

மார்லியும் அச்சட்டம் இயற்றப்படுவதிலும் பெரும் பங்கு பெற்றதால் அது மிண்டோ-மார்லி சீர்திருத்தம் என அமைக்கப்படுகிறது)

இச்சட்டம் இயற்றப்படுவதற்கு இந்திய அரசியல் சூழ்நிலைகளோடு இங்கிலாந்து மற்றும் உலக அரங்கில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் காரணங்களாக அமைந்தன.

**இங்கிலாந்தில் விபரல் கட்சி ஆட்சி**: இங்கிலாந்தில் நீண்ட காலமாக பதவியிலருந்த கன்சர்வேடிவ் கட்சி அரசு கவிழ்ந்த விபரல் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. கன்சர்வேடிவ் கட்சியினர் ஏகாதிபத்தியக் கோட்பாட்டை கடைபிடிப்பவர். விபரல் கட்சியினரோ தாராளச் சீர்திருத்தை விரும்புவர். இந்த ஆட்சி மாற்றம் வெறும் ஆள்மாற்றமாக இன்றி அரசியலில் கொள்கை மாற்றத்தையும் கொணர்ந்தது. இந்தியப் பிரச்சினைகளில் அனுதாபம் கொண்ட விபரல் கட்சியினர் இந்திய மக்களுக்கு அரசியல் சீர்திருத்தக் கொடை வழங்க விரும்பினர்.

**ஜப்பானின் வெற்றி**: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் அதில் உலக அரங்கில் தேசிய உரிமை இயக்கங்களுக்கு ஆதரவாக இருந்தது. ஒரு சாதாரண ஆசியச் சிற்றரசு (ஜப்பான்) வலிமைமிக்க ஐரோப்பியப் பேரரசை (ரஷ்யா) தோற்கடித்து வெற்றி வாகை சூடியது. இது மேற்கத்திய வல்லரசுகள் வெல்ல முடியாதவை அல்ல என்ற கருத்தினை தோற்றுவித்து ஏகாதிபத்தியப்பிடியிலிருந்து விடுபடத் துடிக்கும் ஆசிய நாடுகளுக்கு புதிய உத்வேகத்தை அளித்தது. இது ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களைச் சிந்திக்க வைத்தது.

**தென்னாப்பிரிக்க இந்தியர் இழிநிலை**: தென்னாப்பிரிக்காவிலும் பிஜித் தீவுகளிலும் இந்தியர்கள் இனஒதுக்கல் கொள்கைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அவதியுற்றனர். இழிவுப்படுத்தப்பட்டனர். இது இந்தியாவில் எதிரொலித்தது. தங்கள் மண்ணின் மைத்தர்கள் விடும் கண்ணீர் நிற்க வேண்டுமானால் வலிய தேசிய அரசு இந்தியாவில் நிறுவப்பட வேண்டுமென எண்ணினர்.

**கர்சன் பிரபுவின் ஏதேச்சதிகார ஆட்சி**: கர்சன் பிரபு நிர்வாகத்திறன் மிகு ஆற்றல் படைத்தவர். எனினும் ஏகாதிபத்தியக் கோட்பாடுகளில் ஊறித்திளத்தவர். எனவே திறமையான நிர்வாகம், உறுதியான அரசு என்ற பெயரில் தல நிர்வாகத் தனி உரிமைகளைப் பறித்து அடக்கு முறைக்கணைகளை ஏவினார் பல்கலைகழகம், நகராட்சி மன்றம் ஆகியவற்றை அரசு அதிகாரிகளின் ஆதிக்கத்தின் கீழ் வைத்தார். தனது சொந்த ஆற்றலிலும், அறிவிலும் அதிக நம்பிக்கை வைத்ததால் பிறர் கருத்துக்களுக்கு செவிமடுக்க மறுத்தார்: எதிலும் ஏதேச்சதிகாரமான போக்கினைக் கொண்டார். அதன் காரணமாக தன்னிச்சைப்படி வங்காளத்தை பிரித்தார். இச்செயல்கள் தேசிய இயக்கத்தை வலுப்படுத்தி அன்னிய ஆதிக்க எதிர்ப்பைக் கிளறின.

**வங்கப்பிரிவினை**: கர்சன் பிரபுவின் ஏதேச்சதிகாரச் செயரான வங்கப்பிரிவினை சுதேசி இயக்கத்தைத் தோற்றுவித்தது. தீவிரவாதிகளை ஊக்குவித்தது. வந்தே மாதரம் என்ற புரட்சிக் கீதத்தை நாடெங்கும் எதிரொலிக்கச் செய்தது.

**பஞ்சம், பிளேக்** : நாட்டின் பிற பகுதிகளில் பஞசம், பிளேக் வறுமை ஆகிய கொடுமைகள் பரவி கொந்தளிப்பை ஏற்படுத்தின. 1896-97ல் ஏற்பட்ட பஞ்சத்தால் இருபது மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். பூனா வட்டாரத்தில் பரவி பிளேக் நோய் மக்கள் உயிர்களைக்கொள்ளை

கொண்டது. அந்நோய்த் தடுப்பு அதிகாரிகளின் அத்துமீறிய செயல் மக்களிடையே ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

**சூரத் காங்கிரஸ் பிரிவு :** கொள்ளை நோயும் கொடிய பஞ்சமும் மக்களைக் கொள்ளை கொண்டபோது அன்னிய அரசு அடக்கு முறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டது. இதனால் தேசியவாதிகள் பலர் ஆங்கிலேயர் மீது கொண்டிருந்த நல்லெண்ணத்தையும் நம்பிக்கையும் கைவிட்டு தீவிரவாதிகளாக மாறினர். திலகர், பிபின், சந்திரபால், லாலாஜபதிராய் சிதம்பரம்பிள்ளை ஆகிய தீவிரவாதிகள் அரசியல் ஆர்ப்பாட்டங்கள் நடத்தி சுதேச உணர்ச்சிகளை கிளறி சுயராஜ்யக் கோஷம் எழுப்பினர். இந்த தீவிரப் போக்குகளை ஆங்கில அரசின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை கொண்டிருந்த மிதவாதிகள் விரும்பவில்லை. அதன் காரணமாக 1907ல் சூரத்தில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. தீவிரவாதிகள் காங்கிரசை விட்டு வெளியேறினர். இப்போது ஆங்கிலேயர் காங்கிரஸில் உள்ள மிதவாதிகளைத் திருப்திப்படுத்த சில அரசியல் சலுகைகளை அளிக்க விரும்பினர். மிதவாதிகளின் தலைவரான கோபாலகிருஷ்ணகோகலே இங்கிலாந்து சென்று இந்திய அமைச்சரைச் சந்தித்து அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். தாராளக் கருத்தினரான மார்லி அது பற்றி அரசுப்பிரதியான மின்டோவிற்கு கடிதம் எழுதினார். இந்த இருவரின் முயற்சி காரணமாக 1909ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1809ம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் முக்கிய கூறுகள் மத்திய சட்டசபை விரிவாக்கம்

1.மத்திய சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 16லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டது. தலைமை ஆளுநர் நிர்வாக கவுன்சில் உறுப்பினர்களையும் சேர்த்து மத்திய சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 64 ஆக ஆக்கப்பட்டது.

2.60 பேரில் பாதிக்கு குறையாதவர்கள் அரசுப் பதவிகளில் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அவர்களில் ஐவர் தலைமை ஆளுநரால் நியமனம் செய்யப்பட வேண்டும்.

3.உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்று ஆண்டு. உறுப்பினர்கள் கீழ்கண்ட வகையில் அடங்குவர்.

அரசுப்பதவி சார்ந்தவர் 37 அரசுப்பதவி சாராதார் 32

தலைமை ஆளுநர் 1 நியமன உறுப்பினர்

அவரது நிர்வாக கவுன்சில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்

வங்காள வர்த்தக சபை 1

உறுப்பினர் 6

சிறப்பு உறுப்பினர் 2 பம்பாய் வர்த்தக சபை 1

(கூட்டம் நடைபெறும் இடத்தின்

மாநில ஆளுநர் மற்றும் தலைமை

படைத்தளபதி)

நியமன உறுப்பினர் 28 முஸ்லீம் 6

இந்து நிலச்சுவான்தார்கள் 6

மாநில சட்டமன்ற உறுப்பினர்

களால் தேர்ந்தெடுக்கபடுபவர் 13

37 32

குறிப்பு : மேலே கூறப்பட்ட விவரங்களிலிருந்து மத்திய சட்டசபையில் அரசுத் தரப்பின் பெரும்பான்மை மிக உறுதியாக நிலை நாட்டப்பட்டுள்ளது தெளிவாகத் தெரியும்

**2.மாநிலச் சட்டமன்றங்கள் விரிவாக்கப்படல்**

1. சென்னை, பம்பாய், வங்காள மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப்பட்டது. வடமேற்கு மாநிலம் ஐக்கிய மாநிலமாக (தற்போதைய உத்திரப் பிரதேசம்) பெயர் மாற்றம் பெற்றது. அதற்கும் 50 பேர் கொண்ட சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கை 30 ஆக உயர்த்தப்பட்டது. 1912ம் ஆண்டு அஸ்ஸாம், பீஹார் ஆகியவை வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாநிலமாக்கப்பட்டது. அங்கும் 30 பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது.
2.மாநிலங்களில் அரசுப் பதவி சாராதோர் பெரும்பான்மையினராயிருந்தனர். அவர்களுள் சிலர் அரசரால் நியமனம் பெற்றவர்களாக இருந்ததால் மாநிலங்களிலும் அரசு தரப்பு பெரும்பான்மை பெற்றது. எடுத்துக்காட்டாக 47 பேர் கொண்ட சென்னை மாநில சட்டமன்றத்தில் அவர்கள் கீழ் கண்டவாறு இருந்தனர்.

| அரசுப் பதவி சார்ந்தோர் | | அரசுப் பதவி சாராதோர் | |
|---|---|---|---|
| ஆளுநர் | 1 | நியமன உறுப்பினர் | 5 |
| ஆளுநர் கவுன்சில் | | தேர்ந்தெடுக்கப்பட்டவர் | 21 |
| உறுப்பினர் | 4 | | |
| நியமன உறுப்பினர் | 16 | | |
| மொத்தம் | 21 | மொத்தம் | 26 |

**3. நிர்வாக கவுன்சில்களின் விரிவாக்கம்**

**1**. இச்சட்டப்படி சென்னை, பம்பாய் மாநில நிர்வாகக் கவுன்சில்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டது. இந்திய அமைச்சர்களின் அனுமதியுடன் வங்காளம் மற்றும் பிற மாநிலங்களுக்கு இதுபோல் நிர்வாகக் கவுன்சில் அமைக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

**2**. முதன்முதல் நிர்வாகக் கவுன்சில்களில் இந்தியர் ஒருவர் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டார். மத்திய நிர்வாகக் கவுன்சிலில் எஸ.பி.சின்ஹா என்பவர் சட்ட உறுப்பினராக நியமனம் பெற்றார். இலண்டனில் உள்ள இந்திய அமைச்சர் ஆலோசனைக்குழுவிற்கு ஏற்கனவே இரு இந்தியர்கள் நியமனம் பெற்றது குறிப்பிடத்தகுந்தது.

**4. சட்டசபை பணிகள் அதிகரிக்கப்படல்**

**1**. நிதிநிலை அறிக்கை மீது விவாதம் நடத்தி அது இறுதி வடிவம் பெறுவதற்கு முன் தீர்மானங்கள் கொண்டு வர உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

**2**. துணைக் கேள்விகள் கேட்கவும் அனுமதிக்கப்பட்டனர்.தல நிறுவனங்களுக்கு கடனளிப்பது, கூடுதல் மானியமளிப்பது புதுவரிகள் விதிப்பன ஆகியவை பற்றி தீர்மானம் கொண்டு வரவும் அனுமதிக்கப்பட்டனர்.

**3**. பொதுநலன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் பற்றி விவாதிக்கவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் உரிமை பெற்றனர்.

**4**. ஆனால் தனியார் தீர்மானங்களும் காரணம் காட்டது அனுமதி மறுக்கும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு கொடுக்கப்பட்டது. மேலும் சிலவருவாய் செலவினங்கள் பற்றி விவாதமே கூடாது என்றும் விதிக்கப்பட்டது.

**5. வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறை :**

இச்சட்டம் முஸ்லீம்களுக்கு தனியாக தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டு தேர்தல் தொகுதிகள் முஸ்லீம்களுக்கௌ ஒதுக்கப்பட்டது. அத்தொகுதிகளில் வாக்களர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதற்கென தனி வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

**6. தேர்தல் முறைகள்**

**1. 1909ம்** ஆண்டு சட்டம் தான் முதன் முதலாக சட்டமன்றங்களில் அரசுப் பதவி சாராதோரைத் தேர்ந்தெடுக்க வகை செய்தது. தேர்தல் என்பது முதன்முதலாக அங்கீரிக்கப்பட்டது.ஸ

**2.** ஏற்கெனவே குறிப்பிட்ட முஸ்லீம்களுக்கு தனிவாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு தனிதேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

**3.** தேர்தல் நடைமுறைகளை வகுக்கும் அதிகாரம் தலைமை ஆளுநருக்கு அளிக்கப்பட்டது. அவர் ஒரே சீரான வாக்களிப்பு முறைகளை கொண்டு வரவில்லை. அது இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் மாறுப்பட்டிருந்தது. சென்னை மாநிலத்தில் வருடத்திற்கு 15000 ரூபாய் வருமானம் உள்ளவருக்கு அல்லது 10000 ரூபாய் வரை நிலவரி கட்ட கூடியவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. வங்காளத்தில் ராஜா அல்லது நவாப் பட்டம் பெற்றவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது. மத்திய மாநிலங்களில் கௌரவ பதவி வகிப்பவர்களுக்குக் கூட வாக்குரிமையளிக்கப்பட்டது. ஆண்டுக்கு 3000 ரூபாய் வருமானததிற்கு வருமான வரி செலுத்தும் முஸ்லீமிற்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால் இவ்வுரிமை பிறவகுப்பினருக்கு அளிக்கப்பட வில்லை.

**4.** அரசுக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை தேர்தலில் போட்டியிடாதவாறு தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு அளிக்கப்பட்டது.

1909ம் ஆண்டு சட்டத்தைப் பற்றிய மதிப்பீடு : 1909ம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் கொண்டுவரப்பட்டதன் நோக்கம் மிதவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவே ஆகும். ஆந்த அளவில் அச்சட்டம் பெரும் வெற்றிபெற்றது. மதிவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ள காங்கிரஸ் இந்த தாராள அரசியலமைப்பு சீர்திருத்தத்தை கொண்டு வந்ததற்காக மிண்டோதவிற்கும் மார்லிக்கும் நன்றி வெலுத்துவதில் முன்னணியில் நின்றது. சுரேந்திர நாத்பானர்ஜி “நாம் விரும்பியதெல்லாம் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் பொறுமையாய் இருந்தால் நாம் விரும்பியதெல்லாம் பெறலாம்”என்று கூறினார். மேலும்,‘துணைக்கேள்விகள் கேட்கவும், தீர்மானங்கள் கொண்டு வரவும் பெற்ற உரிமை மதிப்புமிக்க சலுகைகள்’ எனவும் போற்றினார். குழப்பநிலையை நோக்கி விரைந்து கொண்டிருந்த நாட்டைக் காப்பாற்றிய பெருமை

மிண்டோமார்லிக்கு உரியது.' என கோகலே தம் நன்றியை வெளிப்படுத்தினார். இந்தியர்கள் எதிர்பார்த்ததை விட அதிகம் பெற்றிருக்கிறார்கள். என 'இந்தியன் ரிவ்யூ' என்ற செய்தித்தாள் தன் மகிழ்ச்சியை வெளியிட்டது. அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லீம் லீக் கட்சி தம் இலட்சியம் நிறைவேறி விட்டதாகக் களிப்பெய்தியது.

உண்மையில் 1909ம் ஆண்டுச் சீர்திருத்தம் இந்திய அரசியலமைப்பு வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாக விளங்குகிறது. பொறுப்பாட்சி என்ற திசையில் பிரதிநிதித்துவ அரசென்னும் பாதையில் ஜனநாயகத்தை நோக்கிச் செல்லும் பயணத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெற்றிருப்பது உண்மைதான். ஏனெனில் அதில்,

1. அரசுச் சார்பற்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது.
2. தேர்தல் முறைகளை புகுத்தியது
3. சட்டமன்றங்களில் விரிவான விவாதங்களுக்கு அனுமதி வினாவெழுப்பி விடை பெறும் உரிமை அளித்தது.
4. நிதிநிலை அறிக்கை மீது விவாதம்.
5. அரசப் பிரதிநிதி நிர்வாகக் கவுன்சிலில் இந்தியருக்கு பிரதிநிதித்துவம்.

ஆகிய தாராள சீர்திருத்தக் கருத்துக்கள் அச்சட்டத்தில் அடங்கியுள்ளன. மத்தியசட்டசபையை சின்னஞ்சிறு பாராளுமன்றமாக மாற்றிய பெருமை மக்கள் குரலை எரிரெதலிக்கும் மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கும் வாய்ப்பு, அரசுகோமான்கள் முன்பு திறனாய்வு செய்து திருத்தங்கள் இயற்றும் உரிமை ஆகிய சிறப்புகள் இச்சட்டத்திற்கு உண்டு. விடுபட்ட உரிமைகள் பலவாயினும் கொடுக்கப்பட்ட சலுகைகள் சிலவாயினும் அவை போற்றப்படதக்கக்வையே. குறைகளைகளைந்து நிறைகளைக் கொள்வோம் என்ற கொள்கை அடிப்படையில் நோக்கினால் இச்சட்டம் நிச்சயம் மனநிறைவு தரும்.

எனினும் ஓராயிரம் உரிமைகளை எதிர்பார்த்த தேசியவாதிகளுக்கு இச்சட்டம் ஒரு சில சலுகைகளையே வழங்கியது ஏமாற்றகளித்ததாயிருந்தது. நிஜமான ஜனநாயகத்தை எண்ணியிருந்தோருக்கு நிழலான ஜனநாயகமே காத்திருந்தது. அதற்கு காரணங்கள் பல.

முதலாவதாக, இச்சட்டத்தை ஈன்றெடுத்த தந்தை மாற்றி இந்தியாவிற்கு பிரதிநிதித்துவ அரசினை வழங்கும் நோக்கம் தனக்குக்கிடையாது. என வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுள்ளார். நாடு பாராளுமன்ற முறையிலான அரசிற்கு சிறிதுகூட தகுதியற்றதாயிருக்கிறது என அதற்கான காரணத்தை தெளிவாகவே கூறினார். இத்தகைய எண்ணம் கொண்ட மார்லினின் சிந்தையில் எப்படி ஜனநாயக முறையிலான அரசியலமைப்பு உருவாகும்? எனவேதான் சக்கரியாஸ் என்பவர்'இச்சீர்திருத்தம் ஜனநாயத்தின் நிழலுருவைத்தான் கொடுத்திருக்கிறேயன்ற 'நிஜஉருவை அல்ல, எனக் கூறினார்.

இரண்டாவதாக, மத்திய சட்டசபையில் அரசுத்தர்பாரின் பெரும்பான்மை சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்டது. மொத்த மக்களாட்சிக் கருத்துக்களை கேலிக்கூத்தாக்கி விட்டது. 66 பேரில் 37 பேர் அதாவது பாதிக்கு மேல் அரசப்பதவி வகிப்போராவர். இதுவும் போதாதென்று பதவி சாராதோரில் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படும் ஐவர் நிச்சயம் அரசையே ஆதரிப்பர்.இதற்கு மேல் தலைமை ஆளுநரின் ரத்து அதிகாரம் அரசையே இரும்பு

கவசம்போல் காத்து நின்றது. எனவே சகலவித பாதுகாப்பு ஏற்பாடுகளோடும் அதிகார ஆயுதங்களுடனும் இரும்புக்கவசம் பூண்டு நின்ற வீரனை, சிறுபான்மையினர் என்ற முடமாக்கப்பட்ட பல்வேறு கட்டுபாடு என்னும் விலங்கினால் மாட்டப்பட்ட உரிமையற்ற நிராயுதபாணியான ஒருவன் எதிர்த்து நின்று போரிட்டால் அந்த போரின் முடிவு என்னவாகும்? ஆந்தப்போர்தான் பார்ப்பதற்கு ரசிக்குமா? இத்தகைய வித்தையான காட்சியைத்தான் மிண்டோ-மார்லி உருவாக்கிய சட்டசபை நமக்கு அளித்தது.

மூன்றாவதாக, மாநில சட்டமன்றங்களில் பதவி சாராதோரின் பெரும்பான்மை நிலைநாட்டப்பட்டிருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சிறுபான்மையினராக இருந்து குறிப்பிடத்தகுந்தது. அரசுப் பதவி சார்ந்தோரும் நியமனம் செய்யப்பட்ட பதவிசாராதோரும் இணைந்தால் அரசுக்கட்சி பெரும்பான்னைகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலச்சுவான்தார்களும், ஐரோப்பியர்களும், முஸ்லீம்களும் இணைந்து செயல்படும் வாய்ப்பு வேறு இருக்கிறது. எனவே இங்கும் அரசுதரப்பின் குரல் என்ற ஒரு கை ஓசைதான் கேட்கும்.

நான்காவதாக, சட்டசபை உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்த இச்சட்டம் அவர்களின் செயல் உரிமைகளை அதிகப்படுத்தவில்லை. அவர்கள் கொண்டு வரும் எந்த தீர்மானத்தையும் காரணம் காட்டாமல் அரசு நிராகரிக்லாம். கேள்விகேட்கும் உரிமை கொடுக்கப்பட்டது உண்மைதான். ஆனால் அதற்கு பதில் கொடுத்துதான் தீரவேண்டுமென்று கட்டாயமும் இல்லை. நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு செயல்படுத்தியே தீரவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. எனவே அரசைக்கட்டுப்படுத்தாத தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அர்த்தமே இருக்கமுடியாது.

எனவே அதிகாரமும் பொறுப்பும் குவிந்துகிடக்கும் ஆட்சிபீடத்தை குறை கூறத்தான் உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறதே தவிர சீர்திருத்தி அமைக்க அல்ல.

ஐந்தாவதாக, வகுப்புவாரிப் பிரதிநிரித்துவம் என்ற புதியதொரு முறை இந்தியரை இந்துக்கள், முஸ்லீம்கள் எனப்பாகுபாடு செய்தது. எல்லா ஏகாதிபத்தியங்களும் கடைபிடிக்கும் பிரித்தாளும் சூழ்ச்சி என்ற ராஜதந்திரக் கொள்கை வெகு ஜாக்கிரதையாக கையாளப்பட்டது. அதன்மூலம் பாகிஸ்தான் பிரிவினை பலமானதொரு அடிப்படை பக்குவமாக போடப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்தான் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லீம்லீக் கட்சியின் வேண்டுகோள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரே கல்லில் இரு மாங்காய் என்பது போல் இம்முறை இந்திய தேசிய சக்திகளை பிளவு படுத்தியது. முஸ்லீம் மக்களை ஆங்கில அரசு அனுதாபிகளாக மாற்றியது. முஸ்லீம்களுக்கு வேண்டுமென்ற அதிக அளவு வீதாசார பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. வாக்குரிமை தகுதியை நிர்ணயிக்க முஸ்லீம்களுக்கும் பிறருக்கும் வெவ்வேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. இம்முறை முஸ்லீம் வகுப்புவாக சந்திகளை மட்டும் தூண்டவில்லை. அதற்கு எதிராக இந்து வகுப்புவாத சக்திகளையும் உருவாக்கியது. பிற சிறுபான்மையினரான சீக்கியர் கிறிஸ்துவர் ஹரிஜனங்கள் ஆகியோரும் தனித்தொகுதிமுறை கேட்கத் தொடங்கினார். மக்களாட்சி கருத்துகளுக்கு முரணான இந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை இந்திய சமுதாய ஒருமைப்பாட்டிற்கு உலைவைத்தது.

ஆறாவதாக, தேர்தல் என்ற மக்களாட்சி முறையை இச்சட்டம் ஏற்றுக்கொண்டு விட்டது உண்மைதான். ஆனால் சட்டத்தில் எழுத்தளவில் உள்ள அந்த தேர்தல் நாட்டில் செயளவில் கொண்டுவரப்பட்ட பொதுதான் அது நேரடித்தேர்தல் அல்ல, மறைமுகத்தேர்தல் என்ற உண்மை வெளிப்பட்டது. இன்றைய தேர்தலுக்கு 1909 ம் ஆண்டுச் சட்டப்படியான தேர்தலுக்கும்மலையளவு வேறுபாடு இருந்தது. மேலும் 40 கோடி மக்கள் தொகை கொண்ட இந்த நாட்டின் மத்திய சட்டசபைத் தேர்தலில் வாக்களிக்க தகுதியுடையவர்கள் 650 பேர் தான் மாநில சட்டமன்ற வாக்காளர் தொகை ஏறத்தாழ 200. இந்த மாபெரும் வாக்காளர்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் தாம் 40 கோடி மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தகுதி படைத்தவர்களாம்.

இறுதியாக, பொறுப்பாட்சிதான் மக்களாட்சி முறையின் சத்தும், சாரமும், அவையிரண்டும் 1909ம் ஆண்டு இந்திய சட்டமன்றங்களுக்கு அடியோடு பற்றாக்குறை இந்திய அரசு, இந்திய சட்டமன்றங்களுக்கும் பொறுபாக்கப்படவில்லை, அது இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கே பொறுப்பாக இயங்கியது. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலும் ஆட்சி முறைவில் மாற்றமெதுவும் செய்ய இயலாது. எனவே மிண்டோ-மார்லி உருவாக்கிய சீர்திருத்த பூங்காவில் மக்களாட்சி மலரவுமில்லை. பிரதிநிதித்துவ முறை, மணம் வீசவுமில்லை. மாறாக, பொறுப்பற்ற சட்டமன்றமும் உரிமையற்ற உறுப்பினர்களும் தான் பவனி வந்தனர்.

## இந்திய அரசுச் சட்டம் - 1919 அல்லது
## மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

1909ம் ஆண்டு சட்டம் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு எவ்விதத் தீர்வையும் அளிக்கவில்லை. சட்டசபைக்குப் பொறுப்பற்ற நிர்வாகத்தை அமைத்த இச்சட்டம் ஜனநாயகத்தின் நிழலாகவே காட்சியளித்தது. 1909ம் ஆண்டிற்கு பின் இந்தியாவிலும் உலக அரங்கிலும் நிகழ்ந்த மாபெரும் நிகழ்ச்சிகள் இந்தியர்கள் சிந்தனையிலும் மாறுதல்களைத் தோற்றுவித்தது. அதன்காரணமாக பொறுப்பாட்சி சுயஆட்சிக் கருத்துக்கள் வளர்த்தன. வளர்ந்துவரும் இந்தப் புதிய சூழ்நிலைகள் பிரிட்டிஷ் அரசை புதியதொரு அரசிலமைப்பை உருவாக்க கட்டாயப்படுத்தின. ஆதன் விளைவே 1919ம் ஆண்டு மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம்.

**சட்டம் இயற்றப்படுவதற்கான சூழ்நிலைகள்**

1. வன்முறையில் நம்பிக்கை கொண்ட பயங்கரவாதிகளின் சதிகளும் வெடிகுண்டு வீச்சுகளும்
2. தென்னாப்பிரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய ஆங்கிலக் குடியேற்றங்களில் இந்தியர்கள் இன ஒதுக்கல் கொள்கைக்குட்படுத்தப்பட்டு இழிவு படுத்தப்பட்டதன் எதிரொலி.
3. இந்தியருக்கு சுய ஆட்சிப் பொறுப்புகளில் பயிற்சி அளிக்க திலகரும், அன்னிபெசன்ட் அம்மையாரும் தொடங்கிய ஹோம்ரூல் இயக்கம்.

4. அரசியல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி மத்திய சட்டமன்ற உறுப்பினர்கள் பத்தொன்பது பேர்கள் தயாரித்தனுப்பிய குறிப்புகள்.

5. காங்கிரஸ் முஸ்லீம்லீக் கட்சிகளின் 1916ம் ஆண்டு லக்னௌ உடன்படிக்கை ஒருகிணைந்த செயல் திட்டமொன்றை வகுத்தது.

6. தலைமை ஆளுநரின் மேலாதிக்கத்தைப் பாதிக்காத வண்ணம் ஆட்சிப் பொறுப்பில் இந்தியர்களுக்கு அதிக பங்கு அளிக்கவேண்டும் என ஹார்டிஞ்சு பிரபு எழுதிய கடிதம்.

**முதல் உலகப்போர் தோற்றுவித்த புதிய சூழ்நிலைகள்**

1. ”உலகத்தை ஜனநாயத்திற்கு பாதுகாப்பான இடமாக மாற்றுவதற்காகவே இப்போர் நடைபெறுகிறது”. “சுய நிர்ணய உரிமை கோட்பாடுகளுக்காகவே இப்போர் நடைபெறுகிறது: எனப் பிரிட்டிஷ் அரசினர் பகிரங்கமாக அறிவித்தனர்.

2. போருக்கு இந்தியர்கள் அளித்த நிபந்தனையற்ற உதவி பன்னிரண்டு இலட்சம் போர்வீரர்கள் 75 மில்லியன் பவுன் யுத்த நிதி. ஆண்டுதோறும் 20 மில்லியன் பவுன் போருக்கென ஒதுக்கியது. பிரதி நன்றி நோக்காது இவ்வுதவிகள் செய்யப்பட்ட போதிலும் போர் முடிந்ததும் பொறுப்பாட்சி நிச்சயம் என்ற எண்ணத்தின் தோற்றம்.

3. 1917-18ம் ஆண்டுகளில் இந்தியப் பேரரசின் போர்க்கால அமைச்சரவை மற்றும் மாநாடுகளில் இடம் பெற்றது. போர் முடிவுற்றதும் ஏற்ப்பட்ட வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் இந்திய அரசு அதன் பொறுப்பில் கையொப்பமிட்டது. சர்வதேச சங்கத்தில் உறுப்பினரானது.

4. இஸ்லாமிய உலகத் தலைவரான துருக்கி சுல்தானை எதிர்த்து பிரிட்டிஷார் போராடியதால் இந்திய முஸ்லீம்களின் பிரிட்டிஷ் எரிர்ப்பு கொள்ளை.

5. ஏகாதிபத்தியக் கோட்பாட்டினரான சேம்பர்லீன் இந்தியர் அமைச்சர் பதவியிலிருந்து விலகி தாராள கோட்பாட்டினரான மாண்டேகு அப்பதவி ஏற்றது. பதவி ஏற்றதும் தமது சீர்திருத்த நோக்கத்தை 1917 ஈகஸ்ட் திங்களில் ஒரு அறிக்கையின் மூலம் வெளியிட்டார். அதில் காணப்பட்டுள்ள முக்கியக் கருத்துக்கள்.

1. ஆட்சித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாக நியமித்தல்.
2. சுயஆட்சி நிறுவனங்களைப் படிப்படியாக வளர்த்தல்.
3. அதன்மூலம் பொறுப்பாட்சி என்ற முற்போக்கு நிலையை அடைதல்.
4. அதே சமயத்தில் இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் பிரிக்க முடியாத பகுதியாக நீடித்தல்.

அதன்பின் மாண்டேகு இந்தியா வருகை புரிந்து ஐந்தரை மாதங்கள் தங்கி இந்தியர் கருத்துக்களையும் அரசியல் சூழ்நிலைகளையும் பரிந்துக்கொண்டு அரசப் பிரதிநிதி செம்ஸ்போர்டுடன் கலந்து சீர்திருத்தத்திற்கான சில பரிந்துரைகளை விங்கினார். அதனடிப்படையில் 1919 டிசம்பரில் இச்சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

**சட்டத்தின் முன்னுரை**

இச்சட்டத்தின் முன்னுரையில் அதன் சோக்கங்கள் தெளிவாகப்பட்டன. அவை :

1. பேரரசின் ஒருங்கிணைந்த அங்கமாக பிரட்டிஷ் இந்தியாவில் பொறுப்பாட்சி என்ற முன்னேற்ற நிலைமையின் நோக்கத்துடன் ஆட்சித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும்

இந்தியர்களை அதிகமாக சேர்த்தலும் பொறுப்பாட்சி நிறுவனங்களை படிப்படியாக வளர்த்தலும் அரசுக் கோட்பாடுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்நோக்கம் தொடர்ச்சியான பல நிலைகளில் செயற்படுத்தப்படும்.

3. அவை எப்போது எவ்வாறு செயற்படுத்தப்பட வேண்டுமென்பதைப் பிரிட்டிஷ் பாராளுமன்றமே தீர்மானிக்கும்

4. இந்தியர்களின் ஒத்துழைப்பு பொறுப்புணர்வு ஆகியவற்றைப் பொறுத்துத்தான் பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்கும்.

5. மாநிலங்களில் உள்ள சுயஆட்சி நிறுவனங்களின் வளர்ச்சியோடு, மாநில அரசு மாநிர விஷயங்களில் அதிக

அளவு சுதந்தரத்துடன் இயங்கவும் வழிவகை செய்யப்படும்

**இங்கிலாந்தில் செய்யப்பட்ட மாறுதல்கள்**

1. ஏற்கெனவே இருந்தது போல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பான இந்திய அமைச்சரும் அவர்தம் ஆலோசனைக்குழுவும் இந்திய அரசு நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் கண்காணித்து கட்டுப்படுத்தி இயக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தனர்.மத்திய மாநில சட்டமன்றங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் அவர் அமைதியின் பேரிலே நடைபெறுவதாகக் கருதப்படும்.

2. மாநிலங்களில் உள்ள மாற்றப்பட்ட துறைகளின் மீது அவரது கட்டுபாடு தளர்த்தப்பட்டது. பேரரசு நலன் மாநிலங்களிக்கிடையே மோதல் போன்ற விஷயங்கள் தவிர கிறவற்றில் கூடிய மட்டும் தலையிடக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

3 அவரது ஆலோசனைக்குழு 8-லிருந்து 12ற்கு உட்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்களில் பாதி பேர் இந்தியாவில் பத்தாண்டுகள் பணிபுரிந்தவர்களாக இருக்க வேண்டும்.

4. இந்திய அமைச்சர் அவர்தம் துணைநிலைச்செயலர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறைகள் ஆகியவற்றின் செலவுகள் பிரிட்டிஷ் கருவூலத்திலிருந்து அளிக்கப்படவேண்டும்.(இதற்கு முன் அவை இந்திய வருவாயிலிருந்து ஈடுகட்டபட்டன.)

5. இந்திய அரசு இங்கிலாந்தில் தன் நலன்களகைக் கவனிக்க ஒரு உயர் ஆணையரை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் பெற்றது. தலைமை ஆளுநரால் நியமிக்கப் பெறும் அவரது பதவி காலம் ஆறு ஆண்டுகள். இந்திய பண்டகச்சாலைகளுக்குத் தேவையானவற்றை வாங்குதல் அங்குள்ள இந்திய மாணவர்களின் நலன்களைக் கவனித்தல் போன்ற பணிகளைச் செய்வார்.

**தலைமை ஆளுநரும் அவரது கவுன்சிலும்**

1. தலைமை ஆளுநரும் அவரது கவுன்சிலும் முன்போல் இந்திய அமைச்சருக்கும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குமே பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். இராணுவம் மற்றும் சிவில் நிர்வாகம் சட்டமியற்றுதல், நிதி அதிகாரங்கள் அனைத்தும் அவர் கரங்களில் தான் குவிக்கப்பட்டிருந்தது. சட்டமன்றத்தைக் கூட்டுதல், ஒத்தி வைத்தல் ஆகிய அதிகாரமும் அவரிடமிருந்தன. சட்டசபை நிராகரித்த சட்டங்களைக் கூட அவர் விரும்பினால் அமுல் நடத்தும் சிறப்பதிகாரம் பெற்றிருந்தார். அவசரச்சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார்.

2. எட்டுப்பேர் கொண்ட அவருடைய கவுன்சிலில் மூன்று இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர்.

3. கவுன்சிலர்கள் இந்திய அமைச்சரால் பரிந்துரை செய்யப்பட்டு மன்னரால் நியமிக்கப்பட்டனர். அவர்கள் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்.

4. தலைமைத் தளபதி கவுன்சிலின் சிறப்பு உறுப்பினராக இருப்பது நீக்கப்பட்டது.

**மத்திய சட்டசபை**

மத்திய சட்டசபை இருமன்றங்களைக் கொண்டதாயிருந்தது. கீழ்சபை சட்டப் பேரவை எனவும், மேல்சபை அரசுக் கவுன்சில் எனவும் அழைக்கப்பட்டது. தலைமை ஆளுநர் சட்டமன்றங்களுக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டார். எனவே அவர் அதன் உறுப்பினராக கருதப்படவில்லை. ஆனால் சட்டமியற்றும் பணியில் ஒருங்கிணைந்தவராகக் கருதப்பட்டார். சட்ட பேரவையிலும் அரசுக் கவுன்சிலிலு ஆளுநச்தரப்பினரின் பெரும்பான்மையைச் சட்டபூர்வமாக நிலைநாட்டுவது கைவிடப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டோரே பெரும்பான்மையினராக இருக்க வகை செய்யப்பட்டது.

**1.சட்டப்பேரவை**

1. அதன் மொத்த உறுப்பினராக 145 பேர் அவருள் 104 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதி 41 பேர் நியமன உறுப்பினர் அவருள் 26 பேர் அரசுப் பதவியாளர். மாநிலங்களில் மக்கள் தொகைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர் தொகை பிரித்துகொடுக்கப்பட்டது. அதுவும் வகுப்புவாரி அடிப்படையில் முஸ்லீம், சீக்கியர், ஐரோப்பியர் எனப் பிரிக்கர்ட்டது.

2. இதன் ஆயட்காலம் மூன்று ஆண்டுகள். ஆனால் அதைக் கூட்டவோ குறைக்கவோ தலைமை ஆளுநர் அதிகாரம் பெற்றிருந்தார்.

3. முதல் நான்காண்டுகளுக்கு தலைமை ஆளுநரால் நியமிக்கப்படும் நபர் ஒருவர் சட்டப்பேரவைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவார். பின்னர் பேரவையே தலைமை ஆளுநர் ஒப்புதலின் பேரில் தன் தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

4. மத்திய அரசு அதிகாரப் பட்டியலிலி உள்ள அனைத்து விஷயங்கள் பற்றித் தீர்மானம் கொண்டு வரலாம். பாதுகாப்பு அயல்உறவு, திருச்சபை சம்பந்தமானவை, பொதுக்கடன் ஆகியவை பற்றிய மசோதாக்களை தலைமை ஆளுநரின் முன் அனுமதியின்றி கொண்டுவர முடியாது. அதுபோன்று மாநில அதிகாரப்பட்டியலில் உள்ள விஷயங்கள், மாநில அரசு நிறைவேற்றய சட்டங்கள், மற்றும் அவசரச் சட்டம் பற்றிய மசோதாக்களுக்கும் முன் அனுமதி தேவை.

5. நிதிநிலை அறிக்கை சட்டப் பேரவின் முன் வவாதத்திற்கு வைக்கப்பட வேண்டும். அதில் சில குறிப்பிடப்பட்ட முக்கிய செலவு இனங்கள் பற்றி வாக்கெடுப்பு நடத்த சபைக்கு உரிமை இல்லை. கிட்டத்தட்ட அறுபது சதவீத தொகை இவ்வாறு சபை வாக்கெடுப்பிற்கு 'அப்பாற்பட்டதாகக் கருதப்பட்டது. மீதயுள்ள நாற்பது சதவீத செலவு இனங்கள் முழு உரிமையளிக்கப்பட்டது. அதை தள்ளுபடி செய்யவோ குறைக்கவோ அதிகாரம் அளிக்கப்பட்டது.ஆனால் அத்தொகைகளை அதிகரிக்கும்' உரிமை மறுக்கப்பட்டது. சட்டப்பேரவை நிராகரித்த இனங்களை நாட்டின் நலன்களுக்கு அவசியமானவை எனத் தலையை ஆளுநர் குறிப்பிட்டு அச்செலவினை அனுமதிக்கலாம்.

6. பொதுநலன் சம்பந்தப்பட்ட எந்தக் கேள்விகளும் கேட்கப்படலாம். ஒத்திவைப்பு தீர்மானங்கள் கொண்டுவரப்படலாம். ஆனால் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக்கவுன்சில் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர முடியாது.

**2. அரசுக் கவுன்சில்** : 1. இதன் மொத்த உறுப்பினர் 60. அவருள் 33 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இங்கும் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறையே கடைப்பிடிக்கப்பட்டது.நியமன உறுப்பினர் 27ல் 17 பேர் அரசுப் பதவியாளர். இதன் ஆயுள் காலம் 5 ஆண்டு. இதன் தலைவர் தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுவர். 2. ஏந்த மசோதாவையும் முதலில் இங்கு கொண்டு வர முடியாது. 3. இச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை பெற அதிகப்படியான தகுதி நிர்ணயிக்கப்பட்டது.

**3. இரு சபைகளுக்குமிடையே உள்ள உறவுகள்** : எந்த மசோதாவும் சட்டமாக வேண்டுமானால் இரு சபையிலும் நிறைவேற வேண்டம். ஆனால் மசோதாக்கள் முதலில் சட்டபேரவையில்தான் கொண்டுவரப்பட வேண்டும். பண மசோதாக்கள் பற்றிய இறுதி அதிகாரம் சட்டபேரவையிடம் தான் இருந்தது. இருசபைகளிடையே கருத்து மோதல் ஏற்பட்டால் கூட்டுக்குழு, கூட்டு மாநாடு, கூட்டுக்கூட்டம் ஆகியவற்றின் ஒன்றுக்கு தலைமை ஆளுநர் ஏற்பாடு செய்து முட்டுக்கட்டைகளை நீக்கமுயலவேண்டும். பொதுவில் சட்டப் பேரவை மக்கள் பிரதிநிதித்துவ மன்றமாகவும் அரசுக் கவுன்சில் சில குறிப்பிட்ட உயர்வர்க்கத்தினரின் பிரதிநிதித்துவ மன்றமாகவும் செயல்பட்டது.

**மத்திய மாநில அதிகாரப் பங்கீடு : 1919ம்** ஆண்டு சட்டம் மாநில அளவில் குறிப்பிட்ட சில துறைகளில் சுய ஆட்சித் திட்டத்தைக் கொண்டு வந்ததால் மாநிலங்களுக்குரிய அதிகாரங்கள் எவை என்பது திட்டமாக வரையறுக்கப்பட வேண்டியதாயிற்று. எனவே இச்சட்டமானது மத்திய மாநில அதிகாரங்கள் எவை என தனித்தனிப் பட்டியல் இட்டுக்காட்டியது.

**4. மத்திய அரசு அதிகாரங்கள்:** மொத்தம் 47. அவைகளுக்குள் பாதுகாப்பு, அயல்நாடு, நாணயம்வெளியிடுதல், செய்திப் போக்குவரத்து, கப்பல் வாணிபம், சுங்கவரி, உப்பு, வருமானவரி, பொதுக்கடன் போன்ற துறைகள் அடங்கியிருந்தன.

**மாநில அதிகாரங்**கள : மொத்தம் 50 அவைகளுள் ஸ்தல சுய ஆட்சி, பொதுசுகாதாரம், மருத்துவ நிர்வாகம், கல்வி, பொதுப்பணி, குடிநீர், நீர்ப்பாசனம், பஞ்ச நிவாரணம், காடுகள் கூட்டுறவு சட்டம், ஒழுங்கு போன்றவை.

**5. மாநில அரசு இரட்டையாட்சி** : 1919ம் ஆண்டு சட்டம் மாநிலங்களில் ஓரளவு பொறுப்பாட்சியைப் புகுத்தியது. மாநில அதிகாரங்கள் அனைத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக்கு அளிக்கப்படவில்லை. மாறாக, முக்கிய அதிகாரங்கள் ஆளுநராலும் அவரது கவுன்சிலர்களாலும் நிர்வாகிக்கப்பட்டது. இவ்வாறு அதிகாரத்துறைகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஆறுடீவறு நிர்வாக மையங்களால் நிர்வகிக்கப்படும் முறை, இரட்டையாட்சி, எனப்படும். இம்முறை வங்காளம், பம்பாய், சென்னை, பீஹார், ஒரிசா ஐக்கிய மாநிலங்களில் பர்மா, மத்திய மாநிலங்கள் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் கொண்டுவரப்பட்டது.பின்னர் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திற்கும் இம்முறை

விஸ்தரிக்கப்பட்டது. இங்கு மாநில அதிகாரங்கள் 'மாற்றப்பட்டத்துறைகள்'. ஒதுக்கப்பட்ட துறைகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன.

**மாற்**றப்பட்ட துறைகள்: தலசுய ஆட்சி, பொது சுகாதாரம் மருத்துவம், கல்வி, பொதுப்பணி, மீன்துறை, வேளாண்மை, கைத்தொழில், கூட்டுறவு போன்றவை மாற்றப்பட்ட துறைகள், இவற்றை ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபைக்குப் பொறுப்பான அமைச்சர்கள் உதவியுடன் நிர்வகிப்பார்.

**ஒதுக்**கப்பட்ட துறைகள் : வருவாய், பஞ்ச நிவாரணம், நீர்ப்பாசனம், காடுகள், நீதி, போலீஸ், சிறை, நிதி, ஆலைகள் தொழில் பிரச்சினைகள் போன்றவை ஒதுக்கப்பட்ட துறைகள் இவை ஆளுநரால் அவரது கவுன்சிலர்கள் உதவியுடன் நிர்வகிக்கப்படும்.

**அமைச்**சர் குழு : அமைச்சர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டு அவர் விரும்பும் வரை பதவியில் நீடிப்பார் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் நடைமுறையில் சட்டசபையில் பெரும்பான்மை கட்சியைச் சேர்ந்தவர்களே அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனா. பெரும்பான்மையினர் ஆதரவை இழந்தவுடன் பதவியயையும் இழந்தனர். அரசு அலுவலர் எவரும் அமைச்சராக நியமிக்கப்படகூடாது. பொதுவில் அமைச்சர்கள் தரும் ஆலோசனைப்படி ஆளுநர் கருத்திற்கு அசைவாக அமைச்சர்கள் செயல்படவில்லை என்றால் அவர்கள் பதவி விலக வேண்டும். அல்லது விலக்கப்பட நேரிடும். அதே சமயத்தில் அமைச்சர்கள் ஊதியம் சட்டசபை வாக்களிப்பிற்குட்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் அவர்கள் பதவியிறக்கப்படும் வாய்ப்புமிருந்தது. மாற்றப்பட்ட துறைகளையே அமைச்சர்கள் நிர்வகித்தனர். பொதுவில் மூவர்கொண்ட அமைச்சர் குழுக்களே மாநிலங்களில் அமைக்கப்பட்டன.

**நிர்வாகக் கவுன்சிலர்கள் :** ஒதுக்கப்பட்ட துறைகளை ஆளுநரால் நியமிக்கப்படும் கவுன்சிலர்கள் நிர்வகித்தனர். சென்னை, பம்பாய், வங்காளம், மாநிலங்களில் நான்கு கவுன்சிலர்களும் பிறவற்றில் இரு கவுன்சிலர்களும் நியமிக்கப்பட்டனர். அவருள் பாதிப்பேர் இந்தியர்களாயிருந்தனர். சட்டசபையில் தங்கள் பதவி காரணமாக உறுப்பினர்களாயிருந்தாலும் சட்டசபைக்குப் பொறுப்பானவர்களல்லர். நும்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் அவர்களை விலக்க முடியாது. ஆளுநருக்கும் இங்கிலாந்தில் உள்ள இந்தியா அமைச்சருக்குமே பொறுப்பானவர்கள். இவர்கள் பதவிக் காலம் ஐந்து ஆண்டு.

**ஆளுநர்**: மாநிலத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ஆளுநர் தலைமை ஆளுநருக்கும் அவர் வழியாக இந்திய அமைச்சருக்குமே பொறுப்பானவர்கள். அதைச்சர்கள் மூலமாக சில துறைகளையும் கவுன்சிலர்கள் மூலமாக பிற துறைகளையும்' நிர்வகிப்பர், அமைச்சர்கள் மற்றும் கவுன்சிலர்கள் முடிவினை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை அவருக்கிருந்தது. நாட்டு நலன் பாதுகாப்பிற்கு எந்தது என அவர் உறுதியுடன் கூறினால் எந்த தீர்மானத்தையும் தள்ளுபடி செய்யும் அதிகாரமிருந்தது. அவரது அனுமதியின்றி எந்த பண மசோதாவும் சட்ட சபையினுள் வரமுடியாது. நிதிநிலை அறிக்கை ஆளுநரால் தயாரிக்கப்படும். சட்டசபை தள்ளுபடி செய்த பண மசோதாக்களை மூட அமுல்படுத்தும் விசேட அதிகாரம் பெற்றவர் சட்டமன்றங்களைக் கூட்டவும், ஒத்திப்போடவும், கலைக்கவும், அதிகாரம் பெற்றிருந்தார்.

அவசர நிலை பிரகடனம் செய்து எல்லாத்துறைப் பொறுப்புக்களையும் நாமே ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் படைத்தவர்.

மாநில சட்டமன்றங்கள் : மாநில சட்டமன்றங்களில் எழுபது சதவீதத்தினர் தேர்தெடுக்கப்பட்டனர். மீதமுள்ள முப்பது சதவீதத்தினர் நியமிக்கப்பட்டனர். அவருள் பதவி சார்ந்தோரும் சாராதோரும் உண்டு. ஆளுநரின் கவுன்சிலர்கள் பதவி காரணமாக சட்டசபையில் அமரும் உரிமை பெற்றிருந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் அவ்வகுப்பினரால் சிலர் ஆளுநரால் நியமனம் பெறுவர். சட்டமன்ற ஆயுள் மூன்றாண்டு காலம். ஆளுநர் விரும்பினால் மேலும் ஓராண்டு நீடிக்கலாம். அமைச்சர்கள் சட்டமன்றத்திற்கு பொறுப்பானவர்கள். எனவே சட்டசபையினரில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றவர்களையே அமைச்சர்களாய் நியமிக்கும் வழக்கம் ஏற்பட்டது. மாற்றப்பட்ட துறைகள் பற்றிய நிர்வாகங்களை விவாதிக்கும் அவைப்பற்றி வினா எழுப்பும் மசோதாக்கள் கொண்டு வரவும் உறுப்பினர்கள் உரிமை பெற்றிருந்தனர். னோல் பண மசோதாக்களுக்கு ஆளுநரின் அனுமதி தேவை. சட்டசபைத் தலைவரை முதல் நான்காண்டு காலத்திற்கு ஆளுநரே நியமிப்பார். பின்னர் அந்த உரிமை பெறுவர்.

**தேர்தல் வாக்குரிமை**

- **1919ம்** ஆண்டு சட்டப்படி பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் வாக்காளர் எண்ணிக்கை மிக்க குறைவாக இருந்தது. மொத்த மக்கள் தொகையில் 1.5 சதவீத மக்களே வாக்குரிமை பெற்றிருந்தனர்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டிருந்ததைப்போல் வாக்குரிமை பெற்றவரும் அவர் தம் தகுதியும் மாறுபட்டிருந்தது. கிராம பகுதிகளில் ரூ.10 முதல் 50 வரை வரி செலுத்துவோர் வாக்குரிமை பெற்றனர். நகர்ப்புறங்களில் வருமானவரி செலுத்தும் அளவிற்கு ஆண்டிற்குரூ.200 வருமானமுள்ளவர்களும் வீட்டுவரியாக ரூ.36 பெறக்கூடியவர்களும் நகராட்சிக்கு ரூ. 8 வரி செலுத்துவோரும் வாக்குரிமை பெற்றனர். தொடக்கத்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவில்லை.
- 1909ம் ஆண்டு சட்டப்படி முஸ்லீம்களுக்கு கொடுக்கப்பட்ட வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும், சீக்கியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.
- நிலவுரிமையாளர், பல்கலைகழகம், வர்த்தகச் சங்கம் ஆகியவற்றிற்கும் பிரதிநிதித்துவம் வழங்க தனித் தொகுதிகள் அமைக்கப்பட்டன.
- இந்திய சிவில் சர்வீஸ்: இந்திய சிவில் சர்வீஸைச் சார்ந்த அதிகாரிகள் உரிமை நலன்களைப் பாதுகாக்க சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவர்களை நியமனம் செய்த உயர் அதிகாரிகளின் தரத்திற்கு குறைந்தவர்களால் அவர்களைப் பதவி நீக்கம் செய்ய முடியாது என விதிக்கப்பட்டது. அப்படி நீக்கம் செய்யப்பட்டவர்களை இந்திய அமைச்சர் மீண்டும் நியமிக்கும் அதிகாரம் பெற்றார். ஆளுநரின் அனுமதியின்றி சட்டமன்ற உறுப்பினர்கள் சிவில் சர்வீஸ் அதிகாரிகளைப் பாதிக்கும் எந்த சட்டத்தையும் நிறைவேற்றுவதியிலிருந்து தடை

செய்யப்பட்டனர். புதிய அரசியலமைப்பு சூழ்நிலையில் செயல்படுவது சிரமமானது என உணரும் அதிகாரிகளே ஓய்வு பெற்று உரிய பென்ஷன் பெற வழிவகை செய்யப்பட்டது.

**திறனாய்வு : நிறைகள் :**

நல்லதோ கெட்டதோ, 1919ம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் முன்னேற்றமானதொரு கட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாய் அமைந்துள்ளது. என்பதில் இருவித கருத்துகக்களுக்கு இடமருக்கமுடியாது. இந்தியாவின் மகா சாசனம் எனப்போற்றப்பட்ட மாண்டேகுவின் ஆகஸ்ட் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட இச்சட்டத்தின் பல முன்னேற்றமான அம்சங்கள் பளிச்சிடுகின்றன.

முதலாவதாக, 60 உறுப்பினர்களைக் கொண்ட 1909ம் ஆண்டு மத்திய சட்டசபை இப்போது இருசபைகளையும் 205 உறுப்பினர்களையும் கொண்ட மாபெரும் மன்றமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இரண்டாவதாக, அதிகார வர்க்கத்தினரின் பெரும்பான்மையை சட்டபூர்வமாக நிலைநாட்டும் வழக்கம் மாறி இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் தெளிவான பெரும்பான்மைக்கு வரை செய்யப்பட்டது. சட்டமன்றத் தலைமைப் பொறுப்பிலிருந்து தலைமை ஆளுநர் விடுவிக்கப்பட்டர்.

மூன்றாவதாக, சட்டத்தின் நோக்கங்களுள் ஒன்றான இந்தியர்களை ஆட்சித்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பங்கேற்குமாறு செய்தல் என்ற கருத்துக்கேற்ப மூன்று இந்தியர்கள் தலைமை ஆளுநர் நிர்வாகக் கவுன்சிலில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. மாநில ஆளுநர் கவுன்சில்களிலும் பாதிப்பேர் இந்தியர்களாக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

நான்காவதாக, மத்திய சட்டமன்றங்களில் சுதந்திரமான விவாதங்கள் நடத்தி, வினாக்கள் எழுப்பி மசோதா கொண்டுவர வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது. பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு அடிப்படையிட்டது. அதன் மூலம் அரசுக்கொள்கையில் மக்கள் கருத்துக்களின் செல்வாக்கு பிரதிபலிக்கத் தொடங்கியது.

ஐந்தாவதாக, மாநிலங்களுக்கும் மத்திய அரசிற்குமிடையில் மோதல் ஏற்படாதவாறு தடுத்து சுமூக உறவு நிலவச் செய்யவும் வகையில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டது.

ஆறாவதாக, படிப்படியாக பொறுப்பாட்சி வழங்கிய சுய ஆட்சி நிறுவனங்களை வளர்ச்சியுறச்செய்வோம் எனச் சட்டத்தின் முன்னுரையில் கூறப்பட்டதுபோல் மாநிலங்களில் மாற்றப்பட்ட அதிகாரத்துறைகளில் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

ஏழாவதாக, சட்டசபைக்கு பொறுப்பான அமைச்சர் குழுவை அமைக்க வழிவகை செய்தது மூலம் பொறுப்பாட்சிக்கு வழிகோலப்பட்டது. முதன் முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அமைச்சர்கள் என்ற அதிகார உரிமையோடு நிர்வாகப் பொறுப்பேற்றது. உண்மையிலே முன்னேற்றமான அம்சம்தான்.

இறுதியாக வாக்குரிமையைச் சற்றுப் பரவலாக்கி நேரடித் தேர்தலை உறுதிப்படுத்தியது மக்களாட்சி முறைக் கருத்துக்களை வலுப்படுத்தியது.

**குறைகள்** : எனினும் இச்சீர்திருத்தம் தேசிய வாதிகளுக்கு சிறிதும் மனநிறைவு அளிக்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் அச்சீர்திருத்ததை, “போதுமானதுமில்லை:

மனநிறைவு அளிக்கவில்லை. ஏமாற்றமளிப்பதாயுள்ளது." எனக் கண்டம் செய்தது. இத்தகைய மோசமான சட்டத்தை சீர்திருத்தம் என்ற பெயரில் கொண்டு வருவது பிரிட்டிஷாருக்கு இழிவு என எண்ணி அதை ஏற்றுக்கொள்வது இந்தியர்களுக்கு அதைவிட இழிவு என அன்னிபெசண்ட் அம்மையார் குறிப்பிட்டது சற்று பொறுத்தமான விமர்சனம். ஏனெனில் சட்டக்குறைபாடுகள் பல இருந்தன.

**முதலாவதாக, சட்**டத்தின் முன்னுரிமையில் இந்தியா பிரிட்டிஷ் பேரரசின் ஒருங்கிணைந்த பகுதி எனத் தெளிவாக கூறியிருப்பது எந்தத் தேசியவாதிக்கும் ஏற்புடையதாக இருக்கமுடியாது.

**இரண்**டாவதாக, உலகப்போர் சமயத்தில் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளின் பேச்சு போர்முடிவுற்றதும் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. ஆனால் 1919ம் ஆண்டுச் சட்டம் அத்தகைய அரசியலமைப்பு அந்தஸ்தை அளிக்காததால் இந்தியர் ஏமாற்றமடைந்தனர்.

**மூன்**றாவதாக, இச்சட்டம் ஜாலிநன் வாலாபாக் படுகொலை என்ற பயங்கர ரத்த வெள்ளத்தின் நடுவிலும் ரௌலட் சட்டமென்ற கொடிய அடக்குமுறைக்களை தேசியவாதிகளை சித்திரவதை செய்த நேரத்திலும் கொண்டுவரப்பட்டது. ரத்தக்கறைப்படிந்த இந்த சீர்திருத்தம் எவ்விதப் பயனையும் அளிக்காது என்ற மக்கள் ஏற்கெனவே முடிவு கட்டி விட்டனர்.

**நான்**காவதாக, மத்திய அரசின் தலைமை நிர்வாகம் மத்திய சட்டசபைக்குப் பொறுப்பாகாத நிலையில் அதன் உறுப்பினர் எண்ணிக்கையை மட்டும் வெறுமனே அதிகரித்தது. அர்த்தமற்ற செயலாகக் கருதப்பட்டது. உண்மையில் இச்சட்டம் மத்தியில் தலைமை ஆளுநரின் வரம்பிற்குட்படா வல்லாட்சியைத்தான் நிலைநாட்டியது. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஏகாதிபத்திய ஆட்சி பீடத்திற்கு தூபம் காட்டிக்கொண்டிப்பவருக்கு அருகில் உள்ள மக்கள் பிரதிநிதிகளின் ஆலோசனைகளுக்கு செவிமடுக்க ஆசையோ, அவகாசமோ, இல்லாமற் போனது ஆச்சரியமில்லை. அவர்களின் ஆலோசனைகளுக்கோ, ஆட்சேபனைகளுக்கோ ஆரவாரங்களுக்கோ, ஆத்திரமிகும் கூக்குரல்களுக்கோ சிறிதும் அசைத்து கொடுக்காத உறுதியாக நிர்வாகத் தலைமையைத்தான் இச்சட்டம் உருவாக்கியது. சட்டசபைப் பெரும்பான்மையை அலட்சியம் செய்தல், தள்ளுபடி செய்த மசோதாவை கூட செல்லுபடியாக்குதல் நாட்டின் நலனுக்கும் பாதுகாப்பிற்கும் என்ற போர்வையில் எந்த நடவடிக்கையும் எடுத்தல், நம்பிக்கை இல்லாத தீர்மானக் கணைகள் துளைக்காத சட்டபூர்வ பாதுகாப்பு கவசம், பட்ஜெட்டில் பாதிக்கும் மேற்பட்ட தொகை மீது முழு ஆதிக்கம் அவசர நிலைப் பிரகடனம் செய்யும் உரிமை போன்ற முன்னெச்சரிக்கை அதிகாரங்கள் அவரை முழு சர்வாதிகாரியாக மாற்றிவிட்டன..

**ஐந்**தாவதாக, நிர்வாகம் பொறுப்புகளில் இந்தியர்களைப் பங்கு பெறச் செய்தல் என்ற கோட்பாட்டிற்கிணங்க நிர்வாகக் கவுன்சில்களில் இந்தியர்கள் நியமனம் பெற்றது உண்மமதான். ஆனால் அவர்கள் அரசு ஆதரவாளர்களாக,"ஆம்மா சாமிகளாக"

இருந்தனரேயன்றி நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புக்களை பிரதிபலிப்பவா்களாக இல்லைஇ மாற்றுக்றையா அரசு விசுவாசிகளே கவுன்சிலா்களாக நியமனம் பெற்றனா்.

ஆறாவதாக, இந்திய சமுதாயத்தில் பிளவு மனப்பான்மைகளுக்கு வித்திட்ட வகுப்புலாரிப் பிரதிநிதித்துவ முறை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. சீக்கியா்களுக்கும் ஐரோப்பியா்களுக்கும் தனித்தொகுதி ஒதுக்கப்பட்டது.

ஏழாவதாக, இரட்டையாட்சி கொள்கையளவில் பொது நிா்வாகக் கருத்துகளுக்கு முரணானது: செயலளவில் குழப்பங்களுக்கும் வீண் கால தாமதங்களுக்கும் வழிவகுப்பது. ஆதனால் பல நிா்வாக இடையூறுகள் தோன்றின.

1.முதலில் இத்திட்டம் சிறந்தொரு நிா்வாக அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அமைக்கப்படவில்லை. மேலதிகாரம் தங்கள் கையில் இருக்க வேண்டும். என மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் தீட்டப்பட்ட திட்டம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே இத்திட்டத்தின் முதல் பலி நிா்வாகத்திறன்.

2. ஒருங்கிணைந்த நிா்வாகம் தான் திறமையாக உறுதியாக இயங்கும் என்பது அரசியல் அரிச்சுவடிப் பாடமாகும். இரட்டையாட்சியோ ஒருங்கிணைந்த நிா்வாகத்தை உருக்குலைத்தது.

3. துறைகள் அறிவியல் கண்ணோட்டத்துடன் பிரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பிரிக்க கூடாத ஒரு துறை இரண்டாக பிரிக்கப்பட்டு இரு வேறு நபா்களால் நிா்வாகிக்கப்பட்டது. எனவேதான் சென்னை அமைச்சா் k.v. செட்டி தாம் நீா்ப்பாசனத்துறையற்ற வேளாண்மைததுறை அமைச்சா் என குறபைட்டுக் கொண்டாா். ஆலைகள், மின்வாரம், சுரங்கம் தொழிலாளா் ஆகியவற்றின் மீது அதிகாரமில்லாத தொழில் அமைச்சரை இச்சட்டம் உருவாக்கியது. கல்வி மாற்றப்பட்ட துறையாயினும் ஐரோப்பியக் கல்வி ஒதுக்கப்பட்டதுறைக்கு கொடுக்கப்பட்டது.

4. நிதி ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகளுக்குப் போக மீதமே மாற்றப்பட்ட துறைகளுக்கு அளிக்கப்பட்டது. அதே சமயத்தில் தல வளா்ச்சி துறைகள் அனைத்தும் மாற்றப்பட்ட துறைகளில் தான் அடங்கியிருந்தன.

5. அமைச்சா்கள் இரு எஜமானா்களுக்குப் பணிபுரியும் பரிதாபநிலைக்குத் தள்ளப்பட்டனா். ஒருபுறம் சட்டசபையின் நம்பிக்கையில்லாதத் தீா்மானத்திற்கு அஞ்சியும் மற்றொரு புறம் ஆளுநரின் தயவினை எதிா் நோக்கியும் வாழ வேண்டியவா்களாயினா்.

6. தலைமை ஆளுநரைப் போல் மாநில ஆளுநருக்கும் சிறப்பதிகாரங்களுக்கும் தள்ளுபடி அதிகாரங்களும், தன்னிச்சையாய் செயல்படும் தனி அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தது. மக்களாட்சி முறையை எள்ளி நகையாடுவது போலிருந்தது. சட்டசபையினருக்கு கட்:டுபடாத நிா்வாகம் சுய ஆட்சியுமில்லை, பொறுப்பாட்சியுமில்லை உண்மையில் எதேச்சதிகார ஆட்சியாகவே இருந்தது.

## இரட்டையாட்சி

**“1919ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் பாடத்தில் மாநில அரசு இரட்டை ஆட்சீ என்ற தலைப்பிலிருந்து தேர்தல் வாக்குரிமை வரை எழுதுக.**

**இரட்டையாட்சி தோல்வியடையக் காரணங்கள் :**

இரட்டையாட்சியின் காரணகர்த்தாக்கள் இத்திட்டம் என்ன பயன்களை அளிக்கும் என எண்ணினார்களோ அந்த அடிப்படை நோக்கங்கள் நிறைவேறவில்லை. பொறுப்பாட்சி முறையில் உண்மையான பயிற்சியை அது அளிக்கவில்லை. எனப் பேராசிரியர் சுப்லேண்டு சரியாகக் கணித்துள்ளார். அத்திட்டத்தை செயல்படுத்திய போது அதில் மேலும் பல குறைபாடுகள் இருப்பது தெளிவாகத் தெரிந்தது. அதற்கான காரணங்கள் பல.

முதலாவதாக, இந்திய தேசிய காங்கிரஸ் இச்சீர்திருத்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை அமுல் நடத்துவதில் அரசாங்கத்தோடு ஒத்துழைக்கவில்லை. அதுமட்டுமின்றி அக்கட்சி காந்தியடிகள் தலைமையில் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கி தேர்தல்களையும் சட்டசபைகளயைும் புறகக்கணித்தது. அத்துடன் முஸ்லீம்களும் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கி, காங்கிரவோடு இணைந்து அரசாங்கத்தை எதிர்த்து நின்றனர்.

இரண்டாவதாக, இரட்டையாட்சியை ஒழிப்பதை இரட்சியமாகக் கொண்ட சுயலாஜ்யக் கட்சியினர் சட்டசபையினுள் நுழைந்து அங்கும் ஒத்துழையாமை முறையைக் கடைபிடித்தனர். வங்காளத்திலும் மத்திய மாநிலங்களிலும் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மை பலம் பெற்றிருந்ததால் அதிகாரப்பூர்வமான தீர்மானங்களைத் தோற்கடித்து அரசை ஸ்தம்பிக்கச் செய்தனர். ஆளுநர் தம் சிறப்பதிகாரங்களைக் கொண்டு தான் நிர்வாகத்தை நடத்த முடிந்தது.

மூன்றாவதாக, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள் தேசியவாதிகள் பெரும்பான்மையினராக இருந்த போதிலும் மொத்தத்தில் அவர்கள் சட்டசபையில் பெரும்பான்மை பெற இயலவில்லை. ஏனெனில் முப்பது சதவீத நியமன உறுப்பினர்களின் துணையுடன் சிறுபான்மையினரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு ஆதரவாளர்கள் பெரும்பான்மை பெற முடிந்தது. இது மக்கள் விருப்பத்தைப் புறக்கணிப்பது போலிருந்தது. தேர்தலில் புறக்கணிக்கப்பட்ட கட்சியினர் நியமன உறுப்பினர் ஆதரவுடன் அரசு அமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இது மக்களாட்சி முறைக்கு முற்றிலும் விரணானது.

நான்காவதாக, அமைச்சர்கள் உறுதியான கோட்பாடுகளையுடைய கட்சியினராக கொள்கைப் பிடிப்பள்ளவர்களாக இராது உதிரிப் பூக்கள் போல் இருந்ததால் அவர்களிடையே காபினட் முறையின் இரு முக்கிய அம்சங்களான கூட்டுப் பொறுப்பு, கருத்து ஒற்றுமை ஆகியவை இல்லாமல் போய்விட்டது. இது நிர்வாகத்தை வலுக்குறையச் செய்தது. மேலும் அமைச்சர்கள் இரு எஜமானர்களுக்கு ஆளுநர், சட்டசபை பணிபுரிய வேண்டியவர்களாயினர்.

இறுதியாக, ஆளுநர்கள் ஒதுக்கப்பட்ட துறைகள் மாற்றப்பட்ட துறைகள் ஆகிய இரண்டையும் ஒருங்கிணைக்கும் சக்திகளாக இராது முந்தியவற்றிற்கு அதிக சலுகை அளிப்பவர்களாக இருந்தனர். அவரது கவுன்விலர்கள் செல்லப் பிள்ளைகளாகலும்

அமைச்சர்கள் மாற்றந்தாய் பிள்ளைகளாகவும் நடத்தப்பட்டனர். அது சீரான நிர்வாகத்தை சீர்குலைத்தது.

**இரட்டையாட்சியின் விளைவுகள்:** இரட்டையாட்சி அமுல் நடத்தப்பட்டதன் விளைவாக அது அரசியல் அமைப்புத் தத்துவங்களுக்கு முரணானது என்பது அனுபவருமாக நிருபிக்கப்பட்டு விட்டது. அதன் செயல்முறை பற்றி பரிசீலிப்பதற்கு அமைக்கப்பட்ட சைமன்குழு அதன் செயலற்ற தன்மையை நன்கு படம்பிடித்துக் காட்டிவிட்டது. எனினும் அது ஒரு சில நல்ல விளைவுகளைத் தோற்றுவித்தது.

இரட்டையாட்சி இந்தியாகளுக்கு பொறுபப்பாட்சி முறையில் பயிற்சி அளிக்கவில்லையாயினும் சட்டசபை நடைமுறைகளில் சிறந்தொரு பயிற்சியளித்தது என்பதை மறுக்கமுடியாது. வினாக்கள் எழுப்புவது, ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருவது ஆகியவற்றில் முதல்தரமான பயிற்சியளித்தது. மற்றும் அமைச்சர்கள் என்ற முறையில் ஆட்சித்துறைகளை நிர்வகிக்கும் பயிற்சியையும், இந்தியர்களுக்குக் கொடுத்தது. 1935ம் ஈண்டு சட்டப்படியான மாநில சுய ஆட்சிப் பொறுப்புகளை நிர்வகிக்க இந்தியாகளைத் தயார் செய்தது.

மேலும் தேசிய சக்திகளின் உணர்ச்சிகளைச் சட்டசபையினுள் பிரதிபலிக்கும் வாய்ப்பை கொடுத்தது. சிங்கத்தை அதன் குகையிலே சென்று சந்திப்பது போல் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நிர்வாகத்தை சட்ட மன்றத்தினுள் சென்று நேருக்கு நேர் சந்திக்கும் வாயப்பை சுயராஜ்யக் கட்சியினருக்களித்தது. சி.ஆர்.தாஸ் மோதிலால் நேரு ஆகியதேசியத் தலைவர்களின் முழக்கங்கள் சட்டசபையினுள் எதிரொலித்தது. இவை பிரிட்டிஷ் அரசை இந்திய தேசிய இயக்கத்தின் நியாயமான வேண்டுகோளுக்குச் செவிடமுக்கச் செய்தது அதன்விளைவே 1935ம் ஆண்டு மாநிலசுய ஆட்சிக் சீர்திருத்தம்.

“மாறி வரும் காலச் சூழ்நிலைகளில் இறுதி மாற்றங்களுக்கு”இட்டுச் செல்லும் ஓர் இடைக்கால ஏற்பாடு என்ற நிலையில் 1919ம் ஆண்டுச்சட்டம் தன் பணியைச் செவ்வனே செய்து முடித்தது.”

### 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அறுதி அரசயலமைப்புச் சட்டமான 1935ம் ஆண்டுச் சட்டம் பொறுப்பாட்சியை நோக்கிய முன்னேற்றத்தின் முக்கிய சட்டமாக கருதப்படுகிறது. அத்துடன் ஆங்னிலேயர் இந்தியரின் சுய ஆட்சிக்காக நடத்திய அறுதிப் பரிசோதனையாகவும் அமைகிறது. இச்சட்டம் நிறைவேற்றப்பட கீழ்க்கண்ட சூழ்நிலைகள் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக அமைந்தன.

- 1919ம் ஆண்டு சீர்திருத்தச்சட்டத்தின் போலித்தனத்தை சுயராஜ்யக் கட்சியினர் தெளிவாக எடுத்துக்காட்டியது.
- ஆச்சட்டத்தின் நடைமுறையை பரீசிலிப்பதற்கென்று அனுப்பப்பட்ட சைமன் குழுவின் அறிக்கை.
- டொமினியன் அந்தஸ்து அளிக்கும் அரசியலமைப்பினை உருமாக்கிய நேரு அறிக்கை.

- முழு விடுதலையை காங்கிரஸின் குறிக்கோள் என அறிவித்தது.
- அதை அடைவதற்கு காந்தியடிகள் தொடங்கிய தண்டி யாத்திரையும் பட்டமறுப்பு இயக்கமும்.
- புதிய அரசயலமைப்பின் அடிப்படை அம்சங்களைப் பரீசிலிக்க பிரிட்டிஷ் பிரதமா் லண்டனில் வெளியிட்ட வெள்ளையறிக்கை.

மேலே குறிப்பிடப்பட்ட போராட்டங்கள் பூர்வாங்க நடவடிக்கைகளின் விளைவாக 1935ம் ஆண்டு இந்தியச் சட்டம் உருவானது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:**

- **மாநில சுய ஆட்சி** மாநிலங்களில் இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டு அனைத்து அதிகாரங்களும் மக்களால் தேர்தெடுக்கப்பட்ட சட்டசபைக்குப் பொறுப்பான அமைச்சா் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் மாநிலங்களில் முழு பொறுப்பாட்சி ஏற்படுத்தப்பட்டுவிட்டது என எண்ணிவிடக்கூடாது. ஆளுநருக்கு பல மேலதிகாரங்களும் சிறப்பதிகாரங்களும் ரத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன.
- **அனைத்திந்திய கூட்டமைப்பு** : மத்தியில் இச்சட்டம் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களுக்கு இந்திய சுதேச அரசுகளும் அடங்கிய கூட்டாட்சி ஒன்றை உருவாக்கியது. இந்திய மாநிலங்களும் 6 சிறிய மாநிலங்களும் சேரவிரும்பும் சுதேச அரசுகளும் அடங்கியதே அக்கூட்டாட்சி. சுதேச அரசுகளும் தாங்கள் விரும்பினால் சேரலாம். சேர்வது கட்டாயமாக்கப் படவில்லை. கூட்டமைப்பு உறுப்புக்களுக்கு உள்விவகாரங்களில் முழு சுய ஆட்சி அளிக்கப்பட்டது.
- **மத்தியில் இரட்டையாட்சி:** மாநிலங்களில் ஒழிக்கப்பட்ட இரட்டையாட்சி முறை மத்தியில் புகுத்தப்பட்டது. கூட்டாட்சின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டவை மாற்றப்பட்டவை என பிரிக்கப்பட்டது. மாற்றப்பட்ட துறைகள் சட்டசபைக்குக்குப்பொறுப்பான அமைச்சர்களாலும் ஒதுக்கப்பட்டவை மூன்று கவுன்சிலா்களின் துணையுடன் தலைமை ஆளுநரால் நிா்வகிக்கப்படும். அவை பாதுகாப்பு, அயல்நாடு, திருச்சபை விவகாரங்கள்,மலைச் சாதியினா் பராமரிப்பு போன்றவையாகும். ஆமைச்சர்களின் எண்ணிக்கை பத்திற்கும் மேல் போகக்கூடாது. இரு அதிகாரப் பிரிவுகளின் ஒருங்கிணைப்பிற்கும் மேற்பார்வை செய்வதற்கும் தலைமை ஆளுநா்தான் பொறுப்பாக்கப்பட்டாா்.
- **பாதுகாப்பு மற்றும் ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள்** : சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க விசேஷ பாதுகாப்பு அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. மத்தியில் தலைமை ஆளுநரும் மாநிலங்களில் ஆளுநரும் அவ்வதிகாரங்களைப் பயன்படுத்தும் உரிமை பெற்றனா்.
- **பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மேலாதிக்கம்** : இச்சட்ட விதிகளை திருத்ததும் அதிகாரம் இந்திய சட்டமன்றகளுக்கு அளிக்கப்படவில்லை. பிரிட்டிஷ்' பாராளுமன்றம் தான் அவற்றை மாற்றும், திருத்தும் அதிகாரங்களை வைத்திருந்தது. இந்த வகையில் 1935ம்ஆம் ஆண்டு சட்டம் நெகிழாத அரசியலமைப்புப் பிரிவைச் சாா்ந்தது.
- **கூட்டாசு நீதிமன்றம்:**கூட்டரசின் உறுப்புக்களுக்கிடையேடையே எழுகின்ற சிக்கலைத் தீா்க்க மத்தியில் கூட்டரசு நீதின்றம் ஒன்று நிறுவ வகை செய்தது. சட்டத்தின் சா்ச்சைக்குரிய

பகுதிக்கு சரியான விளக்கம் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனால் இதுஇறுதி அப்பீல்நீதிமன்றமாக அமையவில்லை. ஏனென்றால் சில வழக்குகள் பிரிவு கவுன்சிலக்கு அப்பீல் செய்யப்பட வேண்டிய திருந்தது.

- **சட்டமன்ற விரிவாக்கம்** : அஸ்ஸாம், வங்காளம், பீஹார், ஐக்கிய மாநிலங்கள், சென்னை, பம்பாய், ஆகிய மாநிலங்களில் இலு சட்டமன்ற முறை புகுத்த்ப்பட்டதோடு, அவற்றின் உறுப்பினர் தொகையும் அதிகரிக்கப்பட்டது. உதாரணமாக சென்னை சட்டமன்ற உறுப்பினர் தொகை 125 ஆக உயர்த்தப்பட்டது.
- **வாக்காளர் தொகை அதிகரிக்கப்பட்டல்**: மொத்த மக்கள் தொகையில் பத்து சதவீதத்தினர் வாக்குரிமை பெறும் அளவிற்கு அது பரலவாக்கப்பட்டது.
- **வகுப்புவரிப் பிரதிநிதித்துவம் விஸ்தரிக்கப்படல்**: 1909ம் ஆண்டு புகுத்திய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு இந்திய கிறிஸ்தவர்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கியது: பெண்களுக்கென்றும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.
- **அதிகாரப் பங்கீடு:** நாட்டின் கூட்டரசின் அதிகாரங்கள், மாநில அரசின் அதிகாரங்கள், இரண்டிற்கும் பொதுவான அதிகாரங்கள் என மூன்றாக பகுக்கப்பட்டன. முந்தியதிற்கு 59 மாநிலங்களுக்கு 54. பிந்தியதிற்கு 36 எனப் பங்கிடப்பட்டது.
- **இந்திய கவுன்சில் ஒழிக்கப்படல்**: இலண்டனில் இந்திய அமைச்சருக்கு ஆலோசனை கூறுவதற்கென அமைக்கப்பட்ட கவுன்சில் ஒழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக 3லிருந்து 6க்கு அதிகப்படாத ஆலோசகர்களை அவரே நியமித்துக்கொண்டார். தலைமை ஆளுநரின் பிரதிநீதியாக லண்டனில் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட உயர் ஆணையாளர் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்யப்பட்டது.
- **பர்மா பிரிக்கப்படல்:** இதுவரை இந்திய தலைமை ஆளுநர் அதிகாரத்திற்குட்பட்டிருந்த பர்மா தனியாகப் பிரிக்கபட்டது. அதுபோல் எடன் பகுதி பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**1935ம் ஆண்டு சட்டத்தைப்பற்றிய திறனாய்வு:**

1935ம் ஆண்டு சட்டம் மிகவும் வெறுக்கப்பட்ட மாநில இரட்டையாட்சியை ஒழித்து ஆவலோடு வரவேற்கப்பட்ட மாநில சுய ஆட்சியைப் புகுத்தியது. அந்த வகையில் பொறுப்பாட்சியை நோக்கிய பயணத்தில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது. எனவேதான் பேராசிரியர் கூப்லேண்ட் சட்டத்தை ஆக்கரீதியான அரசியல் கொள்கையின் மாபெரும் சாதனை எனப் போற்றியுள்ளார். இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன்பு முதன் முறையாக இந்திய சமூகத்தன் பல்வேறு பிரிவினரின் பிரதிநிதிகள் கலந்தாலோசிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இச்சட்டத்தை நிறைவேற்றுவதில் நான்குவித சக்திகள் சம்பந்தப்பட்டிருந்தன. அவை 1) இந்திய தேசியம் 2) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் 3) இந்திய வகுப்பு வாதம் 4) இந்திய சுதேச அரசுகள் ஆகியவைகளாகும். நூன்கும் நான்கு நிசை நோக்கி இழுத்தன. இறுதியில் முதலில் குறிப்பிட்டசக்தி வலுக்குறைந்து விட்டது. இரண்டாவதாக, மூன்றாவதாக, நான்காவதாக சக்திகள் ஆதரித்தது நின்றன. எனவே ஏகாதிபத்தியம் என்ன நினைத்ததோ அதுவே சட்டத்தில் இடம் பெற்றது. எனவேதான்

ஜவஹர்லால் நேரு இச்சட்டத்தை “புதியதொரு அடிமைச் சாசனம்” எனக் கண்டித்துள்ளார். அவ்வாறு இவர் கூறியதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

முதலாவதாக, இச்சட்டம் இந்தியர்களின் குறைந்தபட்ச அரசியல் உரிமையான டொமினியன் அந்தஸ்தை அளிக்கவில்லை. அதாவது மத்தியில் பொறுப்பாட்சி முறைகள் எதுவும் புகுத்தப்படவில்லை. மாறாக, தலைமை ஆளுநரின் வல்லாட்சிதான் நிலைநாட்டப்பட்டது. இச்சட்டத்தை மாற்றும் அதிகாரமோ திருத்தும் உரிமையோ இந்தியர்களுக்கு அளிக்கப்படவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றமே அந்தமேலாண்மையை இறைமையை தன்னிடம் தக்க வைத்துக் கொண்டது. சுயநிர்ணய உரிமைக்கொள்கை மறுக்கப்பட்டது.

இரண்டாவதாக, மத்தியில் தலைமை ஆளுநர் மாநிலங்களில் ஆளுநர்கள் ஆகியோரின் தன்னிச்சை அதிகாரங்கள் சிறப்பதிகாரங்கள், தள்ளுபடி அதிகாரங்கள் மக்களாட்சிக் கருத்துக்களை எள்ளி நகையாடுவதாக அமைந்துள்ளன. எனவேதான் நேரு ‘வலிமையான பிரேக்குகள் பொருத்தப்பட்ட ஆனால் யந்திரம் எதுவுமற்ற கார்’ என இச்சட்டத்தை வருணித்துள்ளார்.

மூன்றாவதாக, ஆட்சி முறைக் கருத்துக்களுக்கு முரணானது நிர்வாகக்குழப்பத்திற்கு காரணமானது எனக் காரணங்காட்டி மாநிலங்களில் ஒழிக்கப்பட்ட இரட்டையாட்சி மத்திய ஆட்சியில் புகுத்தப்பட்டது. விபரீதமானது.

நான்காவதாக, இச்சட்டம் கொண்டுவந்த கூட்டாட்சி பொருத்தமற்ற இரு அரசியல் உறுப்புகளின் கூட்டாகவே இருந்தது. அக்கூட்டாட்சியில் சேர்வது என்பது மாநிலங்களுக்கு கட்டாயமாக இருந்தபோது சுதேச அரசுகளுக்கு அது விருப்பத்தைப் பொருத்ததாக இருந்தது. மாநிலங்களுக்கு ஓரளவிற்கு சுய ஆட்சி உறுப்புக்களாக இருந்தன. சுதேச அரசுகளோ மன்னர்களின் யதேச்சதிகாரப் பிடியிலிருந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக, மாநிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் கூட்டாட்சியில் பங்கு பெற்ற போது சுதேச அரசுகளின் மன்னரின் நியமன உறுப்பினர்கள் மூலம் அதில் பங்கு பெற்றது. இதன் விளைவாக ஓரளவிற்கு வளர்ச்சியுற்ற காளையொன்றுயும் மெலிந்து குறுகிய காளையொன்றையும் ஒரு வண்டியில் பூட்டினால் எவ்வாறு அது இயங்குமோ அவ்வாறே இக்கூட்டாட்சி செயல்படும் என எதிர் பார்க்கப்பட்டது.

ஐந்தாவதாக, ஏகாதிபத்தியங்களின் பிரித்தாளும் சூழ்ச்சியின் பிரதிபலிப்பான ‘வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை’ மேலும் விரிவாக்கம் பெற்றது. இந்திய சமுதாயம் மேலும் பிளவுபடுத்தப்பட்டது. அதனால் சிறுபான்மையினர் தங்களையறியாமலே அந்திய தேசியத்திற்கெதிராக ஏகாதிபத்தியத்தின்,‘பகடைக்காய்களாக’ மாறிவிடும் அபாயம் ஏற்பட்டது.

எனினும் இச்சட்டம் ஒருமுக்கியமான தவிர்க்கமுடியாத ஒரு அரசியலமைப்பு வளர்ச்சியை ஏற்றுக்கொண்டுவிட்டது. இப்போது மாநிலங்களுக்கு சுய ஆட்சி வழங்கப்பட்டுவிட்டது. இனி அடுத்த கட்டமாக, மத்தியிலும் சுயஆட்சி வழங்கப்படுவது இயல்பாக எதிர்பார்க்க கூடிய வளர்ச்சியாக, தவிர்க்கமுடியாத அரசியல் மாற்றமாக ஆகிவிட்டது. மத்தியிலும் ஆட்சிப்

பொறுப்பை இந்தியர்களுடன் பகிர்ந்துகொள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தயாராகிவிட்டது என்பது தெளிவாகிவிட்டது. 1935க்குப்பின் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய சட்டம் 1947ம் ஆண்டு இந்தியர் சுதந்திரச்சட்டம் தான் என்பதைப் பார்க்கும்போது 1935ம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் முக்கியத்துவம் தானாகப் புலப்படும்.

## 1935ம் ஆண்டு சட்டத்தின் கூட்டாட்சி

1935ம் ஆண்டு அரசியல் சட்டம் மத்திய அரசியல் முதல்முறையாக மாபெரும் மாறுதல்களைப் புகுத்தியது. அவற்றுள் இரண்டு முக்கியமானவைகளாகும் 1)அனைந்திய கூட்டாட்சி 2) இரட்டையாட்சி, இவற்றுள் முந்திய இந்திய அரசியலமைப்பில் புதியதொரு பரிசோதனை அம்சமாக விளங்கியது. பிந்தியதோ ஏற்கெனவே மாநிலங்களில் பரீட்சித்துப் பார்த்து உதவாக்கரைத்திட்டம் என உதறித்தள்ளியது. எனினும் இவை இரண்டும் முக்கிய மாறுதல்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் நடைமுறையில் இந்த மாறுதல்கள் இந்திய மத்திய அரசியலில் மகத்தான விளைவுகள் எதையும் ஏற்படுத்தி விடவில்லை. ஏனென்றால் தலைமை ஆளுநர்தான் இந்திய நிர்வாக அதிகாரத்தின் நிலைக்களனான விளங்கினார். பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத் தான் பொறுப்புள்ளவராக நீடித்தார். இந்த அடிப்படைப் பின்னணியில் 1935ம் ஆண்டு சட்டத்தை ஆராய்ந்தால் அதன் உண்மைத் தன்மை புலனாகும்.

**அனைந்திந்திய கூட்டாட்சி அரசு**

**1. கூட்டாட்சி உறுப்புகள்**

1935ம் ஆண்டு இந்தியாவில் மூன்று வித ஆட்சிப் பிரிவுகள் இருந்தன.

1. 1935ம் ஆண்டு இந்தியச் சட்டம் இவையனைத்தும் ஒன்றிணைந்த ஓர் அனைத்திந்திய கூட்டாட்சிக்கு வகை செய்தது. குறிப்பு: இதற்கு முன்பு இயற்றப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் அனைத்தும் மாநிலங்களில் தான் கொண்டு வரப்பட்டது சுதேச அரசுக்களை எந்த விதத்திலும் அவை பாதிக்கவில்லை.

2. இக்கூட்டாட்சியில் மாநிலங்களும் பிரதம ஆணையரின் ஆட்சிப்பகுதிகளும் கட்டாயமாக சேர்க்கப்பட்டன. சுதேச அரசுகள் விருப்பப்பட்டால் அதில் சேரலாம். அவைகளுக்கு கூட்டமைப்பில் சேர்வது கட்டாயமன்று மேலும் சுதேச அரசுகளின் விருப்பமென்பது அங்குள்ள மக்களின் விருப்பமன்று, அதன் மன்னரின் விருப்பமேயாகும் என்பது கவனிக்கத்தக்கது.

3. கூட்டமைப்பில் சேரவிரும்பும் சுதேச மன்னர் இழணப்புப் பத்திரம் உன்றில் கையொப்பிமிட வேண்டும். அதில் தாம் என்னென்ன அதிகாரங்களை கூட்டாட்சிக்கு விட்டுக் கொடுக்க விரும்புகிறார் என்பதை குறிப்பிட வேண்டும். அத்துறையில் தான் கூட்டாட்சி சட்டமன்றம் அவ்வரசு சம்பந்தப்பட்டவரை சட்டமியற்ற முடியும்.

2. **அதிகாரப் பங்கீடு**

அரசின் அதிகாரங்கள, மத்திய கூட்டாட்சிற்கும் அவற்றின் உறுப்புகளுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அவை:

- **கூட்டரசின் அதிகாரங்கள்** : படை, பாதுகாப்பு அயல் நாட்டு விவகாரம், திருச்சபை சம்பந்தமானவை, நாணயம், பொதுக்கடன், தபால்தந்தி, செய்திஒலிபரப்பு, வங்கி, இறக்குமதி, ஏற்றுமதி கப்பல் வர்த்தகம், துறைமுகம், ரயில்வே, வருமானவரி, இவை போன்ற 59 துறைகளின் அதிகாரங்கள் மூட்டரகிற்கு ஒதுக்கப்பட்டன. இவற்றை கூட்டரசே நிர்வகிக்கும். இவை சம்பந்தமான சட்டங்களை கூட்டரசு சட்டசபைகள் இயற்றும்.
- **மாநில அரசின் அதிகாரங்கள்** : சட்டம் ஒழுங்கு, தல நீதிமன்றம், போலீஸ் தல நிறுவனம், பொது சுகாதாரம் மருத்துவம், வேளாண்மை, நீர்ப்பாசனம், கூட்டுறவு, நிலவருவாய் போன்ற 54 துறைகள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டன.
- **இரு அரசுகளுக்கும் பொதுவான அதிகாரங்கள்** :

மேற் கூறியவை தவிர இரு அரசுகளுக்கும் பொதுவாக 26 துறைகள் நிர்ணயிக்கப்பட்டன. அவைகளும் கிரிமினல் சட்டம், பத்திரப் பதிவு, ஒப்பந்தங்கள், செய்தித்தாள் தொழிலாளர், நலன் தொழிற்சங்கம் உள்நாட்டு கப்பல் போக்குவரத்து ஆகியவை முக்கியமானவைகளாகும்.

- **இரட்டை ஆட்சி முறை**

கூட்டாட்சியின் அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டவை மாற்றப்பட்டவை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

1. **ஒதுக்கப்பட்டவை** : அயல் நாட்டு உறவு, பாதுகாப்பு திருச்சபை விவகாரங்கள், மலைசாதியினர் விவகாரங்கள் ஆகியவை ஒதுக்கப்பட்ட துறைகள் இவற்றை தலைமை ஆளுநர் தம்மால் நியமிக்கப்படும் கவுன்சிலர்களின் உதவியால் நிர்வகிப்பார் இத்துறைகளுக்கு இவர் இந்திய அமைச்சருக்கே பொறுப்பாவார் கூட்டாட்சி சட்ட மன்றங்களோ, அமைச்சர்களோ இத்துறை பற்றி எத்தகைய வினாக்களும் எழுப்ப முடியாது.
2. **மாற்றப்பட்டவை** : பிற துறைகளை கூட்டாட்சி சட்டமன்றங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் துணை கொண்டு நிர்வகிப்பார்.

**கூட்டாட்சி நிர்வாகம்- தலைமை ஆளுநர் :**

கூட்டாட்சியின் தலைமை நிர்வாகப் பொறுப்பு தலைமை ஆளுநர் கரங்களில் விடப்பட்டது. பிரிட்டிஷ் பிரதமரின் பரிந்துறையின் பேரில் பிரிட்டிஷ் மன்னரால் நியமனம் செய்யப்படுகிறார். இவரது பதவி காலம்- சாதாரணமாக ஐந்து ஆண்டுகள் ஆண்டுக்கு ரூ.2,51,800 ரூபாய் சம்பளமாக இந்திய வருவாயிலிருந்து பெறுகிறார். இது தவிர மேலும் பலபடிகளுக்கும் சிறப்பு ஊதியங்களுக்கும் உரியவராகின்றார். மொத்தம் 1.80,000 ரூபாய்கள் ஆண்டிற்கு செலவளிக்க தகுதி பெற்றவராகிறார். உலகில் வேறு எந்த பதவியாளருக்கும் இத்தகைய உயர் ஊதியம் சட்டமன்ற தெிகார வரையறைகளுக்கு அப்பாற்பட்டது.

**தலைமை ஆளுநரின் அதிகாரங்கள் அளவிறந்தவை**

- இந்திய சிவில், மற்றும் இராணுவ நிர்வாகத் தலைமைப் பொறுப்பு.
- ஆயல்நாட்டு நிர்வாகப் பாதுகாப்பு, திருச்சபை விவகாரங்கள், மலைச்சாதினர், சம்பந்தப்பட்டவை ஆகியவற்றில் முழு அதிகாரம் இவற்றின் நிர்வாகத்தில் தமக்கு உதவிபுரிய மூன்று கவுன்சிலர்களை நியமித்துக் கொள்ளலாம்.

- ஒதுக்கப்பட்டவை தவிர பிற துறைகளில் அமைச்சர்களின் உதவி கொண்டு நிர்வாகம் புரிவார். நாட்டிற்கு நலன் பயக்ககூடியது எனக்கருதினால் அமைச்சர்களின் ஆலோசனையையும் புறக்கணித்து தமது விருப்பம் போல செயல்படவும் உரிமை உண்டு.
- முக்கிய உயர் அதிகாரிகளை பிரதம ஆணையர்கள், பொதுப்பணிக்குழு தலைவர், கூட்டாட்சி ரெயில்வே குழுத்தலைவர் ரிசர்வ் பாங்கு ஆளுநர், உயர்நீதிமன்ற கூடுதல் நீதிபதிகள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரை நியமிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.
- சுட்டசபைகளைக் கூட்டுதல், ஒத்திப்போடுதல் கலைத்தல், கூட்டுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றுள்ளார். எந்த மசோதாவும் தலைமை ஆளுநர் கையொப்பம் பெற்ற பின்னரே சட்டமாகும். அவசரச் சட்டம் பிரகடனம் செய்தல்,அரசியலமைப்புமுதலியன நிறுத்தி வைத்தல், போன்ற உயர் அதிகாரங்களையும் பெற்றிருந்தார்.
- நிதித்துறையில் தமக்கு துணைபுரிய நிதி ஆலோசகர் ஒருவரை நியமித்துக் கொள்ளலாம் நிதிநிலை அறிக்கைகிட்டதட்ட எண்பது சதவீதம் அசரது கட்:டுபாடடிலிருந்து நட்டமன்றம் நிராகரித்த செலவினங்களைக் கூட அனுமதிக்கும் மேலதிகாரம் பெற்றிருந்தார்.
- மேற் கூறப்பட்டவை தவிர சில விசேடப் பொறுப்புகளும் அதிகாரங்களும் அவருக்கிணைந்தன. சில சமயங்களில் அமைச்சர் ஆலோசனைகளைப் புறக்கணித்து தம் தனிப்பட்ட முடிவின் பேரில் நடவடிக்கை எடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருந்தது.

**அவை:**

- நாட்டின் பகுதிகளில் அனுமதி குலைந்து ஒழுங்கீனம் பரவுவதை தடுத்தல்.
- கூட்டாட்சியின் நிதிநிலை உறுதியைப் பாதுகாத்தல்.
- சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாத்தல்
- இந்திய சிவில் சர்வீஸ் ஊழியர்களின் சட்டபூர்வமான நலன்களைப் பாதுகாத்தல்.
- வுர்த்தகத் துறையில் வேறுபாடு காட்டும் நடவடிக்கைகளைத் தடுத்தல்.
- இந்திய சுதேச அரசுக்களின் நலன் மற்றும் அரசர்களின் கௌரவம் ஆகியவற்றை பாதுகாத்தல்.

**கூட்டாட்சி சட்டமன்றம்** :

கூட்டாட்சி சட்டமன்றம் இரு அவைகளைக் கொண்டது. இவை: 1, அரசுக்கவுன்சில் 2. கூட்டாட்சிப் பேரவை இவை முறையே மேல் சபை கீழ் சபை எனவும் வழங்கப்படும்.

- **அரசுக் கவுன்சில்** :
- இச்சபை மொத்தம் 260 உறுப்பினர்களைக் கொண்டது. அவற்றை 156 பேர் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களில் பிரதிநிதிகள் மீதி 104 பேர் சுதேச அரசுப் பிரதிநிதிகள் கூட்டாட்சி உறுப்புக்களுக்கு சம அளவு பிரதிநிதித்துவம். வுழங்கப்பட்வில்லை. சுதேச அரசுகள் தங்கள் முக்கியத்துதத்திற்குத் தக்கவாறு பிரதிநிதிகளை அனுப்பும் உரிமை பெற்றன. அவற்றின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மன்னரால் நியமிக்கப்படுவார்கள்.
- பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களில் பிரதிநிதிகளான 156 பேரில் 150 பேர் வகுப்புவாரியப் பிரதிநிதித்துவ முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆறுபேர் சிறுபான்மையினர், பெண்கள்,

தாழ்த்தப்பட்டோர் ஆகியோருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில்' தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுவர். இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர், பிரதிநிதிகள் மறைமுகத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். ஐரோப்பியர்,ஆங்கிலேயர், இந்தியர், கிறிஸ்துவர் ஆகியோரின் பிரதிநிதிகள் மறைமுகத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பவர்.

2.இச்சபைநிரந்தரமானது, கவலைப்படுவதில்லை, மூன்று ஆண்டுக்கொரு முறை மூன்றில் ஒரு பங்கினை ஓய்வு பெறுவர்.

**2) கூட்டாட்சிப் பேரவை** : மொத்தம் 375 உறுப்பினர்களில் 250 பேர் மாநிலங்களின் பிரதிநிதிகள் 125 பேர் சுதேச அரசுகளின் பிரதிநிதிகள், முந்தியவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையில் மாநில சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.பிந்தியவர்கள் தம் அரனால் நியமனம் செய்யப்படுவர். முாநிலங்களின் பிரதிநிதிகள் 250 பேரில் இந்துக்கள்(தாழ்த்தப்பட்டோர் உட்பட்ட) 105. முஸ்லீம் 82, சீக்கியர்6, இந்தியக்கிறிஸ்துவர் 8, ஐரோப்பியர்8, ஆங்கிலோ இந்தியர் 4, வர்த்தகம் தொழில் 11, நிலச்சுவான்தார் ரூ, தொழிலாளர் 10, பெண்கள் 9, இச்சபையின் ஆயட்காலம் ஐந்தாண்டுகள், வபை நடவடிக்கைகளுக்கு தலைமை மாங்க ஒரு அவைத்தலைவரை சபை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

**3) கூட்டாட்சி சட்டமன்றங்களின் அதிகாரங்கள் :**

1. கூட்டாட்சிக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் கூட்டாக ம்றறும் மாநில அரசுகளுக்குப் பொதுவான அதிகாரங்கள் சார்ந்த விஷயங்களிலும் சட்டமியற்றலாம். சுதேச அரசுகளைப் பொறுத்தமட்டில் இணைப்பு பத்திரத்தில் குறிப்பிடபட்டுள்ள துறைகள் சார்ந்த சட்டங்கள் மட்டும் தான் இயற்றமுடியும்.

2. மசோதாக்கள் எந்த சபையிலும் முதலில் கொண்டுவரப்படலாம் இரு சபையிலும் முதலில் நிறைவேற்றப்பட்டு தலைமை ஆளுநர் கையொப்பம் பெற்ற பின்பே அவை சட்டமாகும்.

3. நிதி மசோதாக்கள் முதலில் சட்டப் பேரவையில் தான் கொண்டு வரப்படவேண்டும். மற்றபடி நிதித் துறையில் இரு சபைகளும் சம அதிகாரம் பெற்றவைகளே.

4. தலைமை ஆளுநர் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட ஆண்டு நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) இரு சபையகளிலும் விவாதத்திற்கு வைக்கப்படும். ஆனால் கிட்டதட்ட எண்பது சதவீத செலவினங்கள் சட்டசபை அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக ஆக்கப்பட்டது. மீதமுள்ள இருபது சதவீத செலவினங்களில் கூட தலைமை ஆளுநர் மேலதிகாரம் சட்டபூர்வமாக நிலைநாட்டப்பட்டது.

5. அமைச்சர்கள் சட்டப் பேரவைக்குப் பொறுப்பானவர்கள். அச்சபை நம்பிக்கையில்லாத் தீர்மாகத்தின் மூலம் அமைச்சர் குழுவை பதவியின்றி இறக்கி விடலாம்.

6. கவுன்சிலர் பதவிகாரணமாக சட்டமன்ற உறுப்பினராகக் கருதப்படுவார்கள். அவர்கள் சட்டமன்ற விவாதங்களில் கலந்து கொண்டு பதில் அளிக்க கடமைப்பட்டவர்கள்.ஆனால் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியாது. அவர்கள் தலைமை ஆளுநருக்கே பொறுப்பானவர்கள்.

**4) கூட்டாட்சி நீதிமன்றம் :**

**1.** இச்சட்டம் ஒரு தலைமை நீதிபதி மற்றும் ஆறு துணைநீதிபதிகள் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவ ஏற்பாடு செய்தது.2. நீதிபதிகளின் நியமனம்,ஊதியம், பதவிநீக்கம், ஆகியவை பிரிட்டிஷ் அரசரால் செய்யப்படும். அவை பற்றிய அதிகாரம் தலைமை ஆளுநருக்கோ, கூட்டாட்சி சட்டமன்றங்களுக்கோ தரப்படவில்லை.3. நீதிபதிகளின் ஓய்வு வயது 65 ஆக நிர்ணயிக்கப்பட்டது.4. தலைமை நீதிபதியின் மாத சம்பளம் 7000 ரூபாய் பிற நீதிபதிகளுக்கு 5500 ஆக நிர்ணயிக்கப்பட்டது. 5. ஐந்தாண்டு மாநில உயர்நீதிமன்ற நீதிபதிகளோ, பத்தாண்டு வழக்கறிஞராகவோ அனுபவம் பெற்றவர்களே நீதிபதியாக நியமிக்கப்படவேண்டும். 6. ஆரசியல் சட்டத்திற்கு விளக்கமளிப்பதில் எழும் கருத்து வேறுபாடுகள் கூட்டாட்சி அரசிற்கும், மாநில அரசிற்கும் அல்லது இரு கூட்டாட்சி, உறுப்புகளுக்கிடையே எழும் சட்ட சம்பந்தமான சிக்கல்கள் ஆகியவற்றில் இறுதித் தீர்ப்பளிக்கும் அதிகாரம் பெற்றிருந்தது. அரசியலமைப்பு உரிமைகள் சம்பந்தமான மாநில உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புக்கெதிரான அப்பீல் வழக்குகளையும் விசாரிக்கலாம். அப்படி விசாரிப்பதற்கு உயர்நீதிமன்றம் சான்றிதழ் வழங்கவேண்டும். சட்டசம்பந்தமாக தலைமை ஆளுநர் விளக்கம் கேட்டால் அத்தகைய விளக்கம் கொடுக்கவும் கடமைப்பட்டிருந்தது. ஆனால் கூட்டாட்சி நீதிமன்றம் இறுதிதீர்ப்பு வழங்கும் நீதிமன்றமல்ல: அதற்கு மேலும் சில குறிப்பிட்ட வழக்குகளில் பிரட்டிஷ் பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. 7. இந்நீதிமன்றம் 1937 அக்டோபர் முதல் தேதியிலிருந்து செயல்பட்டது.

- **பிற கூட்டாட்சி நிறுவனங்கள்**

1) **கூட்டரசு ரயில்வே அதிகாரக்குழு**: இந்திய ரெயில்வேக்களின் நிர்வாகத்தை கட்டுப்படுத்த ஒரு அதிகாரக்குழு நிறுவப்பட்டது. இது ஏழு உறுப்பினர்களைக் கொண்டது. இது பெரும்பாலும் கூட்டாட்நி சட்டமன்றங்களை மற்றும் அமைச்சர்கள் செல்வாக்கிற்கு அப்பால் செயல்பட்டது. ரெயில்வே நிர்வாகம் இன்றிருப்பது போல் ஒரு அமைச்சகத்திற்குதுக்கப்படாமல் இக்குழுவினிடம் விடப்பட்டது. ரெயில் விபத்துக்கள் பற்றி விசாரிக்க விசாரணைக்குழு ஒன்று நிறுவப்பட்டது.

2) **இந்திய சேம வங்கி** : நிரிநிலையின் உயுதித்தன்மை தலைமை ஆளுநரின் விசேடப் பொறுக்கப்பட்டது. நாணயம், வெளியிடல் நாணயமாற்றுப் போன்ற பொறுப்புக்களை நிறைவேற்றி நிதிநிலையைச் சீராக அமைக்க சேம வங்கி நிறுவப்பட்டது. அதன் நிர்வாகம் தனியொரு கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

**நிறைகள்** :மூன்று; வகையில் 1935ம் ஆண்டு இந்திய அரசுச்சட்டம் தனிச்சிறப்பு எய்துகின்றது.

- முதன்முறையாக அனைத்து இந்தியாவிற்கும் பொருந்தும் அரசியல் சட்டத்தை உருவாக்கியது.
- கூட்டாட்சி என்ற புதியதொரு அரசியலமைப்புப் பரிசோதனையில் இறங்கியது.
- மத்தியிலும் ஓரளவிற்குப் பொறுப்பாட்சி வழங்கியது.

இதுவரை இந்திய உபகண்டத்திலுள்ளே தனியொரு உலகமாக இயங்கிக் கொண்டிருந்த சுதேச அரசுகளும் இந்திய தேசியத்தின் ஒரு அங்கம் தான் என எடுத்துக்காட்டிய இச்சட்டம்

போற்றத் தகுந்ததொன்றுதான். அதே சமயத்தில் கூட்டாட்சி என்ற அரசியல் பரிசோதனை மூலம் அனைத்திந்தியாவிற்கும் பொறுந்தும் அரசிலமைப்பு பகுத்தப்பட்டதும் பாராட்டத்தக்கதொரு முயற்சிதான். கூட்டாட்சி அரசிற்கு இருக்க வேண்டிய நான்கு முக்கிய தகுதிகளும், (எழுதப்பட்ட) அரசியலமைப்பு, அதிகாரப்பங்கீடு, கூட்டாட்சி நீதிமன்றம், கூட்டாட்சி உறுப்புகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் சகையில் ஒரு இரண்டாவது அவை அதற்கு அருந்தது குறிப்பிடத்தகுந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய அரசிலும் மக்கள் பிரதிநிதிகளான அமைச்சர்களுடன் நிர்வாகப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள முன்வந்தது- பொறுப்பாட்சியை நோக்கிய முன்னேற்றம் எனத்துணிந்து கூறலாம்.

**குறைகள்** : எனினும் மேலேக் கூறப்பட்ட மூன்று சிறப்புக்களும் முழு முதற்சிறப்புகளாகக் காணப்படுவது இச்சட்த்தின் பெருமைக்கு களங்கம் விளைவிப்பதாக அமைகிறது.

முதலில், அனைத்து இந்தியாவிற்கும் பொருந்தும் என்ற சொற்றொடர் இச்சட்த்திற்கு பொருந்தாது. ஏனென்றால்சுதேச அரசுகள் அனைத்தும் கூட்டாரசில் கட்டாயமாக இணையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விருப்பப்பட்ட அரசுகளே அதில் சேரலாம் என்ற நிபந்தனை ஏக இந்தியக் கருத்திற்கு ஊறுவிளைவிப்பதாக உள்ளது. அதிலும் விருப்பத்தையே குறிக்கின்றது மக்கள் விருப்பத்தையல்ல, மன்னரின் விருப்பத்தையே குறிக்கின்றது. மேலும் அரசுகள் இணைப்புப் பத்திரத்தில் குறிப்பிடும் அதிகாரங்களில் மட்டும்தான் கூட்டாட்சிக்கு நிர்வாகப் பொறுப்பு உண்டு என்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு முரணானவை.

இரண்டாவதாக இச்சட்டம் உருவாக்கிய கூட்டாட்சியில் கூட்டாட்சிப் பண்புகள் பல காணப்படவில்லை. 1. பொது நலன்களையும் நோக்கங்களையும் நிறைவேற்ற தாமதமாக உன்றுசேரும் கூட்டரசே உண்மைக் கூட்டாக. ஆனால் கூட்டாக ஏகாதிபத்தியம் உன்றினால் இந்தியாவில் திணிக்கப்பட்டது. 2. கூட்டாட்சி உறுப்புகள் மூன்று வெவ்வேறு ஆட்சியமைப்பின் கீழ் உள்ளவை. மாநில ஆளுநர், பிரதம ஆணையர், சுதேச அரசர் என்ற வேறுபட்ட நிர்வாகத்தினர் கீழ் உள்ள பகுதிகள் ஒரு கூட்டாட்சயில் இணைவது வந்தையானது. மேலும் மாறிலங்கள் கட்டாயமாக கூட்டாட்சியில் இணையவேண்டும் என்று விதிக்கப்பட்டபோது சுதேச அசைகளுக்கு அவற்றின் விருப்பத்திற்கு விடப்பட்டிருந்தது. விசித்திரமானது. ஆத்துடன் கூட்டரசின் மாநிலப் பிரதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது சுதேச பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டது. வேடிக்கையானது. இத்தகைய வேறுபாடுகளின் கூட்டாட்சி ஒரு கலப்பட அரசாகவே காட்சியளித்தது. 3. கூட்டாட்சிச் சட்டமன்றத்தின் இரண்டாவது அவையில் (அரசு கவுன்சிலில்)உறுப்புகளுக்கு சம அளவு பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற பண்பு இங்கு மீறப்பட்டது. 4. பிற நாட்டு கூட்டாட்சிகளில் கீழ் சபை பிரதிநிதகள் நேரடித்தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் போது இங்கு மறைமுகத்தேர்தல் கடைபிடிக்கப்படுவடு கூட்டாட்சிமுறைறைகளுக்கு முரணானது. 5. ஒரு உண்மைக் கூட்டாட்சியில் எஞ்சிய அதிகாரங்கள் உறுப்பினர்களிடம் தான் விடப்படும். ஆனால் இந்த சட்டமோ அவற்றை தழலமை ஆளுநர் விருப்பதற்கு விட்டுவிட்டது.

மூன்றாவதாக, இச்சட்டம் வழங்கிய ஓரளவு பொறுப்பாட்சியும் தலைமை ஆளுநரின் சிறப்பதிகாரங்களாலும் தள்ளுபடி அதிகாரங்களாலும் தன்னிச்சையான அதிகாரங்களாலும் சிதைக்கப்பட்டுவிட்டது. அவசரச் சட்டம் பிரகடனம் செய்து கூட்டாட்சி பெற்றிருப்பது கூட்டாட்சி அரசியலமைப்பை செயல்படாது நிறுத்தி வைக்கும் அதிகாரம் பெற்றிருப்பது கூட்டாட்சியின் அடிப்படைக்கே வேட்டு வைப்பதாக உள்ளது. எனவேதான் ஜவஹர்லால் நேரு இச்சட்டத்தை,“வலிமையான பிரேக்குகள் பொருத்தப்பட்ட ஆனால் எந்திரம் எதுவுமில்லாத கார்” என வருணித்துள்ளார்.

நான்காவதாக, ஆட்சிதுறைக் கருத்துகளுக்கு முரணானது. நிர்வாகக் குழப்பற்களுக்கு காரணமானது எனக்கூறி மாநிலங்களில் ஒழிக்கப்பட்ட இரட்டையாட்சி மத்தியில் புகுத்த்ப்பட்டது. விபரீதமானது அனுபவ ரீதியில் பரீட்சிக்கப்பட்டு உதவாக்கரைச் சட்டம் எனக் கைவிடப்பட்டதை மீண்டும் சரிமேற்கொண்டு செயல்படுவது நகைப்பிற்கிடமாகியது.

ஐந்தாவதாக, ஏகாதிபத்தியங்களில் பிரித்தாழும் சூழ்ச்சியின் பிரதிபலிப்பான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவதுறை மேலும் இச்சட்டத்தில் விரிவாக்கப் பெற்றது. அதன்மூலம் இந்திய சமுதாயம் மேலும் பிளவுப்படுத்தப்பட்டது. சிறுபான்மையினரை தேசிய அணியில் சேரவொட்டாது ஏகாதியத்தியத்தின் செல்லப்பிள்ளையாக மாற்றும் சதித் திட்டஆம இம்முறை, இச்சட்டம் உருவாக்கிய சட்டமன்றங்கள் முழு இறைமை உடைமை, இச்சட்டத்தை திருத்தம் செய்யும் உரிமை கூட அவற்றிற்கு அளிக்கப்படவில்லை.

இறுதியாக, சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதகள் பெரும் பான்மையினராக இருப்பது போல் தோன்றினாலும் சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்களும், மற்றும் நிலச்சுவான்தார்கள் போன்ற சுயநலக் குழுவின் பிரதிநிதிகளும ஒன்று சேர்ந்து அதிகாரவர்க்கத்திற்கு ஆதரவான அணியொன்றை அமைக்கும் வாய்ப்பும் இருந்தது.

எனவே, 1935ம் ஆண்டு அரசியல் சட்டத்தில் கூட்டாட்சிப் பகுதிக்கு கடுமையான எதிர்ப்புத் தோன்றியது. அதை அமுல் நடத்தினால் தலைமை ஆளுநரின் வல்லாட்சி நிலைநாட்டப்படும் அபாயம் எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, கூட்டாட்சி சட்டம் அமுல் நடத்தப்படுவது ஒத்தி போடப்பட்டது. இறுதியில் அது நடைமுறைக்கு கொண்டுவரப்படவில்லை.

## 1935ம் ஆண்டு சட்டத்தில் மாநில சுய ஆட்சி

**1932ம்** ஆண்டு அரசியல் சட்டத்தின் மிகவும் சிறப்பானதொரு அம்சம் மாநிலங்களில் சுயஆட்சி நிறுவியது. ஆனும்.‘படிப்படியாக பொறுப்பாட்சி அமைப்போம்’ என மாண்டேகு 1917ம் ஆண்டு அறிவித்ததைத் தொடர்ந்து 1919ம் ஆண்டு மாநிலங்களில் பொறுப்பாட்சிக்கு முதற்படியாக ஓரனவு சுயஆட்சி விங்கும் இரட்டையாட்சி முறை புகுத்தப்பட்டது. இப்போது, ஏற்கெனவே அளித்த வாக்குறுதிக்கு ஏற்ப மத்தியிலும் பொறுப்பாட்சி நிறுவப்பட்டது. பலவகைகளில்1935ம் ஆண்டு சட்டம் 1919ம் ஆண்டு சட்டத்தைவிட முற்போக்கானது. முதலில் இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் என்ற பாகுபாடு நீக்கப்பட்டது. ஆளுநரின் கவுன்சில் அகற்றப்பட்டது. இரண்டாவது 1919ம் ஆண்டு

சட்டத்தைப் போலன்றி மாநிலங்களில் அதிகாரங்கள் அரசியலமைப்பு மூலம் உறுதி செய்யப்பட்டக. மத்திய அதிகாரத்தின் கையாட்களாக செயல்பட வேண்டிய அவசியமில்லை. எனவே 1935ம் ஆண்டுச்சட்டம் மாநிலங்களை மத்திய அரசின் கட்டுபாட்டிலிருந்து விடுவித்து சுயமாக இயங்க வழிவகுத்தது. அங்கு பொறுப்பாட்சியை, அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பொறுப்பான அமைச்சரவை ஆட்சியை நிலைநாட்டியது.

**1. ஆளுநரும் அவரது அதிகாரங்களும் :**

**1.**மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பு ஆளுநரிடமும் அவர் தம் அமைச்சர் குழுவிடமும் விடப்பட்டது. ஆளுநர் மாநிலத்தில் மன்னரின் கையாளகவே செயல்படுகின்றார். சென்னை, பம்பாய், வங்காள ஆளுநர்கள் இந்திய அமைச்சர் பரிந்துரையின்படி மன்னரால் நியமிக்கப்படுகின்றனர். பிற ஆளுநர்களை தலைமை ஆளுநர் பரிந்துரையின் படி மன்னர் நியமிக்கின்றார். அவரது பதவி காலம் ஐந்து ஆண்டுகள்.

**2.** மாநிலத்தின் தலைமை நிர்வாகி என்ற முறையில் ஆளுநர் மூன்று விதமாக செயலாற்றுகிறார்.

**1) தன் விருப்புரிமையின்படி செயல்படுதல்**: சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாத்தல், சட்டசபைகளை கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல், சட்டமியற்றுதல், அவசரச் சட்டம் பிறப்பித்தல், சில உயர்பதவிகளுக்கு 'நியமனம் செய்தல்' போன்றவற்றில் ஆளுநர் தம் விருப்பம் போல் செயல்படும் உரிமை பெறுகிறார். தும் அமைச்சர்களைக்கூட கலந்தாலோசிக்கும் கட்டாயமில்லை.

**2) சொந்த முடிவின்படி செயல்படுதல்** : ஆளுநர் தம் விசேடப் பொறுப்புகளை நிறைவேற்றும்போது தமது சொந்த முடிவின்படி டிசயல்படும் உரிமை பெறுகின்றார். இப்படி செயல்படும் முன் அமைச்சர்களை கலந்தாலோசித்து இறுதியில் தம் சொந்த முடிவின்படி நடந்து கொள்கிறார். மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு அமைதி கெடாதவாறு பாதுகாத்தல், சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாத்தல், தலைமை ஆளுநரால் அனுப்பப்படும் ஆணைகளைச் செயல்படுத்தல் போன்ற விஷயங்களில் ஆளுநரின் சொந்த முடிவுதான் இறுதியில் நிற்கின்றது.

**3. அமைச்சர்கள் ஆலோசனையின்படி செயல்படுதல் :**

பொதுவில் மாநில நிர்வாகத்தை அமைச்சர்களின் ஆலோசனைகளின்படி நடத்தவேண்டுமென ஆளுநர் எதிர்பார்க்கப்பட்டார்.

சட்டமியற்றும் பணியில் தலைமை ஆளுநரின் பங்கு குறிப்பிடத்தகுந்தது. சட்டசபையைக் கூட்டுதல், ஒத்திவைத்தல், கலைத்தல், இரு சபைகளின் கூட்டு கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், சட்டசபை இயற்றிய சட்டங்களுக்கு சம்மதம் அளித்தல், அவசரச் சட்டம் பிறப்பித்தல் போன்ற அதிகாரங்கள் அவருக்கு உண்டு. மேலும் கூட்டாட்சியின் பிற உறுப்பு அல்லது சுதேச மன்னர்களைப் பற்றிய விவாதங்களை உடனே நிறுத்தும் அதிகாரமும் பெற்றுள்ளார். எல்லாவற்றிற்கும்மேலாக தாமே ஒரு மசோதா தயாரித்து அதைச் சட்டசபைக்கு அனுப்பி சட்டமாக்கும் உரிமையும் பெற்றுள்ளார். சட்டசபை அதை நிராகரித்தல் கூட அதைச்

சட்டமாக்கும் உரிமை பெற்றுள்ளார். ஆனால் அத்தகைய சட்டங்கள் இந்திய அமைச்சருக்கு அனுப்பப்பட்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்.

நிதித்துறையிலும் ஆளுநர் அதிகாரம் குறிப்பிடத் தகுந்ததாயிருந்தது. அவர் அனுமதிக்கும் சில செலவினங்கள் சட்சபை அதிகாரத்திற்கு அப்பாற்பட்டவை. சட்டசபை நிராகரித்த செலவினத்தை ஆளுநர் அது அவசியம் என்று கருதினால் அவற்றை அனுமதிக்கும் அதிகாரமும் அளிக்கப்பட்டிருந்தது.

**அமைச்சரவை** : சட்டசபையில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரை அழைத்து அமைச்சரவை அமைக்கும் பாரம்பரியம் இச்சட்டத்தின் மூலம் நிலைநாட்டப்பட்டது. சட்டசபையின் நம்பிக்கையைப்பெற்றிருக்கும் வரை அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பில் நீடிக்கும் என்றாலும், அதனை பதவி நீக்கம் செய்யும் உரிமை ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. சட்டசபைஉறுப்பினர்களே அமைச்சர்களாக நியமிக்கப்பட தகுதி படைத்தவர்கள் இல்லையென்றால் நியமனம் பெற்ற ஆறு மாதங்களுக்கு உறுப்பினராக வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அமைச்சர்குழு கூட்டுப்பொருப்பு கருத்து ஒற்றுமையுடன் செயல்படும் என எதிர்ப்பார்க்கப்பட்டது.

**மாநில சட்டமன்றங்கள்** : இச்சட்டப்படி அஸ்ஸாம் பீஹார், வங்காளம், பம்பாய், சென்னை ஐக்கிய மாநிலங்களில் இரு சபைகள் கொண்ட சட்டமன்றம் உருவாக்கப்பட்டன. பிற மாநிலங்களில் முன்போல் ஒரு சபை கொண்ட மன்றங்களே இருந்தன. சட்டமன்றத்தின் மேல்சபை என்றும், கீழ்சபை சட்டபேரவை என்றும் அழைக்கப்பட்டன.

**ச**ட்டமன்றத்தில் அதிகார வர்க்கத்தின் ஆதரவு அணியாக உறுப்பினர்களே நியமனம் செய்யும் முறை முற்றிலும் ஒழிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட வகைசெய்யப்பட்டது. இங்கும் தேர்தல் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையிலேயே நடைபெற்றது.

**சட்டக் கவுன்சில்** : இது நிரந்தரமான அவையாக இருந்தது. மூன்றாண்டுகளுக்கு ஒரு முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இவர்கள் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். சிலர் ஆளுநரால் நியமிக்கப்படுவர். சான்றாக சென்னை சட்டக் கவுன்சிலில் மொத்த் உறுப்பினர் 51-56 வரை இவற்றுள் 25 பொதுத் தொகுதியாகவும் முஸ்லீம்களுக்கு 7, ஐரோப்பியர்1, இந்திய கிறிஸ்துவர் 3, நியமன உறுப்பிர் 8லிருந்து 10 வரை, இச்சபைக்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமை சொத்து, பதவி, பட்டம் உடையவர்களுக்கே வழங்கப்பட்டது.சான்றாக முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் பல்கலைக் கழகபேரவை உறுப்பினர்கள் நீதிபதிகள், நகராட்சி மன்றத் தலைவர்கள், கூட்டுறவுப் பாங்குத் தலைவர்கள் ராவ்பகதூர் பட்டம் பெற்றவர்கள் ஆகியோரே வாக்களிக்கும் உரிமை பெற்றனர்.

பணமவோதாக்கள் தவிர இதர மசோதாக்கள் மேலவையில் முதலில் கொண்டுவர படலாம். ஆண்டு நிதிநிலை அறிக்கை பற்றி இச்சபைக்கு அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை. பிற மசோதாக்கள் இச்சபையில் நிறைவேறினால்தான் சட்டமாகும்.

**சட்டபேரவை :**

கீழ் சபை உறுப்பினர் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். சான்றாக சென்னையில் சென்னையில் 215 பேரும் ஒரிசாவில் 60 பேரும் இருந்தனர். உறுப்பினர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னையில் தாழ்த்தப் பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட 30 இடங்களுடன் பொதுத்தொகுதி 146, மலைவாதியினர் 1, முஸ்லீம் 28, ஆங்கிலோ இந்தியர் 2, ஐரோப்பியர் 3, இந்திய கிறிஸ்துவர் 8, தொழில் வர்த்தகம் 6, நிலச்சுவான்தார் 1, பல்கலை கழகம் 1, தொழிலாளர் 6, பெண்கள் 8, இதன் ஆயுள் காலம் ஐந்தாண்டுகள்.

சாக்களிக்கும் உரிமை பரவலாக்கப்பட்டு மொத்த மக்கள் தொகையில் 15 சதவீதத்தினர் வாக்களிக்கும் உரிமை பெற்றனர். இதுவும் மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்டிருந்தது. பொதுவாக 21 வயது நிரம்பி வருமான வரி அல்லது குறிபிட்ட அளவு நிலவரி, வீட்டு வாடகை, நகராட்சிவ ரி செலுத்துபவர்களுக்கு அளிக்கப்பட்டது.

சட்டமன்றங்களின் அதிகாரங்கள்

அதிகார பங்கீட்டில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட துறைகள் மற்றும் இரு அரசுகளுக்கும் பொதுவாக்கப்பட்டிருந்த துறைகள் சார்ந்த சட்டங்கள் இயற்றலாம். ஆனால் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்கள் தலைமை ஆளுநர் சட்டங்கள், ஆளுநர் சட்டங்கள் ஆகியவற்றை திருத்தவோ, ரத்து செய்யவோ கோரும் சட்டங்கள் இயற்றமுடியாது. முற்றப்படி மசோதா கொண்டு வருதல், கேள்வி எழுப்புதல் ஒத்தி வைப்புத் தீர்மானம் ஆகியவற்றில் முழு உரிமை அமைச்சரவை சட்டபேரவைக்கு பொறுப்பாக இயங்கும். நிதி விஷயங்களில் ஆளுநர் அதிகாரத்திற்குட்பட்ட 70 சதவீத செலவினங்கள் தவிர இதர இனங்களில் சட்டமன்றம் ஓரளவு அதிகாரம் பெற்றுள்ளது. இதிலும் கூட நிராகரிக்கப்பட்ட செலவினங்களை அனுமதிக்கும் உரிமை ஆளுநருக்குக் வழங்கப்பட்டது.

**திறனாய்வு :**

**நிறைகள்** : மாநிலத்தில் இரட்டை ஆட்சியை ஒழித்து சுய ஆட்சியைப் புகுத்திய இச்சட்டம் பலவகைகளில் போற்றுதற்குரியதாயிருந்தது. வாக்குரிமை பரவலாக்கப்பட்டது சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது. உறுப்பினர் நியமனம் செய்யப்படும் முறை கீழ்சபையைப் பொறுத்தமட்டில் முற்றிலும் ஒழிக்கப்பட்டது. முதல்முறையாக அது முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் ஆன சபையாக விளங்கியது, அனைத்து மாநில அதிகாரங்களும் அதன் ஆதிக்க எல்லைக்கு உட்பட்டதாகக் கருதப்பட்டது. அமைச்சரவையை ஆட்டிப்படைக்கும் உரிமையும் பெற்றது.

**குறைகள்** : ஆனால் 1935ம் ஆண்டு சட்டம் உருவாக்கிய மாநில சுயஆட்சி முழுமையானதுமல்ல. முற்றிலும்பொறுப்பாட்சியுமல்ல. ஆளுநரின் சிறப்பதிகாரக் கரங்களில் சட்டமன்றங்களில் உரிமைகள் பல சிக்கித் தவித்தன. சட்டமன்றம் ஒட்டுமொத்தமாக நிராகரித்த மசோதாவைக் கூட நிறைவேற்றும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. இது மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கு முரணானது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை மேலும் விஸ்தரிக்கப்பட்டது. இது இந்தியர்களை ஒரே தேசிய அணியாகத் திரளவொட்டாது. சாதி,

சமய வாரியாக துண்டாக்கியது. சிறுபான்மையினருக்கு அதிகப்படி பிரதிநிதித்துவம் இளித்து அவர்களை தங்கள் செல்லப்பிள்ளைகளாக்கும் சூழ்ச்சி தொடர்ந்தது. மாநிலங்களில் இரண்டாவது அவை உருவாக்கப்பட்டது. பிற்போக்கு சுயநல சக்திகளை ஊக்கப்படுத்தவும், சமுதாய அரசியல் மாற்றங்களைத் தாமப்படுத்தவுமே பயன்பட்டது. எனவே மாநில சுய ஆட்சிகளங்கமுள்ள முழுநிலவாகவே காட்சியளித்தது.

## 1947ம் ஆண்டு இந்திய விடுதலைச்சட்டம்

மௌண்ட்பேட்டன் திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இந்திய விடுதலை மசோதா ஜீலை 4ம் பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் பிறப்பிக்கப்பட்டது. பதினைந்து தினங்களுக்குள் அம்மசோதா பாராளுமன்றத்தின் இரு சபைகளினாலும் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பு முக்கியத்துவம் பெற்ற அச்சட்டம் 20 பிரிவுகளைக் கொண்டதாகும். ஆதன் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

- 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா பாகிஸ்தான் என்ற இரு டொமினியங்கள் உருவாக்கப்பட்டு அவற்றிடம் இதுவரை பிரிட்டிஷ் பாராளுமன்றம் செயல்படுத்திய அதிகாரம் அனைத்தும் மாற்றப்படும்.
- டோமினியன்களின் ஆட்சிப்பகுதிகள் எவையென விவரிக்கப்பட்டது. இந்தியா உபகண்டத்தின் இருபக்கங்களிலும் கிழக்கு பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தான் என இரு பெரும் பிரிவுகளாக பாகிஸ்தான் இருந்தது. மேற்கு பாகிஸ்தானில் மேற்குப்பஞ்சாப் சிந்து, வடமேற்கு எல்லைபுறமாநிலம், பாவல்பூர், கைர்பூல் பலூசிஸ்தான் மற்றும் எட்டு சிறிய சுதேச அரசுகள் அடங்கியிருந்தன. கிழக்கு பாகிஸ்தானில் கிழக்கு வங்காளமும் சில்ஹெட்மாவட்டமும் அடங்கியிருந்தன. சரியான எல்லைகளை நிர்ணயம் செய்ய இரு முஸ்லீம்களும் இரு இந்தியர்களும் கொண்ட எல்லை நிர்ணயகுழு அமைக்கப்பட்டது.
- இரு டொமினியங்களும் தனித்தனி தலைமை ஆளுநர்களைக் கொண்டிருக்க வேண்டம். இருவரும் விரும்பினால் ஒரு தலைமை ஆளுநரே இரு டொமினியன்களுக்கும் பொதுவாக நியமிக்கப்படலாம்.
- இரு டொமினியங்களுக்கும் தனித்தனி அரசியல் நிர்ணயசபைகள் கூட்டப்பட்டு தனித்தனி அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்.அச்சபைகளே இடைக்கால சட்டசபைக்காக இயங்கவேண்டும். அவை பிரிட்டிஷ் பொதுநல அரசியல் தொடர்ந்து இருக்கவேண்டுமா இல்லையா என்பது பற்றி முடிவு செய்ய வேண்டும்.
- புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் வரைமாநிலங்களில் 1935ம் ஆண்டு அரசியல் சட்டபடியான அரசுகளே நீடிக்கும். ஆனால் தலைமை ஆளுநரின சொந்த விருப்பப்படி செய்யப்படும் அதிகாரம் பொதுவில் அமுல் நடத்தப்படமாட்டாது.
- இந்திய அரசுப்பணி ஊழியர்கள் தொடர்ந்து பழைய நிபந்தனைகள் சலுகைகளின் படியே பணிபுரிவர்.

- 1947 ஆகஸ்ட் 15ம் தேதிக்குப்பின் பிரிட்டிஷ் அரசு டொமினியன்கள் மீதோ அதன் மாநிலங்கள் மீதோ எந்தவித அதிகாரமும் செலுத்தாது.
- பிரிட்டிஷ் அரசர் இந்திய பேரரசராக இனி இயங்க மாட்டார். டொமினியன் சட்டசபைகள் இயற்றும் எச்சட்டத்திற்கும் அவரது சம்மதம் தேவையில்லை. தலைமை ஆளுநர்கள் அரசியலமைப்பிற்குட்பட்ட தலைவர்களாக இயங்குவார்கள்.
- இலண்டனில் உள்ள இந்திய அமைச்சர் பதவியும் அவரது ஆலோசனைக் குழுவும் ஒழிக்கப்படும். இரு இந்திய டொமினியன்கள் சம்பந்தமான காரியங்களை பொதுநல அசைத்துறை செயலாளர் கவனித்துக்கொள்வார்.
- இந்திய சுதேச அரசுகள் மீதான பிரிட்டிஷ் மேலாண்மை நீங்கிவிடும். ஆவைகள் ஏதாவது ஒரு டொமினியனில் சேரலாம் அல்லது சுதந்திரமாக இயங்கலாம்.
- வடமேற்கு எல்லைப்புற மக்களுடன் இனி பாகிஸ்தான் பேச்சுவார்த்தை நடத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும்.

**திறனாய்வு :**

வரலாற்று நிகழ்ச்சிகளில் தர்க்கரீதியான முடிவை ஏற்றுக்கொள்வதில் பிரிட்டிஷ் அரசு தயக்கம் காட்வில்லை. நிகழ்ச்சிகள் தங்கள் கைகளை மீறிவிட்டன என்று உணர்ந்தவுடன் துரிதமாக செயல்பட ஆரம்பித்தனர். உண்மையில் இந்தியத் துணைக்கண்டத்தில் நிகழ்ந்த வகுப்புக் கலவரங்களே அரசியல் முட்டுகட்டையை உடைத்தெறிந்தது. இந்திய தேசிய இரைணுவத்தின் எழுச்சியும் பம்பாய் கடற்படையினரின் கலகமும் அட்லியின் அறிவிப்பிற்குக் காரணமாயிருந்ததால் பஞ்சாப் நவகாளி கலவரங்களில் கொடுமை இந்திய அரசியல் தலைவர்களின் சிந்தனையை பிரிவினைக்கு தேரவாக திருப்பியது. மேளண்ட்பேட்டனின் சாதுரியமும், திறந்த மனதுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளும் சுமுகமான ஏற்பாட்டிற்கு விரையச்செய்தன. இந்தியசுதேச அரசுகளுக்கு அளித்த விடுதலையைத் தவிர பிரிட்டிஷ் அரசு அதிகாரமற்ற காலத்திலே வேறு எந்த கேடுபயக்கும் காரியமும் செய்யவில்லை. சுதேச அரசுகளை தன் கட்டுபாட்டிலிருந்து விடுவித்து சுதந்திரமாக இயங்க அனுமதித்தன. மூலம் புதிய டொமினியன்களுக்கு புதியதொரு தலைவலியை ஏற்படுத்திச் சென்றுபோலாக்கிவிட்டது. மற்றபடி பிரிட்டிஷ் அரசு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டது பாராட்டதக்கது. 1947 ஆகஸ்ட் 15ல் நிகழ்ந்த அதிகாரமாற்றம் உண்மையில் வரலாற்று சிறப்பு மிக்கது ஆகும்

## இந்தியஆப்கானிய உறவு

**ஆப்கானி**ஸ்தானின் அரசராக இருந்த தைமூர் ஷாதுரானி 1793ல் மறைந்தார். அவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த சமான் ஷா மிகக் குறுகிய காலத்தில் தனது நிலையினை வலுப்படுத்திக் கொண்டார். பல இந்தியச் சிற்றரசர்கள் அவரை இந்தியா மீது படையெடுத்துவருமாறு அழைத்தனர். ஆப்கானிய எண்ணமறிந்த வெல்லெஸ்லி பிரபு அவரை சந்திக்கப் போதுமான படைபலத்தைத் திரட்டினார். ஆனால், சமான்ஷா பாரசீகத்துடன் மோதவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அமமோதலில் தோல்வியுற்ற சமான் ஷா சிறைப்பிடிக்கப்பட்டு கண்கள்

பறிக்கப்பட்டு பதவியை விட்டு விரட்டப்பட்டார். மணிமூடி இழந்து கண்ணொளியும் இழந்த ஆப்கானிய அரசர் பஞ்சாபிற்கு ஓடி அங்கு கிழக்கிந்தியக் கம்பெனியிடம் ஓய்வு ஓதியம் பெற்று தனது வாழ்நாளைக் கழித்தார். மகமூது என்பார் ஆப்கானிய அரியணையில் அமர்ந்தர். ஆனால் 1803ல் ஷா கஜா என்பவர் அவரை நீக்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினார். எனினும் 1809ல் மகமூது மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார். இப்போது ஷா கஜா பஞ்சாப்பிற்கு ஓடிக் கிழக்கிந்தியக் கம்பெனியிடம் ஓய்வூதியம் பெற்று வாழத் துவங்கினார். 1826ல் தோஸ்து முகமது என்பார் ஆட்சி பிடத்தைக் கைப்பற்றினார். இவ்வாறு ஆப்கானிஸ்தானில் அரசியல் குழப்பம் நிலவியது.

**முதல் ஆப்கானியப் போர் :**

ஆக்லண்ட் என்பார் 1836ல் இந்தியாவிற்கு கவர்னர் ஜெனரலாக வந்தார். மத்திய ஆசியாவில் இரஷ்யா தனது அரசியல் செல்வாக்கை நிலைநாட்டி ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதாகப் பேசப்பட்டது. இரஷ்யாவின் ஆதிக்க நோக்கம் ஆங்கிலேயரை மனக்கலக்கம் அடையச் செய்தது. இரஷ்யாவிங்கும் பாரசீகத்திற்கும் இடையில் 1811-13, 1826-28 ஆகிய ஆண்டுகளில் நடைடிபற்ற போர்களில் பாரசீகம் முறியடிக்கப்பட்டது. 1828ல் துர்கோமன்சை உடன்படிக்கை பாரசீகத்திற்கும்இரஷ்யாவிற்கும் இடையில் ஏற்பட்டது. இவ்வுடன்படிக்கை ஆங்கிலேயரின் மனக்கலக்கதை அதிகமாக்கியது. இந்தியாவின் நுழைவாயிலுக்கு ஆப்கானிஸ்தான் திறவுக்கோல் என ஆங்கிலேயர் எண்ணினர்.ஹீராத் எனப்பட்ட இடம் போர்த்தந்திர அடிப்படையில் மிக முக்கியமான இடமாக மதிப்பிடப்பட்டது. அதனை இரஷ்யர்கள் கைப்பற்றினால் இந்தியாவிற்குள் எளிதில் நுழைந்துவிடலாம். ஏன்றும் ஆங்கிலேயர் அஞ்சினர். எனவே இத்தகைய சூழ்நிலையில் ஆப்கானிஸ்தானுடன் நல்லுறவை வைத்திருப்பது அவசியம் என உணரப்பட்டது. ஆக்லண்ட் கவர்னர் ஜெனரல் பொறுப்பேற்றவுடன் ஆப்கானிய ஆட்சியாளராக இருந்த தோஸ்து முகமது வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பினார். இந்தச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்தி ஆப்கானியருடனான நல்லுறவை வலுப்படுத்தி ஆக்லண்ட் விரும்பினார். தோஸ்து முகமது ஆங்கிலேய நட்புறவை ஒரு நிபந்தனையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தார். சீக்கியர் வசமிருந்த பெஷாவரை மீட்பதில் ஆங்கிலேயர் தமக்கு உதவவேண்டும் என அவர் எதிர்பார்த்தார். வாணிபத் தூதுக்குழு எனும் பெயரில் அலெக்சாண்டர் பர்ன்ஸ் என்பாரை ஆக்லண்ட் நிலையையும் அரசியல் சூழ்நிலையையும் உணர்ந்த பர்னஸ் ஆக்லண்டை அரசியல் இராஜதந்திரத்தைப் பயன்படுத்தி இரஞ்சித் சிங்கிடம் பேசி பெஷாவரை ஆப்கானியருக்கு மீட்டுக் கொடுக்க முயற்சி செய்யுமாறு பரிந்துரைத்தார். ஆனால் ஆக்லண்ட் அத்தகைய பரிந்துரையை ஏற்றுக் கொள்ளாததால் பர்ன்ஸின் தூது முயற்சி தோல்வியடைந்தது.

1837ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஒரு பாரசீகப்படை ஹீராத்தை முற்றுகையிட்டது. ஒரு இரஷ்யத் தூதுக்குழுவும் காபூலை அடைந்தது. இந்த நிகழ்ச்சிகள் ஆங்கிலேயரிடையே பரபரப்பை உண்டாக்கின. 1838 ஜீன் திங்களில் ஆங்கிலேயர் கிழக்கிந்தியக் கம்பெனி, இரஞ்சித்சிங், ஷாசுஜா ஆங்கிலேயருடன் ஒரு முக்கூட்டு உடன்படிக்கையைச் செய்தது.

அவ்வுடன்படிக்கையின்படி, சீக்கியப் படையின் உதவியுடன் ஷா சுஜாவை மீண்டும் ஆப்கானிய அரியணையில் அமர்த்த ஒப்புக்கொள்ளப்பட்டது. சீக்கியருக்குச் சில பகுதிகள் அளிக்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஷா சுஜா பதவியில் அமர்த்த பின்னர் ஆங்கிலேயருடனும் சீக்கியருடனும் கலந்தாலோசித்தே தமது வெளியுறவை நடத்தவேண்டும். என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. கம்பெனி இத்திட்டத்தில் பின்னணியில் இருந்து கொண்டு நிதியுதவி செய்ய ஒப்புக்கொண்டது. ஆப்கானிய பிரச்சினையை வாள்முனையில் முடிவு செய்ய ஆக்லண்ட் களம் அமைத்தார்.

ஆப்கானிஸ்தானின் மீது தாக்குதல் நடத்தச் சரியான தருணத்திற்காக ஆக்லண்ட் காத்திருந்தார். இடையில் எதிர்பாராத சில திருப்பங்கள் ஏற்பட்டன. இங்கிலாந்திலிருந்து கராக் என்ற பாரசீக வளைகுடாவிலிருந்த இடத்தை நோக்கி ஒரு ஆங்கிலக் கடற்படை பிரிவு அனுப்பப்பட்டது. இதனையறிந்த அதிர்ச்சியடைந்த பாரசீக அரசர் ஹீராத் மீதான முற்றுகையைக் கைவிட்டார். இராஜதந்திர மீதான முற்றுகையைக் கைவிட்டார்.இராஜதந்திர வழிமுறையின் மூலம் இரஷ்யாவை அதனுடைய தூதுக்குழுவைத் திரும்ப அழைக்குமாறு இங்கிலாந்து வற்புறுத்தியது. இரஷ்யாவும் அதற்கிணங்கத் தனது தூதுக்குழுவைத் திரும்ப அழைத்து தோஸ்து முகமது தனித்து விடப்பட்டார். இரஷ்ய, பாரசீக முயற்சிகள் பற்றிய பயம் அகன்ற போதிலும் தனது திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்த ஆக்லண்ட் முடிவு செய்தார். தோஸ்து முகமதுவை தண்டிப்பதும், வலுவான எல்லைப் பாதுகாப்பை ஏற்படுத்துவதும் ஆக்லண்டின் நோக்கமாக அமைந்தது. சர்ஜான்கீன் என்பாரின் தலைமையில் ஒரு ஆங்கிலப்படை போலன் கணவாயைக் கடந்து வந்தார். கஜினி ஆகியவற்றை கைப்பற்றி 1839 ஆகஸ்டில் காபூலுக்குள் நுழைந்தது. 1840ல் தோஸ்து முகமது சரணடைந்தார். அவரை ஆங்கில அதிகாரிகள் கல்கத்தாவிற்கு அனுப்பினர். ஆப்கானிய அரியணையில் ஷா கூஜா அமர்த்தப்பட்டார்.

மிகத் துல்லியமாக திட்டமிட்டு அதனை திறம்பட நிறைவேற்றிவிட்ட நிறைவுடனிருந்தார் ஆக்லண்ட். ஆனால் அவரது வெற்றிக்கோட்டை வெறும் காற்றுச் சுவர்களாலானது எனக்காலம் மெய்ப்பித்தது. ஆப்கானிய மக்கள் புரட்சிச் செய்து குழப்பம் விளைவித்தனர். 1841ல் அலெக்சாண்டர் பர்ன்ஸ் கொலை செய்யப்பட்டார். இவ்வாண்டில், டிசம்பர் திங்களில் மக்னாட்டன் என்பார் தோஸ்து முகததுவின் மகனான அக்பர்கானுடன் ஒரு உடன்படிக்கையினைச் செய்து கொண்டார். அது ஆங்கிலேயரை அழிநிலைப்படுத்தும் வகையில் அமைந்தது. ஆப்கானிதானத்தை விட்டு வெளியேறவும் எல்லா ஆயுதங்களையும் கொடுத்துவிடவும் அவர் சம்மதித்தார். தோஸ்து முகமதுவை விடுவிக்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தானத்திலேயே தொடர்ந்து இருப்பது அல்லது இந்தியாவிற்கு செல்வது என்பதில் ஷா சுஜா தன் விருப்பப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டார். 1842 சனவரி திங்களில் ஆங்கிலப் படை பின்வாங்கத் துவங்கியது. ஏறத்தாழ பதினாறாயிரம் போர் வீரர்கள் இறந்தனர். திரும்பும் வழியில் பலர் கொலைப்பட்டனர். எல்பின்ஸ்பூன், மக்னாட்டம் ஷா சுஜா ஆகியோரும் கொல்லப்பட்டனர். டாக்டர் பிரைடன் என்பார் மட்டும் உடல் நலத்துடன்

ஜவாலாபாத் சென்றடைந்தார் எனச் சொல்லப்படுகிறது. இத்தோல்வியின் காரணமாக ஆக்லண்ட் திரும்ப அழைக்கப்பட்டார்.

முதல் ஆப்கானியப் போர் ஆங்கிலேயரை பொறுத்தவரை படுதோல்வியில் முடிந்தது. மிக அதிகமாக பணத்தையும் உயிர்களையும் இழந்த ஆங்கிலேயர் எந்த இலாபத்தையும் பெறவில்லை. ஆப்கானிய அரியணையில் தோஸ்து முகமது அமர்ந்தார். வரலாற்றின் பக்கங்களில் இத்தகைய ஒட்டுமொத்தமான முழுமையான தோல்வி எதனையும் காண்பது அரிது என கேய் என்பார் குறிப்பிடுகிறார். ஆக்லண்ட் ஆங்கிலப் படையினை ஆப்கானியஸ்தானத்திற்கு அனுப்பியதே தவறு எனப் பலர் வாதாடினர். அது நியாமற்ற செயல் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது. ஒரு சுதந்தரமான அரசர் எனும் முறையில் இரஷ்யாவுடனோ அல்லது வேறெந்த நாட்டுடனோ எவ்விதமான உறவினையும் வைத்துக் கொள்ளும் உரிமை அவருக்கு இருந்தது. அத்தகைய உரிமையினை பாதிக்கும் வகையில் ஆக்லண்ட் அவரது செயல்பாட்டில் தலையிட்டது. நியானமான செயலல்ல என்பது வலியுறுத்தப்பட்டது. ஆட்சித்துறையில் ஷா சுஜா தோஸ்து முகததுவைவிடத் திறமை குறைவானவராகவே இருந்தார். எனவே ஆக்லண்ட் ஆப்கானிய கொள்கை அறியாமை, ஆணவம், அநியாயம் ஆகியவற்றினன்ன கலவையாக அமைந்தது. என்றால் அது மிகையாகாது

**ஜான் லாரன்சின் திறமையான செயலின்மைக் கொள்கை:**

ஆங்னில- ஆப்கானிய உறவுமுறையின் முதல் அத்தியாயம் ஆங்கிலேயருக்கு ஒரு மோசமான முடிவாக அமைந்தது. இரண்டாவது அத்தியாயம் திறமையான செயலின்மைக் கொள்கையாக அமைந்தது. லாரன்சிஸ் கொள்கையை விவரிக்க திறமையான செயலின்மை எனும் சொற்றொடர் 1867ல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. எனினும் இது லாரன்சின் கொள்கையை முழுமையாக உணர்த்தவில்லை எனும் கருத்து பல வரலாற்றாசிரியர்களால் கூறப்படுகிறது. ஜான்லாரன்சின் கொள்கை ஓரளவு ஆப்கானிய உள்விவகாரத்தில் தலையிடாக் கொள்கையின் அடிப்படையில் அமைந்திருந்தது. எல்லைப்புற சிக்கல்களை கருத்தில் கொண்டு நடைமுறைக்கு ஏற்ற விதத்தில் அக்கொள்கை வடிக்கப்பட்டது. முன்னேற்றக் கொள்கையை லாரன்ஸ் எதிர்த்தார். அது அபாயத்தைத் தேடி பாதி வழி செல்வதைப் போன்றது எனக் கருதினார். முதல் ஆப்கானியப் போரிலிருந்து ஒரு நல்லப் பாடத்தைக் கற்றியிருந்தார்எனலாம். ஆப்கானியரின் உள்விவகாரத்தில் தாம் தலையிடப் போவதில்லை என்பதை அவர்கள் நம்பும்படி செய்தார் லாரன்ஸ். ஆப்கானியமண்ணில் ஒரு அங்குலம் கூடத் தமக்கு தேவையில்லை என அவர் உறுதிகூறினார். ஆப்கானிய அரியணையில் அமர்ந்த எந்த ஆட்சியாளரையும் தாம் ஒப்புக்கொள்வதாகவும் அறிவித்தார்.இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி இரஷ்யர்கள் தங்கள் பகுதிகளை விரிவாக்கம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அத்தகைய முயற்சிகளைக் கண்டு லாரன்ஸ் பதற்றமடையவில்லை. ஆப்கானிஸ்தானத்தை கைப்பற்ற இரஷ்யா முயன்றால் அந்நாட்டின் ஆண்டி முதல் அமீர் வரை ஒவ்வொரு மனிதனும் அதனை எதிர்ப்பான் என்பதை உணர்ந்தார். எல்லைப்புற அமைதிக்குக் குந்தகம் விளையக் கூடாது என்பதும் உள்நாட்டுப் போரில் பங்கு பெறும் எவரும் எந்த வெளிநாட்டு உதவியையும் நாடக்

கூடாது என்பதும் லாரன்ஸ் விதித்த நிபந்தனைகள். இந்நிபந்தனைகளின் அடிப்படையிலமைந்த லாரன்சின் திறமையான செயலின்மைக் கொள்கை ஓரளவு வெற்றி பெற்றது எனலாம்

லூரன்சின் கொள்கை புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் உள்ளானது. இக்கொள்கையின் மூலம் மிக அதிகமான இலாபங்கள் கிடைத்தன எனக் கூறப்பட்டது. முன்னேறிச் செல்லவேண்டும் என்று எவ்விதத்திலாவது இந்திய அரசாங்கம்முயன்றிருந்தால் ஆப்கானிஸ்தானம் இரஷ்யாவுடனோ அல்லது பாரசீகத்துடனோ சேர்ந்திருக்கும். ஆப்கானியருடன் மோதலை ஏற்படுத்திருந்தால் அம்மோதல் பணவிரயத்தையும் உயிர்களின் இழப்பையும் உண்டாக்கியிருக்கலாம். எனினும், லாரன்சின் கொள்கை ஆப்கானிஸ்தானத்தில் அடிக்கடி கலவரங்கள் ஏற்பட வகைசெய்தது. தோஸ்து முகமதுவின் மகன் ஷேர் அலி 1865ல் ஒரு வாரிசுரிமைப் போரில் பிரிட்டிஷ் உதவியை நாடினார் லாரன்ஸ் உதவி செய்ய மறுத்து விட்டார்.பிரிட்டிஷ் உதவியின்றியே ஷேர் அலி போரில் வெற்றிப் பெற்றார். லாரன்ஸ் அவருக்கு அறுபதாயிரம் பவுண்டுகளையும் கொஞ்சம் ஆயதங்களையும் அன்களிப்பாக்க கொடுத்தார். இரஷ்யர்கட்கு பயந்ததன் காரணத்தினாலேயே ஆங்கிலேயர் இவ்வுதவியைச் செய்தனர் என ஷேர் அலி வெளிப்படையாக அறிவித்தார். ஆங்கிலேயரின் கொள்கை சுயநலத்தின் அடிப்படையில் அமைந்தது என ஷேர் அலி குறை கூறினார். பல குறைகள் கூறப்பட்ட போதிலும் ஆக்லண்டின் கொள்கைக்குச் சரியான மாற்றாக லாரன்சின் கொள்கை அமைந்தது எனலாம்.

**இரண்டாவது ஆப்கானியப் போர் (1878-80)**

லாரன்சைத் தொடர்ந்து பதவிக்கு வந்த மேயோ, நார்த்பருட் ஆகியோர் அவரது கொள்கையை பினபற்றினர். 1868 முதல் 1876 வரை அக்கொள்கை எவ்வித மாற்றமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டது. சில சமயங்களில் ஷேர் அலி உதவி கேட்டபோது அவரது வேண்டுகோள் மறுக்கப்பட்டது. இதனால் ஷேர் அலி மனம் சலித்தார்.1876ல் லிட்டன் பிரபு இந்தியாவின் வைசிராயாகப் பொறுப்பேற்றார். அவர் திறமையான செயலின்மைக் கொள்கையை மாற்றி முன்னேற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்த முடிவு செய்தார். ஆப்கானிய அமீருடன் சம அந்தஸ்தில் அமையும் வகையில் ஒரு உடன்படிக்கையைச் செய்து கொள்ளுமாறு அவருக்கு ஆணையிடப்பட்டது. மேயோவும் நார்த்புரூக்கும் எவற்றை மறுத்தார்களோ அவற்றையெல்லாம் ஷேர் அலிக்குக் கொடுப்பதாக லிட்டன் வாக்களித்தார். தெளிவான ஒரு உடன்படிக்கை உறுதி செய்யப்பட்ட மானியம், இரஷ்யாவிற்கும் எதிரான உதவி மற்றும் ஷேர் அலியின் மகனுக்கு உண்மையான வாரிசாக அங்கீகாரம் ஆகியவற்றை அவர் ஷேர் அலிக்கு கொடுப்பதாக வாக்களித்தார். அதற்குப் பதிலாக காபூலில் ஒரு பிரிட்டிஷ் நிலையரை அவர் ஏற்றுக்கொள்ள ஷேர் அலி சம்மதித்தார். ஆப்கானியஷ்தானத்திற்கும் அரசியல் தூதுவொன்றினை அனுப்ப லிட்டன் விரும்பினார். ஆனால் அதனை ஏற்றுக் கொண்டால் அது போன்ற இரஷ்யர்ளின் வேண்டுகோளையும் ஏறிக வேண்டியதிருக்கும் என ஷேர் அலி பயந்ததால் அரசியல் தூது எதையும் ஏற்க மறுத்தார். ஆப்கானிய அரசரிடமிருந்து வந்த இபபதில் லிட்டனுக்குச் சின மூட்டியது.

ஆங்கில ஆப்கானிய உறவை மோசமாக்கும் பணியை இரஷ்யர்கள் மேற்கொண்டனர். ஐரோப்பிய விவகாரங்களில் பிரிட்டனுடன் மோதி வெற்றி பெற முடியாமல் போனதால் அதற்குப் பழி தீர்க்கும் வண்ணம் மத்திய ஆசியாவில் தமது நிலையை உறுதிசெய்ய அவர்கள் விரும்பினர். ஷேர் அலியின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இரஷ்யா ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு இராஜாங்கத் தூதை அனுப்பியது. இரஷ்யாவின் இராஜங்கத் தூது ஆப்கானிய மண்ணில் இருப்பதை அறிந்த லிட்டன் அதிர்ச்சியடைந்தார். உடனே ஜெனரல் நெவில் சேம்பர்லின் தலைமையில் ஒரு குழுவை ஆப்கானிஸ்தானம் நோக்கிஅ னுப்பினார். அக்குழு வழியிலேயே தடுக்கப்பட்டு திரும்ப அனுப்பப்பட்டது. இதற்கிடையில் இரஷ்யாவும் தனது இராஜங்கத் தூதை திரும்ப அழைத்துக் கொண்டது. எனினும் லிட்டன் கடுஞ்சினம் கொண்டு ஆப்கானிய உறவில் கடுமையான கொள்கையைப் பின்பற்றித் தீர்மானித்தார். நடந்த நிகழ்ச்சிகட்கு மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் பிரிட்டிஷ் நிலையரைகாபூலில் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் செய்தி அனுப்பினார். அவரது எச்சரிக்கையுடன் கூடிய செய்திக்கு ஷேர் அலி எந்த பதிலையும் கூறவில்லை. எனவே, ஏறத்தாழ நாற்பதாயிரம் படைவீரர்களைக் கொண்ட பிரிட்டிஷ் படை ஆப்கானிஸ்தானம் நோக்கி அனுப்பப்பட்டது. கைபர், பெய்வார், போலன் ஆகிய கணவாய்களின் வழியாக இப்படைகள் வருகின்ற செய்தியறிந்த ஷேர் அலி இரஸ்ய துருக்கிஸ்தானுக்கு ஓடினார். அங்கு அவர் 1879 பிப்ரவரியில் இறந்தார். அவரது மூத்த மகன் யாகூப்கானுடன் 1879 மே திங்களில் பிரிட்டிஷ் இந்தியா ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது.

யாகூப்கானுடன் இந்திய அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கை இரண்டாவது ஆப்கானியப் போரை முடிவிற்குக் கொண்டு வந்தது. காபூலில் பிரிட்டிஷ் நிலையரையும் ஹீராத் போன்ற இடங்களில் அவரது முகவர்களையும் ஏற்றுக்கொள்ள யாகூப்கான் சம்மதித்தார். ஆப்கானிஸ்தானின் வெளியுறவை இந்திய அரசாங்கத்தின் விருப்பப்படி செயல்படுத்தவும் எல்லைப்புறத்தில் சில முக்கியமான பகுதிகளை இந்திய அரசாங்கத்திற்குகொடுக்கவும் யாகூப்கான் உப்புதலளித்தார். எந்த வெளிநாட்டுச் சக்திக்கு எதிராகவும் உதவிசெய்வதாகவும் ஆண்டொன்றுக்கு ஆறு இலட்சம் ரூபாய்கள் மானியம் அளிப்பதாகவும் இந்திய அரசாங்கம் வாக்களித்தது. இவ்வுடன்படிக்கை மிகப் பெரிய சாதனை எனக் கூறப்பட்டது. அறிவிற்பூர்வமான எல்லைப்புறம் அமைக்கப்பட்டுவிட்டதாக லிட்டன் பிரபு பெருமைப்பட்டுக் கொண்டார். ஆனால், இப்பெருமைகளெல்லாம் தவறானவை என மெய்ப்பிக்கும் வண்ணம் ஆப்கானிஸ்தானத்தில் நிகழ்ச்சிகள் நடந்தன. 1879 செப்டம்பர் மூன்றாம் நாள் காபூலில் இருந்த பிரிட்டிஷ் நிலையர் கொலை செய்யப்பட்டார். உடனடியாக பிரிட்டிஷ் வீரர்கள் காபூலுக்கு அனுப்பப்பட்டனர். ஷேர் அலி சரணடைந்தார். ஆப்கானிஸ்தானத்தை இந்திய அரசாங்கத்துடன் இணைத்துவிட வேண்டும் என்ற முடிவிற்கு லிட்டன் வந்தார். ஆனால், இங்கிலாந்தில் ஒரு புதிய அரசாங்கம் பதவியேற்றதால் லிட்டனின் இடத்திற்கு ரிப்பன் பிரபு வந்தார். இதற்கிடையில் ஆப்கானிய அரசியல் விவகாரங்களில் ஷேர் அலிக்கு உறவினரான அப்துல் ரஹமான் என்பார் செல்வாக்குப் பெற்றார். ரிப்பன் பிரபு அவரை ஆப்கானிஸ்தானத்தின் அமீராக அங்கீகாரம் செய்தார்.

லிட்டனின் ஆப்கானியக் கொள்கை பலராலும் குறை கூறப்பட்டது. ஆக்லண்டின் அனுபவங்களிலிருந்து லிட்டன் எந்தப் பாடத்தையும் கற்றுக்கொள்ள வில்லை. அவர் திறமையான செயலின்மைக் கொள்கையை விரும்பாததால் முன்னேற்றக் கொள்கையைப் புகுத்த்னார். காபூலின் பிரிட்டிஷ் நிலையர் வாயிலாக ஆப்கானிய வெளியுறவுக் கொள்கையைத் தாம் இயக்கவேண்டும்.என விரும்பினார். தனது கொள்கை தோல்வியுற்றதால் ஆப்கானிஸ்தானத்தைத் துண்டாக இணைத்துக்கொள்ள முடிவுசெய்தார். இந்த ஆக்கிரமிப்புக் கொள்கை பலராலும் குறை கூறப்பட்டது. இரண்டாவது ஆப்கானியப் போர் முடிவடைந்ததும் யாகூப்கானுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்குப் பல நன்மைகள் கிடைத்ததுபோல் தோன்றியது. ஆனால் திடீரென்று நிலைமைகள் மாறிப் போருக்கு முந்திய நிலையே ஏற்பட்டுவிட்டது. லிட்டனின் கொள்கையும், போரும் எதனையும் சாதிக்கவில்லை.எனினும் லிட்டனின் கொள்கையை ஆதரித்து பேசுவோர் ஒரு முக்கியமான உண்மையைச் சுட்டிக் காட்டுகின்றனர். ரஷ்யா தாக்கிவிடலாம் என்ற பயத்தின் காரணமாகவே லிட்டன் இத்தகைய கொள்கையினைப் பின்பற்றினார் என அவர்கள் வாதாடுகின்றனர். ரஷ்யப் பயம் லிட்டனை ஆப்கானிஸ்தானுடன் போரிடச்செய்தது. மேலும் ஆதிக்க வேகத்துடன் திகழ்ந்த ஆங்கிலப் பிரதமர் பெஞ்சமின் டிஸ்ரேயிலின் கைப்பாவையாகவே லிட்டன் செயல்பட வேண்டிய நிலையில் இருந்தார். டிஸ்ரேலி லிட்டனின் கொள்கையினைப் பெரிதும் பாராட்டினார். எனினும் நிலைமைகள் மோசமானதில் லிட்டனுக்குக் கணிசமான பங்கும் பொறுப்பும் இருந்தது என்பதில் ஐயமில்லை.

**மூன்றாவது ஆப்கானியப் போர்:**

இங்கிலாந்தைத் தவிர வேறெந்த வெளிநாட்டுடனும் அரசியல் உறவுகள் வைக்கக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில்தான் ரிப்பன் அப்துர் ரஹமானை அங்கீகரித்தார்.பிசின், சிபி ஆகிய மாவட்டங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் வைத்துக்கொள்ளவும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆப்கானிஸ்தானின் வெளியுறவு பிரிட்டிஷ்காரர்களின் கைகளில் இருந்ததால் ஆங்கில நிலையர் காபூலில் இருக்க வேண்டிய அவசியம் எழவில்லை. அப்துல் ரஹ்மானின் ஆட்சிக் காலத்தில் ஆப்கானிஸ்தானுக்கும் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்திற்குமிடையே நல்லுறவு நிலவியது. ஆப்கானிஸ்தானத்திலிருந்தபிரிட்டிஷ் படைவீரர்கள் அனைவரும் திரும்ப அழைக்கப்பட்டனர். 1884 மார்ச் திங்களில் ஆப்கானியருக்கும் இரஷ்யர்கட்குமிடையில் மோதல் நிகழ்ந்தது. பஞ்சதே நிகழ்ச்சி என இது அழைக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின் காரணமாக ஆப்கானிஸ்தானத்திற்கும் இரஷ்யாவிற்குமிடையில் பெரிய போர் ஏற்படும் அபாயம் எழுந்தது. அப்போது இந்தியாவில் வைசிராயாக இருந்த டபரின் இந்ச் சிக்கலைத் திறமையாக விடுவித்துப் போர் நிகழாமல் தடுத்தார். அவரது ஆலோசனைப்படி மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்தார் அப்துல் ரஹமான். இந்திய அரசாங்த்தின் உதவியால் பெரும் போர் தவிர்க்கப்பட்டது. இவ்வாறு ஆப்கானிஸ்தானிற்கும் இந்தியாவிற்கும் இடையில் தேனிலவு நிலவியது. நிலைமைகள் தொடர்ந்து சுமுகமாக அமையவில்லை. 1901ல் அப்துல்ரஹமான் மறைந்தார். அவரைத்

தொடர்ந்து பதவிக்கு வந்த ஹபீபுல்லாவிற்கும் இந்திய அரசாங்கத்திற்குமிடையில் சிறிது காலம் நல்லுறவு நிலவவில்லை. எனினும், 1905ல் கருத்து வேறுபாடுகள் நீக்கப்பட்டன. 1907ல் மேற்கொள்ளப்பட்ட இங்கிலாந்து இரஷ்ய உடன்பாடும் நல்லுறவிற்கு வகை செய்தது. 1919ல் ஹபீபுல்லா கொலை செய்யப்பட்டதால் அமானுல்லா என்பார் அமீரானார். ஆவர் இந்திய அரசாங்கத்துடன் கசப்பான உறவினையே கொண்டிருந்தார். உள்நாட்டுச் சிக்கல்களும், அவரை வாட்டின. எனவே, இந்திய அரசாங்கத்துடன் ஒரு போரினை மேற்கொண்டார். அவரது படைவீரர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்து உயிர்களையும் உடமைகளையும் அழித்தனர். பிரிட்டிஷ் படையினர் ஆகாயமார்க்கமாக காபூல், ஜலாலாபாத்,ஆகிய இடங்களின் மீது குண்டு வீசினர். 1921ல் மேற்கொள்ளப்பட்ட இராவல்பிணடி உடன்படிக்கை மூலம் அமைதி ஏற்படுத்தப்பட்டது. அவ்வுடன்படிக்கையின்படி ஆப்கானிய அமீர் வெளியுறவு விவகாரங்களில் சுதந்திரம் பெற்றார். அமீருக்குக் கொடுக்கப்பட்ட ஆண்டு மானியம் நிறுத்தப்பட்டது. இந்தியா வழியாக ஆப்கானியர் ஆயுதங்கள் இறக்குமதி செய்வதும் நிறுத்தப்பட்டது. 1922ல் பிரிட்டனும் ஆப்கானிஸ்தானும் அராஜதந்திரப் பிரதிநிதிகளைப் பரிமாற்றம் செய்து கொண்டன. அதன் பின்னர் இந்திய அரசாங்கம் ஆப்கானிஸ்தானின் உள்விவகாரங்களில் தலையிடவில்லை.

## இந்திய பர்மா உறவு

**முதல் பர்மிய போருக்கான சூழ்நிலை**:

பிாட்டனுக்குச் சொந்தமான இந்தியப் பகுதிகளின் கிழக்கு எல்லையில் பர்மா ஒரு தனியான, சுதந்திரமான அரசாகத் திகழ்ந்தது. கிழக்கு எல்லையை ஒட்டியிருந்த இந்தியப் பகுதிகளின் மீது பர்மாவிற்கு ஆதிக்க ஆசை இருந்தது. ஆங்கிலேயரைவிடத் தமது படையினர் வீரம் மிக்கவர்கள் என்ற எண்ணம் பர்மாவிற்கு இருந்தது. அந்நாட்டு அரசர் முதல் ஆண்டி வரை அனைவரும் ஆங்கிலேயருடன் ஒரு போரினை நடத்தத் துடித்துக் கொண்டிருந்தனர். 1817-18 ஆகிய ஆண்டுகளில் அஸ்ஸாமின் எல்லையில் தொல்லைக் கொடுத்தனர். அதற்கு அடுத்த ஆண்டில் சிட்டகாங், டாக்கா, முர்சிதாபாக், காசிம்பஜார் ஆகயி பகுதிகள் பர்மாவை சேர்ந்தவை எனக் குறிப்பிட்டு இந்திய அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினார் பர்மிய அரசர். புர்மிய அரசரின் கடிதம் கிடைத்த நேரத்தில் இந்திய அரசாங்கம் தனது துழுக் கவனத்தையும் பிண்டாரிப் போரில் வெலுத்தி இருந்தது. எனவே உடனடியாக பதில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எனினும், மோதலுக்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டது. போர் ஏற்படும் சூழ்நிலையை பர்மியர் வேண்டுமென்றே உருவாக்கினர்.

**போக்கு**

சிட்டகாங்கினருகில் ஷாபூரி எனும் சிறிய தீவு கம்பெனிக்குச் சொந்தமானதாக இருந்தது. 1823 செப்டம்பரில் பர்மியர் அதனைத் தாக்கினர். 1823ம் ஆண்டு பிபரவரி 24ம் நாள் ஈர்ம்ஹஸ்ட் பிரபு பர்மாவின் மீது போர்ப்பிரபடனம் செய்தார். முதல் ஆங்கிலேயர் பர்மியப் போர் மிக நீண்ட காலத்திற்கு நடந்தது. பர்மியர்கள் மீது உயுதியான வெற்றிக்கொள்ளப் பரங்கியர் படையினரால் இணலவில்லை. அவர்கள் கடல் வழியாகச் சென்று ரங்கூனைக் கடைப்பற்ற எண்ணினர். இப்போர்த் தந்திரத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் தவறான

காலநிலையைத் தேர்ந்தெடுத்தனர். சர் ஆர்ச்சிபால்டு கிராம்பெல் என்பார் அவ்வாண்டு மேத்தங்களில் இரங்கூனைக் கைப்பற்றிய போதிலும் மழைக்காலம் முடிவதற்காக ஆறு மாத காலம் காத்திருக்க வேண்டிய அவசியமேற்பட்டது. அக்காலத்தில் அவரால் எவ்வித முன்னேற்ற முயற்சியினையும் மேற்கொள்ள முடியவில்லை. 1825 ஏப்ரலில் வலிமை வாய்ந்த பான்டுலா என்ற பர்மியத் தளபதி கொல்லப்பட்டார். அதற்குப் பின்னர் கீழ் பர்மாவின் தலைகராக திகழ்ந்த புரோம் என்ற நகரை கிராம்பெல் கைப்பற்றினார். ஆகஸ்டு மாதத்தில் அமைதிக்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆங்கிலேயர் கூறிய ஏற்பா:டுகளை பர்மியர் மறுத்து ஒதுக்கினர். நவம்பரில் மீண்டும் போர் ஏற்பட்டு ஆங்கிலேயர் வேகமாக முன்னேறினர் நிலைமை மிகவும் மோசமானதால் பர்மியர் அமைதியை வேண்டினர். எனவே யான்டபூ உடன்படிக்கை 1826 பிப்ரவரி 24ல் மேற்கொள்ளப்பட்டது.

**விளைவுகள்**

யான்டபூ உடன்படிக்கையின்படி அரக்கானும்தென்னாரசரிமும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. அஸ்ஸாமின் விவகாரங்களில் தழலயிடுவதில்லை என்ற வாக்குறுதியுடன் பர்மியரிடமிருந்து பெறப்பட்டது. மணிப்பூரை ஒரு சுதந்திரமான அரசாக அவர்கள் அங்கீகரித்தனர். கடுமையான போர் இழப்பீடும் வசூலிக்கப்பட்டது. இருதரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் வாணிப உடன்படிக்கையொன்று பர்மிய அரசருடன் செய்துகொள்ளப்பட்டது. முதல் பர்மியப் போரை பற்றி பலவாறு விமரிசிக்கப்பட்டது. மிக நீண்ட காலம் நடந்த அப்போர் கம்பெனிக்கு அதிகமான செலவை ஏற்படுத்தியது. ஏறத்தாழ பதின்மூன்று மில்லியன் பவுண்டுகள் செலவிடப்பட்டன. போர் காலதாமதமானதற்குப் பொறுப்பில் இருந்தோர் எடுத்த தவறான முடிவுகளே காரணம் எனக் கூறப்பட்டது. எனினும் கம்பெனிக்குப் போரின் வெற்றி பல இலாபங்களைக் கொண்டு வந்தது.

இரண்டாவது பர்மியப் போர் 1852

**காரணங்கள்:**

டல்ஹௌஎசி பிரபு ஆதிக்க கொள்கையைப் பின்பற்றி நிலம் சேர்க்கும் பேராசையினைக் கொண்டிருந்தார். பர்மாவை ஏதாவதொரு ஐரோப்பியர் சக்தி கைப்பற்றும் என அவர் எண்ணினார். அவ்வாறு வேறு சக்தி எதனிடமும் பர்மாவை விட்டுவிட அவர் விரும்பவில்லை. வேற்றுச் சக்தியிடம் அது சேர்ந்துவிடாமல் தடுக்கத் தம்முடனே சேர்த்துவிட தீர்மானித்தார். யான்டபூ உடன்படிக்கையின்படி ஆங்கில வியாபாரிகள் பர்மாவில் குடியேறியிருந்தனர். அவர்கள் பர்மாவில் தங்களுக்கு சில இன்னல்கள் விளைவிக்கப்படுவதாக டல்ஹௌஎசியிடம் புகார் கூறினர்.பர்மாவின் மீது போர் தொடுக்க ஏதாவதொரு சாக்குக் கிடைக்காதா என ஏங்கிய டல்ஹௌஎசிக்கு இது வசதியாக அமைந்தது. ஆங்கில வியாபாரிகளின் புகாரைக் காரணம் காட்டிப் போர் தொடுக்க முடிவு செய்தார்.

**போக்கும் விளைவுகளும்** :

ஆங்கில வியாபாாகட்கு இழைக்கப்பட்ட இன்னல்கட்கு ஈடாக ஒரு இலட்சம் பவுண்டுகள் கேட்டார். ஆவா நகரிலிருந்த பர்மிய அரசரிடமிருந்து பதிலேதும் வராததால் 1952 ஏப்ரலில் போரைத் துவங்கினார். இரங்கூனும் பெபெயினும் விரைவில் வீழ்ந்தன. அவற்றைத் தொடர்ந்து

அக்டோபரில் புரோம் வீழ்ந்தது. பெகுவையும் ஆங்கிலேயர் எளனிதாகக் கைப்பற்றினர். பெகு மாநிலம் முழுவதையும் பிரிட்டிஷ் பகுதிகளுடன் இணைக்க விரும்பினார் டல்ஹௌசி.கம்பெனியின் இயக்குநர் மன்றமும்அவரது கருத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், பெகு மாநிலத்தைஒரு உடன்படிக்கை மூலம் இணைக்க வேண்டும் என டல்டிஹௌசிக்கு ஆணையிட்டது. பர்மா முழுவதையும்இணைப்பது கடினம்என உணர்ந்து டல்ஹௌசி உடன்படிக்கை மூலமான இணைப்பினைச் செய்ய முடிவு செய்தார். ஆவாவில் அரசவையுடன் எவ்விதமான உடன்பாட்டிற்கும் வர இயலாததால் 1852 டிசம்பர் இருபதாம் நாளில் பெகு அல்லது கீழ்பர்மாவை பிரிட்டிஷ் பகுதிகளுடன் இணைத்துக் கொண்டமை இரண்டாவது பர்மியப்போரின் முக்கியமான விளைவு எனலாம்.

**மூன்றாவது பர்மியப்போர் (1885)**

இரண்டாவது பர்மியப் பேரின் விளைவாக கீழ்பர்மா ஆங்கிலேயர் வசமாகியது. மேல்பர்மா சுதந்திர அரசாகவே திகழ்ந்தது. தீபா என்ற கொ:ங்கோலர் அவ்வரசில் ஆட்சிப் பொறுப்பேற்றார். அவர் ஆங்கில வியாபாரிகளை அல்லற்படுத்தினார். ஒரு பிரிட்டானிய வாணிபக் குழுமத்தின் மீது கடுமையான அபராதம் விதித்து அதன் அதிகாரிகளைக் கைது செய்மார். பிரான்சு, ஜெர்மனி,இத்தாலி ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு வாணிப உடன்படிக்கைகள் செய்து கொள்ள முயன்றார். பிரான்சிலிருந்து ஒரு தூதுக்குழு வந்து மேல்பர்மாவின் ஒரு பிரெஞ்சு வங்கியை அமைக்க முற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சிகள் இந்திய அரசாங்கத்திற்கு எரிச்சலூட்டின டபரின் அப்போதைய கவர்னர் ஜெனரலாக இருந்தார். மண்லே எனுமிடத்தில் பிரிட்டானியத் தூதுவரை அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையை அவர் பர்மிய அரசருக்கு அறிவித்தார். கம்பெனியின் அதிகாரிகட்கு எதிரான நடவடிக்கைகளைக் கைவிடுமாறு பர்மிய அரசர் எச்சரிக்கப்பட்டார். னோல் கவர்னர் ஜெனரலிய் எச்சரிக்கைகள் காகிதங்களோடு கலந்தனவேயன்றி பர்மிய அரசரின் மனதைக் கலக்கவில்லை.

**போக்கும் விளைவும்**

தனது இறுதி எச்சரிக்கையை அனுப்பும் முன்னரே டபரின் போருக்கு ஆயத்தமானார். கீழ்பர்மாவில் கம்பெனியின் வீரர்கள் தயாராகக் குவிக்கப்பட்டனர். எனவே மேல்பர்மாவுக்குள் ஊடுருவ டபரின் ஆணை பிறப்பித்தவுடன் அவர்கள் வேகமாக முன்னேறினர்.இத்திடீர்த் தாக்குதலால் மேல்பர்மிய மக்களும் அரசரும் அதிர்ச்சி அடைந்தனர்.அவர்களால் கம்பெனிப் படைகளின் தாக்குதலை நீண்ட நாட்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை.எனவே அரசர் சரணடைந்தார்.1886 சனவரி முதல் நாளில் மேல்பர்மாவும் பிரிட்டிஷ் பகுதிகளுடன் இணைக்கப்பட்டது.எனினும் ஆங்கிலேயர்கள் தனது நிலையை உறுதிபடுத்த ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் இன்னல்களைச் சந்தித்தனர். ஆயுதம் தாங்கிய பர்மியர்கள் கானகங்களில் ஒளிந்துகொண்டு திடீரெனத் தோன்றி கொரில்லா முறையில் மின்னல் தாக்குதல்களைச் செய்ததே அவர்களின் இன்னலுக்குக் காரணம். இக்கொரில்லாத் தாக்குதல்களில் பல பிரிட்டிஷ் சிவில் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். மூன்றாவது கொரில்லாப் போரின் முடிவில் பர்மா முழுவதும் ஆங்கிலேயர் வசமாகியது. பர்மிய இணைப்பு

எனும் ஏகாதிபத்தியப் பேரரசை மூன்றாவது பர்மியப் போரில் கனிந்து நனவாகிறது. பர்மாவை இணைத்ததால் சீனாவுடனான இராஜங்க உறவில் சிறிது சிக்கல் ஏற்ப்பட்டது. நீண்டகாலமாக பர்மாவின் மீது தமக்கு அரசியல் ஆதிக்கம் இருப்பதாகச் சீனப் பேரரசர்கள் சொல்லி வந்தனர். பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் தந்திரமாக இந்திய அரசாங்கத்தின் உரிமையைச் சீனப் பேரரசர் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தது.

**பிற்கால மாற்றங்கள்** :

இணைக்கப்பட்ட பின்னர் பர்மா ஒரு தலைமை ஆணையாளரின் ஆட்சிப்பொறுப்பில் வைக்கப்பட்டது. 1937ம் ஆண்டு பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டது. அது பிரிட்டானியப் பாராளுமன்றத்தின் நேரடிக் கட்டுபாட்டின் கீழ் வந்தது. இரண்டாவது உலகப்போரில் ஜப்பானால் கடுமையாகத் தாக்கப்பட்டது பர்மா. 1945 வரை ஜப்பானியர் பர்மாவைத் தம்வசம் வைத்திருந்தனர். ஜப்பானின் வீழ்ச்சிக்குப் பின்னர், 1948ல் பர்மா விடுதலை பெற்றது.

## அலகு - II

## சுதேச அரசுகளுக்கான பிரிட்டிஷ் கொள்கை

இந்திய துணைக்கண்டத்து வரலாற்று விநோதங்களுள் சுதேச அரசுகளின் அமைப்புகளும் ஒன்றாகும். உதிரிப்பூக்கள் போல் சிதறிக்கிடந்த அவ்வரசுகளின் எண்ணிக்கை 500க்கும் அதிகமாகும். ஆவற்றுள் பல்லாயிர சதுரமையில் பரப்பளவுள்ள நைசாம் அரசும் ஒரு நகரத்தின் பரப்பளவேயுள்ள அரசுகளும் உண்டு. வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு நிபந்தனைகளில் பிரிட்டிஷ் மேலாண்மையை ஏற்றுக்கொண்ட அவ்வரசகள் இந்திய அரசியலமைப்பு வரலாற்றை சிக்கல் மிகுந்ததாக ஆக்கிவிட்டன. தாமாக நட்பு நாடி வந்தோ போரில் தோற்று பணியுமாறு கட்டாயப்படுத்திப்பட்டோ, அண்டை நாட்டிற்கஞ்சி பாதுகாப்புத் தேடியோ, அவை பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டன. அவை பிரிட்டிஷ் அரசரோடு கொண்ட உறவு முறைகளும் காலத்திற்கு காலம் மாறுபட்டே இருந்துவந்தது. லீவார்னா் என்பாா் தமது “ இந்திய சுதேச அரசுகள்” என்ற நூலில் அவ்வுறவு முறைகளை மூன்று கால கட்டத்தினுள் அடக்குகின்றாா்.

- “ சுற்று வேலி “ காலம் : ( 1757-1813)
- தனிமைப்படுத்தப்பட்ட கீழாதிக்க நிலை : ( 1813-1857)
- கீழாதிக்க ஒன்றிப்பு : (1857-1947)

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு அடிப்படையிட்ட பிளாசிப் (1757) போரிலிருந்து ஹேஸ்டிஙடஸ் ஆட்சி வரையிலான (1813) இக்கால கட்டத்தில் இந்திய சுதேச அரசுகளோடு பிரிட்டிஷாா் கொண்ட உறவு கீழ்கண்ட தன்மைகளைக் கொண்டதாயிருந்தது

- தங்கள் ஆதிக்க வட்டத்தினுள் அடங்கியிருத்தல், அதற்கு வெளியில் உள்ள

அரசுகளோடு போரிடுதலைக் கூடிய மட்டும் தவிர்த்தல், பிளாசிப் போருக்குப்பின் பிரிட்டிஷாா் இந்தியாவின் பிரதான அரசியல் கட்சிகளில் ஒன்றாகவே காட்சியளித்தனா். 1764ம் ஆண்டின் பக்சாா் போரில் கிடைத்த வெற்றி டில்லி வரை வெல்லும் வாய்ப்பைக் கொடுத்தாலும் வங்காளத்துடன் தங்கள் ஆதிக்க வரம்பை சுருக்கிக் கொள்ளவே விரும்பினா். அன்றைய நிலையில் பிரிட்டிஷ் கம்பெனியின் நிதிநிலையும், படைநிலையும், நிா்வாக ஊழியா் நிலையும் அதற்கு மேல் ஆதிக்க விஸ்தரிப்பை அனுமதிக்கக் கூடியதாக அல்லை. மேலும் கிளைவ் கூறியது போல். வங்காளத்தின் செல்வம் அவா்களின் பேரரசையைத் திருப்தி செய்ய வல்லதாயிருந்தது எல்லாவற்றிற்கும் மேலாக மராத்தியா் போன்ற பிற இந்திய ஆதிக்க சக்திகளுடன் பலப் பரீட்சையில் இறங்க தயாராரில்லை,

2) சுயபாதுகாப்பு தங்கள் ஆட்சிப்பகுதிகளின் பாதுகாப்பிற்கே முக்கியத்துவமளித்தனா். அவற்றிற்கு ஆபத்து நேர்ந்தால் போரிலிறங்கினா். முதலிரு மைசூா் போா்களும் முதல் மராத்தியப் போரும் தாங்கள் ஆதிபத்திய உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டன.

3) சமத்துவ அடிப்படை சுற்றுவேலி காலகட்டத்தில் .ந்திய அரசுகளோடு பிரிட்டிஷாா் சமத்துவ அடிப்படையில் உறவு கொண்டனரேயன்றி மேலாதிக்க அரசு என்ற நிலையிலிருந்து அல்ல

1765ல் கிளைவ் அயோத்தி நவாபுடன் செய்துகொண்ட உடன்படிக்கை இதற்கு தக்கதொரு சான்று ஆகும். இதே சமயத்தில் முகலாயப் பேரரசரிடமிருந்து திவானி உாமையைப்பெற்ற தன் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி பிற இந்திய நவாபுகளின் அதிகாரத்தையே பெற்றது என்பதும் குறிப்பிடத் தகுந்தது.

4) பரஸ்பரம் பயனளிப்பவை: பிரிட்டிஷ் சுதேச அரசுகளுடன் செய்து கொண்ட உப்பந்தங்கள் இரு தரப்பினருக்குமே மநன்மை பயப்பதாக இருந்தது. 1772ல் ஹேவடிங்ஸ் அயோத்தி நவாபுடன் செய்துகொண்ட பெனாராஸ் உடன்படிக்கை, அயோத்திக்கு பிரிட்டிஷ் படை உதவியை உறுதி செய்ததோடு, பிரிட்டிஷாருக்கு மராத்தியத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பையும் நல்கியது.

5) ஆக்கிரமிப்பு போர்களிலீடுபடாமை 1783ம் ஆண்டு பிட் இந்திய சட்டம் இயக்குநர் அவையின் அனுமதியின்றி இந்திய அரசுகளோடு போரிடுவதையோ பாதுகாப்பு ஒப்பந்தங்கள் செய்வதையோ மிகத் தெளிவாகக் கண்டித்தது. இதனையே“தலையிடா கொள்கை” என்று கூறுவர். இதனை ஓரளவு காரன்வாலிசும், முழுமையாக சர்ஜான்ஷோரும் பின்பற்றினர். எனினும் தங்கள் ஆதிக்க உரிமைகளையோ நட்பு நாடுகளின் நலனையோ பாதுகாக்க போரிடத் தயங்கவில்லை. எடுத்துக்காட்டாக: மைசூர் திப்புசுல்தான் ஆங்கிலேயரின் நண்பரான திருவாங்கூர் அரசின்மீது தாக்குதல் தொடுத்த போதுகாரன்வாலிஸ் மூன்றாம் மைசூர் போரில்(1790-94) ஈடுபடநேர்ந்தது. எனினும் அப்போர் ஆக்கிரமிப்புப் போர் அல்ல. அப்போரின் மூலம்” நமது நண்பர்களை மேலும் வலுவுள்ளவர்களாக்காமல், நமது எதிரியின் பலத்தை திறமையாகக் குறைந்துள்ளோம்” என்று காரன்வாலிஸ் கூறியது கவனிக்கத்தக்கது.

6) துணைப்படை முறை: வெல்லெஸ்லி “சுற்றுவேலிமுறையை” விட்டுசிறிது முன்னேறி துணைப்படைத் திட்டத்தைக்கொண்டு வந்தார். இது அடிப்படையில் சுற்றுவேலி முறைப் பண்புகளைக் கொண்டிருந்தாலும் ஆங்கில இந்திய அரசுகள் உறவு முறையின் அடுத்த கட்டமான “**தனிமைப்படுத்தப்பட்ட கீழாதிக்கம்**” என்ற இரண்டாவது சட்டத்திற்கு தயார்செய்யும் வழிமுறையாகவும் இருயாகவும் இருந்தது. அத்திட்டத்தை ஏற்கும் சுதேச அரசுகளின் பாதுகாப்பிற்கும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் பிரிட்டிஷ் அரசு உத்தரவாதமளிக்கும். அவ்வரசகள் பிரிட்டிஷ் படையொன்றை தங்கள் செலவில் தங்கள் நாட்டில் வைத்துப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். பிரிட்டிஷார் மூலமாகத்தான் பிற அரசுகளோடு தொடர்புகொள்ள வேண்டும். பிற ஐரோப்பியர்களை தங்கள் நாடுகளில் அனுமதிக்கக் கூடாது. இந்த அம்சங்களை ஊன்றிக் கவனிக்கும் போது பிரிட்டிஷாரின் போக்கில் “மூத்த சகோதரர் பண்பு” காணப்படுவது தெளிவாகும். பிரிட்டிஷ் பாதுகாப்புக் கேடயத்தினுள் சுதந்திரத் தனி அரசாக இயங்க அவை அனுமதிக்கப்பட்டன. இத்திட்டத்தின்படி ஹைதராபாத்,நைஸாம்ஈ அயோத்தி நவாப் மைசூர் அரசர், மராத்திய பேஷ்வா ஆகியோர் உடன்படிக்கைகளை செய்து கொண்டார்.

வேல்லெஸ்லிக்குப் பின் வந்த ஜார்ஜ் பார்லோவும் மிண்டோ பிரபுவும்”சுற்றுவேலி முறையை” உறுதியாகப் பின்பற்றினார். மிண்டோபிரபு 1809ல் சீக்கியத் தலைவர் ரஞ்சித்துடன்

செய்துகொண்ட அமிர்தசரஸ் உடன்படிக்கையும், சிந்து அமிர்களுடன் செய்த ஒப்பந்தங்களும் பரஸ்பர சமத்துவ துறையை அடிப்படையாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தனிமைப்படுத்தப்பட்ட கீழாதிக்க நிலை: பிரிட்டிஷ் இந்திய அரசுகளின் உறவுமுறையில் இரண்டாவது கட்டமான"தனிமைப்படுத்தப்பட்ட கீழாதிக்க நிலை 1813ல் பதவியேற்ற ஹேஸ்டிங்ஸ் பிரபுவினால் உறுதிப்படுத்தப்பட்டது. வெல்லெஸ்லியிட்ட அடிப்படையில் வேஸ்டிங்ஸ் எழுப்பிய இம்முறை டல்ஹௌஸியால் முழுமைபெறச் செய்யப்பட்டது. இந்நிலையில் இந்திய அரசுகள் பிற அரசுகளோடு தன்னிச்சையாகத் தொடர்பு கொள்ள முடியாதபடி தனிமைப்படுத்தப்பட்டு பிரட்டிஷ் மேலாதிக்கத்தின் கீழ் வைக்கப்பட்டன. அதே சமயத்தில் உள்நாட்டு நிர்வாகத்தில் அவை முழு உரிமையுடன் செயல்பட அனுமதிக்கப்பட்டன. கிட்டதட்ட துணைப் படைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இத்திட்டத்தின் கீழ் மத்திய இந்தியாவில் 145 அரசுகளும் வந்தன. எனினும் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நான்கு வகையான சுதேச அரசுகள் இருந்தன.

- துணைப்படைத் திட்டத்தை ஏற்ற அரசுகள் அதில் ஹைதராபாத், நைஸாம், மைசூர், திருவாங்கூர் உட்பட 310 அரசுகள் அடங்கும்,
- துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் பிரிட்டிஷ் பாதுகாப்பை ஏற்றுக் கொண்ட அரசுகள் இவ்வகையில் சிஸ்-சாட்லிஜ் சீக்கிய அரசுகள், பண்டில்கண்டு அரசுகள் மற்றும் கோலாப்பூர், பாத்பூர், ஆன்வார், ராம்பூர் அரசுகள் அடங்கும்.
- பிரிட்டிஷ் அரசுடன் தொடர்பு கொண்டு ஆனால் முழு உரிமையுடன் விளங்கிய அரசுகள் சிந்தியா, பான்ஸ்லே, ஹோல்,கார், ரஞ்சித் சிங் ஆகியோர் அடங்குவர்.
- எந்த வகையிலும் எந்த உடன்படிக்கை மூலமும் பிரிட்டிஷ் அரசுடன் தொடர்பு கொள்ளாத அரசுகள் நேபாளம் போன்ற அரசுகள் இவ்வகையில் இடங்கும்.

ஹேஸ்டிங்ஸ் கடைசி இரு பிரவைச் சேர்ந்த அரசுகளையும் மேலாதிக்க கட்டுபாட்டின் கீழ் கொண்டுவந்தார். முதலில் பின்டாரியர்களை ஒழித்தார். இரண்டாவது மராத்திய தலைவர்களைப் பணிய வைத்தார். மூன்றாவது நேபாளக் கூர்க்கர்களை நண்பர்களாக்கிக் கொண்டார். அடுத்து வந்த தலைமை ஆளுநர்களும் ஹேஸ்டிங்ஸின் கொள்கையைப் பின்பற்றினர்.

ஆம்ஹர்ஸ்ட் பிரபு பர்மியப் போரில் ஈடுபட்டு அஸ்ஸாம் அரக்கான் பகுதிகளைப் பெற்றார். மற்றும் பரத்பூர், ஆள்வர் கிட்டுர், கோலாப்பூர் அரசுகளைப் பணிய வைத்தார்.

பேன்டிங்க் பிரபு மைசூர் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டதன் மூலம் ஆங்கில மேலாதிக்கத்தை தெளிவாக எடுத்துக்காட்டினார். குவாலியர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார். ஆக்லாந்து பிரபு அநாவசியமாக ஆப்கானிய விஷயத்தில் தலையிட்டு அவதியுற்றார். எல்லன்பரோ பிரபு சிந்து மாநிலத்தை இணைத்தார். ஹார்டிஞ்சு பிரபு சீக்கியரைத் தோற்கடித்தார். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் டல'ஹௌசி :தத்துரிமை ரத்துக்கொள்கையைக்" கொண்டு வந்தார். இந்திய சிற்றரசுகள் ஐரோப்பிய நிலமானிய அரசுக்களைப் போல் வாரிசு அற்ற நிலையில் மேலாதிக்கத்தை அறைமைக்கு உரியதாகி விடுகிறது என்று கருதினார். நேரடி வாரிசின்றி இறந்த சதாரா, ஜான்சி, நாகபுரி அரசுகளை

எடுத்துக்கொண்டார். பெயரளவிற்கு அதிகாரமுள்ள கர்நாடக நவாப் அரசையும் தஞ்சை அரசரின் ஆட்சிப் பகுதிகளையும் இணைத்துக் கொண்டார். முறைகேடுகள் மலிந்த அரசு என்று கூறி அயோத்தியையும் இணைத்துக்கொண்டார். சீக்கியர்களுடன் போரிட்டு பஞ்சாபை இணைத்துக்கொண்டார். கீழ்பர்மிய பகுதிகளையும் ஆக்கிரமித்தார். இவ்வாறு பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மனோபாவத்தை தம் கொள்கைகள் மூலம் எடுத்துக் காட்டினார்.

**கீழாதிக்க ஒன்றிப்பு:** 1857ம் ஆண்டு, இந்திய வரலாற்றில் மட்டுமல்ல, பிரிட்டிஷ் சுதேச அரசுகளின் உறவு முறைகளிலும் ஒரு திருப்பத்தை உண்டு பண்ணிய ஆண்டாகும். ஆவ்வாண்டில் இந்திய புவியியல் எல்லைக்குட்பட்ட எல்லாப் பகுதிகளிலும் நேரடி யாகவோ, மறைமுகமாகஆவா, உறுதியாகவோ, மிதமாகவோ பிரிட்டிஷ் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டு விட்டது. அவ்வாண்டில்தான் சிப்பாய்கலகம் எனப்பட்ட விடுதலைப்புரட்சி வெடித்தது. அது கம்பெனியின் ஆட்சியை மட்டுமல்ல இதுவரை பிரிட்டிஷார் சுதேச அரசுகள் பற்றிக் கொண்டிருந்த கோட்பாட்டையும் அசைத்துவிட்டது. காலத்திற்கொவ்வாத கடுமையான எதேச்சதிகாரத்தைக் கவிட்டு ஒன்றியது. அப்புதிய கொள்கைத் தொடக்கம் விக்டோரியா அரசியாரின் பேரறிக்கையில் பிரதிபலித்தது. அதன்படி 1. தத்துரிமை ரத்துக் கொள்கை கைவிடப்பட்டது2. இனிமேல் நாடுபிடிக்கும் ஆசை இல்லை என்று அறிவிக்கப்பட்டது 3. சுதேச அரசுகளோடு கம்பெனியார் செய்துகொண்டஉடன்படிக்கைகள் கௌரவிக்கப்படும் என உறுதி கூறப்பட்டது.

**கானிங் பிரபுவின் சன்னது** : மேலும் 1860ல் கானிங்பிரபு முக்கிய சுஆதச அரசர்களுக்கு அனுப்பிய “சன்னது” என்ற அறிக்கையில் பிரிட்டிஷாருடன் செய்து கொண்ட உடன் படிக்கையை மீறாது. பிரிட்டிஷ் அரசருக்கு விசுவாசமாக இருக்கும் வரை சுதேச அரசுகளின் உரிமையில் தலையிடாது என்று உறுதி கூறினார். அதே சமயத்தில் நாட்டில் அராஜகத்தை உண்டு பண்ணும் சூழ்நிலை ஏற்பட்டால் இந்திய அரசு தலையிடத் தயங்காது என்றும் குறிப்பிட்டார். அமைதியை நிலைநாட்டும் பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது என்றுகூறிய நேரத்தில் உயர் மேலாண்மையும் தங்களிடம்தான் உள்ளது என்று கூறத் தயங்கிவல்லை. கானிங்பிரபுவின் இந்தக் கொள்கையை பின்னால் வந்த தலைமை ஆளுநர்கள் கடைபிடித்தனர் என்பதற்கு சான்றுகள் பல உண்டு.

- **பரோடா விவகாரம்** : புதியதாய் அரியணை ஏறிய பரோடா மன்னர் மல்ஹர்ராவ் முறைகேடாக நடந்துகொண்டார். ஆட்சி சீர்கேடடைந்து விட்டது. பிரிட்டிஷ் தூதருக்கு விஷமூட்ட முயன்றனர் என்று குற்றம் சாட்டப்பட்டார். தலைமை ஆளுநர் நார்த்புரூக் அதுபற்றி விசாரிக்க நீதிபதிகள் அடங்கிய குழுவை நியமித்தார். அக்குழுவின் மூன்று ஆங்கில நீதிபதிகளும் அரசர் குற்றவாளிஎனத்தீர்ப்பு வழங்கிய போது மற்ற 3 இந்திய நீதிபதிகளும் அவர் நிரபராதிஎனத் தீர்ப்புவழங்கினர். தலைமை நீதிபதி என்ன செய்வது என்று திகைத்து கொண்டிருந்தபோது பிரிட்டிஷ் அரசு மன்னரை பதவி நீக்கம் செய்தது. உடனே நார்த்புரூக் அதே மரபின் மற்றொரு பிரிவைச் சேர்ந்த இளைஞனை அரசனாக்கினார். அவர் வயது வரும்வரை அவ்வரசின் ஆட்சி ஆங்கில அதிகாரிகளால் நடத்தப்பட்டது இவ்விவகாரம் இனி

இணைப்பு இல்லை என்பதை உறுதி செய்ததோடு தலையிடும் அதிகாரம் இன்னமும் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியது.

- **மணிப்பூர் விவகாரம்** : மணிப்பூர் அரசா் ராஜா சூர்சந்திரா என்பாரை அவரது சகோதாரான படைததலைவரும் இளவரசரும் சேர்ந்து பதவி விலக்கினா. அதுபற்றி, விசாரணை நடத்தச்சென்ற பிரிட்டிஷ் அதிகாரிகள் கொல்லப்பட்டனா். எனவே பரிட்டிஷ் படையொன்று அனுப்பப்ட்டது. படைத்தழலவரும் இளவரசரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டனா். இப்போதும் அவ்வரசு பிரிட்டிஷ் அரசோடு இணைக்கப்படவில்லை. அவ்வரச மரபினைச் சேர்ந்த ஒருவா் அரசராக்கப்பட்டாா்.
- **அரசி விக்டோரியா ஹெய்ஸா் இ ஹிந்து ஆதல்** :

1876ல் இங்கிலாந்து பிரதமா் டிஸ்ரேலி இயற்றிய அரச பட்டம் பற்றிய சட்டபடி அரசி விக்டோரியா பேரரசியாக்கப்பட்டு ஹெய்ஸா்-இ-ஹிந்து பட்டம் வழங்கப்பட்டாா். அரசப் பிரதிநித லிட்டன் டில்லியில் பெரிய தா்பாா் நடத்தி இச்செய்தியை அறிவித்தாா். இதன்மூலம் இந்திய சுதேச அரசா்கள் மீது பிரிட்டிஷ் அரசின் உயராண்மை சட்டபூா்வமாக நிலைநாட்டப்பட்டது. அவா்கள் சிற்றரசு நிலைக்கு தாழ்த்தப்பட்டாா்கள்.

அத்துடன் இன்னொரு முக்கியமான அம்சமும் வலியுறுத்தப்பட்டது. சுதேச அரசிலுள்ள மக்கள் பிரிட்டிஷ் மன்னா்பால் நேரடியாக விசுவாசம் செலுத்த வேண்டுமென்பதுதான் அது. ஆதன் மூலம் அச்சுதேச அரசிலுள்ள மக்களுக்கு பிரிட்டிஷ் மன்னரே நல்வாழ்வுத் திட்டங்களை வழங்க வேண்டியவராகினாா். இது அரவின் உள்நாட்டு நிா்வாகத்தில் தலையிடும் உரிமையை பிரிட்டிஷாருக்கு அளித்தது.

**பிரிட்டிஷ் தூதா் :**

சுதேச அரசுகளில் நியமிக்கப்படும் தூதா் சா்வ வல்லமை பெற்றவராகக் கருதப்பட்டாா். கே.எம், பணிக்கா் கூறியது போல் பிரிட்டிஷ் தூதரின் லேசான முணுமுணுப்பு அரசு அவையில் பீரங்கி முழுக்கம் போல் வெடிக்கும். அந்த அளவிற்கு அதிகாரம் பெற்று விளங்கினாா். அனைத்து விஷயங்களில் அசைருக்கு ஆலோசனை வழங்க தகுதி உடையவராகக் கருதப்பட்டாா். பிரிட்டிஷ் அரசின் ஒற்றா் போலவும் செயல்பட்டாா்.

**நட்பு முறையிலான ஒத்துழைப்பு சகாப்தம்**

இருபதாம் நூற்றாண்டில் மலா்ச்சி பெற்ற இந்திய தேசிய இயக்கம் பிரிட்டிஷாரின் சுதேச அரசுக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வைத்தது. தேசிய இயக்கங்களை நசுக்க சுதேச அரசுகளை ஒரு கருவியாகப் பயன்படுத்த தொடங்கினாா். மக்களாட்சி இயக்கம், சுதேச அரசுகளுக்கும் பிரிட்டிஷ் பேரரசிற்கும் அச்சமூட்டியதால் அருவரும் இணைந்து செயல்பட ஆரம்பித்தனா். அதன் காரணமாக அரசப் பிரதிநித மிண்டோ பிரபு 1909ல் உதயபூரில் சுதேச அரசுகள் சுயேச்சையாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டாா். முதல் உலகப் போரின் போது பிரிடடிஷ் அரசிற்குப்படை உதவி, நிதிஉதவி வழங்கி சுதேச அரசுகள் தங்கள் எஜமான் சிசுவாசத்தை, போடடி போட்டு காடடின. அதற்கு பிரதிநன்றியாகப் பிரிட்டிஷாா் போா் முடிவில் ஏற்பட்ட வொ்செல்ஸ் உடன்படிக்கையில் அவா்களைக் கையெழுத்திட அனுமதித்தனா்.:

**சுதேச அரசுகளின் பேரவை:**

சுதேச அரசுகள் தங்கள் குறைகளை வெளியடவும் அரசுக்கு ஆலோசனை வழங்கவும் 1921ல் பேரவை ஒன்றை நிறுவினா். இதுவரை சுதேச அரசுகள் ஒன்றினைந்து விடக்கூடாது என்று எச்சரிக்கையாக இருந்த அரசு இப்போது அக்கொள்கைகளை முதன் முதலாகக் கைவிட்டது. இப்பேரவை ஆண்டுக்கொரு முறை அல்லது இரு முறை அரசப்பிரதிநித தலைமையில் டில்லியில் கூடியது.

**பட்லா் குழு பரிந்துரைகள்** : பிரிட்டிஷ் இந்தியாவில் பெருக்கெடுத்து ஓடிய மக்களாட்சிக் கருத்துக்கள் தங்கள் அரசினுள் நுழைந்து விடக்கூடாது. என சுதேச அரசுகள் எண்ணிய போது பிரிட்டிஷ் மாநிலங்களையும் சுதேச அரசுகளையும் நிரந்தரமாக பிரித்துவைத்து அதன்மூலம் தேசிய இயக்கத்தைப் பலவீனப்படுத்த முயன்றனா் அதன் காரணமாக சுதேச அரசுகளுடான உறவுமுறைப் பற்றி பரிசீலிக்க 1927ல் பட்லா் குழுவை நியமித்தனா். அக்குழு சுதேச அரசுகள் நேரடியாக பிரிட்டிஷ் அரசோடு தொடா்பு கொள்ளலாமென்று பரிந்துரை செய்தது.

1935ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டமும் சுதேச அரசுகளும் :

இந்திய தேசிய இயக்கத்திற்கு எதிராக பிரிட்டிஷ் சுதேச அரசுகளின் முறையற்ற கூட்டு உருவானது. ஆதனை வலுப்படுத்த இலண்டனில் கூட்டப்பட்ட வட்ட மேஜை மாநாடுகளில் சுதேச அரசுகளுக்குப் பிரதிநிதத்துவம் வழங்கப்பட்டது. 1935 ம் ஆண்டு சட்டத்தில் சுதேச அரசுகளும் பிரிட்டிஷ் மாநிலங்களும் இணைந்த கூட்டாட்சி அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அதில் சுதேச அரசப் பிரதிநிதிகள் மன்னரால் நியமனம் செய்யப்பட வேண்டுமென்ற சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டிருந்தது. அது எந்த அளவிற்கு மக்களாட்சி முறைமைகளை வலுவீக்கச் செய்யும் என்று உணா்ந்த தேசியவாதிகள் கூட்டாட்சி முறைக்கு கடும் எதிா்ப்பு தெரிவித்தனா். எனவே அதுகைவிடப்பட்டது.

**முடிவுரை:**

சுதேச அரசுகள் இவ்வாறு தங்கள் இறுதிக் காலத்தில் தங்கள் ஆதிக்க உரிமைகளின் கடும் பகைவா்களான பிரிட்டிஷாருடன் கூடிக்குலாவி இந்திய தேசிய இயக்கத்தின் எதிரிகளாய் காட்சியளித்தனா். 1947ல் அன்னியா் வெளியேறி பின்னும் இந்த சுதேச அரசுகளில் சில அவா்கள் பணியை தொடா்ந்து செய்து தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்தனா். ஆனால் சா்தாா் வல்லபாய் படேலின் அரசியல் செயல்திறன் முன் அவா்களின் முட்டுக்கட்டைகள் முரண்பாடுகள் எல்லாம் செயலாற்றுப் போயின. இன்று சுதேச அரசுகள் பண்டைய வரலாற்றுச் சின்னங்களாகி விட்டன.

## இந்திய அரசுகளை இணைத்தல்

பிரிட்டானியரின் ஆட்சியில் இந்தியாவில் மன்னா்கட்குப் பாத்தியப்பட்ட பல அரசுகள் இருந்தன. பிரிட்டானியா் இந்தியாவை விட்டுச் செல்லும்போது அவ்வரசுகளின் எதிா் காலத்தை முடிவு செய்யும் உரிமையை அரசா்களின் கைகளில் விட்டு சென்றனா். அவ்வரசகள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சோ்ந்து கொள்ளலாம் என்ற உரிமை

வழங்கப்பட்டது. தனித்திருக்கவும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்தியாவிற்கு இது ஒரு பெரும் பிரச்சனையாக அமைந்தது. ஏறத்தாழ 565 அரசுகள் இருந்தன. பேரரசையுடன் நிலையற்ற மனங்களைக் கொண்டிருந்த நவாபுகள் இராஜாக்கள், மகாராஜாக்கள் ஆகியோரைச் சமாளித்து அரசுகளை இணைக்கும் மகத்தான பணியினைச் செய்து டீடிக்கும் பொறுப்பு படேலிடம் விடப்பட்டது.

**துவக்க இணைப்புகள்**

பிகானிர், பாடியாவா, குவாலியர், பரோடா ஆகியவை துவக்கத்திரேயே இந்திய ஒன்றியத்துடன் இணைய விருப்பம் தெரிவித்தன. தயங்கிக் கொண்டிருந்த அரசுகளை இணைப்பதில் படேல் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். 1947 ஜீலைத் திங்களுக்குள் இந்தியாவின் புவியியல் அமைப்பிற்குள் அடங்கிய 552 அரசுகள் இணையச் சம்மதித்தன. ஹைதராபாத், போபால், திருவிதா1கூர் போன்றவை இந்தியாவுடன் சேர விருப்பமற்று இருந்தன. பல அரசுகளைப் பாகிஸ்தானுடன் சேருமாறு ஜின்னா வற்புறுத்திக் கொண்டிருந்தார். துவக்க இணைப்புகள் அதிகச் சிரமமின்றி நடந்தன.

**பிரச்சினையளித்த அரசுகள்:**

இந்தியப் புவியியலமைப்பு எல்லைக்குள் அமைந்த ஜீனாகத் லை1தராபாத், காஷ்மீா ஆகியவை பிரச்சினைக்குரிய அரசுகளில் முக்கியமானவையாகத் திகழ்ந்தன. ஜீனாகத்தின் நவாப் அதனை பாகிஸ்தானுடன் இணைத்தார். ஜின்னாவின் முயற்சிகளின் காரணமாக இது நடந்தது. புவியியலமைப்பின்படி இது நடைமுறைக்கு ஒவ்வாதது. ஏனெனில் அவ்வரசிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் முன்னூறு மைல் இந்தியப் பகுதி இருந்தது. பாகிஸ்தானின் எல்கைக்குள் அமைந்திலுந்த பகவல்பூா் அரசின் அரசா் அதை இந்தியாவுடன் சோ்க்க விருப்பம் தெரிவித்தார். ஆனால் அது பொருத்தமாகாது என படேல் மறுத்துவிட்டார். பாகிஸ்தானுடன் இணைவது என நவாப் மேற்கொண்ட முடிவை எதிர்த்து ஜீனாகத்தின் மக்கள் புரட்சி செய்தனர். எனவே, ஜீனாகத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. அதேபோன்று காஷ்மீரும் பிரச்சினையாக அமைந்தது. அதிகமான முஸ்லீம் மக்களை கொண்டிருந்த அவ்வரவிற்கு ஒரு இந்து அரசராக இருந்தார். துவக்கத்தில் காஷ்மீரை இந்தியாவுடனோ பாகிஸ்தானுடனோஇணைக்காமல் ஒரு இறைமை பெற்ற சுதந்திர அரசாக வைத்திருக்க அவா் விரும்பினார். பாகிஸ்தானை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் தொல்லைகள் ஏற்பட்டன. மலைச் சாதியினா் கலவரத்தில் இறங்கினா். இக்கலவரங்களை பாகிஸ்தான் தூண்டிவிட்டதாகவும் கூறப்பட்டது. எல்கைப் பகுதிகளில் அமைதியை நிலை நாட்ட காஷ்மீா அரசா் இந்தியாவின் உதவியை நாடினார். இந்தியாவுடன் இணைவதாக இருந்தால் உதவுவதாக படேல் அறிவித்தார். அதன்படி 1947 அக்டோபா் 26ல் காஷ்மீரை இந்தியாவுடன் இணைத்தார். அதன் அரசா். அமைதியை நிலைநாட்ட இந்தியப்படைஅனுப்பப்பட்டது. பாகிஸ்தானும் காஷ்மீருக்குள் படையை அனுப்பி ஒரு பகுதியைக் கைபற்றியது. இந்தப் பிரச்சினை ஐ.நா, சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஐ.நா, சபையின் பல்வேறு முயற்சிகள் தோல்வியாக முடிந்தன. இந்தியாவின் கட்டுபாட்டில் இலுந்த பகுதி ஜம்மு-காஷ்மீா மாநிலமாகியது. புாகிஸ்தானியரால் கைப்பற்றப்பட்ட பகுதி ஆசாத் காஷ்மீா என அறியப்படுகிறது. ஹைதராபாத்தின் நிசாமும்

அவரது அரசை இந்தியாவுடன் அணைக்க விரும்பவில்லை. அவரது அரசில் வாழ்ந்த இந்துக்களைக் கொடுமைப்படுத்தும் செயல்களையும் அவர் மேற்கொண்டார். எனவே, அவரை அடக்க இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பின்னர், 1950 சனவரி 26ல் அது இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.

**சிறிய அரசுகளை ஐக்கியமாக்குதல்**

அரசுகளை இணைத்தல் முதல் கட்டமாக நடந்து முடிந்தது. அதனைத் தொடர்ந்து சிறிய அரசுகளை ஐக்கியப்படுத்திப் பெரிய மாநிலங்களுடன் ஐக்கியமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மிகச்சிறிய அரசுகள் ஒன்றியங்களாக இணைக்கப்பட்டன. சௌராட்டிரம், இராஜஸ்தான், விந்திய பிரதேசம், மத்திய பாரதம், திருவிதாங்கூர், இமாசலப் பிரதேசம் போன்றவை அத்தகைய ஒன்றியங்களாகும். மன்னர்கட்கு மானியங்கள் வழங்கப்பட்டு இத்தகைய இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இவ்வொன்றியங்கள் இந்திய மாநிலங்களுடன் இணைக்கப்பட்டன.

இந்தியா விடுதலையடைந்தபோது அரசுகளை இணைப்பதும் மாநிலங்களை ஐக்கியப்படுத்ர்வதும் பெரிய பிரச்சினைகளாக இருந்தன. மிகப்பெரும் பிரச்சினைகளாக இருந்த அவற்றைச் செவ்வனே வெய்து முடித்தமை இரும்பு மனிதர் படேலின் மிகப்பெரிய சாதனை எனலாம். இத்தகைய அரிய சாதனைக்காக அவர் “ இந்தியாவின் பிஸ்மார்க்” என அழைக்கபடுகிறார்.

## பெண்களின் விடுதலையும் முன்னேற்றமும்

ஆங்கில ஆட்சியின் போது இந்தியாவில் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பற்றியும், சமுதாயத்தில் தங்களின் நிலையைப் பற்றியும் அறிந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

**சமுதாய சீர்திருத்தவாதிகளும் பெண் விடுதலையும் :**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெண் விடுதலைக்காக பல சீர்திருத்தவாதிகள் தோன்றினர்.அவர்களது நடவடிக்கைகள் இந்தியப் பெண்களின் நிலையை உயர்த்துவதற்கான சூழ்நிலையையும் ஒரு தூண்டுதலையும் ஏற்படுத்திக் கொடுத்தது. அப்படிப்பட்ட சீர்திருத்தவாதிகளின் செயல்பாடுகளைக் காணலாம்.

- **ஈஸ்வர சந்திர வித்யா சாகர் : 1820 -91**

இவர் பெண்கல்விக்காகப் போராடிய புகழ்ெற்ற வங்காள சீர்திருத்தவாதிஜ ஆவார். பலதார மணத்தை இவர் கடுமையாக கண்டித்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார். இவைகளை வலியுறுத்தி ஆங்கில அரசுக்கு பல விண்ணப்பங்களை அனுப்பினார். இவை தொடர்பாக சட்டம் ஒன்றை அரசு இயற்றியது. பெண் கல்விக்காக இவர் வங்காளத்தில் பல பள்ளிகளைத் திறந்தார். பெகியூன் என்பவர் ஆரம்பித்த இந்துகன்யா வித்யாலயாவுடன் (hindu kanya vidyalaya) நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

**கந்துகுரி வீரலிங்கம் பந்தலு : 1848 – 1919:**

இவர் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தெலுங்கு பிராமணர் ஆவர். தென்னிந்திய பெண் விடுதலைக்காக இவரும் பாடுபட்டார். விவேகவர்தினி (viveka vardani)என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். 1874ல் பெண்களுக்கான பள்ளிகளைத் தொடங்கினார். 1878ல் சமுதாய சீர்திருத்தக்கழகம் ஒன்றை அமைத்தார். இந்த கழகம் விழாக்களில் நாட்டியம் ஆட பெண்களை வாடகைக்கு கொண்டு வருவதை எதிர்த்து போராடியது.

**மகாதேவ கோவிந்த ரானடே:**

**manadev govinda ranada 1842 – 1901**

இவரும் இவரது மனைவி ராமாபாய் என்பவரும் பெண் விடுதலைக்காக போராடினார்கள்.

1869ல் ரானடே 'விதவை மறுமண சங்கத்தில்' சேர்ந்தார். இதன் மூலம் விதவை மறுமணத்திற்கும் பெண் கல்விக்கும் ஊக்கம் அளித்தார். இவர் புகழ் பெற்ற தேசிய சமுதாய கூட்டம் என்ற அமைப்பை அமைத்தார். இதக்மூலம் சமுதாய சீர்திருத்தங்களை செய்து பாடுபட்டார். இவர் ஷர்தாசாதன் என்ற விதவைகளுக்கான பள்ளியை பம்பாயில் ஆரம்பித்தார். இவர்தான் விதவைகளுக்கு கல்வி அளித்த முன்னோடி சீர்திருத்தவாதி ஆவார்.

**தோண்டா கேசங் கார்வே: dhonda keshav karve, 1858-1962**

பெண் விடுதலையின் மிகப்பெரிய சீர்திருத்தவாதி கார்வே ஆவார். இவர் விதவை மறுமணத்தை ஆதரித்தார். புனேயில் பெண் பள்ளிகளையும், விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களையும் ஆரம்பித்தார். 1916ல் முதலாவது இந்திய பெண்கள் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தார்.

**கங்காபாய் : ganabai**

தங்காணத்தைச் சார்ந்த பிராமண பெண்ணான இவர் கல்கத்தாவில் தங்கி பெண் கல்விக்காகப் பாடுபட்டார். இவர் 1893ல் கல்கத்தாவில் பெண் கல்வியைப் பரப்புவதற்காக மகாகாளி பாதஷாலா என்ற நிறுவகத்தை ஆரம்பித்தார்.

**சுப்புலெட்சுமி : subbalashmi> 1886-1969**

சென்னை மகாணத்தில் பட்டப்படிப்பு பெற்ற முதலாவது இந்து விதவை ஆவார். இவர் குழந்தை விதவை (சிறுவயதில் திருமணமாகி கணவரை இழந்தவர்கள்)களின் மறுவாழ்வுக்காகப்பாடுபட்டார். அப்போது வென்னை மாகாணத்தில் ஆறு வயதுக்கும் பதினைந்து வயதுக்கும் இடைப்பட்ட விதவைகள் 22,000 பேருக்கும் அதிகமாக இருந்தனர். பெரும்பாலோர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். அப்படிப்பட்ட விதவைகளுக்கான மறுவாழ்வு மையங்களையும், பெண் பாடசாலைகள், பயிற்சி மையங்களையும் ஆரம்பித்தார்.குழந்தை திருமணத் தடைக்கு பெரிதும் பாடுபட்டார்.

- **பெண் விடுதலைக்கான அமைப்புகள் :**

பெண்களின் விடுதலைக்காக பல அமைப்புகளும் தோன்றின.

1. நீதிபதி ராணடேயின் மனைவி ராமாபாய் என்பவரால் பெண் கல்வியைப் பரப்ப ஆரிய சமாஜ் (arya mahila samaj) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1910ல் சரனாதேவி (sarladevi) என்பவரால் அலகாபாத்தில் இந்திய பெண்களின் நலன்களைப் பேணுவதற்காக 'பாரத் ஸ்திரி மகாமண்டல'(bhart stree mahamandal) என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

2. **இந்திய பெண்கள் சங்கம் : women Indian associations> (wia)**

இது 1915ல் டாரதி ஜினராஜதாவா (dorothy jinaradasa) என்ற ஜரிஷ் பெண்மணியினால் ஆரம்பிக்கப்பட்டது. அன்னிபெசன்ட் இதன்முதல் தலைவரானார். இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் பெண் கல்வியைக் பரப்புவதே ஆகும். 1917க்குப் பிறகு அரசியலிலும் ஈடுபட்டது. அப்போது இந்தியா அமைச்சராக இருந்த மான்டேகுவிடம் பெண்களுக்கு வாக்குரிமை கோரி விண்ணப்பம் அனுப்பியது. பெண்களின் உரிமைகளையும், நலன்களையும் பேணுவதற்காக ஸ்திரிதர்மா (stree dharma) என்ற அதழை ஆரம்பித்து நடத்தி வந்தது. இந்த இயக்கம். 1925ல் பெண்களுக்கான தேசிய கவுன்சில் (national council if women for india) அமைக்கப்பட்டது.

**அனைத்திந்திய பெண்களின் கூட்டமைப்பு :**

all india womens cinference (AIWE)

அந்த அனைத்திந்திய பெண்களின் அமைப்பின் முதலாவது மாநாடு மார்கரட்கசின் (Margaret Cousin) என்பவரது முயற்சியால் 1927 ஜனவரியில் புனேயில் கூட்டப்பட்டது. இந்த அமைப்பு குழந்தை திருமணம், பந்தா முறை ஆகியவற்றை தடை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டது. 1940ல் ரோஷினி (சுழளாெ) என்ற இதழை ஆரம்பித்து 1927ல் ஆரம்பித்த போதுதான் சென்னை சட்ட மன்றத்தில் முதலாவது பெண் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1935ம் வருடச் சட்டப்படி கட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டது.

**பொது வாழ்வில் பெண்கள் :**

இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல பெண்கள் இயக்கங்கள் தோன்றின. பழமைவாதம், அநீதி, வேற்றுமை காட்டுதல் ஆகியவற்றுக்கு எதிராக போராட முன் வந்தனர். அன்னிபெசன்ட் அம்மையாரின் தன்னாட்சி இயக்கம் பெண்கள் அதிக அளவில் சுதந்திரப் போராட்டத்தில் ஆடுபட்டனர். 1917ல் இந்திய தேசிய காங்கிரசின் முதலாவது பெண் தலைவராக அன்னிபெசன்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1928ல் சரோஜினி நாயுடு இந்திய தேசிய காங்கிரசின் பெண் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆங்கில ஆட்சியின் போது பெண் விடுதலைக்கான பல சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1829ல் சாதி சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டது. 1856ல் விதவை மறுமணச் சட்டமும் இயற்றப்பட்டது. 1872ல் பலதாரமணம், குழந்தை திருமணம் தடை செய்யப்பட்டது. விதவை திருமணம், கலப்பு திருமணம் சட்ட பூர்வமாக்கப்பட்டது. 1937ல் இயற்றப்பட்ட இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின்படி இந்துப் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டு இந்து சமுதாயத்தில் ஆண்களுடன் சம நிலையில் வைக்கப்பட்டனர்.

**சுதந்திரமடைந்த பிறகு பெண் விடுதலை சட்டங்கள் :**

இந்தியா சுதந்திரமடைந்த பிறகும் பெண் விடுதலைக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டது. பெண்களின் பாதுகாப்பிற்காகவும், ஆண்களினால் சுரண்டப்படுவதிலிருந்து தடுக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

1961ல் வரதட்சனை தடுப்பு சட்டம் (Dowry Prohibition Act) இயற்றப்பட்டது. இந்திய சமுதாயத்தில் திருமணத்திற்கு பெண் வீட்டாரிடமிருந்து வதைட்வனை வாங்கும் கொடிய பழக்கம் ஆழமாக வேரூன்றி உள்ளது. வரதட்சணை வாங்குவது சட்டபடி தடுக்கப்பட்டு விட்டாலும் மக்களிடம் ஏற்படும் விழிப்புணர்வும், சமுதாய சிந்தனைகளுமே வரதட்சணை முறையை ஒழிக்க முடியும்.

1955ம் ஆண்டு இயற்றப்பட்ட இந்து திருமண சட்டப்படி (Hindu Marriage Act) ஒருதார மணம் சட்டமாக்கப்பட்டது. பலதாரமணம் தடைசெய்யப்பட்டது. விவாகரத்து செய்யும் உரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டது.

1956ல் இயற்றப்பட்ட இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் படி (Hindu Successian Act) தந்தையின் சொத்துக்களில் பெண்களுக்கும் உரிமை அளிக்கப்பட்டது. 1956ல் இயற்றப்பட்ட இந்து சிறு வயது மற்றும் பாதுகாவலர் சட்டப்படி (Hindu Minority and Guardianship Act) பெண்களுக்கு தங்கள் குழந்தைகளின் பாதுகாவலராக இருக்க உரிமையளிக்கப்பட்டது. 1954 ஜனவரி 1ல் நடைமுறைக்கு வந்த திருமணச் சட்டபடி (Marriage Act), 1954) கலப்புத் திருமணச் சட்டபூர்வமாக்கப்பட்டது. குறைந்தபட்ச திருமணவயது பெண்களுக்கு 18 ஆகவும், ஆண்களுக்கு 21 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது.

## கல்வியின் வளர்ச்சி

கம்பெனியின் ஆட்சிக் காலத்திலேயே ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தும் வேலை துவங்கியது. கல்வி வளாச்சி தொடர்ந்து ஆங்கில அரசியின் ஆட்சிக்காலத்தில் நடந்தது. 1854ல் உட்ஸ் என்பரின் கருத்துரைகளில சில பரிந்துரைகள் செய்யப்பட்டன. இப்பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மதிப்பீடு செய்ய அரசாங்கம் முடிவு செய்தது. மேலும், இங்கிலாந்தில் இருந்த சமய அமைப்புகள் பரிந்துரைகள் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை எனப் புகார் கூறின. எனவே ஹண்டர்குழு என்பது 1882ல் நியமிக்கப்பட்டது.

**ஹண்டர் கல்விக்குழு (1882-83)**

ஹணடர் குழுவின் முக்கியமான நோக்கம் இந்தியாவில் துவக்கக் கல்வியின் நிலைபற்றி ஆய்வதாகும். ஆக்குழு இந்தியாவல் எல்லா மாநிலங்களையும் பார்வையிட்டு ஏறத்தாழ இருநூறு தீர்மானங்களை நிறைவேற்றியது. துவக்கக் கல்வியின் முன்னேற்றத்தையும் அதனைப் பரப்பும் அவசியத்தையும் அக்குழு வலியுறுத்தியது. முடிந்த அளவு துசக்கப் பள்ளிகளை அமைக்க அக்குழு பரிந்துரைத்தது. மாவட்ட, நகராட்சி கழகங்களின்

கட்டுபாட்டிற்கு இப்பள்ளிகள் மாற்றப்படவேண்டும் எனவும் அது கருதியது. இடைநிலைக்கல்வியை இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒரு பிரிவில் இலக்கியக் கல்வி அளிக்கப்பட்டு அதன் முடிவில் பர்கலைகழகக் கல்விக்கு நுழைவுத் தேர்வு வைக்கப்படவும் மற்றொரு பிரிவில் வாணிபம் மற்றும் பணி வாய்ப்புக் கல்வியும் அளிக்கப்பட அக்குழு கருத்துக் கூறியது. கல்வியில் தனியார் துறை ஊக்குவிக்கப்படுதல், மானிய முறையை எளிமையாக்குதல், உதவினெறும் பள்ளிகளை அரசாங்கப் ப்ளிளகட்குச் சமமாக அங்கீகரித்தல் போன்றவற்றையும் அக்குழு பரிந்துரைத்தது. சிறிய நகரங்களில் பெண்கல்விக்கான வாய்ப்புகள் உண்டாக்கபட வேண்டியதன் அவசியத்தையும் அக்குழு வலியுறுத்தியது.

குழுவின் அறிக்கையால் சில நல்ல விளைவுகள் ஏற்பட்டன. பல கல்வி நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டன. 1882ல் பஞ்சாப் பல்கலைகழகம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து 1887ல் அலகாபாத் பல்கலைகழகம் உருவாக்கப்பட்டது. துவக்கநிலையில் புதிய கல்வி நிலையங்கள் தோன்றியது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டன. சிலர் கல்வி பரவியதாகப் பாராட்டினர். வேறு சிலர் புதிய கல்வி நிறுவனங்கள் கல்வியின் தரம் குறையக் காரணமாகின எனக் குறை கூறினர். இந்தியாவில் கல்விமுறையில் கர்சன்பிரபு திருப்தி கொள்ளவில்லை.

**இந்தியப் பல்கலைக்ககைங்கள் சட்டம் (1904) :**

இந்தியக் கல்வி தொடர்பான பிரச்சினைகளை ஆராயவும் அவற்றிற்கான தீர்வுகளைப் பரிந்துரைக்கவும் 1901ல் சிம்லாவில் ஒரு மாநாட்டைக் கூட்டினார் கர்சன். இந்தியா முழுவதிலுமுள்ள உயர் மட்டகல்வி அதிகாரிகள் அம்மாநாட்டிற்கு வருகை புரிந்தனர். அம்மாநாட்டில் 150 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் சர் தாமஸ் ரலே என்பாரைப் பல்கலைகழகக் கல்விநிலை பற்றிஆய்வுசெய்ய அரசாங்கம் நியமித்தது. ரலே குழு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1904ம் ஆண்டின் இந்தியப் பல்கலைகழகங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஆச்சட்டத்தின் பல்கலைகழகங்கள் ஆராய்ச்சிப் படிப்பை ஊன்னுவிக்கலும் பேராவிரியர்களையும் விரிவுரையாளர்களையும் நியமிக்கவும் வகை செய்யப்பட்டது. ஒரு பல்கலைகழகத்தில் ஆராய்ச்சி செய்யும் ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை ஐம்பதிற்கும் குறையாமலும் நூறுக்கு மிகாமலும் இருக்க வேண்டும் எனவும் இச்சட்டம் வலியுறுத்தியது. அவர்களில் பலரை அரசாங்கமே தேர்ந்தெடுக்கும் என அறிவிக்கப்பட்டது. பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய பல்கலைகழகங்களில் ஒவ்வொன்றிலும் இருபது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இடம் பெற அச்சட்டம் வகை செய்தது. இச்சட்டத்தின்பெ பல்கலைகழகங்களின் மீது அரவாங்கத்தில் கட்டுபாடு அதிகமாக்கப்பட்டது. பல்கலைகழக செனட் நிறைவேற்றும் தீர்மானங்களை இரத்துச்செய்ய அரசாங்கத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. தனியார் கல்லூரிகளைக் காலக்கிரமமாகப் பல்கலைகழக ஆட்சிக்குழு சோதனை செய்யவும் பல்கலைகழகத்தின் ஒப்புதல் பெறக் கடுமையான விதமுறைகளை விதிக்கவும் வகை செய்யப்பட்டது. கல்லூரிகள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெறுதல்

அவசியமானது. ஒரு பல்கலைகழகக் கழகத்தின் எல்கைப் பரப்பை முடிவு செய்யும் அதிகாரத்தை கவா்னா் ஜெனரல் பெற்றார்.

பள்ளிக் கல்வியிலிருந்து பல்கலைகழகக் கல்வி வரையிலான கல்வியைப் பற்றி ஆய்வு செய்ய 1917ல் சாட்லா் குழு அமைக்கப்பட்டது. அக்குழு பன்னிரண்டாண்டு கல்வி முறையை பரிந்துரைத்தது. இடைசிலைக் கல்விக்காகக் கல்லூரிகள் அமைக்கவும் கருத்துக் கூறப்பட்டது. கல்லூரிகள் தனியாகவோ அல்லது பள்ளிகளுடன் இணைந்தோ அமைக்கப்படலாம் என அது கூறியது. பல்கலைகழகத்தில் அனுமதிக்கப்பட இடைநிலைக் கல்வித் தோ்வில் தேற வேண்டும்என நிபந்தனை விதித்தது,அத்தோ்வை நடத்த தனியான

கழகங்கள் அமைக்கப்படவும் பரிந்துரை செய்யப்பட்டது. இடைநிலைக் கல்விக்குப் பின்னத் மூன்றாண்டு பட்டபடிப்பிற்கும் பல்கலைகழகங்களின் செயல்பாட்டிற்குக் கடுமையான ஒழுங்குமுறைகளை வகுக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. பெண் கல்விக்கான வசதிகள் விரிவாக்கப்படவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. கல்வி நிலையில் ஆம்பாடு ஏற்பட ஆசிரியருக்கான பயிறிசியும் ஒழுங்கு செய்யப்படவும் பல்கலைக் கழகங்களில் நடைமுறை அறிவயல் தொழில்நுட்பக் கல்வி போன்றவற்றைக் கற்பிக்கவும் அக்குழு வற்புறுத்தியது.

**ஹா்டாக்குழு (1929)**

கல்வி நிலையங்கள் எண்ணிக்கையில் அதிகமாகின. ஆனால் கல்வியின் தரம் குறைந்தது. எனவே சட்டப்படியிலான ஹா்டாக்குழு எனும் குழு நியமிக்கப்பட்டது. சா்.பிலிப்ஹா்டாக் என்பாரின் தலைமையில் அமைந்த இக்குழு கல்வியின் முன்னேற்றம் பற்றி அறிவதே இக்குழுவின் நோக்கமாகும். அக்குழு தனது அறிக்கையில் துவக்க கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. ஆனால் அவசரமான விரிவாக்கத்தையும் கட்டாயத் துவக்கக் கல்வியையும் இக்குழு கண்டித்தது. உயா்நிலைக் கல்வியளவில் பணிவாய்ப்புச் சாா்ந்த கல்வி முறைக்கும் இக்குழு பரிந்துரைத்தது.

**வாா்தா அடிப்படைக் கல்வி முறை**

1935ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வகை செய்தது. அதன் அடிப்படையில் 1937ல் மக்களின் ஆதரவு பெற்ற அமைச்சரவைகள் மாநிலங்களில் பொறுப்பேற்றன. வாா்தா முறை எனும் கல்விமுறை ஒன்றை காந்தி வகுத்தாா். காங்கிரஸ் கட்சி அமைச்சரவை அமைத்திருந்த ஏழு மாநிலங்களில் வாா்தா முறையை நடைமுறைப்படுத்தும் முயற்சி ‘செயல் முலமான கல்வி’ என்பதாகும். டாக்டா். ஜாகீா் உசேனின் தலைமையில் அமைந்த ஒரு குழு இக்கல்விமுறை பற்றிய விபரங்களையும், பாடத்திட்டங்களையும் வகுத்தது. பல கைத்தொழில்களைக் கற்க இம்முறை வகைசெய்தது. ஆசிரியா்கட்குப் பயிற்சி அளிப்பது, மேற்பாா்வை, தோ்வுகள் நடத்துதல் ஆட்சித்துறை ஆகிய அனைத்து விஷயங்கள் பற்றியும் இக்கல்வி முறையில் விளக்கம் அிளக்கப்பட்டது. தாய்மொழியின் வாயிலாக ஏழாண்டுகள் கல்விமுறையை அது பரிந்துரைத்தது. எனினும் 1939ல் காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகியதால் அம்முறையை நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1947க்குப் பின்னரே அம்முறை எடுத்துக்கொள்ளப்பட்டது

**இராதா கிருஷ்ணன் குழு (1948-49)**

1948ம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்திய அரசாங்கத்தால் டாக்டா. இராதாகிருஷ்ணனின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. பல்கலைகழகக் கல்வி பற்றிய அறிக்கை சமா்ப்பிப்பது அக்குழுவின் கடமையாக அமைந்தது. 1949 ஆகஸ்டில் அக்குழு தனது அறிக்கையைச் சமா்ப்பித்தது. அது தனது அறிக்கையில் கீழ்க்கண்ட பரிந்துரைககளைச் செய்தது.

1. பன்னிரண்டு ஆண்டுகான பல்கலைகழகத்திற்கு முந்திய கல்வி.
2. பல்கலைகழகத்தில் 180 வேலை நாட்கள்
3. வேலை நாட்களை மூன்று பருவங்களாகப் பிரித்தல்
4. பொதுக்கல்வி, தாராளக் கல்வி, பணிக்கல்வி ஆகியவை உயா்கல்வியின் நோக்கங்களாக அமைதல்.
5. வேளாண்மை, வணிகவியல், கல்வி தொழில் நுட்பம், சட்டம், மருத்துவம் போன்ற பாடங்கட்கு முன்னுரிமை அளித்தல்.
6. பட்டப் படிப்பிற்குச் சில நிலைகளில் தோ்வுகளை நடத்துதல்
7. பல்கலைகழக கல்வியைப் பொதுப்பட்டியலில் சோ்த்தல்
8. பல்கலைக்கழக ஆசிரியா்களின் ஊதியத்தைக் கூட்டுதல்.
9. பல்கலைக்கழக மானியக் குழு அமைததல்.
10. தோ்வின் தரங்களை உயா்த்துதல்.

இராதாகிருஷ்ன் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 1953ல் பல்கலைக்கழக மானியக் குழு அமைக்கப்பட்டது. 1956ல் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டம் வாயிலாக அதற்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு மத்திய அரசாங்கம் போதுமான நிதி வசதி அளிக்கிறது. கல்வி ஆராய்ச்சி ஆகியவற்றின் தரங்களை இக்குழு முடிவு செய்கிறது. பல்கலைக்கழகக் கல்வி மேம்பாட்டிற்காக இக்குழு கல்லூரிகட்கும் பல்கலைக்கழகங்கட்கும் மானியகளாக வழங்குகிறது.

**கோத்தாரி கல்விக் குழு (1964-66)**

டாக்டா்.எஸ். கோத்தாரியின் தலைமையில் 1964ல் இந்திய அரசாங்கத்தால் ஒரு குழு நியமிக்கப்பட்டது. தேசியக் கல்வி முறை பற்றியும் எல்லா மாவட்டங்களிலும் கல்வி மேம்பாட்டிற்கான கொள்கைகள் பற்றியும் பரிந்துரைகள் செய்ய இக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவிற்கு உதவ சோவியத் உன்றியம், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளின் கல்வி வல்லூநா்களும் அழைக்கப்பட்டனா்.

கோத்தாரிக்குழு ஒரு நீண்ட அறிக்கையைச் சமா்ப்பித்தது. பணி அனுபவம் சமுதாயச் சேவை ஆகியவை கல்வியின் எல்லா பட்டங்களிலும் ஒரு பகுதியாக்கப்பட வேண்டும் என அது பரிந்துரைந்தது. ஒழுக்கக் கல்வியையும், சமுதாயப் பொறுப்புணா்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அக்குழு வலியுறுத்தியது. மேல்நிலைக் கல்வியில் பணிவாய்ப்புக் கல்வியை அறிமுகம் செய்தல், சிறப்புப் படிப்பு மையங்களை வலுப்படுத்துதல் பள்ளி ஆசிரியா்கட்கு நல்ல பயிற்சி அளித்தல், வேளாண்மைக் கல்வி, வேளாண்மையில்

ஆராய்ச்சி போன்றவை அக்குழுவினால் செய்யப்பட்ட பிற பரிந்துரைகளாகும். கோத்தாரிக்குழு அறிக்கையின் அடிப்படையில் 1968ல் இந்திய அரசாங்கம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அத்தீர்மானம் பரினான்கு வயது வரை கட்டாயக் கல்வியை வலியுறுத்தியது. ஆசிரியர்களின் சம்பள உயர்வு, வேளாண்மைக் கல்வி, தொழில்கல்வி ஆகியவற்றின் மேம்பாடுமலிவு விலையில் பாட நூல்களை வெளியிடுதல், தேசிய வருமானத்தில் ஆறு சதவீதத்தைக் கல்விக்காகச் செலவிடுதல் போன்றவை இக்குழுவின் பரிந்துரைகளில் பல அரசாங்கத்தால் அரை மனதுடன் அரைகுறையாகவே நிறைவேற்றப்பட்டன.

## பழங்குடி மற்றும் குடியானவர் இயக்கங்கள்

1857ம் வருடத்திற்கு முன்பு ஆங்கில ஆட்சிக்கு எதிராக புரட்சிகளையும் இயக்கங்களையும் நடத்தியவர்கள் சிறு ஆட்சியாளர்கள், பழங்குடித் தலைவர்கள், தென்னிந்தியப் பாளையக்காரர்கள் ஆகியோர் ஆவார். இவர்கள் விவசாயிகள் மற்றும் தங்கள் போர்வீரர்கள் ஆதரவுடன் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இந்த இயக்கங்களின் நோக்கம் ஆங்கிலேயர்களை முற்றிலும் ஒழித்து விடுவது அல்லது விரட்டிவிடுவது ஆகும்.

1857ம் வருட சிப்பாய் கலகத்திற்கு முன்பு பெருங்கிளர்ச்சியாகக் கருதப்படுவது 1855-56ல் நடைபெற்ற சந்தால் புரட்சியாகும். இந்தப் புரட்சியில் முப்பதிலிருந்து ஐம்பதாயிரம் பேர் கலந்து கொண்டனர். ஆனால் இந்த இயக்கங்களின் தன்மை பற்றி பார்க்கும்போது இவை மீண்டும் கொண்டுவருதல் தன்மையுடையதாகத் தெரிகிறது. அதாவது ஆட்சியை இழந்த இந்திய ஆட்சியாளர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதே இந்த கிளர்ச்சிகளின் நோக்கமாக அமைந்தது.

ஆனால் 1857ம் ஆண்டிற்குப்பிறகு ஆங்கில ஆட்சியின் தாக்கத்தின் காரணமாக குடியானவர் இயக்கங்களின் தன்மை மாறுபட ஆரம்பித்தது. சில வருவாய் மதிப்பீட்டிற்கும் வரிவசூலுக்கும் புதிய கொள்கையை அறிமுகம் செய்தார்கள் ஆங்கிலேயர்கள். நிலத்தின் மதிப்பீடு அதன் விளைத்திறன் அடிப்படையில் அமைந்தது. மேலும் நிலவரி பணமாகவே செலுத்தப்பட வேண்டியதிருந்தது. நில விற்பனை, அடமானம, சொத்து மாற்றம் ஆகியவற்றிற்கு பணம் தேவைப்பட்டது. இதனால் குடியானவர் கடன் கொடுப்பவர்களைச் சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலக்குத்தகைப் பிரச்சனை குடியானவர்களுக்கும் நிலசுவான்தார்களுக்குமிடையே உள்ள உறவில் சிக்கலை ஏற்படுத்தியது.

ஆங்கிலேயரின் இந்த புதிய விவசாயக் கொள்கையால் ஜமின்தார்கள், ஆங்கில பிரதிநிதிகள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோர் பழங்குடியினர் பகுதிகளுக்குச் சென்றனர். ஆங்கில அதிகாரவர்க்கத்தின் ஆதரவுடன் இவர்கள் பழங்குடி மக்களை சுரண்டினார்கள். பழங்குடியினரின் பெரும்பான்மையினர் நிலமற்ற தொழிலாளர்களாகவும், கொத்தடிமை விவசாயிகளாகவும் மாறினர். இது பழங்குடி சமுதாய வாழ்க்கையை பாதித்தது. காலப்போக்கில் இந்த பழங்குடியினர் ஏழ்மை நிலையடைந்து இறுதியில் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

நிலச்சுவான்தார்களுக்கும், வட்டிக்கும் பணம் கொடுப்பவர்களுக்கும் பின்னணியில் பக்கபலமாக ஆங்கில அரசு இருப்பதை உணர்ந்து கொண்டனர். எனவேதான் அவர்களிடம் எழுச்சியானது இயற்கையாகவே தோன்றியது. இவர்களது போராட்டத்தில் எந்த வெளிநாட்டு சக்தியும் ஈடுபடவில்லை. சந்தலர்கள், அவுரிச் செடி சாகுபடியாளர்கள், மராட்டிய மற்றும் தக்காண குடியானவர்கள், முண்டா பழங்குடியினர் ஆகியோர் தங்கள் கிளர்ச்சிகள் மற்றும் இயக்கங்களின் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு அச்சுருத்தலை ஏற்படுத்தினர்.

- **சந்தால் குடியானவர் இயக்கம்**

1855ம் வருடம் ஏற்பட்ட சந்தால் கிளர்ச்சி எவ்வித விளைவையும் ஏற்படுத்தவில்லை. அரசாங்கம் சில முக்கியமான நிர்வாக மாற்றங்களை அறிமுகம் செய்தது. ஆனால் அந்த மாற்றங்கள் சந்தால் பர்கானாகுடியானவர்களின் அதிர்ப்தியைப் பேச்சு முடியவில்லை. இந்த அதிருப்தியே மீண்டும் 1871 முதல் 1881 வரை கிளர்ச்சியாக வெடித்தது.

சந்தால் குடியானவர்களின் அதிருப்திக்கு முக்கியமான காரணம் மஞ்சி என்ற அவர்களின் தலைவரின் அதிகார வீழ்ச்சி நிலக்குத்தகை உயர்வு. வட்டிக்கு கடன் கொடுப்பவர்களின் கொடுமையான நடவடிக்கைகள் ஆகியவை ஆகும். சுந்தால் குடியானவர்களின் தலைவர் மஞ்சி என்று அழைக்கப்பட்டார். இவர் விவசாயிகளின்சமூக வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே காணப்பட்டார். ஆனால் ஜமீன்தார்கள் இவர்களை சாதாரண விவசாயிகளாகவே நடத்த முற்பட்டனர். தங்கள் தோட்டங்களில் ஐரோப்பியர்களையே நிர்வாகிகளாக நியமித்தனர்.

சந்தால் பர்கானாவில் 1865ல் குத்தகைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய போது கிராமப்புறங்களில் பதட்ட நிலை ஏற்பட்டது. மேலும் 1872ல் ஆரம்பிக்கப்பட்ட புதிய நிலவருவாய் மதீப்பீட்டின் விளைவாக விவசாயிகள் இதுவரை செலுத்தி வந்த நிலக்குத்தகை அதிகரித்தது. வரிப்பளுவைத் தாங்க முடியாத விவசாயிகள் தங்கள் நிலங்களை அடமானம் வைத்தனர். இறுதியில் நிலத்தையே இழந்தனர்.

இந்த துன்பங்களால் சந்தால் குடியானர் எரிச்சலடைந்தனர். தங்களிடம் நிலக்குத்தகை வசூலிக்க வந்தவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. இச்சூழ்நிலையில் சந்தால் குடியானவர் இயக்கம் ஒன்றை ஆரம்பித்தனர். பகிர்நாத் மஞ்சி என்பவர் இந்த இயக்கத்தின் அரசியல் நோக்கங்களை விவரித்தார். இந்து மதக்கோட்பாடுகளின் அடிபபடையில் இந்த சந்தலர்கள் தங்கள் சமுதாயத்தை தூய்மைப்படுத்த முயன்றனர். அவர்கள் பிராமணீய கோட்பாடுகளின் அடிப்படையில் தங்களை தூய்மையாளர்கள் என்று அழைத்துக்கொண்டனர். சந்தலர்கள் தலைவரான தாபுகோஷர் ஒரு இந்து துறவி ஆவார்.

சுந்தால் குடியானவர் இயக்கம் 1872-82ம் வருடங்களில் நடைடிபற்றது. பல கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடைடிபற்றன. பல பகுதிகளில் இயக்கத்தை வழி நடத்தச் செல்ல குருமார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பகிர்நாத், மஞ்சி, ஐது மஞ்சி,பெரோ மஞ்சி ஆகிய குருமார்கள் சந்தால் பர்கானா மக்களுக்கு ஒரு பொற்காலம் ஆரம்பித்துவிட்டதாகவே

கணித்தார்கள். ஆனால் இந்த இயக்கம் வலுவடையும் முன்பாகவே நசுக்கப்பட்டது. பல சந்தால் தலைவர்கள் கைது செய்யப்பட்டு விட்டதால் இயக்கம் பிசுபிசுத்துப் போயிற்று.

- **அவுரி குடியானவர் இயக்கம்**

**(Indigo movement> 1859-60)**

நவீன வேதியல் தொழிற்துறையில் புதிய கண்டுபிடிப்புகள் ஏற்படும் முன்பாகவே இந்திய நீலச்சாயம் புகழ்பெற்று விளங்கியது. இங்கிலாந்தில்ஜவுளி தொழில் வளர்ச்சி அடைந்ததாலும் அதன்விலை அதிகமாக இருந்ததாலும் இங்கிலாந்து வாணிகர்கள், வங்காளத்திலும்,பீகாரிலும் நிலங்களை வாங்கி, அவுரி செடி சாகுபடி செய்தனர். அவர்களுக்கு அது லாபகரமாக இருந்தது. இதனால் அந்த நிலங்களின் மதிப்பு உயர்ந்தது. இந்த சாயத் தொழில் அதிக லாபம் கொடுத்தமையால் ஐரோப்பிய சாகுபடியாளர்கள் விவசாயிகளை கட்டாயப்படுத்தி அவுரித் தொழில் பயிரிடுமாறு செய்தனர். சாயச் செடியைத் தவிர வேறு எதுவும் பயிரிடக் கூடாது என்றனர். ஆனால் விவசாயிகளுக்கு இந்த தொழில் லாபகரமானதாக இல்லை. எனவே 1856ல் பரசாத் என்ற இடத்திலுள்ள விவசாயிகள் அவுரிச் செடி பயிரிட மறுத்தனர். தங்கள் நிலையை பரசாத் மாஜிஸ்டிரேட்டிடம் நேரடியாகக் கூறினர்.

1859 ஆகஸ்ட் மாதம் பரசாத் மாஜிடிரேட் ஈடன் தங்களுக்கு இஷ்டப்பட்ட பயிரை பயிரிட விவசாயிகளுக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பு கூறினார். இந்த தீர்ப்பு அவுரி விவசாயிகளை அவுரி விவசாயிகளை போராட்டத்தில் இறங்கச் செய்தது. நாதியா, பரசாத், பப்னா ஆகிய பகுதிகளில் உள்ள அவுரி சாகுபடியாளர்கள் 1860 ஏப்ரல் மாதம் தாங்கள் துன்புறுத்தப்படுவதற்கு எதிர்ப்பை தெரிவித்தார்கள். அத்துடன் சாயச் செடி பயிரிட மறுத்தார்கள். இந்திய குடியானவர் இயக்கத்தில் இது முதலாவது வேலை நிறுத்தப் போராட்டம் என்று கருதலாம். இந்த போராட்டம் வெகு சீக்கிரம் ஜெசூர், குல்னா, டாக்கா, மால்டா, தினேஜ்பூர் ஆகிய பகுதிகளில் பரவியது. இந்த இயக்கத்தில் ஐரோப்பிய சாகுபடியாளர்களுக்கு எதிராக ஜமீன்தார்கள், பணக்கார விவசாயிகள், தாலுக்தாரர்கள், கிராமத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

**முக்கியத்துவம் :**

இந்த இயக்கத்தின் தீவிர தன்மையை ஆங்கில அரசு கண்டுகொள்ளவில்லை. அவுரிச் செடி சாகுபடி பற்றி விசாரணை செய்ய ஒரு குழு ஒன்றை 1860- மார்ச் 31ல் அரசு அமைத்தது. அந்தக்குழு சாயச் செடி பயிரிட விவசாயிகளிடம் காணப்பட்ட வெறுப்பே இந்த போராட்டங்களுக்கு காரணம் என்று வெளிப்படுத்தியது. இந்த இயக்கம் மக்கள் இயக்கமாகவே மாறியது. இது இந்திய குடியானவர் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகிறது. இது பரவிய வேகம் குடியானவர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையை வெளிப்படுத்தியது.பின்னர் மகாத்மா காந்தி சம்பரான் கெய்ரோ பர்தோலி ஆகிய இடங்களில் நடத்திய போராட்டங்கள் கலந்து கொண்டவர்களை விட எண்ணிக்கையில் அதிகமாக விவசாயிகள் கலந்து கொண்டனர். பின்னர் காந்தி ஆரம்பித்த ஒத்துழையாமை இயகத்தின் முன்னோடியாக இந்த இயக்கத்தைக் கருதலாம். மேலும் இந்த அவுரி குடியானவர் இயக்கம் இந்தியர்களுக்கு ஒன்றாக இணைத்தல் மற்றும் அரசியல் போராட்டங்கள் ஆகியவற்றின்

மதிப்பை உணா்த்தியது இந்த போராட்டத்தின் போது தான் தீனப்பந்து மித்ரா என்பவா் அவுரி விவசாயிகள் கொடுமைப் படுதத்ப்படுவதைச் சித்தரிக்கும் நிலதா்பான் என்ற புகழ்பெற்ற நாடகத்தை எழுதினாா். ஆங்கிலேயா்கள் வங்காலத்தில் தங்கள் ஆதிக்கத்தை ஏற்ப்படுத்திய பிறகு நடைபெற்ற முதல் போராட்டமாகும் இது.

**3. தக்காண குடியானவா்கள் எழுச்சி:**

## ( Peasant uprising of Decan- 1875)

தக்காணத்தில் குடியானவா்களின் எழுச்சிக்கு பல காரணங்களைக் கூறலாம். அவைகளில் முக்கியமானது ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி குடியபனவரிகளிடம் வசூலித்த அதிகப்படியான நிலவரியே ஆகும். ஆதனால் நிலத்தை உழுது பயிா் செய்த குடியானவா்கள் மிகவும் பாதிக்கப்பட்டனா்.தக்காணத்தில் அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டது. 1866-67ம் ஆண்டுகளில் பயிா் செய்ய முடியவில்லை. இதனால் குடியானவா்கள் நிலவரி செலுத்த இயலவில்லை. வரி செலுத்த வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதற்காக நில அடமானம் செய்தனா். ஆனால் நிலத்தை அடமானம் செய்த பிறகு அந்த விவசாயினால் தனது நிலத்தை மீட்க முடியவில்லை. இதுவே தக்கான குடியானவா்களின் நிலையாக இருந்தது. ஆனால் அரசாங்கம் குடியானவா்களைவ ட்டிக்கு கடன் கொடுப்பவா்களின் பிடியிலிருந்து மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1874ம் ஆண்டு விவசாயிகள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த ஆரம்பித்தனா். புனே, அகமது நகரை சோ்ந்த குடியானவா்கள் வட்டிக் கடைகாரா்களுக்குஎதிராக ‘ சமுதாயப் புறக்கணிப்பு’ போராட்டம் ஆரம்பித்தனா். இது நல்ல நலனைத் தந்தது. ஆனால் வெளிப்படையான கிளா்ச்சி 1875 மே 12ம் தேதி சுபா என்ற இடத்தில் வெடித்தது. வட்டிக் கடைகாரா்களுடன் செய்து கொண்’ட ஒப்பந்தம் பத்திரங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. இதைத் தொடா்ந்து பிம்தாாி தாலுகாவில் மேலும் நான்கு இடங்களுக்குப் பரவியது. புதினைந்து நாட்களுக்குள்ளாக மேலும் பல தாலுகாக்களில் பரவியது. மாா்வாாி, குஜராத்தி வட்டிக் கடைக்காரா்கள் கிராமங்களை விட்டு வெளியேறினாா்கள். பல இடங்களில் தாங்கள் எழுதிக் கொடுத்த கடன் பத்திரங்களை வாங்கிளா். வன்செயல்கள் பரவியது.

அரசாங்கம் வலிமையான படை ஒன்றை அனுப்பி இந்த குடியானவா் கிளா்சச்சியை அடக்க முற்பட்டது. புனே, அகமது நகா் மாவட்டங்களில் மட்டும் 951 போ் கைது செய்யப்பட்டனா். 1875 ஜீன் முதல் வாரம் இந்த குடியானவா் கிளா்ச்சி மூன்று வாரங்களே நீடித்தது. அரசாங்கத்தின் அடக்குமுறை நடவடிக்கைகளை எதிா் கொள்ள தக்காண குடியானவா்கள் தயாராக இல்லை. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது வட்டிக் கடைக்காரா்களிடம் தாங்கள் எழுதிக் கொடுத்த நில அடமானப் பத்திரங்களை கைப்பற்றுவதே ஆகும். ஆனால் வட்டிக் கடைக்காரா்களின் பின்னால் நின்ற அரசாங்கத்தின் வலிமையை அவா்கள் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும் இந்தப் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு கிடைத்தது. இது ஒரு வன்முறைப் போராட்டமாக உருவெடுக்கவில்லை. குடியானவா்கள் சுயகட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டனா்.

அரசாங்கம் இந்த போராட்டத்தை நசுக்கி விட்டாலும் அரசாங்க கொள்கைகளில் இதன் தாக்கம் காணப்பட்டது. குடியானவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு 1879ல் 'தக்காண விவசாயிகளின் மீட்பு சட்டம்' ஒன்று இயற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது ஆகும்.

### 4. முண்டா இயக்கங்கள் (Munda Tribal Movement- 1900)

"முண்டா பழங்குடியினர் இயக்கம் தோன்றுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் நிலங்களை காடுகளையும் இழந்ததே ஆகும்" என்று கூறுகிறார் வேரியல் எல்வின் என்பவர். ஹோாஸ், முண்டா, ஓரோன் (ர்ழுள, ஆரனெயள, ழுசயழனெ) போன்ற பழங்குடியினர் பல முறை கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். புகழ்பெற்ற மனித இயல் வல்லுரனரான டாக்டர் பி.எஸ.. குகா (டீ.ளு. புராய)) என்பவர் 'பழங்குடியினர் அவர்களைச் சுற்றியிருந்த மக்களால் சுரண்டப்பட்டதே அவர்களின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்தது.' என்று கூறுகிறார். இதில் சுற்றியிருந்த மக்கள் என்று குறிப்பிடப்படுகிறவர்கள் ஆங்கில நிர்வாகிகள், ஜமீன்தார்கள், வட்டிக் கடைக்காரர்கள் ஆகியோர் ஆவர்.

ஆங்கில ஆதிக்கம் வேரூன்றிய பின்பு பழங்குடியினர் வாழ்க்கை முறையில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அவர்களது தனித் திருத்தல் வாழ்க்கை முடிவடைந்தது. நிலக்குத்தகை பணமாக செலுத்த வேண்டியிருந்தது. இதனால் வியாபாரிகள், வட்டிக்கடைக்காரர்கள் விவசாயிகள் போன்ற புதிய பிரிவினர் தோன்றினர். இந்த புதிதாக வந்தர்கள் டிக்கு என்று அழைக்கப்பட்டனர். இதற்கு வெளி ஆட்கள் என்று அர்த்தமாகும். புிண்டா பழங்குடியினரிடம் ஆங்கிலேயர் எந்த அனுதாபமும் காட்டவில்லை. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கீதிமுறை முண்டாக்களின் விவசாய முறையில் வீழ்ச்சியையும் தடங்கலையும் ஏற்படுத்தியது. முண்டாக்களின் பஞ்சாயத்து முறையும் வீழ்ச்சியடைந்தது.

இப்படிப்பட்ட கடுமையான சூழ்நிலைகளை எதிர் கொள்ள இயலாத முண்டாக்கள் பக்கத்து மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்தனர். ஜமின்தார்களுக்கு எதிராக கிறிஸ்தவ மிஷினரிமார்களின் பாதுகாப்பைப பெற முற்பட்டனர். 1858ம் ஆண்டு முண்டா இயக்கம் ஆரம்பித்தது. ஜமீன்தார்களை வெளியேற்றி தங்கள் நிலங்களை மீண்டும் பெற சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1862-88ம் வருடங்களுக்கிடையே முண்டா உழவர்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. 1869ல் முண்டாக்களின் நிலங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது, அவர்கள் தங்கள் முன்னோர்களின் நிலங்களையும் மீட்டுத்தர வேண்டும் என்றனர்.

### பிர்சா முண்டா: Birsa Munda

இந்த முண்டா இயக்கம் 1890ல் ஜமீன்தார்களுடன் உறவு கொண்டிருந்த எல்லா ஐரோப்பியர்களுக்கு எதிராகவும் திரும்பியது. தங்களது நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும், தலைமையேற்று நடத்தவும் ஒரு வழிகாட்டியை தேடியபோது, பிர்சா முண்டா என்பவர் முன்வந்தார். 1875ல் பிறந்த பிர்சா மிஷினரிப் பள்ளியில் பயின்றவர். இயக்கத் தலைவர்களில் ஒருவராக மாறிய பிர்சா தன்னை ' கடவுளின் தூதுவன், என்று கூறிக் கொண்டார். 1895ல் பழங்குடியினர் சுதந்திரத்தை அடையும் லட்சியத்துடன் ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார். இதன்

நோக்கம் பழங்குடியினர் பகுதியிலுள்ள எல்லா வெளிநாட்டவரும் கொல்லப்பட்டு பிர்சாவின் தலைமையில் ஒரு சுதந்திர ராஜ்யம் அமைப்பதேயாகும். நிலக்குத்தகை இனி கொடுக்க வேண்டியதில்லை. இந்த புரட்சியானது அரசாங்கத்தை தூக்கி ஏறியும் என்றார். பிர்சா. 1895 ஆகஸ்ட் மாதம் எல்லா ஐரோப்பியர்களையும் கொல்ல சதித்திட்டம் தீட்டப்பட்டது.

ஆனால் 1895 ஆகஸ்ட் 22ல் பிர்சா முண்டா திடீதென கைது செய்யப்பட்டார். சால்க்கட் என்ற இடத்தில் சுமார் ஏழாயிரம் பேர் கூடி தங்கள் தலைவரை திரும்ப பெற முயற்சி செய்தனர். ஆனால் பிர்சா முண்டாவுக்கு இணைடு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வாறு 1895ல் ஆரம்பித்த முண்டா இயக்கம் ஒரு எழுச்சி என்று கூற முடியாது. இயக்கத்தின் ஆரம்பம் என்று கூறலாம்.

இரண்டு ஆண்டுகள் கழித்து விடுதலையான பிர்சா முண்டா ‘முண்டா ராஜ்யம்’ அமைக்க தயார் நிலையில் இருக்கும்படி கேட்டுக்கொண்டார். தங்கள் பகுதியில் உள்ள வெளியாட்களை அடியோடு ஒழிக்க உறுதி பூண்டார். பிர்சாவும் அவரது ஆதரவாளர்களும் தங்களுக்கு சோட்டா நாக்பூர் மக்கள் ஆதரவளிப்பவர் என்று நம்பினர். 1899 டிசம்பர் 24ல் கிளர்ச்சி வெடித்தது. சிங்பம் மாவட்டத்தில் சக்கரதார்பூர் என்ற இடத்திலும் ராஞ்சி மாவட்டத்தில் குந்தி, காரா, டோர்பா, தாமர் பெசிரா ஆகிய இடங்களிலும் கிளர்ச்சி தோன்றியது. தீவைப்பு, கிறிஸ்தவர் மீது தாக்குதல் ஆகிய சம்பவங்கள் நடந்தன.

1900 ஜனவரி 5ல் எல்கடின் என்ற இடத்தில் இரண்டு போலீஸ்காரர்களும், ஜனவரி 7ல் குந்தி காவல் நிலையத்தில் ஒலு போலீஸ்காரரும் கொல்லப்பட்டனர். இதனால் ஆங்கிலப்படை ஒன்று கலகத்தை அடக்க அனுப்பப்பட்டது. ஆங்கிலேயரின் ஆயுதங்களுக்கு முன்பு முண்டாக்களின் அம்பும், கல்லும் எதுவும் செய்ய முடியவில்லை. நூற்றுக்கணக்கான முண்டாக்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களது சொத்துக்கள் படையினரால் கொள்ளயைடிக்கப்பட்டது. 1900 பிப்ரவரி 3ம் தேதி கைது செய்யப்பட்ட பிர்சா முண்டா ஜீன் 9ம் தேதி ராஞ்சி சிறையில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் இறந்துவிட்டார்.

இந்த முண்டா இயக்கம் தோல்வியடைந்து விட்டாலும், இதனால் அரசாங்கம் பல நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகுத்தது. 1908ல் முண்டாக்களின் நலன்களைப் பாதுகாக்க சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. மேலும் இந்த இயக்கத்தின் விளைவாக சோட்டா நாக்பூர் பகுதி பழங்குடியினரிடம் விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன்மூலம் தங்கள் உரிமைகள், தூய்மையான வாழ்க்கை, ஆங்கிலய எதிர்ப்பு கொள்கை ஆகியவை பற்றி புரிந்து கொண்டார்கள். 1920ம் ஆண்டுகளில் இந்திய தேசிய இயக்கத்தின் பங்கெடுத்த தானா பாகத் என்ற இயக்கம் தோன்ற முண்டா இயக்கமே காரணமாகும்,

### 5. மாப்பிளாக்கள் கலகம் (MOPLAHS REBELLION)

மலபாரில் இருந்த தீவிரவாத முஸ்லீம்களின் மாப்பிளாக்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு எதிராக இவர்கள் 1836-1855ம் வருடங்களுக்கிடையில் இருபத்திரெண்டு முறை கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 1849ல் மாஞ்சேரி, அங்காடிபுரம் ஆகிய பகுதிகளில் கடுமையான கலவரத்தில் ஈடுபட்டார்கள்.

1852ல் இந்துப் பெண்கள் குழந்தைகள் பலரைக் கொன்று போட்டார்கள். 1854ல் மாப்பிளாக்கள் வைத்திருந்த போர்க்கத்திகள் பறி முதல் செய்யப்பட்டன. 1855ல் கனோலி என்ற மலபார் கலக்டரை கள்ளிக் கோட்டையில் அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்தனர். 1854,1859ம் வருடங்களில் மாப்பிளாக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்களினால் பலன் ஏதும் ஏற்படவில்லை.

1873லிருந்து 1885ம் ஆண்டுகளுக்கிடையில் மாப்பிளாக்களின் கிளர்ச்சிகள் அதிகமானது. எனவே 1887ல் குத்தகைதாரர்கள் சட்டம் ஒன்றை அரசு இயற்றியது. அதன்படி பயிர் செய்த நிலத்தைவிட்டு வெளியேற்றப்படும் குத்தகைதாரர்களுக்கு, அவர்கள் நில மேம்பாட்டுக்காக செலவு செய்த பணம் ஈடாக கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. எதற்காக இப்படி அடிக்கடி மாப்பிளாக்கள் கலகத்தில் ஈடுபடுகிறார்கள் என்ற விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. அப்போது நிலத்திலிருந்த வெளியேற்றப்பட்ட விவசாயிகள் அடைந்த கஷ்டங்கள் தெரிய வந்தது.

1894ல் வைசிராய் இரண்டதம் எல்ஜின்பிரபு காலத்தில் மாப்பிளா பிளர்ச்சி பயங்கரமாக வெடித்தது. இச்சூநிலையில் அரசு மாப்பிள மாவட்டங்களில் சாலை வசதி செய்து கொடுக்கப்பட்வும், மாப்பிளாக்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி செய்து கொடுக்கவும் உத்தரவிட்டது. 1896ல் ஏற்பட்ட கிளர்ச்சியில் இந்துக்கள் மிகவும் பாதிப்படைந்தனர். ஆனால் கிளர்ச்சிஅ டக்கப்பட்டு விட்டது.

1921ம் ஆண்டு வைசிராய் ரீடிங் பிரபு காலத்தில் மாப்பிளாக்கள் மலபாரில் ஒரு பெரிய கலகத்தை ஏற்படுத்தினர். 1921 ஆகஸ்ட் மாதம் தென் மலபார் மாவட்டத்தில் திருரங்காடி என்னுமிடத்தில் போலீசார் சில மாப்பிளா குற்றவாளிகளைச் கைது செய்ததால் இந்தக் கலகம் ஏற்பட்டது. அப்போது இந்தியாவில் கிலாபத் இயக்கம் மும்முரமாக நடைபெற்று சந்தது. இது மாப்பிளாக்கள் கலவரத்திற்கு ஊக்கம் அளிப்பதாக அமைந்தது. இந்த கலகம் எரநாடு, வளுவ நாடு தாலுக்காக்களில் நடைபெற்றது.

கலகம் ஆரம்பித்த சில நாட்களுக்குள்ளாக மூன்று மாவட்டங்களை தங்கள் கட்டுபாட்டிற்குள் கொண்டு வந்து விட்டனர் கலகக்காரர்கள். சில ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். இந்துக்கள் அவதிப்'பட்டனர். கோவில்கள் இடிக்கப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்டன. இந்துப் பெண்கள் கற்பளிக்கப்பட்டனர். பலர் கொலை செய்யப்பட்டனர். அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு ஒரு படை கலகத்தை அடக்க அனுப்பப்பட்டது. முடிவில் கலகக்காரர்கள் தோல்வியடைந்தனர்.

1921 நவம்பர் மாதம் 97 மாப்பிளாக் கைதிகள் ஒரு சரக்கு வண்டியில் அடைக்கப்பட்டு கோயம்புத்தூர் கொண்டுவரப்பட்டனர். போதுமான காற்றோட்டம் இல்லாததால் வழியிலேயே 70 பேர் இறந்துவிட்டனர். இவர்களுக்கு பாதுகாப்பாக வந்த போலீஸ் அதிகாரி கைதிகள் இறந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின்னர் 1922 டிசம்பரில் நடந்த விசாரணையில் அவர் குற்றவாளி அல்ல என்று விடுவிக்கப்பட்டார்.
இவ்வாறு ரீடிங் பிரபு தக்க நடவடிக்கை எடுத்து மாப்பிளா கலகத்தை அடக்கினார்.

6. **தெபாகா இயக்கம்**

## (Tebhaga Movement)

1946 செப்டம்பர் மாதம் வங்காளத்திலுள்ள மாபாண கிசான் சபா பிளவுட் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பித்தது. இந்த பிளவுட்குழு தெபாகா அல்லது மூன்றில் இரண்டு பங்கு விளைபொருள் நிலத்தை உழுபவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. இதனை நடைமுறைப்படுத்தவே போராட்டம் ஆரம்பித்தது.

வங்காளத்தின் வடக்குப்பகுதி போராட்டத்தின் மைய இடமாக ஆனது. முக்கியமாக தினேஜ்பூர், ஜல்பைகுரி, ராங்பூர், மால்டா ஆகிய இடங்களில் கிளர்ச்சி வலுவடைந்தது. மேற்கு வங்காளத்திலுள்ள இருபத்து நான்கு பர்கானா மாவட்டத்திலுள்ள காப்திவிப் என்ற இடத்தில் பெரிய இயக்கமாக மாறியது. ஆனால் அரசாங்கத்தினால் அடக்குமுறை கட்டவிழ்ந்துவிடப்பட்ட போது இயக்கம் வலுவிழந்தது. ஏழை மற்றும் மத்திய தர குடியானவர்களின் ஆதரவையும் இந்த இயக்கம் இழந்தது.

7. **தெலிங்கானா குடியானவர் கிளர்ச்சி : (Telangana Peasant movement)**

தற்கால ஆந்திர பிரதேசத்திலுள்ள தெலுங்கானாவில் மிகப்பெரிய குடியானவர்களின் கொரிலா போர் துவங்கியது. இது அப்பகுதியிலுள்ள சுமார் மூவாயிரம் கிராமங்களைப் பெரிதும் பாதித்தது. 1947 ஆகஸ்ட் மாதத்திற்கும் 1948 செப்டம்பர் மாதத்திற்கும் இடையில் இந்த இயக்கம் தீவிரமடைந்தது. இந்த இயக்கத்தை கம்யூனிசவாதிகள் நிஜாமுக்கு எதிரான போராட்டமாக மாற்றினார். இந்த ஆயுதப் போராட்டத்தில் முக்கிய பங்மெடுத்தவர் சுந்தரய்யா என்பவராவார். இவர் ஹைதராபாத் நிஜாம் ஆதிக்கத்திலிருந்த விடுவிக்கப்பட்ட பகுதிகளில் முன்னேற்றம் அடைந்துள்ளதை வெளிப்படுத்தினார். ஆயுத மேந்திய குடியானவர்கள் ஹைதராபாத் நிஜாமின் அடக்குமுறை ஆட்சியை வீழ்த்தினர். இது ஆந்திர பிரதேசம் மொழி அடிப்படையில் அமைக்கப்பட வழிவகுத்தது.

8. **ரம்பா கிளர்ச்சி**

### Rampa Rebellion

ரம்பா கிளர்ச்சி 1922-24ம் ஆண்டுகளில் நடைபெற்றது. வடக்கு கோதாவரியில் ரம்பா சமவெளிப்பகுதியில் வாழ்ந்த பழங்குடி இனத்தவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.இந்த ரம்பா பழங்குடியினர் கிளர்ச்சி செய்வதற்கு முக்கிய காரணம் சில ஆங்கில அதிகாரிகளின் பொறுப்பற்ற, தேவையற்ற நடவடிக்கைகளேயாகும். முக்கியமாக அங்கிருந்த தாசில்தாரின் மனிதாபிமானமற்ற, கடுமையான நடவடிக்கைகளால் ரம்பா பழங்குடியினர் கிளர்ச்சி செய்தனர்.

இந்த ரம்பா கிளர்ச்சி அலுரி சீதாராமராஜீ என்பவர் தலைமையில் நடைபெற்றது. இவர் தனக்கு குணமாக்கும் வலிமையும், எதிர் காலத்தை எடுத்துரைக்கும் திறமையும் இருப்பதாக கூறிக்கொண்டார். ஆந்திரப் பிரதேசத்தின் நாட்டுப்புற மக்களின் புகழ்டிபற்ற தலைவரானார். மகாத்மாகாந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தினால் கவரப்பட்டார். சுமார் 2500 சதுரமைல் பரப்பில் இவரது கிளர்ச்சியாளர்கள் பரந்து காணப்பட்டனர். ஆனால் 1924 மே மாதம் இவர்

கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார். ரம்பா கிளர்ச்சிஅ டக்கப்பட்டது. இக்கிளர்ச்சியை அடக்க சென்னை அரசு 15 லட்சம் ரூபாய் செலவு செய்தது.

## சாதி எதிர்ப்பு இயக்கங்கள்
## (Anti caste movements)

**ஆங்கிலேயர் ஆட்சியில் சாதிமுறை :**

இந்த நிலையை ஆங்கில ஆட்சியாளர்கள் மிகவும் சாதமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். சாதி அடிப்படையில் இந்தியா பிரிவதை வரவேற்றனர். அதன்மூலம் இந்திய ஒற்றுமையைக் குலைக்க திட்டம் தீட்டினர். ஆனாலும் அவர்களது சில நிர்வாகத் கொள்கைகளால் சாதி முறை பலவீனமடைந்தது. ஆங்கிலேயர்கள் நகர்புற வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால் கிராமங்களிலிருந்து குடியெர்ந்த பல சாதி மக்கள் நகரங்களில் கலந்தே வாழும் நிலை ஏற்பட்டது. போக்குவரத்திலும் தீண்டத்தகாதவர்களுக்கென்று தனியாக ரயில், மற்றும் பஸ் வசதி செய்து கொடுக்க முடியவில்லை. எல்லா சாதியினரும் ஒன்றாகவே பயணம் செய்தனர். அதே போல தொழிற்சாலைகளிலும் மேல் சாதிக்காரர்களிடமிருந்து தீண்டத்தகாதவர்களை பிரித்து வைக்க முடியாமற் போனது. மேலும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற ஆங்கிலேயரின் கொள்கையால் கீழ்சாதியினா் தங்கள் உரிமைகளைக் கேட்டு குரல் எழுப்ப முடிந்தது.

ஆனாலும் ஆங்கிலேயர்கள் சாதி முறைக்கு ஊக்கம் அளித்தனர். அரசுப்பணியிலும், சட்டமன்றத்திலும் தனிப் பிரதிநிதித்துவம் கேட்டு போராட தாழ்த்தப்பட்ட மக்களை தூண்டி விட்டனர். மேல் சாதி மக்களால் தாங்கள் சுரண்டப்பட கூடாது என்ற சிந்தனையை அவர்களிடம் கிளரிவிட்டனர். சில சாதிகளின் உள்ள உட்பிரிவுகளுக்கும் ஆதரவளித்தனர். மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலும் சாதிகள் பற்றிய விபரங்களை சேகரித்து விளம்பரப்படுத்தி வெளியிட்டனர்.

இதன் விளைவாக ஏற்டிகனவே கடினத்தன்மையுடன் விளங்கிய சாதிமுறை மேலும் கடினமாக்கப்பட்டது. இந்த நிலையை மாற்ற சமுதாய சீர்திருத்தவாதிகளும், சுதந்திரப் போராட்ட தலைவர்களும் முயன்றனர். பிரம்ம சமாஜம், ஆரிய வமாஜம், ராம கிருஷ்ணா மி’ன் போன்ற அமைப்புகள் சாதிமுறைக் கெதிராக குரல் கொடுத்தன. சுதந்திர போராட்ட தலைவர்களும் சாதிமுறையை எதிர்த்தனர். மனிதர்அனைவர் சமம் என்ற கோட்பாட்டின்படி கோவில்கள் அனைவருக்கும் திறந்து விடப்பட வேண்டும் என்று போராடினர். கீழ் சாதி மக்கள் மீது என்ற கட்டுப்பாடுகளும் விதிக்க கூடாது என்றனர்.

எனவே தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக பல அமைப்புகளை ஏற்படுத்தினர். அகில இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் கூட்டமைப்பு, அகில இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் சங்கம், சுய மரியாதை இயக்கம் போன்ற அமைப்புகள் தோன்றின. இந்த அமைப்புகளின் முக்கிய நோக்கங்கள் சாதிமுறையின் கடினத்தன்மையால் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடிகளின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பல தலைவர்கள் தோன்றி உரிமைகளுக்காகப் போராடினர். சாதி எதிர்ப்பு இயக்கங்கள் பல தோன்றின.

- **ஜோதிபா பூலே** (Jyotiba Phule 1828-1890)

மகாராஷ்டிர மாநிலத்தில் சாதி எதிர்ப்பு இயக்கம் தீவிரமாக இருந்தது. அங்கு சமுதாயத்திலும் அரசாங்கத்திலும் பிராமணர்கள் உயர்நிலை பெற்றிருந்தனர். நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் கொண்டிருந்தனர். அவர்களுக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக குரல் கொடுத்தவர் ஜோதிபா பூலே என்பவராவார்.

1827ம் ஆண்டு ஒரு மாலி குடும்பத்தில் பிறந்த ஜோதிபா இளமையிலேயே குடிப்பும் செயல்திறனும் மிக்கவராகக் காணப்பட்டார். படிப்பதற்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டாலும்தளராத மனதும் பள்ளிப் படிப்பை டுடித்தார். 1847ல் தனது ஆங்கிலபடிப்பையும் முடித்துக் கொண்டார். நாட்டுப்பற்றுமிக்க பூலே ஏதாவது ஒரு வகையில் தாய் நாட்டிற்கு சேவை செய்ய வேண்டுமென நினைத்தார். மக்களிடையே இனம், மொழி, சமயம், சாதி வேற்றுமை கூடாது என்று கருதினார். ஒரு பிராமண நண்பர் வீட்டு திருமணத்தில் கலந்து கொண்டபோது உயர் சாதியினர், கீழ் சாதியைச் சேர்ந்த ஜோதிபாவை விரட்டிவிட்டனர். அதிலிருந்து பிராமணர்களுக்கு எதிராக செயல்பட ஆரம்பித்தார்.

**ஜோதிபாவும் பெண்கல்வியும் :**

பெண்கள் கல்வியும், தாழ்த்தப்பட்டவர்களின் கல்வியுமே ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தி வேறுபாடுகள் அற்ற சமுதாயத்தை அமைக்க உதவும் என்று நம்பினர். பூலே எனவே பெண்கள் பள்ளிகளை அமைக்க முற்ப்பட்டார். 1848ல் புத்வார் பீத் என்ற இடத்தில் ஒரு பெண்கள் பள்ளியை ஆரம்பித்தார். ஆனால் பிராமணர்களின் கடும் எதிர்ப்பால் அந்த பள்ளியை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் நண்பர்களின் ஆதரவுடன் மீண்டும் அப்பள்ளியை 1851-ல் திறந்தார். மேலும் சில இடங்களில் னெண்கள் பள்ளியை திறந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நூலகம் ஒன்றையும் அமைத்தார். தாழ்த்தப்பட்ட விவசாயிளுக்காக 1855-ல் ஒரு இரவுப் பள்ளியை அமைத்தார். 1860-ல் ஒரு அனாதை சிறுவர்கள் மற்றும் அனாதை விதவைகளை தங்கச்செய்தார்.

**ஜோதிபாவும் சாதி எதிர்ப்பு இயக்கமும்.**

பெண்கள் கல்வியும், தாழ்த்தப்பட்வர்களின் கல்வியுமே ஒரு நாட்டின் பொருளாதாரத்ததை உயர்த்தி வேறுபாடுகள் அற்ற சமுதாயத்தை அமைக்க உதவும் என்று நம்பினார். பூலே எனவே பெண்கள் பள்ளிகளை அமைக்க முற்பட்டார். 1848ல் புத்வார் பீத் என்ற இடத்தில் ஒரு பெண்கள் பள்ளிளை ஆரம்பித்தார். ஆனால் பிராமணர்களின் கடும் எதிர்ப்பால் அந்த பள்ளியை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் நண்பர்களின் ஆதவுடன் மீண்டும் அப்பள்ளியை 1851ல் திறந்தார். மேலும் சில இடங்களில் பெண்கள் பள்ளியை திறந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காண நூலகம் ஒன்றையும் அமைத்தார். தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்காக 1855ல் ஒரு இரவுப் பள்ளியை அமைத்தார். 1860ல் ஒரு அனாதை இல்லத்தை திறந்து அதில் அனாதை சிறுவர்கள் மற்றும் அனாதை விதவைகளை தற்கச் செய்தார்.

**ஜோதிபாவும் சாதி எதிர்ப்பு இயக்கமும் :**

1870ல் ஜோதஜபா சாதி எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். 1872ல் குலாம்கிரி என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1873ல் 'சத்திய ஷோதக் சமாஜ்' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். அதற்கு 'உண்மையை அறியும் சங்கம்' என்று பொருள்படும். இந்த சங்கத்தின் முக்கிய நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் சமூக நீதி கிடைக்க வழி செய்துவதும் ஆகியவையாகும். ஏராளமானவர்கள் இதில் உறுப்பினராகச் சேர்நிதனர்.

இந்த சங்கத்தினர் பிராமண வேத நூல்களை ஏற்றுக் கொள்ள மறுத்தனர். பிராமணீயத்தின் போலித் தன்மைகளை வெளிப்படுத்தினர். இவர்கள் மராட்டியர்கள் அனைவரும் சத்திரியர்களே என்று கூறினர். ஆங்கிலேய ஆதரவு கொள்கையைப் பின்பற்றினர். சாதிமுறையை வெகுவாகத் தாக்கினர். மனிதர்களிடம் காணப்படும் தகுதிக்கே முக்கியத்துவம் கொடுக்க என்று சாதி அடிப்படையில் மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் வலியுறுத்தினர். பிராமணர்அல்லாதவர்கள்தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு பிராமண புரோகிதர்களை அழைக்கந் கூடாது என்றனர்.

அரசு பணிகளிலும், தல ஆட்சி நிறுவனங்களிலும் கீழ் சாதி மக்களுக்கு பிரதி நிதித்துவம் கொடுக்கவேண்டும் என்றார் பூலே. இவரது முயற்சியின் விளைவாக தனி பிரதிநிதித்துவம் கிடைத்தது. இந்த சங்கத்தினர் ஆங்கிலத்தை ஒதுக்கி மராட்டிய மொழியில் பேசுவதற்கு முன்னுரிமைஅளித்தனர். கிராமங்களில் தங்கள் கொள்கைகளை பல கூத்துக்கள் மூலம் பரப்பினர்.

தாழ்த்தப்பட்டவர்களின் உயர்வுக்காகவும், அவர்களின் கல்விக்காகவும் பாடுபட்ட ஜோதிபா பூலேவுக்கு 1888ல் பம்பாயில் ஒரு பாராட்டு விழை நடத்தப்பட்டு 'மகாத்மா' என்ற பட்டமும் கொடுக்கபட்டது. இவர் ளுயசளயதமை ளுயவலயனாயசஅயிரளவயடய, புாரடயஅபசைை ஆகிய புகழ்பெற்ற இரண்டு நூல்களை எழுதினார்.

**ஜோதிபா பூலேயின் சமுதாய சீரிதிருத்தங்கள் :**

ஜோதிபா பூலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினார். சாதியை எதிர்த்தார். விதவைப் பெண்களின் மறுமணத்தை ஆதரித்தார்.. இளம் வயதில் பெண்களுக்கு திருமணம் செய்யப்படுவதை எதிர்த்தார். ஜோதிபா பூலே சுயமரியாதை திருமணத்தை ஆதரித்தார். பிராமணர்களை வைத்து மந்திரங்கள் ஓதி திருமணம் செய்வதை எதிர்த்தார். மணமகனும், மணமகளும் பெரியவர்கள் முன்பு உறுதி மொழி எடுத்துக் கொண்டு எளிமையாக திருமணம் செய்து கொள்வதை ஆதரித்தார். இப்படிப்பட்ட திருமணங்களை நடத்தி வைத்தார்.

இவ்வாறு ஜோதிபா பூலே பிராமணர்களுக்கு எதிரான சாதி அயக்கத்திற்கு தலைமை வகித்து, தாழ்த்தப்பட்ட மக்களை மேம்படுத்த தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

2) **V.D. சவர்க்கார் (V.D. Savarkar, 1883-1966)**

தீண்டாமையை எதிர்த்துப் போராடிய மற்றுமொரு தலைவர் ஏ.னு. வசர்க்கார் என்பவராவார். இவர் தீண்டத்தகாதவர்களை மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்துவதற்கு போராடினார். 1925ல் தீண்டத்தகாதவர்களுக்கும் கோவிலுக்குள் சென்று வழிபாடு செய்வதற்கு உரிமை வேண்டும் என்று கோரினார். மகாராஷ்டிரத்தில் திலகர் ஆரம்பித்து வைத்த விநாயகர் திருவிழா தீண்டத்தகாதவர்கள் உட்பட எல்லா வாதியைச் சேர்ந்த மக்களும் கொண்டாடும் ஒரு விழாவாக மாற்றினார். அம்பேத்காரின் இயக்கத்திற்கு ஆதரவளித்தார். மால்வான் என்ற இடத்தில் நடைபெற்ற தீண்டத்தகாதவர்கள் மாநாட்டில் தலைமைப் பொறுப்பு ஏற்று செயல்பட்டார். வேதங்களைப் படிக்க வேண்டும் என்று தீண்டத்தகாதவர்களுக்கு ஆலோசனை கூறினார். 1925ல் முதல் தடவையாக ரத்ன கிரியிலுள்ள விருதபா கோவிலில் தீண்டத்தகாதவர்கள் சென்று வழிபாடு செய்ய உரிமை பெற்றனர். 1931ல் ரத்னகிரியிலுள்ள பத்திதப்பவான் கோவில் எல்லா இந்துக்களும் சென்று வழிபாடு செய்ய உரிமை கிடைத்தது. சவர்க்ககார் தவிர மேலும் ஷிவராம் ஜன்ப காம்ப்ளே, வி.ஆர். ஹிண்டே. ஏன.சி. சந்தவர்க்கார் ஆகியோரும் சாதி முறைகளின் கடினத்தன்மைக்கு எதிராகப் போராடினர்.

**3) B.R. அம்பேத்கார் (Dr.B.R.Ambedkar,1891-1956**

மகாராஷ்டிராவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய மற்றுமொரு புகழ்பெற்ற தலைவர் டாக்டர் அம்பேத்கார் ஆவார். இவர் தனது பெற்றோர்களுக்கு பதினைன்காவது பிள்ளையாவார். 1891 ஏப்ரல் 14ம் தேதி பிறந்தார் அம்பேத்கார். தனது உயர் கல்வியை எல்பின்ஸ்டன் கல்லூாயீல் முடித்ததார். 1916ல் கொரம்பியா பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். சட்டக்கல்வியும் பயின்ற அவர் 1924ம் பம்பாய் உயர் நீதிமன்றத்தில் தனது வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார். இதுவே அவரது பொதுவாழ்வின் ஆரம்பமாக இருந்தது.

**அம்பேத்காரின் சாதி எதிர்ப்பு போராட்டம்:**

மகாராஷ்டிர மாநிலத்தில் மகார் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர் அம்பேத்கார். இவர் பிராமணர்கள் மற்றும் உயர்சாதி இந்துக்களின் ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடினார். தாழ்த்தப்பட்டமக்கள் மத்தியில் மட்டுமின்றி சமூக மாற்றத்தை விரும்பி நின்ற எல்லாத் தரப்பு மக்களிடமும் அவரது கருத்துக்களின் வீச்சு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1917ல் ‘இந்தியாவில் சாதிகள்’ என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டார். அதில் ஒரே சாதிக்கு மட்டுமே திருமணங்கள் நடப்பதால்தான் சாதிமுறை அமியாமல் உள்ளது என்ற கருத்தை தெரிவித்தார்.

**தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்தில் அம்பேத்காரின் பங்கு :**

1918ம் ஆண்டு முதலாவது அனைத்திந்திய தாழ்த்தப்பட்டவர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் அம்பேத்கார் கலந்து கொண்டார். மாண்ட்போர்ட் சீர்திருத்தத்திற்காக அமைக்கப்பட்ட ‘சவுத்பரோகமிஷன்’ பல சமுதாய இன மக்களின் குறைகளைக் கேட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை அம்பேத்காரும் வி.ஆர். ஹிந்தேவும் தெரிவித்தனர்.

அக்குழுவிடம் அம்பேத்காரும் ‘தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித் தொகுதி அளிக்கப்பட வேண்டும் என்றும், அப்படி அளிக்கப்படும் தொகுதிகளின் எண்ணிக்கை தாழ்த்தப்பட்ட மக்கள் தொகையின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட வேண்டும்’ என்றும் தெரிவித்தார். தன்னாட்சி வழங்கப்படும் முன்பு சமுதாய சமத்துவம் தேவை என்றார்.

அம்பேத்கார் ‘பகிஸ்கிரித் கிட்கரினிசபை’ ஒன்றை அமைத்தார். இந்த அமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டார். 1920 ஜனவரி 31ல் ‘மூக்நாயக்’(ஊமைகளின் தலைவன்) என்ற மாதமிருமுறை பத்திரிக்கை ஆரம்பித்தார். தனது பத்திரிக்கை மூலம் சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் சமூக சமத்துவத்தைப் பரப்பினார். 1920ல் நாக்பூரில் நடைபெற்ற தாழ்த்தப்பட்டவர்களின் மாநாட்டில் முக்கிய பங்மெடுத்தார்.அம்பேத்கார்.

தான் ஆரம்பித்த சங்கத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இலவச விடுதி ஒன்றை ஆரம்பித்தார். உடைகள், மற்றும் நூல்கள் வாங்க உதவி செய்யப்பட்டது. மேலும் அம்பேத்கார் பல கிராமங்களுக்கு சென்று அங்கு வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களிடம் காணப்பட்ட தாழ்வு மனப்பான்மையை நீக்கினார். கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறினார். 1926-34ம் ஆண்டுகளில் பம்பாய் சட்டமன்றத்தில் நியமன உறுப்பினராக இருந்த அம்பேத்கார் தாழ்த்தப்பட்டோருக்காகவும் ஏழைகளுக்காகவும் பல மசோதாக்களைக் கொண்டு வந்தார். ஆனால் சாதி இந்துக்களின் எதிர்ப்பால் அவை சட்டமாக முடியவில்லை.

1927ல் மகாத் என்ற இடத்தில் தாழ்ப்பட்டோர் மாநாமு நடைபெற்றது. அப்போது அங்கிருந்த குளத்தில் அனைவரும் நீர் பருகினர். ஆனால் சாதி இந்துக்கள் எதிர்ப்பால் அக்குளத்தில் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் எடுப்பது தடுக்கப்பட்டது. ஆனால் அம்பேத்கார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். வழக்கில் வெற்றியடைந்து அக்குளத்தில் தாழ்த்தப்பட்டோர் நீர் எடுக்க உரிமை அளிக்கப்பட்டது.

**வட்டமேஜை மாநாடுகளும் அம்பேத்காரும் :**

லண்டனில் நடைபெற்ற இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட் மக்களின்பிரதிநிதியாகக் கலந்து கொண்டார் அம்பேத்கார். வட்டமேஜை மாநாட்டில் இவர் ஆற்றிய உரைகள் உலக நாடுகளின் கவனத்தை இந்தியா பக்கம் திருப்பியது. இவரது பேச்சைக் கேட்ட காந்திஜி உட்பட பல தலைவர்கள் வியந்து நின்றனர். காரணம் அடிமைப்பட்ட இந்தியாவில் கால்வாசி மக்கள் பிறப்பின் அடிப்படையில் மனிதர்களாகவே அங்கீகரிக்கப்படாத கொடுமையை விலாவாரியாக எடுத்துரைத்தார். அம்பேத்கார்.இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டும் என்பதோடு தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்கு வழி காண வேண்டும் என்று காந்தியடிகளின் கவனம் திரும்பியது. இதனால் தான் 1937ல் ஹரிஜன் என்ற இதழை காந்திஜி தொடங்கினார். வட்டமேஜை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி முறை வேண்டும் என்று வாதிட்டார் அம்பேத்கார்.

1942ல் தாழ்த்தப்பட்ட மக்களின் கூட்டமைப்பை ஒரு அனைந்திய அரசியல் கட்சியாக அம்பேத்கார் செயல்படுத்தினார்.இந்திய தேசியக் காங்கிரசை அவர் எதிர்த்த போதும் அவர்

ஒரு தேசியத் தலைவராகவே மதிக்கப்பட்டார்.. காங்கிரஸ் இயக்கம் அவரை அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினராக நியமனம் செய்தது. ஜவகர்லால் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய வரைவுக்குழுவின் தலைவராகப் பணியாற்றினார் அம்பேத்கார். உலகிலேயே மிகப்பெரிய அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தார். அதன்மூலம் மனித நேயத்திற்கு முற்றிலும் புறம்பான தீண்டாமையை ஒழித்து அரசியலமைப்பு சட்டத்தின் 17வது பிரிவைத் தந்து வெற்றி கண்டார். சாதியால் ஏற்றத் தாழ்வு மிக்க இச்சமுதாயத்திற்கு சட்டமே கடவுள் என்றார். 1955ல் பாரதீய புத்த மகா சபையை தோற்றுவித்தார். அம்பேத்கார் ஏராளமான நூல்களை எழுதியுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக ஓயாது உழைத்த அம்பேத்கார் 1956 டிசம்பர் 6ம் தேதி மறைந்தார்.

- **நீதிக்கட்சி (Justice Party)**

தென்னிந்தியாவில் சாதி எதிர்ப்பு இயக்கங்கள் கல்வி அறிவு பெற்ற சூத்ரா பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கீழ் சாதிப்பிரிவினர் சமுதாயத்திலும் அரசாங்கத்திலும் பிராமணர்கள் பெற்றிருந்த உயர்நிலையை எதிர்த்துப் போராடினர். தாங்கள் தான் இந்த மண்ணின் மைந்தர்கள் என்றும் ஆரிய இனம் தங்களைவிட எந்த வகையிலும்உயர்ந்தது அல்ல என்றும் கூறினர். கோவில்கள் வழிபாட்டிற்கு எல்லா சாதி மக்களுக்கும் திறந்த விடப் படவேண்டும் என்றும், கல்வி நிறுவனங்களில் சாதி சமய வேறுபாடுகள் அன்றி கல்வி அளிக்கவும் வற்புறுத்தினர். 1901ம் ஆண்டு ஷாணர்கள் என்ற ஒரு பிரிவினர்கள் தாங்கள் சத்திரியர்கள் என்று கூறிக்கொண்டு தங்கள் பெயருக்கு இறுதியில் 'நாடார்' என்பதை சேர்த்துக் கொண்டனர்.

இவ்வாறு பல்வேறு ஒடுக்கப்பட்ட பிரிவினர் தாங்கள் பல நூற்றாண்டுகளாக பட்ட துயரங்களை போக்க விழிப்புணர்வு பெற்று போராட ஆரம்பித்தனர். தென்னிந்தியாவில் உயர் சாதி இந்துக்களாக முதலியார், பிள்ளை, நாயுடு, செட்டியார், போன்றோர் கல்வியிலும் வாணிபத்திலும் முன்னேறியிருந்தாலும் தாங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருப்பதாகவே கருதினர். சமுதாயத்திலும், காங்கிரசிலும் பிராமணர்கள் ஆதிக்கம் இருப்பதாகக் கருதினார்கள். எனவே இந்த உயர் சாதியினர் பிராமணர் ஆதிக்கத்திற்கு எதிராக ஆரம்பித்த இயக்கமே நீதிக்கட்சியாகும்.

**நீதிக்கட்சி அமைக்கப்படுதல் :**

1916ல் பி. தியாகராஜ செட்டியார் என்பவர் 'தென்னிந்திய சுதந்திரக் கூட்டமைப்பு' என்ற அமைப்பை நிறுவினர். புனகல் ராஜா கே.வி.ரெட்டி,சி.நடேச முதலியார் போப்பிலிராஜா ஆகியோர் அந்த அமைப்பில் சேர்ந்தனர்.இந்த அமைப்புதான் பின்னர் 'நீதிக்கட்சி' என்று பெயர் பெற்றது. சென்னை திராவிடர் சங்கம், தென்னிந்திய சங்கம் ஆகிய அமைப்புகள் இதில் இணைந்தன. 'நீதிக்கட்சி' என்ற ஆங்கில இதழையும்,'திராவிடன்' என்ற தமிழ் இதழையும்,'ஆந்திரப் பிரகாவிகா' என்ற தெலுங்கு இதழையும் நடத்தியது. இவ்வாறு

ஆட்சியிலும், கல்வித்துறையிலும் காணப்பட்ட பிராமண ஆதிக்கத்திற்கு எதிராகத் தோன்றியது நீதிக்கட்சி.

**நீதிக்கட்சியின் கொள்கைகள்:**

நீதிக்கட்சி தனது லட்சியங்களை அது நட்திதய இதழ்கள் மூலம் வெளியிட்டு வந்தது. சமுதாயத்தில் இரண்டாம் தரக்குடிமக்களாக நடத்தப்பட்ட திராவிட அன மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபடுவதே இக்கட்சியின் முக்கிய நோக்கமாக அமைந்தது. திராவிட இன மக்களுக்கு சமநீதி கிடைக்க வேண்டும் என்று கோரியதாலேயே நீதிக்கட்சி என்ற பெயர்பெற்றது. திராவிட இன மக்களின் கல்வி, சமுதாய,பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்காகப் பாடுபடுவதென்று முடிவு செய்தது. காங்கிரஸ் கட்சியில் காணபட்ட பிராமணர்களின் மேலாதிக்கத்தை தடுப்பமையும் தனது நோக்கமாகக் கொண்டது.

**நீதிக்கட்சியின் நடவடிக்கைகள்:**

1919ம் வருடச் சட்டப்படி அறிமுகப்படுத்தப்பட்ட இரட்டை ஆட்சி முறைப்படி மாநில சட்ட சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றன. இத்தேர்தலில் நீதிக்கட்சி அதிக இடங்களைவென்று அமைச்சரவையை அமைத்தது. பிராமணர்களின் மேலாதிக்கத்தை ஒடுக்கி திராவிட இனத்தவரை மேம்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது நீதிக்கட்சி. இந்த நோக்கத்திற்காக ஆங்கிலேய ஆதிக்க சக்திக்கு துணை போகவும் அவர்கள் தயங்கவில்லை. விடுதலை போராட்டத்தில் விலகியிருந்தது மட்டுமல்ல சில எதிர் நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

குறைந்த அளவு அதிகாரத்தைக் கொண்டு குறுகிய காலத்தில் சிறப்பான சாதனைகளைச் செய்தது நீதிக்கட்சி. நீதி மன்றங்களில் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் இடம் பெற நீதிக்கட்சி வழி செய்தது. 1921-22ம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசு ஆணைகளின் விளைவாக உள்ளாட்சி அமைப்புகளிலும் கல்வி நிலையங்களிலும் திராவிட இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணி இடங்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. கோவில்களில் கேடுவிளைவித்த தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

**நீதிக்கட்சியின் வீழ்ச்சி:**

நீதிக்கட்சி விரைவிலேயே வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கிய காரணம் இக்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் செல்வந்தர்களாகவும் வணிகர்களாகவும், தொழிலதிபர்களாகவும் இருந்தார்கள். சாதாரண மக்களிடம் அவர்கள் தொடர்பு கொள்ளவே இல்லை. பிராமணர்களில் மேலாதிக்கத்தை எதிர்க்க ஏற்ப்படுத்தப்பட்ட இக்கட்சி உயர் சாதிக் கட்சி என்று தாழ்ந்த சாதி மக்களால் கருதப்பட்டது. விடுதலை போராட்டங்களின் போது மக்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்ட போது நீதிக்கட்சியினர் ஆங்கில ஆட்சியிருக்குத் துணை போனார்கள். மேலும் காமராஜ் தலைமையில் வேகமா வளர்ச்சியடைந்த காங்கிரஸ் எல்லா சாதியினருக்கும் சம வாய்ப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற திட்டங்களைப் பின்பற்றியதால் நீதிக்கட்சி செல்வாக்கு இழந்தது. 1944-ல் சேலத்தில் நடந்த மாநாட்டில் நீதிக்கட்சி மறைந்து பெரியாரின் தலைமையில் திராவிடர்கழகம் தோன்றியது.

4) **பெரியார் ஈ.வே ராமசாமி (Periar E.V. Ramasamy)**

தந்தை பெரியார் என்று போற்றப்படும் ஈ.வே ராமசாமி திராவிட இயக்கத்தின் பெருந்தலைவராகக் கருதப்படுகிறார். 1879 செப்டம்பர் 17ல் ஈரோட்டில் பிறந்தார். இளம் வயதில் இவரது பள்ளி ஆசிரியர் இவரை பள்ளிப் படிப்புக்குத் தகுதியற்றவர் என்று கூறியதால் படிப்பை நிறுத்திக் கொண்டார். வியாபாரத்தில் ஈடுபட்டார். இளமைக் காலத்திலிருந்தே தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும் ஏழைகள் மீதும் பற்றுக் கொண்டவராக விளங்கினார்.

தேசப்பற்று மிகுந்த ஈ.வேரா. இந்திய தேசிய போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். சமுதாய சீர்திருத்தங்களில் அதிக ஈடுபாட்டினைக் கொண்டிருந்தார். ராஜாஜியின் வேண்டுகோளை ஏற்று காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1920ல் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். கதரைப் பரப்பும் இயக்கத்திலும் ஆடுபட்டார். 1921ல் கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். 1922ல் சென்னை காங்கிரஸ் கமிட்டியின் தலைவரானார். 1924ல் கேரளாவில் வைக்கம் என்னுமிடத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு குறிபிட்ட தெருவின் வழியாக செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிரான போராட்டத்தில் ஈ:டுபட்டு 'வைக்கம் வீரர்' என்ற புகழ் அடைந்தார். சேர்மாதேவிப் பகுதியில் வ.வே.சு. ஐயர் குரு குலத்தில் பிராமணர் அல்லாதவர் துன்புறுத்தப்பட்டதை கடுமையாக எதிர்த்து போராடினார். பிராமணர்களுக்கு மட்டும் தனியாக பந்தி போடுவதைக் கண்டித்தார். காங்கிரஸில்ருந்த பிராமண உறுப்பினர்கள் இவரது செயல்களை எதிர்த்த போது காங்கிரசை விட்டே விலகினார்.

**பெரியாரும் சுயமரியாதை இயக்கமும்:**

1925ம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். பெரியார். ஆந்த இயக்கம் வளர்ச்சியடையப் பாடுபட்டார். சுயமரியாதை இயக்கத்தில் பிராமணீயக் கருத்துக்களை வெளிப்படுத்தி புராணங்கள் இதிகாசங்கள் ஆகியவற்றில் காணப்படும் புரட்டுக் கதைகளையும் அர்த்தமற்ற செயல்களையும் விமர்சனம் செய்து பொதுக் கூட்டங்களில் பேசினார். தென்னக மக்களின் நலம் காக்கும் நோக்குடன் 'திராவிட நாடு' கொள்கையை வகுத்தார். இவரால் ஆரம்பிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் மிக உன்னதமானதாகும். இந்த இயக்கம் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஏழைகள் ஆகியோரின் நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டதாகும்.

'குடியரசு''புரட்சி விடுதலை' போன்ற பத்திரிக்கைகளின் மூலம் தனது சுயமரியாதைக் கொள்கைகளை வெளியிட்டு வந்தார். 1937ம்ஆண்டு நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் நீதிக்கட்சிவ ீழ்ச்சியடைந்த போது அதன் கொள்கைகளை சிறிது மாற்றி 1944ல் அதை'திராவிட கழகமாக' மாற்றியமைத்தார். திராவிடர் கழகம் தீவிரமாக செயல்பட்டது. பிராமணர்களின் ஆதிக்கத்தைத் தாக்கியது. பெரியாரின் தொண்டர்கள் கருப்புச் சட்டைகளையே அணிந்தனர்.

தனது பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் பிராமணீயத்தையும் வழிபாட்டு முறைகளையும் கடுமையாகத் தாக்கினார். சமுதாயக் கொடுமைகளுக்கு பிராமணியமே காரணம் என்று நம்பினார். எனவே பிராமணீயத்தை ஒழிக்க போராட்டங்கள் நட்த்தினார். தான் பிராமணர்களை எதிர்க்கவில்லையென்றும், பிராமணீயத்தையே எதிர்ப்பதாகக் கூறினார்.

**பெரியாரின் சாதி ஒழிப்பு போராட்டங்கள் :**

பெரியாரின் முதலாவது சமுதாயப் போராட்டம் தீண்டாமை ஒழிப்பிற்காக கேரளாவிலுள்ள வைக்கம் மகாதேவர் கோவில் நுழைவிற்காக நடத்தப்பட்டது. சாதி ஒழிப்பே பெரியாரின் போராட்டங்களில் முதன்மையானது முக்கியமானது ஆகம். 1927ல் மனுநீதி சாத்திர எரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டார். கலப்பு மணமும் சீர்திருத்தத் திருமணமும் சாதியை ஒழிக்கும் என்றார். சாதியின் பெயரைக் காட்டும் பெயர், புனைப் பெயர், குறிகள் ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும் என்றார். 1957ல் சாதி ஒழிப்பு போராட்டம் நடத்தினார். பிராமணர் என்ற சாதி கிடையாது என்று அரசு அறிவிக்காவிட்டால் போராட்டம் நடக்கும் என்று எச்சரித்தார். கீழ்சாதி ஒழிப்புக்காக 1968ல் டில்லி அதிக்க கண்டன நாளை அனுசரித்தார்.

பெரியார் தனது பகுத்தறிவு மற்றும் சுயமரியாதைக் கருத்துக்களை பரப்புவதற்கு நாடெங்கிலும் நாடகங்கள், ஊர்வலங்கள், போராட்டங்கள் ஆகியவற்றை நடத்தினார். பெரியாரால் உருவாக்கப்பட்ட சுயமரியாதைத் திருமண முறை எல்லோராலும் போற்றப்பட்டது. இவரது சுயமரியாதை இயக்கத்தால் பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புணர்வு கொண்டனர். சுற்றறிந்தவர்களிடையே சாதிப்பாகுபாடுகள் ஓரளவு மறைந்தது. பெரியாரின் சுய மரியாதைக் கொள்கைகள்முழுமையாக வெற்றிபெற்றுவிட்டன என்று சொல்ல முடியாது. ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயம் விழித்துக்கொண்டது என்பதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச் சிறந்த சீர்திருத்தவாதியான பெரியார் 1973ல் இறந்தார்.

- **நாராயண குரு (Narayana guru 1854-1928)**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஞான குருக்களில் நாராயண குருவும் ஒருவர். இவர் எதிர் நோக்கிய ஆன்மீக சிக்கல்களும் சமூகச் சிக்கல்களும் பல வகைப்பட்டவை. சாதியின் பேராலும் மதத்தின் பேராலும் ஒடுக்கப்பட்ட மக்களினமும் அவர்களை ஆட்கொண்ட அச்சமும் மடமையுமே அவரது போராட்டக் களங்கள் ஆயின. 1854ம் ஆண்டு ஆகஸ்ட் 28ல் திருவனந்தபுரத்திற்கு ஒரு மைல்களுக்கு வடக்கே உள்ள செம்பழந்தி என்ற கிராமத்தில் அவதரித்தார் நாராயணகுரு. துந்தை பெயர் மாடன் ஆசான் - தாய் பெயர் குட்டி அம்மை. அவரது இயற்பெயர் நாராயணன் ஆனால் செல்லமாக 'நாணு' என்று அமைக்கப்பட்டார். சிறு வயதிலேயே 'ஒரேநோக்கம், சிறிதும் பீதி அடையாமை, ஜீவகாருண்யம், போன்ற நற்பண்புகளைப் பெற்றிருந்தா நாணு. தனது இளைமைப் பருவத்தில் சமஸ்கிருதம் மற்றும் தமிழில் எழுதப்பட்ட காப்பியங்களை மனப்பாடம் செய்தார். ஆனாலும் தாய் தந்தையர் விருப்பத்திற்கிணங்க கால் நடைகளை மேய்க்கும் பணியில் ஈடுபட்டார். காலப்போக்கில்

நாணுவிடம் குடும்ப வாழ்க்கையைப் பற்றிய வெறுப்பும் அறநெறிகளை உறுதியுடன் பின்பற்றும் ஆர்வமும் பெருகின.

1877ல் தனது இருபத்தி மூன்றாம் வயதில் வாரணப் பள்ளி என்ற இடத்தில் சமஸ்கிருதம் பயணுசந்து சேர்ந்தார். இங்கு தனது படிப்பு முடிந்தவுடன் செம்பழந்தி வந்து ஒரு கல்விக்கூடம் அமைத்தார். குடும்பத்தினர் நாணுவிற்கு திருமன ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் நாணுவோ திருமணத்திற்கு முதல்நாள் இரவு ஒருவருக்கும் தெரியாமல் காட்டிற்குள் ஓடிவிட்டார். ஆன்மீக வாழ்வில் தன்னை அர்பணித்துக் கொண்டார்.

**நாராயணகுருவும் சமுதாய சீர்திருத்தமும் :**

அப்பழுக்கற்ற குணநலன் பெற்ற நாராயணகுரு எஞ்சிய தனது நாட்களை சமுதாயத்தில் நிலவிய சீர்கேடுகளை களைவதற்காக செலவிட்டார். அன்று வாழ்ந்திருந்த மக்கள் அவர்ணர் என்றும், சவர்ணர் என்று இரண்டு பகுதியாகப் பிரிந்து வாழ்ந்தனர். இதில் சவர்ணர் உயர்ந்தோர் ஆகவும் அவர்ணர் தாழ்ந்தவர்களாகவும் இருந்தனர். அவர்ணர்கள் சுதந்திரமாக கல்வி கற்க முடியாது. சாஸ்திரங்களை கற்க கூடாது. கோவில்கள் நிறுவக்கூடாது. அங்கு பிரதிஷ்டைம ற்றும் பூஜைகள் எதுவும் செய்யக்கூடாது.

நாராயணகுரு இந்த முடப்பழக்கத்தை ஒழித்துக் கட்ட நினைத்தார். சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வை நீக்க முடிவு செய்தார். சவர்ணர்களின் அடக்குமுறைக்கு முடிவு கட்ட உறுதிபூண்டார். திருவனந்தபுரத்திற்கு கிழக்குப் பகுதியில் உள்ள அருவிப்புரத்தில் கோவில் ஒரு உருவாக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்தார். சவர்ணர்கள் மட்டுமே கோவில் பிரதிஷ்டை செய்யமுடியும் என்ற கட்டுப்பாட்டை உடைத்தெறிந்தார்.

கேரளத்தில் நாராயண குரு ஆலயப் பிரவேச போராட்டத்தைத் துவங்கிய போது இவரைச் சமாதானப்படுத்துவதற்காக காந்திஜி கேரளா வந்தார். 'இங்கு விலங்குகளை விடக் கேவலமாக வாழும் தாழ்த்தப்பட்ட மக்களைத் தன்மானம் உள்ள மனிதர்களாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.' என்று காந்திஜியிடம் கூறினார் நாராயணகுரு. மேலும் 'இந்து சமயத்தில் விலங்குகளாக வாழ்வதைவிட தம்மை மனிதர்களாக உயர்த்திக் கொள்வதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் கிறிஸ்தவ சமயத்தில் சேர்வதில் தப்பில்லை என்றார் நாராயண குரு.

அதன்பிறகு கேரளாவின் தெற்குப் பகுதீயலிருந்து வடக்கு வரை அவர்ணர்களால் ஏராளமான கோவில்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோவில்கள் மட்டுமல்லாது ஆசிரமங்களும், கல்விச் சாலைகளையும் அமைத்தார் நாராயணகுரு. 1904ல் வர்க்காலயிலுள்ள சிவகிரி குன்றில் வந்து தங்கினார். அந்த குன்றில் ஒரு சிவன் கோவில் அமைத்தார். 1912ல் அத்வைதாசிரமம் ஒன்றை நிறுவி நற்பணிகள் பல செய்தார். இவரது நற்பணிகளால் தாழ்த்தப்பட்டோர் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. 1921ம் ஆண்டு தனது ஜெயந்தி திருநாளில் மதுவிலக்குபற்றி அருளினார் நாராயணகுரு. மது ஒரு விஷம் அதனை தயாரித்தல் கூடாது வழங்குதல் கூடாது அருந்துதல் கூடாது என்றார்.

1924ல் வைக்கம் போராட்டம் தீண்டாமைக்கு எதிரான போராட்டமாக இருந்தது. இதில் டி.கே.மாதவன் முனைப்புடன் ஈடுபட்டார். வைக்கம் சிவன் கோவில் சுற்றியுள்ள சாலையில் செல்ல ஈழுவகுல மக்களுக்கு தீண்டப்படாதவர் என்று கூறி அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

நாராயணகுருவின் நல்லாசியினால் இப்போராட்டம் வெற்றியடைந்தது. பகுத்தறிவுத் தந்தை ஈ.வே.ரா.பெரியார் வைக்கம் சென்று குருதேவருடன் தோளோடு தோள் நின்று போராடினார் 1925ல் மகாத்மாகாந்தி சிவகிரி மலைசென்று நாராயணகுருவை தரிசித்து சென்றார்.

இவரது சீடர் டாக்டர் பல்பு என்பவர்தான் மேற்கத்திய கல்வி மூலம் மருத்துவரான ஈளுவர் ஆவார். நாராயண குருவின் மற்றொரு சீடரான குமரன் ஆசானின் படைப்புகள் கேளரத்தில் பெரும் அறிவுப் புரட்சியையும், சமுதாயப் புரட்சியையும் தோற்றுவித்தன. நாராயண குரு தமது இயக்கத்தைப் பரப்ப ஆன்மீகம், கல்வி, சமூகத் தொண்டு ஆகிய பணிகளுக்கென்று தனித்தனியாக அறக்கட்டளைகளை நிறுவினார். ஆவைகளில் குறிப்பிடத்தக்கது ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலனயோகம்' என்ற அமைப்பு ஆகும். நாடெங்கிலும் கல்விக் கூடங்களுடன் கூடிய ஆவிரமங்களைத் தோற்றுவித்தார். இருபது இளைஞர்களுக்கு கன்னியாசம் வழங்கி சீடர்களாக்கி அவர்களை தமது இயக்கப் பணிகளில் ஈடுபடுத்தினார். ஒடுக்கப்பட்ட மக்களின் வழிபாட்டுக்காக ஊர்தோரும் கோயில்களை எழுப்பினார். கேரளத்தில் கிராமங்களில் கூட உட்கார்ந்த நிலையில் நாராயண சிலைகளைக் காணலாம். ‘குரு’ என்ற சொல் கேரளத்தில் நாராயணகுருவைத்தான் குறிப்பிடும்.

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் கவிதைப்பாடும் ஆற்றல் பெற்ற நாராயண குரு நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். நாராயண குருவின் இயக்கத்தால் உருவாக்கப்பட்ட மாணவர்கள் இன்று கேரளத்தில் சிறந்த அறிவியல் மேதைகளாகவும், இலக்கிய மேதைகளாகவும், கலைஞர்களாகவும் விளங்குவதைக் காணலாம். நாராயண குரு சாதிமுறைக்கு எதிராக போராடினார். மனிதனுக்கு ஜாதி ஒன்று மட்டுமே. பல ஜாதிகள் இல்லை என்றார். நாம் அனைவரும் ஆத்ம சகோதரர்கள் என்றார். மனிதன் ஜாதியை சொல்லக்சுடாது என்றார். ஜாதியை சிந்தனை செய்யக்சுடாது. முனித சமூகத்தில் ஜாதிக் கொடுமை அறவே அகன்று எல்லா மனிதர்களும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர் என்ற உணர்வு பெற வேண்டும் என்றார். ஒரே உலகம், ஒரேநாடு, ஒரே மக்கள் என்ற சமத்துவ உணர்வு அடிப்படையில் உலகம் உய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். 1928 செப்.20ம் தேதி வியபழக்கிழமை நாராயணகுரு சிவகிரிமடத்தில் மகாசமாதி எய்தினார்.

**இந்தியாவில் பொது ஊழியங்கள்**

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பொது ஊழியங்கள் தோன்றின ஆங்கிலக் கம்பெனி ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் துவங்கிய காலத்தில் பொது ஊழியங்களின் பணி புரிந்தோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. கம்பெனியின் பல ஊழியர்கள் தனிப்பட்ட வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். எனவே, கம்பெனியின் ஊழியர்கள் கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என இராபர்ட்கிளைவ் வற்புறுத்தினார். அவ்வாறு ஒப்பந்தம் செய்து கொண்டதால் ஒப்பந்தப் பணியாளர்கள் என அவர்கள் அழைக்கப்பட்டனர்.

**துவக்க சீரமைப்புகள் :**

காரன்வாலிஸ் பிரபு கம்பெனியின் சிவில் ஊழியங்களில் சில சீரமைப்புகளைச் செய்தார். வெள்ளையர்கள் கறுப்பர்களைவிட உயர்ந்தவர்கள் என்ற நம்பிக்கை அவரிடமிருந்ததால் பெரிய பதவிகளில் ஆங்கிலேயரையும் பிற ஐரோப்பியரையும் நியமித்தார். கீழ் நிலைப் பணிகள் இந்தியர்கட்கு வழங்கப்பட்டன. கம்பெனியின் ஊழியர்கள் தனிப்பட்ட வாணிபம் செய்வதைத் தடைசெய்ய அவர் முயற்சிகளை ஆமற்கொண்டார். அவர்களின் வாழ்க்கைத்தரம் நல்லதாக அமைய அவர்களின் ஊதியத்தை உயர்த்தினார். 1793ம் ஆண்டின் பட்டயச் சட்டம் காரன்வாலிசின் முயற்சிகளை நடைமுறைப்படுத்தும் வகையில் அமைந்தது. சிவில் ஊழியர்கட்குப் பயிற்சியளித்தகல்கத்தாவில் ஒரு கல்லூரி வெல்லஸ்லியால் நிறுவப்பட்டது. ஆனால் இயக்குநர்கள் ஒப்புதல்தர மறுத்ததன் காரணமாக அக்கல்லூரி செயல்படவில்லை. ஹெயில்பரியில் இயக்குநர்கள் ஒரு கல்லூரியை நிறுவினர். இக்கல்லூாயீல் பயிற்சி பெறும் வாய்ப்பு ஆங்கிலேயர்கட்கு மட்டுமே அளிக்கப்பட்டது. 1833ம் ஆண்டின் சட்டம் இத்தடையை நீக்கி கம்பெனியில் இந்தியரும் பணிபுரியும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. ஆனால் சட்டத்தில் கூறப்பட்டது நடைமுறைக்கு வரவில்லை. 1858ல் விக்டோரியா மகாராணியால் வெளியிடப்பட்ட பேரறிக்கை இந்தியர்கட்கு நியாயம் வழங்கப்படும் என உறுதியளித்தது. இராணியால் கூறப்பட்ட உறுதிமொழியை நடைமுறைப்படுத்த 1860ல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஒரே சமயத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் தேர்வுகளை நடத்த இக்குழு பரிந்துரைத்தது. ஆனால் இப்பரிந்துரை நடைமுறைக்கு வரவில்லை.

**இந்திய சிவில் ஊழியச் சட்டங்கள் :**

1861ல் ஒரு சிவில் ஊழியச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1793ம் ஆண்டின் பட்டயச் சட்டத்தின் விதிகட்கு எதிராகச் சில நியமனங்கள் செய்யப்பட்டுருநதன. ஆவற்றை ஒழுங்கு செய்யும் நோக்குடன் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. பொது ஊழியத் தேர்வுகள் எழுதுவதற்கான அதிகப்பட்ச வயதைக் குறைக்க ஆங்கில ஆட்சித்துறை முடிவு செய்தது. 1860ல் 22 வயதாகி 1866ல் 21ஆகவும் 1878ல் 19ஆகவும் மாறியது.இவ்வாறு அதிகபட்ச வயதைக் குறைந்தது. இந்தியர்கட்குப் பெரும் இடையூறாக அமைந்தது. இங்கிலாந்து செல்லப் பணம் செலவு செய்வதும் கடினமாக இருந்தது. 1970ல் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் சிவில் ஊழியத் தேர்வுகள் எழுதாமலேயேஇந்தியர்கள் நியமிக்கப்பட வகை செய்தது. ஆனால் அது தொடர்பான விதி முறைகள் வடிக்கப்படாமலேயே இருந்தன. 1885ல் ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் தேர்வுகள் வைக்க வேண்டி இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. பொது ஊழியம் பற்றிப் பல சட்டங்கள் இயற்றப்பட்டபோதிலும் நடைமுறையில் அதிகமான மாற்றங்கள் நிகழவில்லை.

**பொது ஊழியம் பற்றிய குழுக்கள் :**

டபரின்பிரபு 1886ல் அயிட்சிசன் குழுவை நியமித்தார். இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் தேர்வுகள் நட்த்தப்படலாம் என்ற கருத்தை இக்குழு எதிர்த்தது. ஒப்பந்த ஊழியர்கள் ஒப்பந்தமற்ற ஊழியர்கள் என்ற பாகுபாட்டை ஒழிக்க இக்குழு பரிந்துரைந்தது.

அரசுப் பணிகள், மாநிலப் பணிகள், கீழ்நிலைப் பணிகள் எனப் பணிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கவும் அது பரிந்துரை செய்தது. 1893ல் ஒரே சமயத்தில் தேர்வுகள் நடத்தச் சாதமாக பிரிட்டனின் பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அத்தீர்மானத்தின் மீது எவ்வித மேல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. 1912ல் ஜலிங்டன் குழு நியமிக்கப்பட்டது.அக்குஜ 1917ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அவ்வறிக்கையின் மீதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் இந்தியர்கட்கு வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் என வற்புறுத்தின. புணிமூப்புப் பெற்ற பொது ஊழியர்கள் புதிய மாற்றங்களை விரும்பவில்லை இந்திய அமைச்சர்களின்கீழ் பணியாற்ற விருப்பமற்றவர்கட்குதாங்களாகவே பதவி ஓய்வு பெறும் வாய்ப்பினை அரசாங்கம் வழங்கியது. புதிய சூழ்நிலையில் பிரச்சினைகளை ஆய்வு செய்ய லீ குழு 1922ல் நியமிக்கப்பட்டது.

அதிகமான அளவில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட லீ குழு பரிந்துரைத்தது பதினைந்து ஆண்டுகளுக்கு ஐம்பது சதவிகிதப் பணிகளை இந்தியர்கள் பெறமுடியும் எனக் கணக்கிடப்பட்டது. அரசியல் துறை, இந்தியச் சுங்கத்துறை, தந்திச்செய்தித் தொடர்புத் துறை, அரசு இரயில்வேத்துறை போன்றவை தொடர்பாகக் குறிப்பான சில பரிந்துரைகளை அக்குழு அளித்தது. மாநிலங்களில் மாற்றப்பட்ட துறைகளில் நியமனங்கள்செய்யும் உரிமை மாநில அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட்டது பொது ஊழியங்களில் பணி புரிந்தோரின் ஊதியங்களை உயர்த்தவும் அக்குழுபரிந்துரைந்தது. 1919ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் இந்தியாவில் ஒரு பொது ஊழியக் கழகம் அமையப் பரிந்துரைத்தது. ஆனால் 1923 வரை அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாததால் லீ குழு கடுமையான நடவடிக்கை கண்டனத்தைத் தெரிவித்தது லீ குழுவின் பரிந்துரைகள் ஓரளவு நடைமுறைப்படுத்தப்பட்டன.

**1935ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம்:**

பொது ஊழியங்கள் தொடர்பாக 1935ம் ஆண்டின் சட்டம் சில வகைகளைச் செய்தது. ஏற்கெனவே பணிகளில் இருந்தோருக்கு அது பணிபாதுகாப்பு அளித்தது. அரசாங்கத்தால் ஒரு பணி அழிக்கப்பட்டால் அப்பணியில் இருந்தவருக்கு இழப்பீடு கொடுக்கப்படவும் அது வகைசெய்தது தவறான முறையில் பணிநீக்கம்செய்யப்பட்டதாகக் கருதும் பணியாளர் சட்டபடி தீர்வுபெறவும் இச்சட்டம் உரிமை அளித்தது. எந்தப் பொது ஊழியரும் அவருக்குக் கீழிருந்த ஒரு பணியாளரால் பணிநீக்கம் செய்யப்பட முடியாது என்பது தெளிவாக்கப்பட்டது. அலுவலகப் பணியின் நிமித்தம் ஒரு பணியாளர் செய்யும் செயலுக்காக கவர்னர் அல்லது கவர்னர் ஜெனரலின் அனுமதியின்றி அவர்மீது குற்றவியல் வழக்கோ சிவில் வழக்கோ தொடரமுடியாது என்பதும் உணர்த்தப்பட்டது. மத்தியில் ஒரு பொதுக்பணிக்கழகமும் மாநிலங்களில் மாநிலப் பொதுபணிக் கழகங்கள் அமைக்கப்படவும் அவற்றிற்கான உறுப்பினர்கள் நியமிக்கப்படவும் இச்சட்டத்தில் வகைசெய்யப்பட்டிருந்தது. இப்பொதுப்பணிக்கழகங்கள் பொதுப்பணிகட்கு ஆட்களைச் சேர்க்கத் தேர்வுகள் நடத்தவே உண்டாக்கப்பட்டன. ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, பணிமாற்றுதல்கள் போன்ற விஷயங்களில் கடைபிடிக்கப்படவேண்டிய விதிமுறைகள் தொடர்பாக அரசாங்கங்கள் இக்கழகங்களுடன்

கலந்தாலோசிக்கலாம் எனவும் இச்சட்டம் கூறியது. இந்தியாவில் பொதுப்பணிகளின் வளர்ச்சியில் 1935ம் ஆண்டின் சட்டம் பிம முக்கியமான மாற்றங்களை நிகழ்த்தியது எனலாம்.

**தற்போது பொது ஊழியங்கள்:**

இந்திய அரசியலமைப்பு ஒன்றியப் பொது ஊழியக்கழகம் ஒன்றிற்கும் மாநிலப் பொதுபணிக் கழகங்கட்கும் வகை செய்கிறது. இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்கட்கு இணைப்பாக பொது ஊழியக் கழகங்கள் அமைத்துக் கொள்ளவும் அனுமதியளிக்கப்படுகிறது. ஒன்றியப் பொது ஊழியக்கழகத்தின் தலைவரும் உறுப்பினர்களும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றனர். மாநிலப் பொதுஊழியக்கழகத்தின் தலைவரும் உறுப்பினர்களும் ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர். உன்றியப் பொது ஊழியக்கழகத்தின் உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் அல்லது அறுபத்தைந்து வயது நிரம்பும் வரையிலும் பணிபுரிகிறார்கள். மாநிலப் பொது ஊழியக்கழக உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகள் அல்லது அறுபத்து இரண்டு வயது நிரம்பும் வரை பணிபுரிகிறார்கள். பொது ஊழியக்கழகங்கள் சுதந்திரமாக இயங்க அரசியலமைப்பு வகை செய்கிறது. மத்திய மாநில அரசாங்கங்களின் பொது ஊழியங்கட்குத் தேர்வுகள் நடத்தி ஆட்களைத் தேர்ந்தெடுப்பதே அவற்றின் முக்கியமான பணியாகும். ஆட்சேர்ப்பு முறை, பதவி உயர்வு விதிகள் மற்றும் பணி தொடர்பான விரிமுறைகள் பற்றி அரசாங்கங்கள் விரும்பிக் கேட்டால் ஊழியக்கழகங்கள் ஆலோசனைகளை வழங்குகின்றன. இந்தியாவில் பொது ஊழியங்கள் மத்திய மாநில ஊழியங்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. சிலப் பணிகள் மத்திய மாநில அரசாங்கங்கட்குப் பொதுவானவையாக உள்ளன. சான்றாக இந்திய ஆட்சித்துறைப்பணி இந்திய காவல் துறைப்பணி, இந்திய கானகத்துறைப்பணி போன்றவை உள்ளன. மாநிலங்கள் சபையில் பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் வாயிலாகப் புதிய அனைத்திந்தியப் பணியை உருவாக்கலாம்.

## இந்திய பத்திரிகைத்துறையின் வளர்ச்சி

1857ல் ஏற்பட்ட புரட்சி காரணமாக பத்திரிகைத் துறை இன்னலுக்குள்ளாகியது. ஆவ்வாண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அனுமதி வழங்கச் சில கட்டுபாட்டுகளைப் புகுத்தியது. அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறாமல் அச்சகம் வைத்திருப்பதை அச்சட்டம் தடை செய்தது. அனுமதியை வழங்கவும் ரத்துச் செய்யவும் அரசாங்கம் உரிமை பெற்றது. எந்த நாளிதழ், புத்தகம் அல்லது அச்சான விஷயத்தையும் தடைசெய்யவும் அரசாங்கம் அதிகாரம் பெற்றது. இது ஒரு நெருக்கடி நிலை எனவும் இச்சட்டத்திற்கு ஓராண்டு காலம் உயிர் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. 1867ல் நிறைவேற்றப்பட்ட மற்றோரு சட்டம் பத்திரிக்கைகள் பதிவு செய்யப்படுவதை ஒழுங்குசெய்தது.

**தாயகமொழிப் பத்திரிகைச் சட்டம் :**

**1878** வாக்கில் தாயக அமாழிகளில் பத்திரிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துவிட்டன. பம்பாய் மாநிலத்தில் 62 தாய்மொழிப் பத்திரிகைகளும், வடமேற்கில் அறுபதும், வங்காளத்தில் இருபத்தெட்டும், சென்னையில் பத்தொன்பதும் வெளிவந்தன. இத்தாயக மொழி நாளிதழ்கட்கு இலட்சக்கணக்கில் வாசகர்கள் இருந்தனர். 1857 புரட்சி இந்தியர்கட்கும் ஐரோப்பியர்கட்கும் இடையே இன வெறுப்புணர்வை ஏற்படுத்தியது. ஆங்கில நாளிதழ்கள் அரசாங்கத்தின் கொள்கைகட்கு ஆதரவளித்தன. ஆனால், தாயக மொழி நாளிதழ்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை கடுமையாக விமரிசித்தன. எனவே, தாயக மொழிப் பத்திரிக்கைகள் மீது கட்டுபாட்டை ஏற்படுத்த அரசாங்கம் விரும்பியது. அத்தகைய நோக்கத்துடன் 1878ம் ஆண்டின் தாயக மொழிப் பத்திரிக்கைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இச்சட்டம் தாயக மொழியில் செய்திதாள் அச்சிடுபவர் அல்லது வெளியிடுபவர் உறுதிமொழியொன்றினைக் கொடுக்கக் கட்டாயப்படுத்தியது. அரசாங்கத்திற்கு எதிராக உணர்வுகளைத் தூண்டும் செய்திகளையோ வெவ்வேறு சமய, சாதி, இன, மக்கள இடையே வெறுப்புணர்வைத் தூண்டும் வகையிலோ செய்திகளை வெளியிடமாட்டோம் என்ற உறுதியை அவர்கள் அளிக்க வேண்டப்பட்டனர். அத்தகைய உறுதிப் பத்திரத்தை மாவட்ட நீதிபதியிடம் அவர்கள் அளிக்குமாறு கூறப்பட்டது. உறுதி மொழிக்கு காப்பகப் பணம் கேட்கவும் மாவட்ட நீதிபதிஅதிகாரம் பெற்றார். உறுதிமொழியை மீறுபவரின் காப்புப் பணத்தைப் பறித்துக்கொள்ள அவருக்கு உரிமை இருந்தது. தொடர்ந்து தவறு செய்தால் அச்சு இயந்திரத்தைப் பறிமுதல் செய்யவும் அவர் அதிகாரம் பெற்றிருந்தார். இவ்விஷயத்தில் நீதிபதியின் முடிவே இறுதியாகக் கருதப்பட்டது. அதனைஎதிர்த்து மேல்முறையீடு செய்யும் உரிமை அளிக்கப்படவில்லை. முன் தணிக்கைக்கு விஷயங்களைச் சமர்ப்பிக்க ஒப்புக்கொள்வதன் மூலம் இச்சட்டத்திலிருந்து தாயக மொழிப் பத்திரிக்கைகள் விலக்குப் பெறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

இச்சட்டம் ஒரு கறுப்புச்சட்டம் என விமரிசிக்கப்பட்டது. ஏனெனில் இச்சட்டம் தாயக மொழி பத்திரிக்கைகளை ஒரு தலைப்பட்சமாகக் கட்டுப்படுத்தியது. இது ஒரு கூண்டில் அடைக்கும் சட்டம் என இந்தியர்கள் குறை கூறினர். மாவட்ட நீதிபதியின் முடிவிற்கு எதிராக மேல் முறையீடு செய்ய அனுமதி மறுக்கப்பட்டது மிகவும் கொடுமையானது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இச்சட்டத்தின் நச்சுக்கரங்கிளல் பிடிபட்டு சோம் பிரகாஷ், பாரத் மிகிர், டாக்கா பிரகாஷ் போன்ற தாயக மொழி நாளிதழ்கள் செத்துமடித்தன. இச்சட்டம் எந்த நோக்குடன் நிறைவேற்றப்பட்டதோ அந்நோக்கம் நிறைவேறியது. தாயக மொழி நாளிதழ்கள் தங்களது விமரிசனங்களில் கடுமையாகக் குறைத்துக்கொண்டன. இவ்வாறு பத்திரிக்கைகளை ஒடுக்கிய செயலுக்காக லிட்டன் பிரபு வெறுக்கப்பட்டார். 1882ல் இக்கொடுமைச்சட்டம் ரிப்பன் பிரபுவால் ரத்துச் செய்யப்பட்டது.

**செய்தித்தாட்கள் சட்டம் (1908)**

இந்திய தேசியக் காங்கிரஸ் எழுச்சியடைந்த தீவிரவாதத்தின் காரணமாக நாட்டின் பர இடங்களில் வன்முறை நிகழ்ச்சிகள் நடத்தன. அரசாங்கத்திற்கு எதிரான செய்திகள் வெளியிடப்படுவதைத் தடுக்க அரசாங்கம் விரும்பியது. எனவே 1908ல் இந்தியச்

செய்தித்தாட்கள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சேபகரமான செய்திகளை வெளியிடும் பத்திரிக்கைகளையும் அச்சங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரம் நீதிபதிக்கு வழங்கப்பட்டது. தவறு செய்யும் பத்திரிக்கையின் அச்சிடுபவர் அல்லது வெளியிடுபவரது உறுதிமொழியை ரத்துச் செய்ய உள்ளாட்சி அரசாங்கத்திற்கு அதிகாரம் விங்கப்பட்டது. பறிமுதல் நடவடிக்கைக்கு எதிராகப் பதினைந்து நாட்களுக்குள் மேல்முறையீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

**இந்தியப் பத்திரிக்கைச் சட்டம் (1910)**

அரசாங்கத்தின் கரங்களை ஆமலும் வலுப்படுத்தும் வகையில் 1910ம் ஆண்டின் பத்திரிக்கை பதிவு செய்யப்படும் போது வெளியிடுபவரோ அல்லது அச்சிடுபவரோ ரூபாய் ஐநூறு முதல் இரண்டு ஆயிரம் வரை ஈட்டுத் தொகையாகக் கட்டவேண்டும் என வற்புறுத்தும் அதிகாரம் உள்ளாட்சி அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்டது. தவறு செய்யும் பத்திரிக்கையின் ஈட்டுத் தொகையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள இச்சட்டம் வகைசெய்தது. அத்தகைய பத்திரிக்கை மீண்டும் பதிவு செய்ய ரூபாய் ஆயிரம் முதல் பத்தாயிலம் வரை ஈட்டுத்தொகை கட்டவேண்டும். தொடர்ந்து ஆட்சேபகரமான செய்திகள் வெளியிட்டால் அச்சகம் பறிமுதல் செய்யப்படவும் வகைசெய்தது. இச்சட்டம்.இதனால் பாதிக்கப்பட்டுடோர் உயர்நீதி மன்றத்தின் சிறப்பு மன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்திரிக்கைக்கும் இரண்டு பிரதிகளை இலவசமாக அரசாங்கத்திற்கு அளிக்கவேண்டும் என அச்சத்தினர் வற்புறுத்தப்பட்டனர். இச்சட்டத்தின் அடிப்படையில் 991 அச்சகங்களும் பத்திரிக்கைகளும் நடவடிக்கைகட்கு உள்ளாகின. இவற்றில் 286 இதழ்கள் எச்சரிக்கப்பட்டன. 705 வழக்குகளில் அதிகமான ஈட்டுத்தொகை கேட்கப்பட்டது. 1921ல் சர் தேஜ் பகதூர் சப்ரூ என்பாரது தலைமையில் ஒரு பத்திரிக்கைக் குழு நியமிக்கபட்டது. அக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் 1908, 1910 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பத்திரிக்கைச் சட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன.

**இறுதியான அடக்குமுறைகள் :**

சட்டமறுப்பு இயக்கத்தின் காரணமாக 1930ல் இந்திய அரவாங்கம் ஒரு அவசர சட்டத்தை வெளியிட்டது. இச்சட்டத்தின் நோக்கம் பத்திரிக்கைகளை ஒடுக்குவதேயாகும். இரத்துச் செய்யப்பட்ட 1910ம் ஆண்டின் பத்திரிக்கைச் சட்டம் கொண்டிருந்த கடுமையான விதிகளை இச்சட்டம் மீண்டும் கொண்டுவந்தது. 1931ம் ஆண்டில் பத்திரிக்கைச்சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. 1932ல் நிறைவேற்றப்பட்ட குற்றவியல் திருத்தச் சட்டமும் பத்திரிக்கைகளை ஒடுக்கும் வகையில் அமைந்தது. இரண்டாவது உலகப்போர் வெடித்தவுடன் பாதுகாப்பு நடவடிக்கை என்ற போர்வையில் நிர்வாகத்துறை விரிவான அதிகாரங்களைப் பெற்றது. முன்தணிக்கைமுறை நடைமுறைக்கு வந்தது. ஒரு சட்டத்தில் காங்கிரசைப் பற்றிய எந்தச் செய்தியை வெளியிடுவதும் சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டது.

**சுதந்திரத்திற்குப்பின் பத்திரிக்கைத்துறை:**

இந்திய அரசியலமைப்பு பேச்சு சுதந்திரம், கருத்துந் நுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்கிறது. பத்திரிக்கைச் சுதந்திரம் என்பதைத் தனியாக அது குறிப்பிடவில்லை. அடிப்படை

உரிமைகளின் மீது அவசியமான கட்டுபாடுகளை விதிக்கவும் அரசாங்கம் அதிகாரம் பெற்றுள்ளது. சாதாரணக் காலத்தில் முன்தணிக்கை நடைமுறைப்படுத்த முடியாது. ஆனால் நெருக்கடிநிலைக் காலத்தில் முன்தணிக்கை நடைமுறைப் படுத்தப்படலாம். 1951ல் பத்திரிக்கை (ஆட்சேபகர விஷயம்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. அத்தகைய மற்றொரு சட்டம் 1956ல் நிறைவேற்றப்பட்டது.

## உள்ளாட்சி அரசாங்கம்

இந்தியாவில் மௌரியர்களின் காலத்திலேயே உள்ளாட்சி அமைப்புகள் இருந்தன. தமிழ் நாட்டில் பிற்காலச் சோழர்களின் காலத்தில் கிராமப்புற ஆட்சிமுறை சிறப்பாக விளங்கியது. இடைக்காலத்திலும் ஒழுங்கமைக்கப்பட்ட உள்ளாட்சி முறை செயல்பட்டது. பழைமையான முறைகளை ஆங்கிலேயர் மாற்றி அமைத்தனர். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் உள் சுயாட்சி அமைப்புகள் மூன்று கட்டங்களில் வளர்ச்சி அடைந்தன.

**முதல் கட்டம் :**

இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சியின் முதல்படி சென்னையில் மாநகராட்சி மன்றம் அமைக்கப்பட்டதாகும். 1688ல் மேயரையும் பிற உறுப்பினர்களையும் கொண்ட மாநகராட்சி மன்றம் அமைக்கப்பட்டது. 1793ல் இயற்றப்பட்ட பட்டயச் சட்டம் சில மாற்றங்களைச் செய்தது. அச்சட்டத்தின் படி சென்னை பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் நகராட்சிஅமைப்புகள் உருவாக்கப்பட்டன. வீகள், நிலங்கள் ஆகியவற்றின் மீது வரிவிதிக்கும் உரிமை நகராட்சி அமைப்பிற்கு வழங்கப்பட்டது. கழிவுப்பொருட்களை அகற்றுதல், காவல் மற்றும் சாலைப் பராமரிப்பு ஆகிய பணிகட்கு அந்த வருவாய் பயன்படுத்தப்பட்டது. 1842ல் நிறைவேற்றப்பட்ட சட்டம் மாநிலத் தலைநகரங்கல்லாத நகரங்களில் நகராட்சி அமைப்பை ஏற்படுத்தியது. 1850ம் ஆண்டின் சட்டம் முன்னர் வந்த சட்டங்களை மாற்றி அமைத்து மறைமுக வரிவிதிப்பிற்கு வகை செய்தது. இச்சட்டத்தில் கூறப்பட்டபடி மக்களின் வேண்டுகோளின் அடிப்படையில் நகராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. 1857ம் ஆண்டின் புரட்சியும் அதன் விளைவாக இந்திய பிரிட்டானிய முடியாட்சியின் கீழ் வந்ததாலும் உள்ளாட்சி அமைப்பின் வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. சென்னை மாநிலத்தில் கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. முற்காலத்தில் நடைமுறையிலிருந்த ஊராட்சி முறையை மீண்டும் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1870ல் உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டது மேயோவின் தீர்மானம் உள்ளாட்சி அமைப்பு தொடர்பாக வெளியிடப்பட்டது. சுயாட்சி அமைப்பின் வளர்ச்சி நகராட்சி அமைப்பை வலுப்படுத்துதல், உள்ளாட்சி விவகாரங்களில் ஐரோப்பியரையும் உள் நாட்டினரையும் இணைந்து பங்கு பெறச் செய்தல் போன்ற கருத்துக்கள் அத்தீர்மானத்தால் வலியுறுத்தப்பட்டன. மேயோவின் தீர்மானத்தைத் தொடர்ந்து 1871 முதல் 1874 வரை பல மாநிலங்களில் நகராட்சிச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. இச்சட்டங்கள் தேர்தல் துறையை

அறிமுகப்படுத்தின. ஊள்ளாட்சிப் பகுதிகளில் வரிவிதிப்பின் மூலமாகப் பெறப்பட்ட நிதியைச் செலவிடவும் உள்ளாட்சி அமைப்புகட்கு அமைதி வழங்கப்பட்டது நகராட்சிகளின் எண்ணிக்கை அதிகமானது. ஆவற்றின் செயல்களும்' அதிகமாகின.

**இரண்டாவது கட்டம்**

மேயோ பிரபு துவக்கிய வழியில் ரிப்பன் பிரபு தொடா்ந்து சென்றாா். அவா் உண்மையான லிபரல் கொள்கையைப் பின்பற்றியவராகத் திகழ்ந்தாா். மக்களின் கல்விக்கு வகை செய்ய உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடைபெற வாய்ப்புகளை அதிகமாக்குதல் அவசியம் என ரிப்பன் பிரபு எண்ணினாா். 1882ல் ரிப்பன் நிறைவேற்றிய தீா்மானம் இந்திய உள்ளாட்சி அமைப்பு வரலாற்றில் முக்கியமான கட்டம் எனலாம்.அத்தீா்மானம் சில அடிப்படைக் கருத்துக்களைவலியுறுத்தியது மக்களின் அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்தியது. மக்களின் அடிப்படைக் கல்வியின் கருவியாக உள்ளாட்சி அமைப்புகளை விரிவுப்படுத்துதல், உள்ளாட்சி அமைப்புகளில் அதிகமான தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினா்கள் இடம்பெற வகைசெய்தல், உள்ளாட்சி அமைப்புகட்குப் போதுமான நிதி வசதி செய்தல் உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றிய ஊழியா்கள் மீது அவ்வமைப்புகளின் கட்டுபாட்டை அதிகமாக்குதல். மக்கள் தங்கள் விவகாரங்களை தாங்களே கவனித்துக் கொள்ளத் தூண்டுதல் உள்ளாட்சி அமைப்புகளின் மீது அரசாங்கத்தின் மறைமுகமான கட்டுபாட்டை ஏற்படுத்துதல் ஆகியவை ரிப்பனது தீா்மானத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் ஆகும்.

1881லேயே ரிப்பன் ஒரு தீா்மானத்தை வடித்தாா். 1882ல் வெளியிடப்பட்டது. அதனுடைய சீரமைக்கப்பட்ட வடிவம் எனலாம். அத்தீா்மானத்தின் அடிப்படையில் முதலில் செயல்பட்ட மாநிலம் சென்னையாகும். உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி ஆய்வு செயிய சுல்லிவன் குழு அமைக்கப்பட்டது. டாக்டா்க. வெங்கடேசனின் கருத்துப்படி வென்னை மாநிலம் மிகச் சிறப்பாக மாற்றங்களைச் செய்தது. ஆனால் மற்ற மாநிலங்களில் அதிகார வா்க்கம் சீரமைப்பைச் சீா்குலைத்தது. ரிப்பனின் தீா்மானத்தில் கூறப்பட்ட கருத்துக்கள் செவ்வனே செயற்படுத்தப்படவில்லை எனக் குறை கூறுவோரும் உண்டு. கா்சனைப் போன்றோா் ரிப்பனின் கருத்துக்கட்கு எதிரிகளாக இருந்தனா். எனினும் ரிப்பன் முயற்சிகள் மகத்தானவை. ரிப்பன் உள்ஆட்சி அரசாங்க அமைப்பின் அப்பன் எனச் சொல்லப்படுவது பொருத்தமானதே எனலாம்.

1909ல் அதிகாரப்பரவல் தொடா்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் நியமனஆம உள்ளாட்சி அமைப்புகளின் வளா்ச்சியில் முக்கியமானதொரு நிலை எனலாம். முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பதை அக்குழு சுட்டிக்காட்டியது. ஊராட்சியை முறையை வலுவாக்க வேண்டியதன் அவசியத்தையும் இக்குழு சுட்டிக்காட்யெது. இக்குழுவின் அறிக்கை குறிப்பிடத்தக்க விளைவு எதனையும் ஏற்படுத்தவில்லை. 1918ல் இந்திய அரசாங்கம் உள்சுயாட்சி அரசாங்கம் பற்றிய முக்கியமான தீா்மானம் உன்றினை நிறைவேற்றியது. உள்ளாட்சி அமைப்புகள் மீதான அரசாங்கத்தின் கட்டுபாட்டை நீக்க அத்தீா்மானம் பரிந்துரைந்தது. முடிந்த அளவில் மக்களின் கைகளில் கட்டுபாட்டு அதிகாரத்தை வழங்கவும் அக்குழு பரிந்துரைத்தது. இத்தீா்மானத்தின் அடிப்படையில் அதிகமான மக்களுக்கு வாக்குரிமை அளிக்க வகை செய்யப்பட்டது.

**மூன்றாவது கட்டம் :**

இரட்டையாட்சி முறையின் கீழ் உள்ளாட்சித்துறை மாநிலச் சட்டமன்றத்திற்குப் பொறுப்பாக விளங்கிய இந்திய அமைச்சரின் பொறுப்பில் விடப்பட்டது. இந்திய அமைச்சருக்குப் பல சாதனைகளைச் செய்யும் வேட்கை இருந்தபோதிலும் அவருக்குப் போதுமான நிதி வசதி அளிக்கப்படாததால் விழரவாகச் செயல்பட முடியவில்லை. ஆளுநரின் ஆட்சிக்குழுவைச் சேர்ந்த ஒரு உறுப்பினரின் கட்டுபாட்டில் நிதித்துறை செயல்பட்டது அவர் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சியில் அக்கறையின்றித் திகழ்ந்தார். உள்ளாட்சி அமைப்புகளை ஆட்சித்துறைக்குப் பயிற்சிக் களங்களாக அமைத்துக்கொள்ள மாநிலங்கள் முயன்றன. கிராம ஊராட்சி மன்றங்களின் வளர்ச்சிக்காகப் பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1920ம் ஆண்டின் வென்னை உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம், சென்னை கிராம ஆட்சி மன்றங்களின் சட்டம்' ஆகியவை உள்சுயாட்சி அமைப்புகளை மேம்படுத்தும் நோக்குடன் நிறைவேற்றப்பட்டன. இரட்டையாட்சி மாற்றப்பட்டு அதனிடத்தில் மாநில சுயாட்சி 1935ம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. மாநில சுயாட்சி அறிமுகமானதால் உள்ளாட்சி அமைப்புகள் வளர்ந்தன. உள்ாட்சி அமைப்புகள் மேலும் ஜனநாயகப்படுத்தப்பட்டன. உள்ளாட்சித்துறை அமைச்சர்களால் ஓரளவு நிதியினைத் தேடமுடிந்தது. எனினும், விடுதலைப் போராட்டம் இரண்டாவது உலகப்போரின் காரணமாக காங்கிரஸ் அமைச்சரவைகளின் இராஜினாமாக்கள் போன்றவை உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்குத் தடைகளாக அமைந்தன.

**சுதந்திர இந்தியாவின் மாற்றங்கள்:**

1947ல் விடுதலை அடைந்த பின்னர் நாட்டின் தலைவர்கள் உள்சுயாட்சி அமைப்புகளின் வளர்ச்சியில் நாட்டம் காட்டினர். 1948ல் மாநில அமைச்சர்களின் மாநாடு கூட்டப்பட்டது. அது இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகளின் பிரச்சினைகள் பற்றி விவாதித்தது. ஜவகர்லால் நேரு உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்9தை வலியுறுத்தினார். இந்தியாவில் பஞ்சாயத்து இராஜ்யம் அமையவேண்டும் என்ற இலட்சியக் கனவினைக் காந்தி கண்டார். 1950ம் ஆண்டின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தபோது, பஞ்சாயத்து இராஜ்ஜியம் அமைப்பது ஒரு வழிகாட்டி நெறியாக அதில் காணப்பட்டது. 1952ல் சமுதாய வளர்ச்சித் திட்டம் துவக்கப்பட்டது. தேசிய விரிவாக்கத் திட்டமும் துவக்கப்பட்டது. சமுதாயத் திட்டத்தில் முன்னூறு கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. துவக்கத்தில் 55 சமுதாய திட்டங்கள் அமைக்கப்பட்டன. தேசிய விரிவாக்கத்திட்டம் வளர்ச்சிவ ட்டார அளவில் அறிமுகம் செய்யப்பட்டது.

தேசிய விரிவாக்கத்திட்டம், சமுதாய வளர்ச்சித்திட்டம் ஆகியவை பற்றி ஆய்வு செய்ய பல்வந்தராய் மேத்தா குழு 1955ல் நியமிக்கப்பட்டது. அக்குழு 1957ல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. கிராமப்புற உள்ளாட்சி அரசாங்கத்தில் மூன்றடுக்கு முறை அமைக்கபடவேண்டும் என்பது இக்குழுவின் பரிந்துரைகளில் மிகவும் முக்கியமானதாகும். அப்பரிந்துரையின் அடிப்படையில் மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றமும், வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியமும், கிராம அளவில் ஊராட்சி மன்றமும் அமைக்கப்பட்டன.

அதிகமான தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அடங்கியதாக ஊராட்சி மன்றம் அமைக்கப்பட்டது. இரண்டு பெண் உறுப்பினர்களை மன்றத்தில் இணைத்துக்கொள்ள வகை செய்யப்பட்டது. குடிநீர் விநியோகம், சுகாதாரம், தெருக்களை பராமரிப்பது போன்ற பணிகள் கட்டாயப் பணிகளாக ஊராட்சி மன்றங்களிடம் விடப்பட்டன. அவற்றின் ஆண்டு வரவுசெலவுத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியத்தின் ஈய்விற்கும் ஒப்புதலுக்கும் உட்பட்டவை. மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களும், மாவட்டத்திலுள்ள சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட அளவிலான அதிகாரிகளும் அடம்பெற்றனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அம்மன்றத்தின் தலைவரானார். இம்முறை எல்லா மாநிலங்களிலும் விரிவாக்கச் செயற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் ஊராட்சி மன்றங்கள் ஊராட்சி ஒன்றியங்ள் ஆகியவற்றின் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்யவும் வகை செய்யப்பட்டடுள்ளது. நகர்ப்புறங்களில் நகராட்சி உள்ளாட்சி அமைப்பாகத் திகழ்கிறது. மாநகராட்சி உள்சுயாட்சி அமைப்புகளிலேயே மிகப் பெரியதாகத் திகழ்கிறது.

## ஆங்கிலேயர் ஆட்சியில் பலதுறைகளின் வளர்ச்சி

இந்தியாவில் ஆங்கிலேயர் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இந்திய பரம்பரை பொருளாதாரம் பாழடிக்கப்பட்டதுடன், நவீன பொருளாதார கட்டுமானம் வளர்ச்சியடையாமல் போய்விட்டது. இதனால் மக்கள் ஏழ்மை நிலையிலேயே நிரந்தரமாக வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

- **தொழிற் துறை (ஐனெரளவசல)**
- **பொருளாதார சுரண்டல் : Economic Exploitation of India**

தொழிற்புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்துக்கு அதிக மூலப் பொருள் தேவைப்பட்டது

இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த இங்கிலாந்து இந்தியாவிலிருந்து மூலப்பொருட்களைப்பெற்றது. மேலும் இங்கிலாந்து உற்பத்தியாளர்களுக்கு இந்தியா ஒரு சிறந்த சந்தையாக விளங்கியது. இவ்வாறு தொழிற்புரட்சியின் விளவைாக இந்தியாவில் பொருளாதாரச் சுரண்டல் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

**2. இந்தியத் தொழில்களின் அழிவு: Extinction of native industries**

ஆங்கில அரசு தடையில்லா வாணிபக் கொள்கையைப் பின்பற்றியது. இதன் விளைவாக இங்கிலாந்தில் இயந்திரங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இந்தியாவில் கொண்டு வந்து குவிக்கப்பட்டது. இதனால் இந்தியத் தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஈங்கிலப் பருத்தி துணிகள் மீது இரண்டு சதவீத வரியே விதிக்கப்பட்டது. ஆனால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி

செய்யப்படும். இந்தியப் பருத்தி துணிகள் மீது பத்து சதவீத வரி விதிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்திய துணிகளின் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்தது. இது இந்திய பொருளாதார நிலையை மிகவும் பாதித்தது.

**3. மூலப் பொருட்களை சப்ளை செய்யும் நாடாக இந்தியா:**

ஆங்கில தொழிற் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமாகவே இந்தியாவில் ஆங்கில பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டது. மூலப் பொருட்களை இந்தியாவிலிருந்து அதிக அளவில் ஏற்றுமதி செய்தனர். உதாரணமாக பருத்தி ஏற்றுமதி 1813ல் 32 மில்லியன் பவுண்டுகளாக இருந்தது. 1894ல் அது 83 மில்லியன் பவுண்டுகளாக உயர்ந்தது.

**4. கிராம சமுதாயத்தின் வீழ்ச்சியும், சுய தேவை கொள்கையின் அழிவும்:**

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு ஒவ்வொரு கிராமும் ஒரு தனி சமுதாயமாகவும் தங்கள் சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலையில் விளங்கின. ஆங்கிலேயர் பின்பற்றிய நிர்வாக மற்றும் நிதிக் கொள்கையின் விளைவாக கிராமங்களின் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டது. ரயில்வே, போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு வளர்ச்சியின் விளைவாக கிராமங்கள் பக்கத்து நகரங்களுடன் தொடர்பு கொண்டு தேயிலை, மண்ணெண்ணை, தீப்பெட்டி, சீனி, குடை, மற்றும் வளையல்கள் போன்ற பொருட்களை வாங்கினர். இது கிராமங்களில் பரம்பரையாக இருந்து வந்த சுயசார்பு நிலையை இல்லாமல் செய்துவிட்டது.

**5. இந்திய கைவினைப் பொருட்களின் வீழ்ச்சி: Docline of Indian Handi Crafts:**

ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தில் செய்யப்பட்ட தொழிற்துறை உற்பத்தி பொருட்களுக்கே அதிக பாதுகாப்பு அளிக்கும் விதமாக தங்கள் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக் கொண்டனர். இதன்விளைவாக இந்திய கைவினைப் பொருட்கள் வீழ்ச்சியடைந்தது. நகரப் பகுதிகளில் இங்கிலாந்து நிறுவிய பெரிய அளவிலான தொழிற்சாலைகளின் விளைவாகவும் இந்திய கைவினைப் பொருட்கள் நசித்துப் போயின. இயந்திரம்மூலம் செய்யப்பட்ட அழகான உறுதியான பொருட்களுக்கு முன்னால் இந்திய கைவினைப் பொருட்கள் போட்டியிட முடியவல்லை. இந்திய கைவினைப் பொருட்களுக்கு ஆதரவளித்து வந்த அரசர்களும் வலிமை இழந்து விட்டதால் கைவினைப் பொருட்கள் வீழ்ச்சியடைந்தது. இதனால் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுவந்த இந்திய தொழிலாளர்கள் வேலை இழந்துநிலை குலைந்தனர். அவர்கள் தொழிராளர்களாகவும், விவசாயிகளாகவும் மாறினர்.

**6. ரயில்வே, செய்தித்தொடர்பு வளர்ச்சியின் விளைவு:**

பொருளாதார கண்ணோத்துடன் பார்க்கும் போது ரயில்வே மற்றும் செய்தித் தொடர்பில் ஏற்பட்ட வளர்ச்சி ஆங்கிலேயர் நலன்களை பேணிப் பாதுகாத்தன. போரின் போது நிலமையை சமாளிக்க உதவின. ஆமைதிக்காலங்களில் இந்திய மனித சக்தியையும், இந்திய வளங்களையும் சுரண்டுவதற்கு இவை உதவின.

### 7. செல்வவரட்சி : Drain of Wealth

அதிக அளவில் செல்வம் சேர்ப்பதே இந்தியாவில் ஈங்கில ஆட்சியின் அடிப்படை நோக்கமாக விளங்கியது. அநேக ஆங்கிலேயர்கள் பெரும் பணக்காரர்களாயினர். ருாபர்ட் கிளைவ் காலத்திலிருந்தே கம்பெனி அதிகாரிகள் அனைவரும் பல நேர்மையற்ற வழிகளில் பணம் சம்பாதித்தனர். இந்தியாவில் கம்பெனிக்கு கிடைத்த உபரி வருமானம் மூலம் இந்தியப் பொருட்கள் வாங்கப்பட்டு இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. இதுவே செல்வ வரட்சிக்கு வழிவகுத்தது. ஏராளமான பணம் கம்பெனி ஊழியர்களால் இங்கிலாந்துக்கு சென்றது. சராசரியாக வருடத்திற்கு இரண்டு மில்லியன் பவுண்ட் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது.

ஆனால் இந்த செல்வ வரட்சி வழிப்பாதையாகவே இருந்தது. இந்தியப் பண இழப்பிற்கு பதிலாக இந்தியாவுக்கு எதுவும் கிடைக்கவில்லை. 1857ல் வருடத்திற்கு 3.5 மில்லியன் பவுண்டாக இருந்த செல்வ வரட்சி 1857ல் 17 மில்லியன் பவுண்டுகளாகஉயர்ந்தது என்றுஆர.சி.தத் என்பவர் கணித்துள்ளார். பேராசிரியர் சி.என. வக்கில் என்பவர் 1757லிருந்து 1919 வரை வருடத்திற்கு 30 மில்லியன் பவுண்ட் செல்வ வரட்சி ஏற்பட்டதாக கூறுகிறார்.

இந்திய பொருளாதாரத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் மோசமான விளைவுகள் பற்றி தாதாபாய் நௌரோஜி என்பவர் தெளிவாக விளக்கினார். 1867 மே 2ம் தேதி லண்டனில் நடைடிபற்ற கிழக்கிந்திய சங்கத்தில் இந்தியாவிற்கு கொடுக்க வேண்டிய இங்கிலாந்தின் கடன் என்ற கட்டுரையை வாசித்தார். அதில் தாங்கள் இந்தியாவில் செய்யும் ஆட்சிக்கான விலையாக எவ்வாறு நான்கில் ஒருபங்கு வருமானத்தை இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்கின்றனர் என்று குறிப்பிட்டார். மேலும் 1867ல் வெளியிட்ட Poverty and un British rule India, 1870 ல் வெளியிட்ட The wants and means if India, 1871ல் வெளியட்ட on the commerce of India ஆகிய கட்டுரைகளில் செல்வ வறட்சி பற்றிய தனது கருத்துக்களை ஆதாரப் பூர்வமாக வெளிப்படுத்தினார்.

தாதாபாய் நௌரோஜியுடன் செல்வ வரட்சி பற்றிய கருத்துக்களை வெளியிட்டு வந்தவர்கள் நீதிபதி எம்.ஜ.ரானடேயும் ஆர்சி. தத் ஆகியோரும் ஆவர். 1901ல் ஆர.சி. தத் வெளியிட்ட ‘இந்தியாவின் பொருளாதார வரலாறு’ என்ற நூலில் ஒவ்வொரு ஆண்டும் இந்திய வருமானத்தில் பாரி எவ்வாறு ஆங்கிலேயர்களால் எடுத்துச் செல்லப்படுகிறது என்று விளக்கினார். இது நாதிர்ஷா இந்தியாவை கொள்ளையடித்துச் சென்றதைவிட மிகவும் கொடுமையானது என்று கூறினார். 1868ல் இந்தியாவின் தலாவருமானம் ரூ 20 ஆக இருந்தது. இது எந்த அளவுக்கு இந்திய சமுதாயம் ஏழ்மை நிலையிலிருந்து என்பதை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு ஆங்கிலேயரின் ஆட்சி இந்திய தொழிற்துறையில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. இந்திய பொருளாதார வளர்ச்சி மிக மெதுவாகவே ஏற்பட்டது. 1930ம் ஆண்டின்தான் சர்க்கரை தொழிற்சாலை, பேப்பர், சிமெண்ட், தீப்பெட்டி, கண்ணாடி தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டது. துணி உற்பத்தி துறையில் மட்டுமே இந்தியர்களுக்கு பங்கு கிடைத்தது. இந்தியார்களுக்கு தொழிற்துறை சலுகைகளான வங்கி வசதியோ,

பாதுகாப்போ இல்லை, அடிப்படைத் தொழிற்துறையான இரும்பு, இயந்திரங்கள், வேதியல், எண்ணெய், மின்சக்தி ஆகியவைகளில் இந்தியா பின்தங்கியே இருந்தது. முதல் முறையாக 1913ல் தான் இந்தியாவில் இரும்பு எ.்.கு உற்பத்தி துவங்கப்பட்டது. இதனால் இந்திய தொழிற்துறை மிகவும் பாதிக்கப்பட்டது.

ஆனாலும் ஆங்கில ஆட்வியினால் இந்திய தொழிற்துறையில் சில நன்மைகள் கிடைத்தன. முதலாவதாக, நிலமானியப் பொருளாதாரத்திலிருந்து முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு இந்திய பொருளாதாரம் மாற்றம் அடைந்தது. ஆங்கிலேயர்கள், பெரிய அளவிலான தொழிற் துறைகள், வேரைப்பங்கீடு, ஒரேமாதிரியான நாணயமுறை, நவீனவங்கியர்முறை, வாணிபம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றை அறிமுகம் செய்தது. இது இந்திய பொருளாதாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டாவதாக, இந்தியாவில் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டது. பருத்தி ஆலைகள், சணல் ஆலைகள், பேப்பர் ஆலைகள் ஆகியரவ துவங்கப்பட்டது. இது இந்திய தொழிற்துறையில் மிகப் பெரிய சாதனையாகும்.

மூன்றாவதாக, ஆங்கிலேயர்கள் போக்குவரத்து மற்றும் செய்தி தொடர்பில் பெரிய புரட்சியை ஏற்படுத்தினார்கள். இது இந்திய தொழிற்துறை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தது. 1851ல் இந்தியாவில் இருப்புப்பாதை ஆரம்பிக்கப்பட்ட நவீன தொழிற்துறையின் ஆரம்பம் என்று கருதலாம். ஏனெனில் பொருட்களை அதிக அளவில் எடுத்துச் செல்வதற்கு ரயில்வேத்துறை மிகவும் உதவியாக இருந்தது. அதேபோல மோட்டார் போக்குவரத்தும் வளர்ச்சியடைந்தது. இது இந்திய ஒற்றுமைக்கு சாதமான சூழ்நிலைகளை உருவாக்கியது.

இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆரம்பித்து தொழிற்துறை வளர்ச்சி சுதந்திரமடைந்த பிறகு தொடர்ந்து அதிகரித்தது. தற்போது இந்தியா தொழிற்துறையில் நல்ல வளர்ச்சியடைந்து ஒரு வளமையான தொழிற்துறை நாடாக உள்ளது.

- **விவசாயம்**

இந்தியாவில் பண்டைக்காலத்திலிருந்தே விவசாயம் முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்பு இந்திய விவசாயிகள் புராதன கருவிகளை உபயோகித்து பழமையான முறையை பின்பற்றியே விவசாயம் செய்து வந்தனர். அவர்களது விவசாயம் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி சமுதாயமாகவே விளங்கியது. ஆங்கிலேயர் ஆட்சி இந்திய விவசாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல நல்ல விளைவுகளும், தீய விளைவுகளும் ஏற்பட்டன.

**நல்ல விளைவுகள்** : Good effect.

ஆங்கிலேயரின் ஆட்சி விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப் பொருளாதாரத்தில் பல தீய விளைவுகளை ஏற்படுத்தினாலும் பொதுவாக அவர்களது ஆட்சி சில நல்ல விளைவுகளை ஏற்படுத்தியது. அவைகளைக் காணலாம்.

**1. புதிய நிலவருவாய் திட்டம்: New land revenue system**

ஆங்கிலேய நிர்வாகம் புதிய நிலவருவாய் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்படி நிலவரி பணமாக வசூலிக்கப்பட்டது. இது பயிரிடுவோர்களுக்கு மிகவும் எளிதாக அமைந்தது. அத்துடன் எணவுத் தானியங்களுக்குப் பதிலாக அதிக அளவில் பணப்பயிர் விவசாயம் செய்யும் நிலை உருவாகியது.

**2. வியாபார ரீதியிலான விவசாயம்: Commercialization of Agriculture**

இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் விளைவாக மூலப் பொருட்களுக்கு அதிக தேவை ஏற்பட்டது. இதனால் இந்தியாவிலிருந்து அதிக விலை கொடுத்து மூலப் பொருட்களை ஆங்கில வணிகர்கள் வாங்கினார்கள். இதன் மூலம் பணவியல் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினார்கள். எனவே விவசாயிகள் அதிகப் பணம் சம்பாதிப்பதில் நாட்டம் கொண்டு பருத்தி, சணல், நிலக்கடலை, கரும்பு தேயிலை போன்ற பணப்பயிர்களையே அதிகம் பயிரிட்டனர்.

**3.விவசாய சந்தைமுறை அறிமுகம்: (Introduction of Agricultural Marketing)**

இந்தியாவிலிருந்து அதிக அளவில் மூலப் பொருட்களை இங்கிலாந்து ஏற்றுமதி செய்ய விரும்பிய ஈங்கிலேயர்கள் இந்தியாவில் விவசாய சந்தை முறையை அறிமுகப்படுத்தினர். இதன் மூலம் வியபபாரிகள், தரகர்கள், விற்பனையாளர்கள் ஆகியோர் அதிக நன்மையடைந்தனர். வியாபாரிகள் விவசாயிகளிடம் பணப்பயிர்களை கொள்முதல் செய்து பெரிய சந்தைகளில் விற்று லாபம் சம்பாதித்தன. இதன்மூலம் வட்டிக்காரர்களின் பிடியிலிருந்து விவசாயிகள் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் தாங்களே தங்கள் உற்பத்தி பொருட்களை நகரங்களிலுள்ள பெரிய சந்தைகளுக்கு எடுத்துச் சென்று நியாயமான விலைக்கு விற்றனர்.

**4. பணவியல் பொருளாதாரம் : ஆழநெல நஉழழெஅல**

ஆங்கிலேயர்கள் பணவியல் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினர். பல்வேறு பொருட்களை வாங்குவதற்கு பணமே பயன்படுத்தப்பட்டது. கிராமங்களில் பரம்பரையாக நடைமுறையில் இருந்து வந்த பண்ட மாற்று முறை மறைந்தது. பணஆம முக்கியமான மாற்று சாதனமாக செயல்பட்டது. விவசாயிகள் அதிக பணம் சம்பாதிப்பதில் நாட்டம் கொண்டனர். விவசாயிகள் பல துன்பங்கள் இதனால் நீங்கியது.

**5. இந்திய பருத்திக்கான தேவை:**

அமெரிக்க உள்நாட்டு போரின் விளைவாக இங்கிலாந்துக்காக அமெரிக்க பருத்தி ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டது. எனவே இந்தியாவிலிருந்து அதிக அளவில் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்திய பருத்திக்கு அதிக விலை கொடுத்தனர் ஆங்கில துணி உற்பத்தியாளர்கள். இதன்விளைவாக இந்திய விவசாயிகள் அதிக அளவில் பருத்தி பயிரிட்டு லாபமடைந்தனர். பருத்தி பயிரிடும் நிலத்தின் அளவும் அதிகரித்தது.

**6. உற்பத்தி அதிகரிப்பு :**

ஆங்கிலேயா் அறிமுகப்படுத்திய புதிய நிலவருவாய் திட்டத்தால் ஜமின்தாா் என்ற பிரிவும் சிறிய நிலச் சொந்தக்காரா் என்ற பிரிவும் தோன்றியது. ரயத்துவாரி முறைப்படி விவசாயம் செய்து வந்த நிலம் சொந்தமாக்கப்பட்டது. இதனால் தங்கள் நிலங்களில் உற்பத்தியை அதிகரித்தனா். இவ்வாறு இந்தியாவில் சிறிய அளவில் ஒரு விவசாய புரட்சியே நடந்து வந்தது.

**தீய விளைவுகள் : Adverse Effects.**

ஆங்கிலேயா் ஆட்சியின் விளைவாக இந்திய விவசாயத்தில் நல்ல விளைவுகளை விட தீய விளைவுகளே அதிகமாக காணப்பட்டது.

**1.இந்திய குடியானவா் சுரண்டப்படுதல்: Exploitation if Indian peasants.**

ஆங்கிலேயா் ஆட்சியின் கீழ் ஆங்கில வணிகா்களாலும் இந்திய வியாபாரிகளாலும் ஏழை குடியானவா்கள் கடுமையாக சுரண்டப்பட்டாா்கள். அறுவடையின் போது மிக குறைந்த விலைக்கு பயிா் செய்பவா்களிடமிருந்து மூலப் பொருட்களை வாங்கி பின்னா் அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதித்தனா். நகா்புற சந்தைகளுக்கு சென்று நல்ல விலைக்கு விற்க வழியில்லாமல்தான் இந்த வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த சுரண்டலிலிருந்த விவசாயிகளை பாதுகாக்க அரசு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதனால் பல இடங்களில் குடியானவா்களிடம் அதிருப்தி ஏற்பட்டு அதன் விளைவாக கிளா்ச்சிகள் ஏற்பட்டன.

**2. ஆங்கில நிா்வாக முறையின் தீய விளைவுகள் :**

ஆங்கிலேயா்கள் முகலாய பேரரசா் ஷா ஆலத்திடமிருந்து 1765ல் திவானி உரிமையை பெற்றுக் கொண்டதிலிருந்தே பொருளாதாரச் சுரண்டல் ஆரம்பித்துவிட்டது. அதிக தொகை கொடுப்பவா்களுக்கே நிலம் குத்தகைக்கு விடப்பட்டது. நிலக்குத்தகைதாரா்கள் நிலங்களை பயிரிடுபவா்களிடம் விட்டு, அவா்களிடமிருந்து அதிக அளவு வருவாய் பெற்றனா். ராபா்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சியின் விளைவாக சீா்கேடுகள் ஏற்பட்டன. காா்ன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்திய நிரந்த நிலவரித் திட்டத்தினால் விவசாயிகளின் முறைகள் களையப்படவில்லை.

ஆங்கிலேயரின் புதிய நிலவருவாய் கொள்கையால் நிலப்பிரபுக்கள் உன்ற புதிய வா்க்கம் தோன்றியது. இவா்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு அளித்தது. விவசாயிகள் மீது அவா்களுக்கிருந்த ஆதிக்கத்தை மேலும் கடினப்படுத்தியது. இதனால் நிலப்பிரபுகள் மேலும் மேலும் அதிக வருவாய் செலுத்தியதுடன் மட்டுமல்லாது தங்கள் நிலபிரபுக்களுக்கு ஊதியமில்லாத வேலையும் செய்ய வேண்டிருந்தது.

**3. கிராமக் கடன் சுமை அதிகரிப்பு :**

ஆங்கிலேயா்களின் புதிய சட்டஅமைப்பு முறையின்படி கிராம சமுதாயத்தின் உரிமைகளை அரசு அங்கிகரிக்கவில்லை. மாறாக வட்டிக் கடைக்காரா்களுக்கும் நிலப்பிரபுகளுக்குமே பாதுகாப்பு அளிக்கும் விதமாக சட்ட அமைப்பு காணப்பட்டது. இதனால்

பயிரிடுபவர்கள் நிலப்பிரபுக்களாலும் பணியாஸ் என்ற வியாபாரிகளாலும் பல வகையில் கொடுமைப்படுத்தப்பட்டனர். விவசாயிகளின் நிலங்கள் கொஞ்ச கொஞ்சமாக நிலப்பிரபுக்களிடம் போய் சேர்ந்தன. இதனால் கிராமக் கடன் அதிகரித்துக் கொண்டே சென்றது. 1911ம் வருடப்படி இருந்த மொத்தக் கிராமக் கடன் முன்னூறு கோடியாக இருந்தது. அது 1937ல் ஆயிரத்து எண்ணூறு கோடியாக உயர்ந்தது.

**4. விவசாயிகளின் உடல்நிலை பாதிப்பு : Deterioration of Famer's health.**

ஆங்கில ஆட்சியாளர்கள் பொதுமக்கள் உடல்நலன் குறித்து எந்த அக்கரையும் பட்வில்லை. இதன் விளைவாக குடியானவர்கள் மதுவிற்கும், போதை பொருட்களுக்கும் அடிமையாகி உடல் நலம் பாதிக்கப்பட்டார்கள். கஞ்சா செடிகள் தாராளமாகப் பயிரிடப்பட்டன. இவ்வாறு கிடைக்கும் குறைந்த வருமானமும் குடியில் செலவிடப்பட்டதால் விவசாயிகள் உடல்நலம் குன்றி காணப்பட்டனர்.

**5. நிலங்கள் துண்டு துண்டாக்கப்படுதல் : Fragmentation of Land:**

பயிரிடும் நிலங்கள் மேலும் மேலும் சிறு பகுதிகளாக துண்டாக்கப்பட்டதால், விவசாயிகளுக்கு பிரச்சனைகள் ஏற்பட்டது. தகப்பனுக்கு பிறகு பிள்ளைகளுக்கு நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டதாலும் மக்கள் தொகை அதிகரிப்பாலும் மட்டுமல்லாது பொருளாதாரக் காரணங்களுக்காகவும் நிலங்கள் துண்டு துண்டாகப்பட்டது. ஆங்கிலேயர்களின் கொள்கைகளின் விளைவாக கைவினை மற்றும் குடிசைத் தொழில்கள் நசித்துப் போயின. எனவே நகர்புறப் பகுதியிலுள்ள வேலை இழந்த தொழிலாளர்கள் கிராமங்களுக்கு வந்தனர். அதனால் நிலங்கள் மேலும் துண்டுகளாக்கப்பட்டன. இது விவசாயத் தொழிலில் பெரிய நெருக்கயை ஏற்படுத்தியது.

**நீர்ப்பாகன வசதியில்லாததால் ஏற்பட்ட விளைவு: Lack of Irrigation facilities.**

ஆங்கில அரசு சரியான முழறயில் விவசாயிகளுக்கு நீர்பாசன வசதி எதுவும் செய்து கொடுக்கவில்லை. மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியதிருந்தது. இதன் விளைவாக பஞ்சங்களும், விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்பட்டு விவசாயிகளின் நிதிநிலை மிகவும் மோசமடைந்தது.

**7. கிராம சமுதாயத்தின் சுயசார்பு தன்மையின் வீழ்ச்சி: Decline of self sufficirnt Village Comunities.**

ஆங்கிலேயர் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக கிராம சமுதாயத்தின் சுயாட்சி நிலையும், நுயசார்பு நிலையும் வீழ்ச்சியடைந்தது. செய்தி போக்குவரத்து ஆகியவற்றில் ஏற்பட்டவளர்ச்சியினால் கிராமமக்கள் தனித்து வாழ்தல் கொள்கையைத் துறந்து நகர்புற மக்களுடன் தொடர்பு கொண்டனர்.நிலமற்றவிவசாயிகள் நகரங்களுக்கு குடியொர்ந்து தொழிற்சாலைகளில் வேலைக்கு சேர்ந்தனர். இதனால் விவசாய உற்பத்தி வெகுவாக வீழ்ச்சியடைந்தது.

மேலும் வாணிப நோக்கில் பணப்பயிர்களை அதிகமாக விவசாயம் செய்ய ஆங்கிலேயர் கொள்கை வழிவகுத்ததால் உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்தது. இதனால் உணவுப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்தது.

இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சியின் போது இந்திய விவசாயம் வீழ்ச்சியடைந்து வந்தது. அரசாங்கம், வட்டிக்கடைக்காரர், நிலப்பிரபுகள், ஜமீன்தார்கள், வியாபாரிகள். இடை ஆட்கள் ஆகியோர்களால் நசுக்கப்பட்டனர். விவசாயிகளின் ரத்தம் பல வழிகளில் உறிஞ்சப்பட்டு அவர்கள் நிலைமை மிகவும் மோசமடைந்தது. பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் அவர்கள் மேலும் துன்பமடைந்தனர். எனவே விவசாயிகளின் சூழ்நிலை இந்திய விவசாயம் சீர்கேடையக் காரணமாக அமைந்தது.

பயிர் செய்பவர்களுக்கு உற்பத்தியை அதிகரிக்க ஊக்கமோ, வசதிகளோ செய்து கொடுக்கப்படவில்லை. தரமான விதைகளோ அல்லது உர வகைகளோ கொடுப்பதற்கு அரசாங்கம் எந்த பொறுப்பும் எடுத்துக் கொள்ளவில்லை. வருவாய் நிர்வாகத்தில் எந்த மாற்றங்களும் செய்யவில்லை. எனவேதான் உலகம் முழுவதும் விவசாயம் மட்டும் தரம் தாழ்ந்த நிலையில் பின்தங்கி இருந்தது. இதன்விளைவாக மக்களின் சராசரி உணவுத்தேவைக்குக் கூட உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. எனவேதான் இந்தியா சுதந்திரமடைந்து பின்பு பலவருடங்கள் வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை இருந்தது.

## சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள்

**சமய வளர்ச்சி:**

ஆங்கில ஆட்சியின் போது சமய சமூக கல்வித் துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதது ஆகும். ஆங்கில அரசு இந்'த துறைகளில் ஓரளவு நடுநிலைமையுடன் நடந்துகொண்டது என்றே கருதலாம். இந்த துறைகளில் தலையிடவில்லை. ஆனால் மதத்தின் பெயரால் மரபு வழியாக ஏற்பட்டிருந்த பல தீமைகளை ஒழிப்பதற்கு இந்திய சமூக சீர்திருத்தவாதிகளுடன் ஒத்துழைத்தது. மதத்தின் பெயரால் ஏற்பட்டெருந்த மூட நம்பிக்கைகள் பகுத்தறிவின் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டன. சாஸ்திரங்களின் உட்கருத்துக்கள் புதிய கோணத்தில் ஆராயப்பட்டன. பழைமையின் சிறந்த பண்புகளை ஏற்று புதியதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று படித்த இந்தியர் கூட்டம் ஒன்று வற்புறுத்தியது. இவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவரே ராஜாராம் மோகன்ராய்.

**ராஜாராம் மோகன்ராய் : Raja Ram Mohun Roy**

ராஜாராம் மோகன்ராய் நவின காலத்தில் தீர்க்கதரிசி ஆவார். சமய சமூகத் துறைகளில் மாறுதல்கள் வேண்டுமென்று அயராது உழைத்தவர்களில் முதல் இடத்தைப் பெற்றவர் இவர். இவர் வங்காளத்தில் ராதாநகர் என்ற கிராமத்தில் 1772 ஆம 22ல் ஒரு வைதீகப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். பல மொழிகளில் தேர்ச்சி பெற்றார். 1811ல் தனது மூத்த சகோதரனின் மனைவி உடன்கட்டை ஏறி உயிரை மாய்த்த காட்சியைக் கண்டு

கலங்கினார். அக்கொடிய வழக்கத்தை ஒழிக்க முடிவு செய்தார். இந்துக்கள் பல கடவுள்களை வணங்குவதுண்டு. எனவே சிந்திக்க முற்பட்டார். இந்துக்களிடம் காணப்பட்ட கண்மூடித்தனமான மூடப்பழக்கங்களையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களையும் ஆராய முற்பட்டார். 1815க்குப் பின்னர் சீர்திருத்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

**பிரம்ம சமாஜம் (Brahma Samaj)**

தனது சமய தத்துவங்களை பலரும் ஆராய்ந்து தர்க்கம் செய்யும் பொருட்டு 'ஆத்மிய சபை' (1815-19) உன்றை நிறுவினார். ராஜாராம் மோகன்ராய். நான்கு ஆண்டுகளுக்குப்பின் 1928ல் பிரம்ம சபை என்னும் கழகத்தை நிறுவினார். இதுவே பின்னர் பிரம்ம சமாஜம் ஆனது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற அடிப்படையில் ஒருவாக்கப்பட்டது இந்த நிறுவனம். 'பொது வழிபாட்டின் அடிப்படையில் சாதி சமயபேதமற்ற சமுதாயத்தை அமைப்பதே பிரம்ம சமாஜத்தின் தலையாய நோக்கமாகும். தூய அன்பு, தூய வாழ்வு, மானிட சேவை போன்றவை இந்த இயக்கத்தின் கருப்பொருளாக அமைந்தன. எல்லா சமயத்தவர்களிடமும், ஒருமைப்பாடும், சமத்துவமும் நிலவவேண்டும் என்று இவ்வியக்கம் கூறியது. இது பல பல கடவுளர்களின் உருவ வழிபாடு, சாதிப் பிரிவுகள், கர்மவினை, மறுபிறப்பு, வர்ணாஸ்ரமதர்ம முறை ஆகியவற்றை மறுக்கிறது. பிரம்ம சபையில் 'ஆத்மீக சாந்தி'யே முக்கிய இடம் வகிக்கிறது. உருவ வழிபாடு கிடையாது.

இவ்வாறு ராஜாராம் மோகன்ராய் ஒரே கடவுள் என்ற சித்தாந்ததின் அடிப்படையில் புதிய கருத்துக்களைப் புகுத்தினார். பல கடவுள்களை வணங்கும் இந்து சம்பிரதாயத்தை மாற்றியமைத்தார். வில்லியம் பெண்டிங் பிரபுவுடன் சேர்ந்து உடன்கட்டை ஏறுதல் பழக்கத்தை 1829ல் ஒழித்தார். அதேநேரம் பழமையான உண்மையான வேதங்களின்படி தாம் நடப்பவர் என்பதை எடுத்துக்காட்டினார். பெண் கல்வி, விதவை திருமணம், பெண்களுக்குச் சொத்துரிமை ஆகியவற்றை ஆதரித்தார்.ஜாதிக் கொடுமைகளை தீவிரமாக எதிர்த்தார். 'புதிய இந்தியாவைத் தோற்றுவித்தவர்' என்று ரவீந்திரநாத் தாகூரால் புகழப்பட்ட ராஜாராம் ஆமாகன்ராய் இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரத்தில் 1833 செப்டம்பர் 27ல் உயிர் நீத்தார்.

ராஜாராம் மோகன்ராய் அராபிக். பெர்சியன்.சமஸ்கிருதம் ஆங்கிலம். வங்காளி போன்ற மொழிகளில் புலமை பெற்றிருந்தார். 1803ல் (Tunfat-ul-mauah hindin (gift to monotheists) என்ற பெர்சிய மொழிகளில் எழுதினார். பல்வேறு சமயங்களைப் பற்றிய கருத்துக்களை தொகுத்து Manazarutua ad yaw என்ற நூலை எழுதினார். கிறிஸ்தவ மிஷனரிமார்களுடன் தொடர்பு கொண்டு அதன் விளைவாக 1820ல் Percepts if Jesus the guide to peace and happiness என்ற நூலை எழுதினார். ராஜாராம் மோகன்ராய் தனது கருத்துக்களை பத்திரிக்கைகள் மூலம் வெளியிட்டார். 1821ல் டிசம்பரில் Sabed kaumudhi or the moon of intellifence என்ற வங்காளி மொழி பத்திரிக்கையை ஆரம்பித்தார். ஒரு ஆண்டு கழித்து பாரசீக மொழியில் Mirat ul akbar or the mirror of intelligesce என்ற வார இதழை

வெளியிட்டார். இந்த பத்திரிக்கைகளில் தனது அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களை வெளியிட்டார்.

**பிரம்ம சமாஜத்தின் வளர்ச்சி:**

ராஜாராம் மோகன்ராயின் பிரம்மசகை, அவர் இறந்தபின் சிறிது தளர்வுற்றது. ஆனால் 1843ல் அதில் சேர்ந்த தேவேந்திரநாத் தாகூர் புதுவாழ்வு அளித்தார். அவரது முயற்சியின் விளைவாக இந்த நிறுவனத்தை வலுவான தேவாலயமாக்கினார். 1845ல் பிரம்ம சமாஜம் என்று அழைத்து, அதன் கருத்துக்களை பரப்ப 'தத்துவ போதின பத்ரிகா' என்ற செய்தி இதழையும் ஆரம்பித்தார். இந்து மதக் கோட்பாடுகள் அடங்கிய பிரம்மதர்மா என்ற நூலை எழுதினார். 1861ல் ஆரம்பிக்கப்பட்ட Indian Mirror என்ற பத்திரிக்கை பிரம்மசமாஜத்தின் கருத்துக்களை பரப்பியது. நாள்தோறும் பிரம்ம பஜனைகள் நடைபெற்றன. 1857ல் சேகவ சந்திர சென் என்பவர் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார். இவர் திறமையான பேச்சாளர் மக்களின் மனதைக் கவர்ந்திழுக்கும் போதகர். இவர் சமுதாய மற்றும் ஆன்மீக கருத்துக்களை இளைஞர்களிடம் பரப்ப சங்கத்சபா என்ற அமைப்பைத் தொடங்கினார்.இவரது வழிபாட்டு முறைகளால் பிரம்மசமாஜத்தின்கிளைகள் 54 ஆக உயர்ந்தன. ஆனால் இவரது முற்போக்கு சீர்திருத்தங்களை பலர் விரும்பவில்லை. அத்துடன் கேசவ சந்திர சென் கிறிஸ்துவின் போதனைகளையும் வைணவக் கொள்கைகளையும் பஜனையாக உருவாக்கி நாள்தோறும் சமாஜத்தில் வழிபாடு செய்து வந்ததாலும் 14 வயது கூட நிரம்பாத தனது மகளுக்கு திருமணம் செய்ததாலும், பிரம்ம சமாஜத்தில் பிளவு ஏற்பட்டது. ஆனாலும் வங்காளத்தில் இந்த சமாஜத்தினால் சமயத்திலும், சமுதாயத்திலும் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.ஆனால் கேசவந்திர சென்னின் ஆன்மீக வழிகாட்டுதல் தான் சென்னையில் வேதசமாஜமும், மகாராஷ்டிரத்தில் பிராத்தனை சமாஜமும் தோன்றியது. சென்னையில் 1864ல் வேதசமாஜம் ஸ்ரீதரலு நாயுடு என்பவரின் தலைமையில் அமைக்கப்பட்டது.

**பிரார்த்தனை சமாஜம் (PRARTHANA SAMAJ)**

வங்காளத்தில் தோன்றிய பிரம்ம சமாஜத்தைப் போன்று மகாராஷ்டிரத்தில் 1867ல் பிராத்தனை சமாஜம் தோன்றியது. இது மகாதேவ் கோவிந்த ரானடே. ஆர்.சி. பண்டார்கா, ஆத்மராம்-பாண்டுரங் ஆகியோரின் தலைமையில் துவங்கப்பட்டது. இது பிரம்ம வமாஜத்தைப் போலல்லாது இந்துக் கடவுளையும், உருவ வழிபாட்டையும் ஏற்றுக் கொண்டு சமூக சீர்திருத்தங்களிலேயே கவனம் செலுத்தியது. இந்த சமாஜத்தினர் நாம தேவர், துக்கராம், ராமதாசர் ஆகியோரைப் பின்பற்றினர். இவர்கள் பஜனை மூலம் பக்தியைப் பரப்பினார்கள். அத்துடன் கலப்பு திருமணம், விதவை திருமணம், தாழ்த்தப்பட்டவர்கள் மேம்பாடு, பெண் உரிமை, சிறு குழந்தைப் பராமரிப்பு, இரவுப் பள்ளி ஆகிய சீர்திருத்தப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டார்கள்.

இந்த இயக்கத்தின் தலைவராகவும் வழிகாட்டியதாகவும் விளங்கியவர் ஓய்வு பெற்ற நீதிபதியான மகாதேவ் கோவிந்த ரானடே என்பவராவார். இவர் தலைவிறந்த கல்விமானாகவும், இந்திய தேசிய இயக்கத்தின் வழிகாட்டியாகவும் இருந்தார். 'எவ்வாறு கடவுளிடமிருந்து

அன்பைப் பிரிக்க முடியாதோ' அதுபோல மதத்திலிருந்து சமூக சீர்திருத்தத்தைப் பிரிக்க முடியாது' என்று ரானடே கூறினார். இவருடைய முயற்சியாலேயே 1884ல் தக்காண கல்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அடிப்படையிலேயே பூனாவில் பெர்குஷன் கல்லூரியும். சாங்கிலியில் வெல்லிங்டன் கல்லூரியும் உருவாயின. இவ்வாறு பிரம்ம சமாஜமும், பிராத்தனை சமாஜமும் மேலைநாட்டு பகுத்தறிவு வாதத்தினால் தூண்டப்பட்ட இந்தியர்களின் செயலில் உருவானவைகள் ஆகும்.

**ஆரிய சமாஜம் (Arya Samaj) :**

மேலை நாட்டுக் கல்வியிலும், பகுத்தறிவு வாதத்திலும் திளைத்து ஊறிய பிரம்ம சமாஜத்திற்கு நேர் எதிரான கொள்கை கொண்டது ஆரிய சமாஜம். இதனை 1875ல் சுவாமி தயானந்த சரஸ்வதி என்ற அறிஞர் ஆரம்பித்தார். இவரது இயற்பெயர் முலா வங்கர் ஆகும். பிராமணக் குடும்பத்தில் 1824ல் பிறந்த இவர் சுவாமி விஜ்ரானந் என்பவரிடம் ஞானப்பயிற்சி பெற்றார். தனது வாழ் நாட்களை வேத சமயத்தைப் பரப்புவதிலும், இந்து சமூகத்தைச் சீர்திருத்துவரிலும் செலவிட்டார். இவர்1875ல் பம்பாயில் ஆரிய சமாஜத்தை நிறுவினார். சில ஆண்டுகளுக்குப் பிறகு ஆரிய சமாஜத்தின் தலைஇடம் லாகூரில் அமைக்கப்பட்டது. 'தனதுவாழ்வில் மீதி உள்ள எட்டு ஆண்டுகளில் ஆரிய சமாஜத்தின் கருத்துக்களை நாடெங்கிலும், அடிப்படையாகவும் கொண்டது. கர்மவிதி மறுபிறப்பு ஆகிய கொள்கைகளைப் பரப்பியது. 'வேதங்களில் இல்லாதது எதுவும் இல்லை' என்று ஆரிய சமாஜத்தினர் நம்பினர். 'வேதத்திற்கு திரும்புக'என்பதே அவர்களின் முழக்கமாக இருந்தது. 'நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் தத்துவங்களும் வேதங்களிலே அடங்கியுள்ளன' என்று தயானந்த சரஸ்வதி கருதினார். 'சத்யார்த்த பிரகாசம்' என்ற இந்தியில் எழுதப்பட்ட தனது நூலில் தனது கருத்துக்களை எழுதி பாமர மக்களிடம் பரப்பினார். மேலும் இவர் வேதபாஷ்ய பூமிக்கா, வேதபாஷ்யா ஆகிய இரண்டு நூல்களை சமஸ்கிருத மொழியில் எழுதினார்.

சுவாமி தயானந்தரின் கொள்கைகள் வெற்றி பெறக் காரணமாக இருந்தவர்கள் லாலாஹன்ஸ்ராஜ், பண்டிதகுருதத்தா, லாலா லஜபதிராய் ஆகியோர் ஆவர். இவர்கள் சீரிய முயற்சிகளினால் நாடெங்கிலும் ஆரிய சமாஜத்தின் எண்ணிக்கை பெருகியது. 'இந்தியரை இந்தியப் பண்பாட்டிலும், இந்து சமயத்திலும் இந்தியாவின் மீதும் பற்றுக்கொள்ளும்படி திசை திருப்பியர்வர்களில் முதன்மையானவர் தயானந்தரே''வாய்மையே வெல்லும்' என்ற தாரக மந்திரத்தை இந்தியருக்கு வழயங்கியவரும் இவரே டில்லியை மையமாகக் கொண்டு ஆரிய சமாஜம் நாடெங்கிலும் பல நமூகச் சீர்திருத்தங்களிலும் ஈடுபட்டது. எனவேதான் 19ம் நூற்றாண்டில் தோன்றிய 'மறுமலர்ச்சியின் தந்தை' என்று தயானந்த சரஸ்வதி போற்றப்படுகிறார். இவர் 1883ல் மரணமடைந்தார்.

**ராமகிருஹ்ணா மடம்: (Ramakrishna mission)**

இந்து சமய மறுமலர்ச்சியை உருவாக்கிய ஒரு பெரும் நிருவனமே ராமகிருஷ்ணாமடமாகும். இது ராமருஷ்ண பரமஹம்சர் என்ற அருந்தவஞானியின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட மடமாகும். ராமசிருஷ்ண பரமஹம்சர் 1834ல் ஹீக்ளி நதிக்கரையிலுள்ள

கமா்புகூா் என்ற சிற்றூரில் பிறந்தார். சிறு வயதிலேயே ஆன்மீகத் துறையில் உயா்நிலையடைந்தார். இவா் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள தட்சணேஷ்வரத்தில் காளிகோவிலில் பூசாரியாக இருந்தார். அப்போது தனது தியானத்தில் வந்த கருத்துக்களை காளிகோவிலுக்கு வருபவா்களிடம் போதித்தார். அவ்வாறு வந்தவா்களில்ஒருவரான நரேந்திரநாத்தத்தா என்பவா் பரமஹம்வரின் சீடரானார். இவரே பிற்காலத்தில் சுவாமி விவேகானந்தா் என்ற பெயரில் பரமஹம்சரின் கொள்கைகளை உலகறியச் செய்தவா்.

“உன்னதமான ஆன்மீக நிலையை அடைவதற்கு உருவ வழிபாடே சிறந்த சாதனம். வெறும் சமயக் சடங்குகளினால் மட்டுமே ஆன்மீகத்தை அடைய முடியாது. எம்மதமும் சம்மதம். மதங்கள் பலவாறு இருந்தாலும் முடிவில் அவை கடவுளையே அடைகின்றன. ஆண்டவன் ஒருவனே”.

இவைகள் பரமஹம்சரின் போதனைகளாகும். எனவே இவா் ஒரு சா்வசமய வாதியாகத் திகழ்ந்தார். இவா் 1886ல் மரணமடைந்தார்.

**சுவாமி விவேகானந்தா்:**

சுவாமி விவேகானந்தா் தனது குருநாதா் பரமஹம்சரின் கொள்கைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டார். அவா் பெயரில் ‘ராமகிலுஷ்ணா மடத்தை’ 1887ல் நிறுவினார். ‘விவேகானந்தா் கல்வியில் சிறந்தவா். சோல்வன்மை மிக்கவா். ஆன்மீக எழுச்சி மிக்கவா். இவரிடம் பக்தி கொண்டு: பலா் சீடா்களாயினா். 1893ல் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடந்த சமயங்களில் பாராளுமன்றம்’(Parliament of Religions) என்ற உலக சமய மாநாட்டில் கலந்து கொண்டு இந்து சமயத்தின் பெருமையை விளக்கி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அதுமுதல் பரமஹம்சரின் போதனைகள் உலகம் முழுவதும் பரவலாயின் நான்கு ஆண்டுகள் வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இந்தியா திரும்பினார் விவேகானந்தார். கல்கத்தாவுக்கு அருகில் பேலூா், அல்மோராவுக்கு அருகிலுள்ள மாயாவதி ஆகிய இரண்டு இடங்களில்ராமகிருஷ்ணா மடத்தின் முக்கிய மையங்களை நிறுவினார். பின்னா் மடத்தின் பல கிளைகள் நாடு முழுவதும் நிறுவப்பட்டன. இனம், மொழி, நாடு, சமயம் ஆகிய வேறுபாடியின்றி, பூகம்பம், வெள்ளம், தீ, தொத்து நோய்கள் போன்ற கேடுகள் நேரும் போது ராமகிருஷ்ணா மடத்தின் பேருதவி புரிந்து வந்தனா். மேலும் மருத்துவமனைகள் அனாதை இல்லங்கள், தொழிற்சாலைகள் குருகுலங்கள் கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளை அமைத்து உயரிய தொண்டு செய்தனா். இதனால் இந்தியாவின் பெருமை உயா்ந்தது. உலகத்திற்கு இந்து மதத்தின் பெருமைகளையும் இந்து கலாசாரத்தையும் எடுத்துக்காட்டிய பெருமை விவேகானந்தரையே சாரும்.

**பிரம்ம ஞான சபை (The Theosophicil Society)**

இந்து மத மறுமலா்ச்சியில் பங்கு கொண்ட மற்றொரு முக்கிய நிறுவனம் பிரம்ம ஞானசபைகளாகும். இது முதலில் 1875ல் அமெரிக்காவில் உள்ள நியுயார்க் நகரில் பிளாவட்ஸ்கிஅ ம்மையார். ஆல்காட் ஆகியோரால் நிறுவப்பட்டது. 1879 ஜனவரியில் அவா்கள் இந்தியாவுக்கு வந்து சென்னை அடையாற்றில் இச்சபையின் தலைமை அலுவலகத்தை

ஏற்படுத்தினார்கள். பிரம்ம ஞான சபையின் வளர்ச்சிக்குபெரிதும் உதவியவர் டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார் ஆவார். 1888ல் இச்சபையில் சேர்ந்து வாழ்நாள் முழுவதும் சேவை செய்தார். இச்சபை இந்துமதச் சீர்திருத்துவதின் மூலமே எவ்விதப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்றார் அன்னிபெசன்ட். இந்துக்கள் போலவே வாழ்ந்து, இந்தியாவில் உள்ள பல புனித இடங்களுக்குச் சென்று ஆன்மீக விசாரணைகளில் ஈடுபட்டார். இச்சபையின் கிளைகள் பல உருவாயின. இச்சபையின் செயல்பாடுகளுக்கு பெரும் ஆதரவு கிடைக்கவில்லையென்றாலும் அன்னிபெசன்ட்டின் ஆளுமையின் காரணமாக சபை வலுவடைந்தது. இச்சபையின் செயல்களால் நாட்டில் பல சமூக அமைப்புகள் தோன்றி மக்களுக்கு நன்மை செய்ய ஆரம்பித்தன.

கல்வி வளர்ச்சியில் பிரம்மஞான சபை சிறப்பான பணிகளை ஆற்றியது. 1898ல் வாரணாசியில் 'மத்திய இந்து கல்லூரி' ஒன்றை ஆரம்பித்தது. மேலும் சிறுவர்களுக்கும் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பல பள்ளிக் கூடங்களை ஆரம்பித்தது. பிரம்மஞானசபை குழந்தை திருமணத்தை எதிர்த்தது. சாதிமுறை ஒழிப்பதற்கு அரைகூவல் விடுத்தது. விதைவைகளின் மறுவாழ்வுக்கு ஆதரவு அளித்தது. இவ்வாறு இந்தியர்களின் விழிப்புணர்வுக்கு பிரம்ம ஞானசபை முக்கிய காரணமாக விளங்கியது.

# அலகு - IV
# இந்திய விடுதலைப் போராட்டம்
# காந்திக்கு முந்திய சகாப்தம்

**இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம்:**

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் பற்றி வெவ்வெறு கருத்துக்கள் நிலவுகின்றன. 1885ல் அலன் ஈக்ஆடாவியன் ஹியூம் என்பார் காங்கிரசைத் தோற்றுவித்தார் எனும் சாதாரணமான வரலாற்று உண்மையின் பின்னணியில் பல விடை காணமுடியாக வரலாற்றுக் கேள்விகள் தொக்கி நிற்கின்றன. கற்றறிந்த இந்தியர்கள் தங்கள் குறைபாடுகளைச் கூறவும் அவர்கள் தங்களது மனக்குறைகளை விட்டாற்றவும் பயன்படக்கூடிய ஒரு அமைப்பாகவே இந்திய தேசியக் காங்கிரசை ஹியூம் உருவாக்கினார். எனச் சொல்லப்படுகிறது. அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த டபரின்தான் காங்கிரஸ் எனும் அமைப்பு தோன்றக் காரணமாக இருந்தார்.என டபியுள்.சி.பானர்ஜி என்பார் கருதுகிறார். தமது அரசாங்கத்தின் செயல்பாட்டை விமரிசித்து அதிலிருந்த நிறைகுறைகளைக் கூற ஒரு அமைப்புத் தேவை என டபரின் கருதினார். இங்கிலாந்தில் மேன்மை தங்கிய அரசியின் எதிர்க்கட்சி செய்த பணியினை அது செய்ய வேண்டும் என அவர் எதிர்பார்த்தார். அதே வேளையில் இந்திய மக்களுக்காக எதையேனும் செய்ய ஹியூம் விழைந்தார். பிரிட்டானியரின் ஆட்சியில் இந்திய மக்களின் அல்லல்களையும் அவலங்களையும் ஈங்கிலேயர் உணரும் வகையில் இங்கிலாந்தில் இயக்கங்கள் நடத்த ஹியூம் முடிவு செய்தார். ஆனால், இந்தியாவிலேயே தங்கிஅ த்தகைய பணியினைச் செய்யுமாறு டபரின் அவரைக் கேட்டுக்கொண்டார். எனவே, ஹியூம் இந்திய தேசிய காங்கிரசைத் துவக்கினார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் வேறுவிதமான கருத்துகளும் எள்ளன. கற்றிறிந்த இந்தியர்களை பிரிட்டானிய அரசாங்கத்திற்கு விசுவாசமுள்ளவர்களாக வைத்திருக்க இத்தகைய அமைப்பினை உருவாக்குமாறு டபரின்ஹியூமிற்கு ஆணையிட்டதன்படியே காங்கிரசை அவர் துவங்கிகார் என்று கூறப்படுகிறது. வடஇந்தியாவில் சிலவிவசாயிகள் புரட்சியொன்றை உருவாக்கத் திட்டமிட்டனர். அதனையறிந்த ஹியூம் முன்னெச்சரிக்கையாக அரசாங்கத்திற்குப் பலமளிக்க காங்கிரசை உருவாக்கினார் எனவும் சொல்லப்படுகிறது.

ஹியூம் மிகக்குறுகிய நோக்குடன் செயல்பட்டார் எனவும்டபரினும் அவரும் சதிக்கருத்துடன் இணைந்து செயல்பட்டனர் எனவும் கூறுகின்ற கூற்று சரியானதாக இருக்கமுடியாது. ஹியூம் அவர் இந்தியாவில் இருந்த காலத்தில் இந்தியர்கள் மீது கனிவு கொண்டவராகவே திகழ்ந்தார். ‘வயோதிகளின் நம்பிக்கை’ எனும் சிறுநூல் ஒன்றினை அவர் வெளியிட்டார். அதில் இந்தியர்களின் துயரங்களைப்பற்றி ஆங்கிலேயர் அலட்சியமாக இருந்தமைக்காக அவர்களைச் சாடினார். 1883ல் இந்திய மக்களுக்காகப் பாடுபட இணையுமாறு கல்கத்தா பல்கலைகழகப் பட்டதாரிகட்குக் கடிதங்கள் எழுதினார். அவரை இங்கிலாந்திற்கு அனுப்பிவிடப் போவதாக இந்திய அரசாங்கம் எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது. வடமேற்கு மாநிலங்களின்வெப்டினன்ட் கவர்னராகத் திகழ்ந்த சர்.எ. கால்வின்

என்பார் ஹியூமின் மீது பல குற்றசாட்டுகளைச் சுமத்தி எச்சரித்தார். எ னவும் கூறப்படுகிறது. எனவே ஹியூம் ஆங்கில அரசாங்கத்திற்கு உதவவேண்டும் எனும் குறுகிய நோக்குடன் இதை அமைத்தார் எனும் கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது எனலாம்.

இரஷ்யாவைப் பற்றிய பயத்தின் காரணமாகவே இந்திய தேசிய காங்கிரஸ் துவக்கப்பட்டது என்பாருண்டு. ஆப்கானிஸ்தானத்தின் வழியாக இந்தியாவின் மீது இரஷ்யா படையெடுத்து வரலாம் என்ற அச்சம் பிரிட்டானியர் மனதை உலுக்கியது. அவ்வாறு ஒரு படையடுெப்பு நிகழ்ந்தால் அரசாங்கத்தின் கரங்களை வலுப்படுத்த விசுவாசமுடையவர்களை ஒருங்கிணைக்கவே காங்கிரஸ் அமைக்கப்பட்டது. காங்கிரஸ் துவக்கப்பட்ட காலத்தில் அரசாங்கம் அதனிடம் பரிவுடன் நடந்து கொண்டது. ஆனால், இரஷ்யப் படையெடுப்பு பற்றிய பயம் அற்றுப்போனதும் காங்கிரசிடம் பகைமைக் கொள்ளத் துவங்கியது. பிரம்மஞான சபையிலிருந்துதான் காங்கிரஸ் தோன்றியது என ஆல்காட் என்பார் கூறுகிறார். இந்தியாவில் பல்வேறு விதமான மக்களை ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவர முடியும் என்பதை உணர்த்தியது. பிரம்மஞானசபை பிரம்மஞானசபையினரின் திட்டத்தை அடியாகக் கொண்டு காங்கிரசை ஹியூம் உருவாக்கினார் என இரகுநாதராவ் டபியுள்.என். வென் ஆகியோர் குறிப்பிட்டனர். 1884ம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் இரகுநாதராவின் வீட்டில் நடந்த கூட்டத்தில் அத்தகைய முடிவொன்று எடுக்கப்பட்டது என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் தானாகவே தோன்றிய அமைப்பு என்ற கருத்தும் நிலவுகிறது. இந்தியாவின் வெவ்வெறு பகுதிகளில் செயல்பட்ட அரசியல் சங்கங்களின் ஊக்கத்தில் அதுதோன்றியது என்பாருண்டு.

இந்திய தேசியக் காங்கிரசை உருவாக்குவதில் எ.ஓ. ஹியூமிற்கு அதிகமான பங்கிருந்தது என்பது மறுக்கமுடியாதது. எனவே, அவரது பங்கினை ஏற்றுக்கொள்ளாத கருத்துக்கள் தவறானவை எனத் தள்ளப்படலாம். இந்தியாவில் பிரிட்டானியப் பேரரசைக் காக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்துடனே அவர் அதனை ஒருவாக்கினார் எனமுடிவு செய்வது பெரும் வரலாற்று அநீதியாகவே அமையும். ஆங்கிலேயரின் தலையிலிருந்து இந்தியாவை விடுவிக்க அவர் இவ்வமைப்பினை உருவாக்கவில்லை. இந்தியர்கள் தமது குறைகளை கூறவும் முறையாக அவற்றைத் தீர்த்துக் கொள்ளமுயலவும் உதவுகின்ற வகையில்தான் அவர் காங்கிரசை உருவாக்கினார் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தாகத் தோன்றியது.

இந்திய தேசிய காங்கிசின் முதல் கூட்டம் 1885ல் நடந்தது. கல்கத்தாவின் புகழ்பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்த டபியுள்.சி.பானர்ஜி என்பார் அக்கூட்டத்திற்னு தலைமை தாங்கினார். இந்திய தேசிய யூனியன் என்ற பெயருடன் குவக்கப்பட்ட இவ்வமைப்பு தாதாபாய் நவ்ரோஜியின் ஆலோசனையின்படி இந்திய தேசிய காங்கிரஸ் எனத் தனது பெயரைமாற்றிக்கொண்டது. அந்த அமைப்பினுடைய நோக்கங்களை அதன் தலைவராக இருந்த பானர்ஜி அறிவித்தார். பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் வசித்த இந்திய முன்னேற்றத்தில் நாட்டமுடையோரிடையே நட்புறவை வளர்த்தல், தேசிய உணர்வுகளை ஒருங்கிணைந்து இனம் மற்றும் மாநிலப் பிரிவுணர்வுகளை அழித்தல், நாட்டின் முக்கியமான

விஷயங்கள் பற்றிப் பொறுப்பான இந்தியர்களின் கருத்துக்களை அதிகாரப்பூர்வமாக வெளியிடுதல் தேசிய அரசியல்வாதிகள் மக்களுக்காக எவ்வாறு செயல்படுவது என்பதைத் தீர்மானித்தல் ஆகியவை நோக்கங்களாக அவரால் குறிப்பிடப்பட்டன. இத்தகைய நோக்கங்களுடன் காங்கிரஸ் செயல்படத் துவங்கின.

**முதல் கட்டம் (1885-1905)**

**மிதவாதிகள்:**

இந்திய தேசிய இயக்கத்தின் முதல் கட்டத்தில் மிதவாதிகள் முக்கியத்துவம் பெற்றனர்.தாதாபாய் நவுரோஜி,P.M. மேத்தா,D.E. வாச்சா,W.C. பானர்ஜி ஆகியோர் முக்கியமான மிதவாதத் தலைவர்களாக திகழ்ந்தனர். காங்கிரசில் தீவிரமாக இருந்த உறுப்பினர்கிளல் பலர் மத்திய வர்க்கத்தினராகவே இருந்தனர். அவர்கள் பெரும்பாலும் நகரங்களிலேயே வசித்தனர். எனவே அவர்கட்கும் மக்கள் கூட்டத்திற்குமிடையே தொடர்பு இருக்கவில்லை. கற்றறிந்த இப்பிரிவினர் ஆங்கிலேய ஆட்சியைக் கேடாக நினைக்கவில்லை. அறியாமையிலிருந்தும் ஒற்றுமையின்மையில் இருந்தும் இந்தியர்களைக் காக்கவே ஆங்கிலேயர் வந்தனர் என அவர்கள் எண்ணினர். ஒரு காங்கிரஸ் மாநாட்டில் இங்கிலாந்தின் அரசியாரை வாழ்த்தித் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. 1898ல் கற்றறிந்த இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் நண்பர்களேயன்றி எதிரிகளல்ல எனும் அறிவிப்பினைக் காங்கிரஸ்' தலைவர் வெளியிட்டார். பிரிட்டானியப் பேரரசினைக் காப்பதேமமிதவாதிகளின் கடமையாகத் தோன்றியது. பிரிட்டானியர் இந்தியாவை விட்டு வெளியேறினால் இந்தியாவில் குழப்பம் நிலவும் என அவர்கள் எண்ணினர். பிரிட்டானியரின் ஆட்சியில்தான் இந்தியா முன்யேற முடியும் என அவர்கள் திடமாக நம்பினர். பிரிட்டானிய மக்கள் நேர்மையானவர்களாகவும் சுதந்திரத்தை விரும்பியவர்களாகவும் இருந்தனர். ஆனால், பிரிட்டானிய அதிகாரவர்க்கம் இந்திய மக்'களின் அல்லல்கட்குக் காரணமாக அமைந்தது. இத்தகைய கருத்தும் மிதவாதிகளிடமிருந்தது. எனவே பிரிட்டானிய மக்களிடம் தங்களது குறைகளை முறையிட்டால் அவர்கள் அவற்றை தீர்த்து வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தனர். அத்தகைய நோக்கத்துடன் இங்கிலாந்தில் பிரச்சாரம் செய்யத் துவங்கினர்.1892ல் ஒரு காங்கிரஸ் மாநாட்டை இங்கிலாந்தில் கூட்டவேண்டும் என்ற கருத்துக்கூட நிலவியது. ஆனால் 1891ல் அந்நாட்டில் தேர்தல்கள் நடத்தப்பட்டதால் அம்மாநாடு நடத்தும் முயற்சி ஒத்திப்போடப்பட்டது. இவ்வாறு மிதவாதிகள் ஓநாயின் இரக்கத்தை நம்பும் வெள்ளாடுகளாக ஆங்கிலேயரின் நியாயத்திலும் நேர்மையிலும் நம்பிக்கை வைத்துக் காத்திருந்தனர்.

**நோக்கங்களும் வழிமுறைகளும்:**

முதல் கட்டத்தில் காங்கிரசின் நோக்கம் மிகக் குறுகிய அளவிலேயே இருந்தது. சுதந்திரம் பெறுவது நோக்கமாக அமையவில்லை. சில சலுகைகளைப் பெறுவதே நோக்கமாக அமைந்தது. லோகமான்ய திலகர் சுயாட்சி போன்ற சொற்களைத் தீவிரமாகப் பயன்படுத்திய போதிலும் மிதவாதிகளின் மனங்களை அது வெகுவாக கவரவில்லை. 1895ல் சுரேந்திரநாத் பானர்ஜி ஒரு அறிப்பை வெளியிட்டார். மக்களுக்கான பிரதிநிதித்துவ அமைப்புகளை

காங்கிரஸ் கேட்கவில்லை. அது ஓரளவு மாற்றப்பட்ட கற்றறிந்தோரின் பிரரிநிதித்துவ அமைப்புக்களையே வெண்டுவதாகக் குறிப்பிட்டார். சட்டமன்றங்களை விரிவாக்கவும் அவற்றில் இந்தியர்கட்கான பிரதிநிதித்துவத்தைக் கூட்டவும், காங்கிரசின் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்திய செயலாளர், கவர்னர் ஜெனரல் கவர்னர் ஆகியோரின் நிர்வாக மன்றங்களின் இந்தியர்களின் பங்குபெற காங்கிரஸ் கோரியது. இந்தியாவின் பொதுப்பணியில் இந்தியர்கட்கு அதிகமான வாய்ப்புக்களையும் அது வேண்டியது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே நேரத்தில் பொதுப்பணிக்கான தேர்வுகளை நடத்துதல், சிவில் சுதந்திர அடிப்படையை விரிவாக்குவது, இராணுவச் செலவினை புறைப்பது, கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகமாக்குவது, நிர்வாகத்துறையிலிருந்து நீதித்துறையைப் பிரிப்பது போன்றவை காங்கிரசின் கோரிக்கைகளில் முக்கியமானவையாக இருந்தன. இந்தியாவின் பிறபட்ட பொருளாதார நிலை, தொழில்நிலை ஆகியவைப் பற்றி விசாரணை நடத்தவும் தென் ஆப்பரிக்காவில் இந்தியர்களின் நிலையை மேம்படுத்தவும் காங்கிரஸ் வேண்டியது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற காங்கிரஸ் மிகவும் எனிதான வழிமுறைகளையே பின்பற்றியது. தீர்மானங்கள் நிறைவேற்றுதல், மனுக்கொடுத்தல், குறைகளை விளக்கிக் கூறப் பிரதிநிதிகளை அனுப்புதல் போன்றவையே காங்கிரசால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளாக அருந்தன. காலக்கிரமமான கூட்டங்களை நடத்தி அவற்றின் வாயிலாக இந்தியப் பிரச்சினைகளை வெளிப்படுத்த காங்கிரஸ் முயன்றது. இங்கிலாந்திலும் மக்கள் கருத்தைத் தமக்கு சாதமாக்க அது முயற்சிகளை மேற்கொண்டது. இங்கிலாந்தில் 1887ல் இந்திய சீர்திருத்த இயக்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. சார்லஸ்பிராட்லா என்ற தொழிற்கட்சி தலைவர் இவ்வமைப்பிற்கு வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்தார். காங்கிரசின்பிரிட்டானியக்குழு 1889ல் அமைக்கப்பட்டது. அக்குழு 1890ல் ‘இந்தியா’ எனும் பத்திரிக்கையைத் துவக்கியது. காங்கிரசின் வழிமுறைகள் மிகவும் அமைதியானவையாக இருந்தன. குறைகளைச் சுட்டிக்காட்டி ஆணித்தரமாகத் தமது உரிமைகளைக் கேட்பதற்குப் பதிலாக அவ்வமைப்பு கெஞ்சும் வேண்டுதல்களையே வெளியிட்டது. அதனால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் கெஞ்சல்கள் வெளிப்படும் வகையில் சொற்கள் அமைக்கப்பட்டன. மிகவும் அமைதியான அரசியலமைப்புச் சார்ந்த வழிமுறைகளையே பயன்படுத்த வேண்டும் என்பதில் மதிவாதிகள் கவனித்துடனிருந்தனர்.

**அரசாங்கத்தின் நிலை:**

துவக்கதில் இந்திய அரசாங்கம் காங்கிரசுடன் கனிவான உறவுநிலையைக் கொண்டிருந்தது. ஆனால் விரைவிலேயே அவ்வுறவு பகைமையுணர்வுடன் அமைந்தது. பம்பாயில் நடந்த முதல் மாநாட்டில் இந்திய அரசாங்கத்தின் அரசுச் செயலாளராக இருந்த சர் ஹென்றி காட்டன் போன்ற உயர்மட்ட ஆங்கில அதிகாரிகள் கலந்து கொண்டனர். முதல் கூட்டத்திற்கு 72 பிரதிநிதிகள் வந்தனர். 1886ல் கல்கத்தாவில் நடந்த இரண்டாவது மாநாட்டில் 406 பிரதஜநிதிகள் கலந்துகொண்டனர். அவர்களில் சிலரை வரவேற்று கௌரவித்தார் கவர்னர் ஜெனரலாக இருந்த டபரின். 1887ல் சென்னையில் நடந்த மூன்றாவது மாநாட்டில் ஏறத்தாழ 600 பிரதிநிதிகள் பங்கேற்றனர். அவர்கட்கு ஆடம்பரமான வரவேற்பினையளித்தார் சென்னை

ஆளுநர்ஆனால் காங்கிரசிற்கும் அரசாங்கத்திற்கும் இடையே நிலவிய தேனிலவு சென்னையில் முடிந்தது. 1888ல் அலகாபாத்தில் அடுத்த கூட்டம் கூடும் முன்னரே காங்கிரசிற்கு பல தொல்லைகளைக் கொடுக்கத் துவங்கியது. அரசாங்கம் முஸ்லீம்களைப் பிரித்து அவர்களுடன் தனியான நல்லிணக்கத்தை உண்டாக்க முயற்சித்தார் டபரின்.காங்கிரஸ் இந்துக்களின் அமைப்பு எனும் கருத்து பரப்பப்பட்டது. எனவே சில முஸ்லீம்கள் காங்கிரசிலிருந்து விலகிச்செல்லத் துவங்கினர். அரசாங்கத்தின் பகைமை உணர்வு தடைகளை ஏற்படுத்திய போதிலும் காங்கிரஸ் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுப் பரவத் துவங்கியது.

**இரண்டாவது கட்டம் (1905-1919)**

**தீவிரவாதிகளின் எழுச்சி:**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் இந்திய தேசியக் காங்கிரசில் தீவிரவாதக் கொள்கையுடைய இளைஞர் கூட்டம் எழுந்தது. மிதவாதத் தலைமைக்கு எதிரான நிலையை இது மேற்கொண்டது. இப்புதிய கூட்டத்தினர் 'தீவிரவாதகள்' என அழைக்கப்பட்டனர். மிதவாதிகளுடன் லோகமான்ய கால கங்காதர திலகர் வெளிப்படையாக மோதிக் கொண்டதால் காங்கிரசின் பிளவு தவிர்க்க முடியாததாகியது. பூனா சர்வ ஜனிக் சபை எனும் அமைப்பிலிருந்து கோகலே, ரானடே போன்றோரைப் பொறுப்பிலிருந்து 1895 ஜீலையில் நீக்கினர். தக்காண வபை எனும் புதிய அமைப்பினை கோகலே உருவாக்கினார். அரசாங்கத்தையும் அதனுடைய அரசியல் கொள்கைகளையும் திலகர் தீவிரமாக விமரிசித்தார். அவரது அரசாங்க எதிர்ப்புநிலை காரணமாக பலமுறை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். திலகரின் தலைமையின் கீழான தீவிரவாதிகட்கும் மிதவாதிகட்கும் இடையில் கருத்து வெறுபாடுகள் அதிகமாயின. 1907ல் சூரத் மாநாட்டில் பிளவு ஏற்பட்டது. தீவிரவாதிகள் மிதவாதிகளை விட்டுப் பிரிந்து சென்று தனியாகச் செயல்படத் துவங்கினர். 1916ல் நடந்த லக்னோ மாநாட்டில் இருபிரிவினரும் இணைந்தனர்.

தீவிரமான போக்கு தெசிய இயக்கத்தில் தோன்ற சில காரணங்கள் இருந்தன. துவக்கக்காலத்தில் தேசியவாதிகள் பிரிட்டானியரின் ஆட்சியின் தன்மையை வெளிப்படுத்தினர். குறிப்பாக பொருளாதார விவகாரங்களில் பிரிட்டானிய ஆட்சியின் கொடுமைகள் வெளிப்படுத்தப்பட்டன.இந்தியாவின் பொருளாதார அழிவிற்கு ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கையும், கொள்ளையுமே காரணம் என்பதை மெய்பிக்கச் சரியான, போதுமான புள்ளி விபரங்களைத் தேசியவாதிகள் கூட்டி அளித்தனர். மேற்கத்திய மயமாக்குதலை அவர்கள் வெறுத்தனர். இந்தியாவின் ஆன்மீகப் பாரம்பரியத்திலிருந்து அவர்கள் புத்துணர்ச்சி பெற்றனர். மேற்கத்திய மயமாக்குதலுக்கு எதிரான உணர்வு தீவிரவாதிகளின் நெஞ்சங்களில் தீ வளர்த்தது காங்கிரஸ் கட்சி சாதித்தவற்றில் இளைஞர்கட்குத் திருப்தி ஏற்படவில்லை. விரைவான விரிவான விளைவுகள் வேண்டுமென அவர்கள் விழைந்தனர். அதற்காக அவர்கள் எவ்விதத்தியாகத்தையும் செய்யத் தயாராகினர். முிதவாதிகளின் மந்தமான இயக்கத்தினை வெறுத்த அவர்கள் தேசியத்தின் பெயரில் மிதவாதிகள் வாணிபம் செய்வதாககி குற்றம் சாட்டினர். குறுகிய நோக்கத்துடன் காங்கிரசைக் கற்றறிந்த மத்திய வர்க்கத்தினரின்

அமைப்பாகவே வைத்திருக்க மிதவாதிகள் முயன்றனா். சாதாரணமக்களை இயக்கத்தில் சோ்ந்தால் தங்கள் நிலையைத் தாங்கள் இழக்க நேரிடும் என அவா்கள் எண்ணினா். இத்தகைய ஐயமும் அச்சமும் இளைஞா்களின் நெஞ்சங்களில் எழுந்தன.காங்கிரசை துதிபாடுவோரின் கூடாரம் எனத் திலகா் இடித்துரைத்தாா். பஞ்சம், கொள்ளை நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் பரிதாபநிலை தீவிரவாதத் தீயில் நெய் வாா்த்தன. அரசாங்க இயந்திரம் திறமையற்றதாகவும் மந்தமாகவும் காணப்பட்டது. இந்தியாவிற்கு வெளியில் திகழ்ந்த சில நிகழ்ச்சிகளும் தீவிரவாதத்திற்கு வழிவகுத்தன. மற்ற பிரிட்டானியக் குடியேற்றங்களில் இந்தியா்கட்கு இழைக்கப்பட்ட அவமரியாதைகளும் இன்னல்களும் இந்திய இளைஞா் மனதில் வெறுப்புணா்வை வளா்த்தன.எகிப்து,பாரசீகம் துருக்கி இரஷ்யா போன்ற நாடுகளில் ஏற்பட்ட தேசிய இயக்கங்களின் தீவிரத்தன்மையின் வெம்மை இந்திய இளைஞா்கட்குச் சூடேற்றியது. 1905ல் இரஷ்யாவை ஜப்பான் வென்ற வரலாற்றுஉண்மை நம்பிக்கையற்றிருந்த பலரது கண்களைத் திறந்தது. தீவிரவாதம் வளர கா்சனின் பிறபோக்கான கொள்கைகளும் காரணமாக அமைந்தன. அவா் கற்றறிந்த இந்தியரை அவமதித்தாா். வங்கப் பிரிவினை கா்சனின் மிக மோசமான செயலாக அமைந்தது. தங்களது எதிா்ப்பை வேகத்துடன் வெளிப்படுத்ம தீவிரவாதிகள் விரும்பினா். இத்தகைய காரணங்களால் தீவிரவாதத்தின் எழுச்சி இந்திய தேசிய இயக்கத்தில் தோன்றியது.

**தீவிரவாதிகளின் நோக்கங்களும் வழிமுறைகளும் :**

தீவிரவாதிகளின் எழுச்சி இருவிதங்களில் நிகழ்ந்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே ஒரு தீவிரவாதப் பிரிவினா் தோன்றினா். பல தீவிரவாத இயக்கங்களும் தோன்றின. திலகா், பின் சந்திரபால், அரவிந்த கோஷ், லாலாலஜபதிராய் போன்றோா் புதிய இயக்கங்களின்வழிகாட்டிகளாயினா். சுதந்திரம் எனது பிறப்புரிமை அதனை அடைந்தே தீருவோம் என முழக்கமிட்டாா் திலகா். மிதவாதிகள் பிரிட்டானியப் பேரரசிற்கு உட்பட்ட சுயாட்சியை விரும்பினாா். ஆனால் தீவிரவாதிகள் முழுமையான சுதந்திரத்தை வேண்டினா். மிதவாதிகள் அரசியலமைப்புச் சாா்ந்த வழிமுறைகளை நம்பினாா். ஆனால் தீவிரவாதிகள் மாநாடுகள் போடுவதிலும் தீா்மானங்கள் நிறைவேற்றுவதிலும் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆண்டுக்கொருமுறை தவளைகளைப்போல் கத்துவதால் நமது முயற்சியால் எவ்வித வெற்றியும் ஏற்படாது என்றாா். திலகா் வெளிநாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தல், தேசியக் கல்வியைப் பரப்புதல் அமைதியான எதிா்ப்பு ஆகியவற்றை தீவிரவாதிகள் வலியுறுத்தினா். வெளிநாட்டு டிபாருட்களைப் புறக்கணித்ததால் வெளிநாட்டு உற்பத்தியாளா்கள் பாதிக்கப்பட்டதுடன் இந்திய உற்பத்தியாளா்கள் நன்மை பெற்றனா். மாணவா்களிடையே தமது கருத்துக்கட்கு தேரவு தேடத் தீவிரவாதிகள் முயன்றனா். தேசியக் கல்வித்திட்டம் ஒன்றினை வடித்தனா். ஒத்துழையாமைக் கருத்தினைத் திலகா் வலியுறுத்தினாா். கிராமப்புற சுகாதாரம், காவல் பணிகள் போன்றவற்றிலும் பஞ்சங்கள், இயற்கை அழிவுகள் போன்றவை ஏற்பட்ட காலத்தில் புனா்வாழ்வு அளிக்கவும் சேவை அமைப்புகள் துவக்கப்பட்டன.

## காந்திய சகாப்தம்

திலகரின் மறைவுக்குப்பின் இந்திய விடுதலைப்போரின் தலைமையை ஏற்ற காந்திஜி இந்தியா விடுதலை பெறும் வரை தனது வாழ்வை தேசீய இயக்கத்தோடு இணைத்துக் கொண்டார். எனவே 1920 முதல் 1947 வரையிலான விடுதலை இயக்கக் காலம் காந்தீய சகாப்தம் என அழைக்கப்பட்டது. அவரது காலத்தில் காங்கிரசுக் கட்சி புரட்சிகரமான இயக்கமாகவே செயல்பட்டது.1915ல் தென் ஆப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்திஜி வரையறுக்கப்பட்ட வாழ்க்கைத் தத்துவத்துடனும். திறமைமிகு அரசியல் நுணுக்கத்துடனும் செயல்படலானார்.

முதல் உலகப்போர் முடிவுற்ற காலத்தில் முழு அரசியல் விடுதலையை எதிர்நோக்கியிருந்த இந்திய மக்களுக்கு 1919ம் ஆண்டின் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் மாபெரும் ஏமாற்றத்தை அளித்தன. தங்கள் ஏமாற்றத்தை வெளிக்காட்ட விரும்பிய மக்கள் கிளர்ச்சிகளில் ஆடுபடலாயினர். மக்களின் அரசுஎதிர்ப்புக் கிளர்ச்சிகளை அடக்கும் வழிமுறைகளை ஆராயவென நீதிபதி ரௌலட் தலைமையில் 1918ம் ஆண்டிலேயே குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் ரௌலட் சட்டம் என்னும் சட்டத்தினை ஆங்கில அரசு செயல்படுத்தியது.

## ரௌலட் சட்டம் (Rowlat Bill)

1919ம் ஆண்டின் ரௌலட் சட்டம் அரசுக்கு அதிக அளவிலான அதிகாரம் அளித்தது. அரசு எதிர்ப்புச் செயல்களுக்காக எவரையும் எளிதில் கைது செய்யமுடியும். அரசியல் தவைவர்களை தடுப்புக் காவலில் வைக்க முடியும். ஆரசியல் குற்றவாளிகளுக்கு மேல் முறையீடு செய்யும் உரிமை அளிக்காமலே தண்டனைஅளிக்கமுடியும். மூன்று நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் அரசியல் கிளர்ச்சியாளர்களை தனியே விசாரித்து தீர்ப்பு அளிக்கும். மரணதண்டனை அளிப்பதாயின் மூவரின் ஒருமித்த கருத்தும் தேவை. இல்லையேல் பெரும்பான்மை விருப்பப்படி எவருக்கும் எந்த அளவு தண்டனையும் அளிக்கலாம். முதல் உலகப் போரில் இங்கிலாந்து வெற்றி பெற்றிட முழு அளவில் இந்தியா துணை புரிந்திட, அதற்குக் கிடைத்த சிறப்பு பரிசே ரௌலட் சட்டமாகும். இப்புதிய சட்டத்தை எதிர்த்து நாடெங்கிலும் கிளர்ச்சிகள் நடந்தன.

**சத்தியாகிரகம்:** ஆங்கில ஆட்சியாளரிடம் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். காந்திஜி கூட புதிய சட்டத்தை எதிர்க்கலானார். மக்கள் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவிக்கச் சத்தியாக்கிரகம் செய்யுமாறு வேண்டினார்.1919 ஏப்ரல் 6ம் நாள் முழுக்கடையடைப்பு நாளாக நிர்ணயிக்கப்பட்டது. நாடு முழுவதும் அந்நாள் கடையடைப்பு நாளாயிற்று. இந்துக்களும், முஸ்லீம்களும் இணைந்து செயலாற்றி காந்திஜியின் வேண்டுகோளை வெற்றிகரமாக நிறைவேற்றினர். ஒரு சில இடங்களில் ஒழுங்கின்மையும், அமைதியற்ற தன்மையும் இருக்கக் கண்ட காந்திஜி ஏப்ரல் 18ம் நாள் தனது சத்தியாகிரகப் போரை நிறுத்தினார். காந்திஜி

சத்தியபால் கிச்சுலு போன்ற தலைவா்கள் கைது செய்யப்படவே அதன் எதிரொலி பஞ்சாபில் நிகழ்ந்தது.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை:**

ஏப்ரல் 10ல் பஞ்சாப் தலைவா்களான சத்தியபால், கிச்சுலு ஆகியோா் கைது செய்யப்படவே அவா்களை விடுவிக்கக் கோரி அமிா்தசரசில் ஊா்வலம் ஒன்று நடைபெற்றது. அவ்வூா்வலத்தைப் படையினா் தடுத்து நிறுத்தவே மக்களின் எதிா்ப்பு அதிகரித்தது. கிளா்ச்சியை ஒடுக்க விரும்பிய காவலா் படை துப்பாக்கிப் பிரயோகம் செய்யவே சிலா் பலியாயினா். மக்களும் பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கினா். பல கட்டிடங்கள் நெருப்புக்கு இரையாயின. ஐந்து ஐரோப்பியரும் கொல்லப்பட்டனா். மறுநாள் சடலங்களை அகற்ற மக்கள் அனுமதிக்கப்பட்டனா். பஞ்சாப் பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பிலிருந்த ஜெனரல் டயா் மக்கள் கூடவோ, பொதுக்கூட்டம் நடத்தவோ கூடாதென ஏப்ரல் 12ல் அறிவிப்பு செய்தாா். அதனை அறியாத மக்கள் 1919 ஏப்ரல் 13ம் நாள் மாலை அமிா்தசரசிலிருந்த ஜாலியன் வாலாபாக் என்னுமிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறுமென அறிவித்தனா்.

1919, ஏப்ரல் 13ம் நாள் சீக்கியா்கள் கொண்டாடும் பைசாகி நாளாகும். ஏறத்தாழப் பத்தாயிரம் போ் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனா். உயா்ந்த சுவா்களால் சூழப்பட்ட அவ்விடம் ஒரே ஒரு வாயிலை மட்டுமே கொண்டிருந்தது. கூட்டம் தொடங்கிய சமயம் தனது படை வீரா்களுடன் வந்து சோ்ந்த ஜெனரல் டயா் எவ்வித முன்னேச்சரிக்கையுமின்றி மக்களைச் சுட்டுத் தள்ளுமாறு ஆணையிட்டாா். மொத்தம் 1650 முறை சுடப்பட்டதில் அதிகாரப்பூா்வமான அறிவிப்புப்படி 379 போ் பலியானாா். படுகாயமுற்ற 1200 போ் கவனிப்பாரற்றவா்களாய் அங்கேயே கிடந்தனா். தோட்டாக்கள் தீா்ந்த பின்னரே வந்த வழியே திரும்பினாா் டயா். சோ்வுட் என்னும் பெண் மருத்துவ அதிகாரி சைக்கிளில் செல்லும் போது சில சமூக விரோதிகளால் அவமானப் படுத்தப்பட்டாா். அவரது மானம் பறிபோகாதவாறு மக்களால் காப்பற்றப்பட்டாா். இந்நிலையிலும் அந்நிகழ்ச்சிக்குப் பழிவாங்க விரும்பிய டயா் ஆங்கிலமாது அவமானப்படுத்தப்பட்ட தெருவழியே செல்லும் மக்களைத் தரையில் ஊா்ந்து சென்றே தெருவைக் கடக்குமாறு ஆணையிட்டாா். பலா் சவுக்கடி பட்டனா். குருதி கொட்டிய இக்கொலை நிகழ்ச்சி ஜாலியன் வாலாபாக் படுகொலை அல்லது அமிா்தசரஸ் படுகொலை என வரலாற்றில் அழியா இடம் பெற்றது. அக்கொலை நிகழ்ச்சியை நடத்திக் காட்டிய டயருக்கு வீரவாளும், பெரும் தொகையும் பரிசாக அளித்துப் பாராட்டினா் வெள்ளையா்

**கிலாபத் இயக்கம் (Khilafat Movement)**

முதல் உலகப் போா் முடிவுற்றதும் வெற்றி பெற்ற நேச நாட்டினா் துருக்கியின் அரசியல் ஒற்றுமையைச் சிதைத்திடும் வகையில் அதன் மீது சமாதான உடன்பாட்டு விதிகளைத் திணித்தனா். அதன்விளைவாக இஸ்லாமிய உலகின் உயா் சமயத் தலைவரான “காலிபா” வின் ஆன்மீக உயா் நிலைக்கும் ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று. காலிபாவின் உன்னத நிலையை நிலைநாட்டிய இஸ்லாமிய உலகில்

தீவிர இயக்கம் நடைடிபற்றது. இந்தியாவில் நடைபெற்ற அத்தகைய இயக்கத்திற்கு “கிலாபத் இயக்கம்” எனப்பெயர். மீண்டும் இந்து முஸ்லீம்இணைப்புக்கு வாய்ப்பளிக்கும் எனக்கருதி காந்திஜி கிலாபத் இயக்கத்தை ஆதரித்தார். மௌலானா முகமது அலி சகோதரர்கள்காந்திஜியின் தலைமையை ஏற்றனர். கிலாபத் இயக்கத்தைக் காந்திஜி ஆதரிக்கவே அவரது ஒத்துழையாமை இயக்கத்தைர முஸ்லீம்கள் ஆதரித்தனர். பெயரளவில் அமைந்திட்ட 1919ம் ஆண்டின் சீர்திருத்தங்கள், பஞ்சாப் படுகொலை, கிலாபத் இயக்கம் ஆகிய மிக முக்கிய முக்காரணங்களும் ஒத்துழையாமை இயக்கம் தொடங்குவதற்கு வழிவகுத்தன.

**ஒத்துழையாமை இயக்கம் (Non-Co-operation Mo**vement)

விடுதலைப் போரில் காந்திஜி தொடங்கிய அடுத்த போராட்டம் ஒத்துயாமை இயக்கமாகும். 1920, செப்’டம்பரில் லாலா லஜபதிராய் தலைமையில் நடைபெற்ற கல்கத்தா கூட்டத்தில் அத்திட்டம் இடம் பெற்றது.

ஒத்துழையாமை இயக்கத் தீர்மானத்தை காந்திஜி முன்மொழிய, மோதிலால் நேருவும், அலி நகோதரர்களும் வழி மொழிந்தனர். 1920 டிசம்பரில் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மாநாடு ஒத்துழையாமை இயக்கத் திட்டத்தினை ஏற்றது. தொடக்கத்தில் அதனை எதிர்த்த சித்தரஞ்சன் தாஸ், அன்னிபெசன்ட், மதன் மோகன் மாளவியா, பிபின்சந்திரபால் போன்றோரும்அதனைப் பின்னர் ஏற்றனர். அரசின் தவறுகள் சரிசெய்யப்பட்டு “சுயராஜ்யம்” கிடைக்கும் வரையில் வன்முறை எதுமின்றி ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவதைத் தவிர இந்தியர்களுக்கு வேறு வழியில்லை என்றார் காந்திஜி. அவ்வியக்கத்தில் இடம் பெற்ற முக்கிய நடவடிக்கைகளாவன:

- அரசு அளித்த சிறப்பு பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் நியமனப் பதவிகளையும் துறத்தல்.
- அதிகார பூர்வமான அரசு விழாக்களில் பங்கு பெறாதிருத்தல்.
- அரசின் கட்டுபாட்டில் இயங்கும் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து மாணவர்களை வெளியேற்றுவதோடு அவர்களுக்கென தேசியக் கல்வி கூடங்களை நிறுவதல்.
- ஆங்கிலேயரின் நீதிமன்றகளை வழக்கறிஞர்கள் புறக்கணிப்பதோடு, தனியார் வழக்குகளைத் தீர்த்துவைக்கச் சமரச நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்.
- படையினர், எழுத்தர், தொழிலாளர், போன்றோர் மெசபடோமியாப் பகுதியில் பணியாற்றிட மறுத்தல்
- வேட்பாளர்கள் சட்டமன்றத் தேர்தலில் போட்டிய மறுத்தலும், வாக்களார்கள் வாக்களிக்க மறுத்தலும்
- அனைத்து அயல்நாட்டுப் பொருட்களையும் விலக்கல்.

1921ம் ஆண்டின் டிதபடக்கத்தில் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது. இந்துக்களும், இஸ்லாமியரும் இதில் பெரும் பங்குபெற்றனர். கல்விக் கூடங்களிலிருத்து மாணவர்கள் வெளியேறினர். மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்ற புகழ் பெற்ற வழக்கறிஞர்கள்

நீதிமன்றங்களைப் புறக்கணித்தனர். அலி சகோதரர்கள், அன்சாரி, அபுல்கலாம் ஆசாத் போன்ற முஸ்லீம் தலைவர்களும் அதில் ஈடுபாடு கொண்டனர். வீடுதோறும் தக்கலியையும்,சர்க்காவையும் காணமுடிந்தது. இந்திய தேசீயக் கொடியில் சர்க்கா இடம்பெற்றது. அயல்நாட்டுப் பொருள்கள் எரியூட்டப் பட்டன. காசி வித்யாபீடம், குஜராத் வித்யாபீடம்,ஜமீயா மிலியா, லாகூர் தேசீயக் கல்லூரி போன்ற பல ஆதசீயக் கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. "கெய்சர்-இ-ஹிந்த்" என்னும் தனது பட்டத்தைக் காந்திஜி துறந்தார். 1921, நவம்பர் 27-ல் பம்பாய்க்கும், டிசம்பரில் கல்கத்தாவுக்கும் வேல்ஸ் இளவரசர் வருகை தந்தபோது அவ்விரு நகரங்களிலும் முழுக் கதவடைப்பு நடைபெற்றது.

ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானோர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். காந்திஜி தவிர ஏனைய தலைவர்கள் அனைவரும் சிறையில் இருந்தனர். ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேர் சிறை செல்ல நேரிட்டது. பலர் போலீசாரின் தடியடிக்கு ஆளாயினர்.

**சௌரி சௌரா சம்பவம் :**

ஒத்துழையாமை இயக்கம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது உத்திரப்பிரதேசம், கோரக்பூர், மாவட்டத்தைச் சேர்ந்த சௌரி-சௌரா என்னும் ஊரில் விரும்பத்தகாத வன்முறை நிகழ்ச்சி நடைபெற்றது. ஏறத்தாழ மூவாயிரம் மக்களோடு வந்த காங்கிரசுத் தொண்டர்கள் அரசு அதிகாரிகளோடு மோத நேரிட்டது. போலீசார் சுட்டத்தைத் தொடர்ந்து காவல் நிலையத்தைத் தாக்கிய மக்கள் ஒரு துணை ஆய்வரையும், 21 காவல்களையும் கொன்றனர். வன்முறையினை ஒரு போதும் ஆதரிக்காத காந்திஜி, சௌரி-சௌரா சம்பவத்தைப் பற்றி அறிந்ததும், இந்தியர்கள் வன்முறையற்ற போருக்கு ஆயத்தமாகவில்லை. எனக்கூறி ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினார். அவரது செய்கையால் அரசு பெரும் ஆறுதலடைந்தது.

காந்திஜியின் செயலைப் பலர் கண்டித்தனர். ஓரி-டத்தில் நடைபெற்ற சிறு செயலுக்காக ஒரு நாட்டையே தண்டிப்பதாகும் என மோதிலால் நேரு எழுதினார். ஒரு போராட்டத்தைத் திறமையுடன் தொடங்கி, சிறப்புடன் நடத்தி, வெற்றி கிட்டும் தருவாயில் தவறு செய்பவர் காந்திஜி என்றார் தாஸ். குாந்திஜியின் செயலை முற்றிலும் ஆதரித்தவர் ஜவஹர்லால் நேருவே, ஒத்துழையாமை இயக்கம் இடையில் நிறுத்தப்பட்டாதாயினும் காங்கிரசுக் கட்சி நடத்திய முதலாவது மக்கள் இயக்கம் அதுவே. விடுதலைக்காகத் துயரங்களைத் தாங்கிடவும், தண்டனைகளை ஏற்றிடவும் மக்கள் ஆயத்தமாயினர். விடுதலைப்போரில் மக்களை ஈடுபடச் செய்ததே அதன் மாபெரும் வெற்றியாகும்.

**சுயராஜ்யக் கட்சி (The Swaraj Party)**

ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜி நிறுத்தியது கண்டு சிலர் கண்டனக்குரல் எழுப்பினர். அவர்களுள் மோதிலால் நே சித்தரஞ்சன் தாஸ் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். விடுதலையை வேண்டியோர் ஓர் உறுதியான திட்டத்தையும், அரசியல் வழிகாட்டுதலையும் எதிர்பார்த்தனர். 1922ம் ஆண்டு நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில் கருத்து வேறுபாடுகள்

முளைத்தன. காங்கிரசின் அரசியல் திட்டங்களில் "மாறுதல் வேண்டும்" என்போரும்,"மாறுதல் வேண்டாம்" என்போருமாக இரு பிரிவினர் தோன்றினர். காந்திஜி தலைமையில் முழுநம்பிக்கை கொண்டோர் மாறுதலை ஏற்க மறுத்தனர். காங்கிரஸ் தலைவரான சித்தரஞ்சன் தாஸ் கயா மாநாட்டுக்குப்பின் 1923ல் தனது தலைமைப் பதவியை விட்டு விலகினார். 1923ம் ஆண்டு மார்ச் மாதம் அலகாபாத் நகரில் "சுயராஜ்யக் கட்சி" நிறுவப்பட்டது.

சுயராஜ்யக் கட்சியினரும் காங்கிரசுக் கட்சியினரும் இந்தியாவுக்குத் "தன்னாட்சி நிலை" அளிக்கப்பட வேண்டுமென விரும்பினர். ஆனால் அதனை அடையும் வழி முறைகளில் தான் வேறுபாடு இருந்தது. வன்முறையற்றதும், ஆக்கபூர்வமானதுமான வழி முறைகளை காந்திஜி விரும்பிட தேர்தல் களத்தில் குதித்துச் சட்டமன்றங்களைக் கைப்பற்றிட வேண்டுமென சுயராஜ்யக் கட்சியினர் விரும்பினர். தங்களது அரசியல்கருத்துக்களை எடுத்துக் கூறவும் இந்திய விடுதலை விரோதிகள் சட்டமன்றங்களில் இடம் பெறாது தடுக்கவும் சட்டமன்றத்திற்குள்ளேயே ஆட்சியாளரை எதிர்த்திடவும் ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம் அரசியல்சட்டத்தை மாற்றியமைத்திடவும் தங்களது "சட்டமன்ற நுழைவுத் திட்டம்" வாய்ப்பளிக்குமென சுயராஜ்யக் கட்சியினர் நம்பினர்.

1923ல் நடைபெற்ற தேர்தலில் மையச் சட்டமன்றத்திலும் மையமாநிலங்கள், வங்காளம், ஆகிய மாநில சட்டமன்றங்களிலும் பெரும்பான்மை பெற்றது. மையச் சட்டமன்றத்தில் இடம்பெற்ற 45 சுயராஜ்யக் கட்சி உறுப்பினர்களின் தலைவராக மோதிலால் நேரு பணியாற்றினார். வங்கச் சட்டமன்றத்தில்சித்தரஞ்சன் தாஸ் தலைவராக விளங்கினார். அவர்களது முயற்சியால்,1924, பிப்ரவரி 8ல் மையச்சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்திய மக்களுக்குப் பொறுப்புள்ள அரசை அமைத்திடும் வகையில் 1919ம் ஆண்டு சட்டத்தைத் திருத்திடவும், இந்தியாவுக்கு ஓர் அரசியல் சட்டத்தை வகுத்திடவும், சிறுபான்மையோரின் நலன்களைவிட உரிமைகளையும் பாதுகாத்திட மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட வட்ட மேஜை மாநாடுகூட்டப்படவும் அத்தீர்மானம் கோரியது. ஆதனையொட்டி சர் அலெக்சாண்டர் முட்டிமான் என்பவரது தலைமையில் "சீர்திருத்த விசாரணை குழு" ஒன்று அழைக்கப்பட்டது. மாநிலங்களில் செயல்ப:டுத்தப்பட்ட இரட்டை ஆட்சி முறையை ஆதரித்து அக்குழுஅறிக்கை அளிக்கவே அதனை மோதிலால் நேரு கடுமையாகச் சாடினார். அவ்வறிக்கையைக் கண்டித்து அவர் கொணர்ந்த தீர்மானத்தைச் சட்டமன்றம் ஏற்றது. 1925ல் சித்தரஞ்சன் தாஸ் காலமாகவே சுயராஜ்யக் கட்சியில் குழப்பங்களும், பிளவுகளும் மலிந்தன. 1926ல் அரசியல் வானிலிருந்துஅக்கட்சி மறைந்தது எனலாம்.

**சைமன் குழு (Simion Commission)**

1927 நவம்பரில் சர் ஜான் சைமன் தலைமையில் ஏழுபேர் கொண்ட "சைமன் குழுவை" அமைத்தது. இந்திய அரசு இயங்கும் முறையை ஆராயவும், கல்வி, உள்ளாட்சித் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் நிலையைக் க்ண்டுணரவும், எவ்வகையில் ஒரு

பொறுப்புள்ள அரசை அமைக்கலாம் என அக்குழு உறுப்பினர்களில் ஒருவர் கூட இந்தியர் இல்லை என்பது குறிப்பிடக்கத்தது.

இந்தியர்கள் தங்களைத் தாங்களே ஆளும் தகுதி பெற்றுள்ளனரா எனக் கண்டறிய அக்குழு 1928ல் இந்தியாவிற்கு வந்தது. இந்தியர்கள் இடம் பெறா அக்குழுவின் அமைப்பே இந்தியர்களை இழிவுபடுத்துவதாகுமெனப் பலர் கருதினர். ஆகவே அனைத்துப் புறக்கணிப்பதென முடிவு செய்தனர். அக்குழுவினர் சென்ற இடமெல்லாம் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களும் “சைமனே திரும்பிப்போ” என்ற முழக்கங்களும் வானளாவ எழுந்தன. ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது சென்னையிலும் பம்பாயிலும் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. லாலா லஜபதிராய், ஜவஹர்லால் நேரு போன்ற தலைவர்கள் தடியடி பெற்றனர். பெரும் எதிர்ப்புக்கிடையே பணியைச் செய்து முடித்த குழு 1930, ஜீனில் தனது அறிக்கையை அளித்தது.

**சைமன்குழுவின் சிபாரிசுகள் :**

- மாநிலங்களில் இரட்டையாட்சியை ஒழித்து சுயாட்சி அளிக்கலாம்.
- நிர்வாகம் சீராக நடைபெறவும், சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கவும், ஆளுநர்களுக்கும், தலைமை ஆளுநருக்கும் சிறப்பு அதிகாரங்கள் அவசியமே.
- மக்கள் தொகையில் 3 சதவீதமாக இருந்த வாக்காளர் எண்ணிக்கையை 15 சதவீதம் வரை அதிகரிக்கலாம்.
- மைய அரசின் அமைப்பு முறையிலும், செயல் முறையிலும் மாற்றம் தேவையில்லை.
- பம்பாயிலிருந்த சிந்துவையும், இந்தியாவிலிருந்து பர்மாவையும் பிரிக்க வேண்டும்.
- மாநிலங்களும், சுதேச அரசுகளும் இடம்பெறும் இந்தியக் கூட்டமைப்பை உருவாக்கலாம்.
- மாநிலச் சட்ட மன்றங்களின் அமைப்பை விரிவாக்க வேண்டும்.
- இந்தியப் படை இந்தியர் மயமாக்கப்பட வேண்டும். அது தன்னிறைவு பெறும் வரை ஆங்கில அதிகாரிகள் நீடிக்கலாம்.
- நெழிச்சி நிலை கொண்டதான ஓர் அரசியல் சட்டம் உருவாக்கலாம்.
- இங்கிலாந்தில் இந்திய அமைச்சருக்கு ஆலோசனை அளித்து வந்த இந்தியச் சபை தொடர்ந்து நீடிக்கலாம்.

இந்தியரின் தன்னாட்சிப் கோரிக்கையை சைமன் குழு ஏற்க வில்லையபதலாலும், அவ்வறிக்கை ஏமாற்றமளிப்பதாக அமைந்திருந்தாலும் இந்தியத் தலைவர்கள் அனைவரும் அதனை ஒரு முகமாகக் கண்டித்தனர்.

## நேரு அறிக்கை (Nehru Report)

அனைத்துக் கட்சினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையளில் ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்க இயலுமா என சைமன் குழுவிடுத்த அறைகூவலை ஏற்று, 1928, பிபரவரியில் அனைத்துக் கட்சிகளின் மாநாடு டில்லியில் கூட்டப்பட்டது. ஆதாதிலால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட அரசியல் சட்ட வரைவுக்குழு விரைவிலேயே தனது பணியை

முடிந்தது. அக்குழுவின் அறிக்கை “நேரு அறிக்கை” எனப்படும். அவ்வறிக்கையில் காணப்பட்டவை:

1. சட்டமன்றத்திற்கு பொறுப்பான சுயாட்சி அரசு அமைக்கப்பட வேண்டும்.

2. மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும்.

3. இனத்தொகுதி தேர்தல் முறை தேவையற்றது.

4. வங்காளம், பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாநிலம் ஆகியவை முஸ்லீம்கள் பெரும்பான்மையுள்ள மாநிலங்களாக வேண்டும்.

5. மக்களுக்கு அடிப்படை உரிமைகள் அளிக்கப்பட வேண்டும்.

6. இந்திய நாடாளுமன்றத்தில் செனட், பிரதிநிதிகள் சபை என இரு சபைகள் இருக்க வேண்டும்.

7. ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும்.

ஆவ்வறிக்கையை லக்னோ மாநாட்டில் கலந்து கொண்’ட அனைத்துக் கட்சியினரும் ஏற்று கொண்டனரெனினும் பின்னா் முஸ்லீம் லீக் அதனை முழுமையாக ஏற்க மறுத்தது. ஜவஹா்லால் நேருவும், சுபாஸ் சந்திரபோசும் முழு விடுதலையை விரும்பிட, மோதிலால் நேருவின் நிலையைக் காந்திஜி ஆதரித்தாா். நேருவின் அறிக்கையை ஏற்குமாறு அரசுக்கு இறுதி எச்சரிக்கையும் விடப்பட்டது.

### சட்டமறுப்பு இயக்கம் (Civil Disobedience Movement)

இந்திய விடுதலை போரில் ஈடுபட்டோரின் பொறுமை எல்லை கடந்தது. சமாதான வழிமுறைகள் பயனற்றுப் போயின. ஆரசின் கவனத்தை ஈர்க்க வலுவான போராட்டம் அவசியமாயிற்று. பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஏழை, எளியோரின் இன்னல்கள் அதிகரித்தன. ஆயினும் அரசின் அடக்குமுறை அடங்கிவில்லை. 1928ல் பா்தோலி விவசாயிகள் சா்தாா் படேலின் தலைமையில் வரி கொடா இயக்கம் நடத்தி ஓரளவு வெற்றி பெற்றிருந்தனா். பொருளாதார வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்ட பொதுவுடைமைக் கட்சியினா் துயரங்களுக்கான தொழிலாளரின் தலைமையை ஏற்றனா். அவா்களது அரசியல் போராட்டங்கள் அரச விரோதப் போராட்டமாகக் கருதப்பட்டு அவா்கள் மீது “மீரட் சதி வழக்கு” தொடலப்பட்டது. பலா் நிறைத்தண்டனை பெற்றனா். இந்நிலையில் நாடு ஒரு புரட்சியை நோக்கிச் செல்வதை காந்திஜியும் உணா்ந்தாா். ஆகவே 1930ல் அவா் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினாா்.

**இயக்கத்தின் திட்டம்:** சட்டமறுப்பு இயக்கத்தின்படி: 1.உப்புச் சட்டத்தை மீறவேண்டும்.2.கல்வி நிலையங்களிலிருந்து மாணவா்களும், அரசுப் பணிகளிலிருந்து அதிகாிகளும் வெளியேற வேண்டும்.3.மதுபானக் கடைகளின் முன் மறியல் நடத்துதல் 4.அயல்நாட்டுப் பொருட்களை எாித்தல் 5.வாிகொடா இயக்கம் ஆகியவற்றை நிறைவேற்ற வேண்டும்.

**உப்புச் சத்தியா கிரகம்**

**தண்டிப் பயணம் :** உப்புவரியை அரசு அதிகரிக்கவே சத்தியாக்கிரகம் தொடங்கியது. 1930 மார்ச், 12ம் நாள் 79 தொண்டர்களுடன் தனது சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி என்னும் சிற்றூரை நோக்கிப் பயணப்பட்டார் காந்திஜி. அவரது தண்டிப் பயணம் 24ம் நாள் நடைபெற்றது ஏப்ரல் 6ம் றாள்தனது காலை வழிபாட்டுக்குப் பின் தொண்டர்களுடன் கடற்கரையை அடைந்து உப்பை அள்ளியதை தொடர்ந்து " உப்புச் சத்தியாகிரகம்" தொடங்கியது. தமிழகத்தைச் சேர்ந்த வேதாரணயத்தில் ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது. நாடெங்கும் றடைபெற்ற உப்புச் சத்தியாகிரகத்தில் மகளிர் பலரும் கலந்து கொண்டனர். அதனை அடக்க அரசு மேற்கொண்ட இரும்புக்கர நடவடிக்கைகளினால் பலர் பலியாயினர். பலர் படுகாயமுற்றனர். பல்லாயிரக் கணக்கானோர் சிறை சென்றனர். அயல்நாட்டுப் பொருட்களை விலக்கிடும் திட்டமும் வெற்றி பெற்றது. முன்னைய ஆண்டின் இறக்குமதியில் நான்கில் ஒரு பங்கே இறக்குமதியாயின. விவசாயிகள் வரிகொடா இயக்கத்தில் பங்கு பெற்றனர். சட்டமறுப்பு இயக்கத்தில் முஸ்லீம் லீக் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜவஹர்லால் நேருவுடன் 60,000 பேர் சிறை புகுத்தனர். காந்திக் குல்லாவைக் கண்டாலே கண்மூடித்தனமான தாக்குதலைத்தொடுத்தனர் அரசினர். வுட்டமேசை மாநாடு தோல்வியுற்றதைத் தொடர்ந்து மீண்டும் நடத்தப்பட்ட சட்டமறுப்பு இயக்கம் வன்முறை நிகழ்ச்சிகளையும் சந்தித்தது. எனவே 1934 ஏப்ரல் 7ல் சட்ட மறுப்பு இயக்கத்தினை நிறுத்தினார் காந்திஜி.

**வட்ட மேசை மாநாடுகள் (Round Table Cinferences)**

**முதல் வட்ட மேசை மாநாடு**

சட்ட மறுப்பு இயக்கம் நடந்து கொண்டிருந்த போது சைமன் குழுவின் அறிக்கை வெளியாயிற்று. அதனைக் காங்பிரசுக் கட்சி ஏற்க மறுத்திட்ட போதும் ஆங்கில அரசு தனது திட்டப்படி வட்டமேசை மாநாடு சுட்ட முயன்றது. 1930 நவம்பர் 12ல் இலண்டனில் நடைபெற்ற முதல் வட்டமேசை மாநாட்டிற்கு பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மக்டொனால் தலைமை வகித்ததார். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளை 89 பேரும், இந்திய சுதேச அரசப் பிரதிநிதிகளாக அதில் கலந்து கொண்டனர். காங்கிரசுத் தலைவர்கள் அனைவரும் சிறையிலிருந்தால் அக்கட்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

இந்தியாவில் ஒரு கூட்டரசை ஏற்படுத்தவும், மாநிலங்களில் பொறுப்புள்ள மக்களாட்சி ஏற்படுத்தவும், மையவரசில் தலைமை ஆளுநருக்குச் சிறப்பதிகாரம் அளித்திடும் இரட்டையாட்சி ஏற்படுத்தவும் வழிவகுக்கும் வகையில் இங்கிலாந்து பிரதமர் அளித்த அரசியல் திட்டத்தைப் பலரும் ஏற்றனர். ஆனால் ஜின்னா தனது பதினான்கு முனைத்திட்டத்தையும், அம்பேத்கார் தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி முறையயையும் வலியுறுத்தவே 1931, ஜீலையில் ஒரு முடிவும் எடுக்காமலே மாநாடு முடிவுற்றது.

**காந்தி இர்வின் உடன்பாடு:** இந்தியாவின் தனிப்பெரும் கட்சியான காங்கிரசு கலந்து கொள்ளாத மாநாட்டில்ஓர் அரசியல் முடிவு காணமுடியாது எனக்கண்ட ஆங்கில அரசு அவ்வமைப்புடன் சமாதான உடன்பாடு காண விழைந்தது. அமைதியான சூசுந்நிலையில்

உறுதியான முடிவு காண விரும்பிய அரசு காந்திஜியையும், பிற தலைவர்களையும் விடுதலை டிஷசெய்தது. காங்கிரசுக் கட்சிமீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1931, பிப்ரவரி, 17ம் நாள் காந்தி-இர்வின் உடன்பாடு உன்று ஏற்பட்டது. அதன்படி, 1. அரசியல் தொண்டர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். 2. அனைத்து அரசியல் வழக்குகளும் திரும்பப் பெறப்பட வேண்டும். 3. வரியின்றி உப்பெடுக்க மக்களை அனுமதிக்க வேண்டும்.4. மதுபானக் கடைகளின் முன் அனுமதியுடன் மறியல் செய்ய அனுமதிக்கப் படவேண்டும். 5. சட்டமறுப்பு இயக்கத்தின் போது பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை திரும்ப கொடுக்க வேண்டும் 6. நிலவரி சம்பந்தமாகக் கைப்பற்றப்பட்ட அனைத்துப் பொருட்களையும் திரும்ப அளித்திட வேண்டும். இந்நிபந்தனைகளை இர்வின் ஏற்றுக் கொள்ளவே காந்திஜியும் சில நிபந்தனைகளை ஏற்றார். அதன்படி, 1. சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்படும் 2. குாவல் துறையினர் மீது விசாரணையை வலியுறுத்தக் கூடாது. 3. புறக்கணிப்புத் திட்டங்களை கைவிட வேண்டும். 4. வட்டமேசை மாநாட்டில் காங்கிரசு கலந்து கொள்ள வேண்டும். காங்கிரசிலிருந்த தீவிர வாதிகள் இவ்வுடன்பாட்ினை வரவேற்கவில்லை. பகத்சிங் தூக்கிலிடப்பட்ட இரு நாட்களுக்குப்பின் 1931, மார்ச் 25ல் கராச்சியில் காங்கிரசு மாநாடு நடந்தபோது இந்திய இளைஞர்கள் காந்திஜியைக் கறுப்புக் கொடியுடன் வரவேற்றனர்.

**இரண்டாவது சட்ட மேசை மாநாடு:**

தேர்தலில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து மக்டொனால்டு தலைமையிலேயே இங்கிலாந்தில் ஒரு தேசிய அரசு அமைக்கப்பட்ருெந்தது. இர்வினுக்குப்பின் அரசப் பிரதிநிதியாக்கப்பட்ட வில்லிங்டன் பிரபு அடக்குமுறைக் கொள்கைகளையே அதிகம் கடைப்பிடித்தார். இத்தனைய இருண்ட சூழ்நிலையில் 1931, செப்டம்பர் 7ல் இலண்டனில் இரண்டாவது வட்ட மேசை மாறாடு கூடியது. அம்மாநாட்டில் செப்டம்பர்12ல் காங்கிரசின் பிரதிநிதியாகக் காந்திஜி கலந்துக்கொண்டார். மாளவியாவும், கவிக்குயில் சரோஜினி நாயுடுவும் அவருக்குத் துணைநின்றனர். சாதி, நமய, நிற, இன வேறுபாடின்றி அனைவரின் பிரதிநிதியாக இருப்பது காங்கிரசே எனவும், அத்தேசீயக் கட்சியின் கோரிக்கையான முழுவிடுதலையை ஏற்க வேண்டுமெனவும் கூறினார் காந்திஜி. இந்தியத் தலைவர்களுக்குள் அதமானதோர் உடன்பாடு இல்லாது போகவே மக்டொனால்டு, 1932, ஆகஸ்டு, 16ல் தனது “வகுப்பு வாதக் கொடையை” அறிவித்தார்.

ஆத்திட்டப்படி முஸ்லீம்களுக்கு தனித்தொகுதி முறை அளிக்கப்படும். சீக்கியர்களுக்கும் பிற சிறுபான்மையினருக்கும் தனித் தொகுதிகள் ஒதுக்கப்படும். தாழ்த்தப்பட்டோர் சிறுபான்மையினராக அங்கீகரிக்கப்படினும் பொதுத் தொகுதியிலேயே வாக்களிப்பர்.நில பிரபுக்களுக்கும் மகளிர்க்கும் சில இடங்கள் ஒதுக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் காங்கிரசுக்கும் முஸ்லீம் லீகுக்குமிடையே பகையுணர்வை உருவாக்கிட ஆங்கில ஆட்சியாளரால் முடிந்தது. இந்தியரனைவரையும் ஓரினமாக கருதிய காந்திஜி இத்திட்டத்தை ஏற்க மறுத்து எதையும் சாதிக்க முடியாத நிலையில் வெறுங்கையுடன் இந்தியா திரும்பினார். அம்மாநாடும் 1931, டிசம்பர் முதல் நாள் முடிவுற்றது.

**மூன்றாவது வட்டமேசை மாநாடு:**

1932, நவம்பர், 17ம் நாள் மூன்றாவது வட்டமேசை மாநாடு தொடங்கியது. இயல்பாகவே காங்கிரசுக் கட்சி அதில் கலந்து கொள்ளவில்லை. தொழிற்கட்சியும் அதில் பங்கு கொள்ள மறுத்தது. ஆங்கில ஆட்சியின் ஆதரவாளர்களாக இருந்த 46 பேர் இந்தியப் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர். அதே ஆண்டு டிசம்பர் 24ல் மாநாடு முடிவுற்றது. அம் மாநாட்டு முடிவின் அடிப்படையில் 1933, மார்ச்சில் வெள்ளை அறிக்கை ஒன்றினை அரசு வெளியிட்டது. முற்போக்குச் சிந்தனையாளர்களான இந்தியர்கள் எசரும் பிற்போக்குத் தன்மை வாய்ந்த அவ்வறிக்கையை ஏற்க மறுக்கவே வெய்வர். 1933 ஏப்ரலில் இங்கிலாந்து பாராளுமன்றத்தின் இருசபை உறுப்பினர்களையும் கொண்ட "பொறுக்குக் குழு" ஒன்று அமைக்கப்பட்டது அக்குழுவின் திருத்தங்களுடன் கூடிய அரசியல் திட்டதினை ஏற்ற அரசு 1935ம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தை நிறைவேற்றியது.

## மகாத்மாகாந்தி

இந்திய தேசிய தந்தை என்று புகழப்படும் மகாத்மாகாந்தி இந்திய நாட்டின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் மனிதர் ஆவார். உண்மை, நேர்மை, அகிம்சை, சத்தியம் ஆகியவற்றை ஆயுதங்களாகக் கொண்டு ஆங்கிலேயரை எதிர்த்து அறப்போர் புரிந்தவர். இறுதியில் தேச ஒற்றுமைக்காக தனது உயிரையே தியாகம் செய்த உத்தமபுத்திரன் நமது காந்திஜி. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற மனிதர் மகாத்மா காந்தி ஆவார்.

**இளமை வாழ்க்கை:**

குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னுமிடத்தில் 1869 அக்டோபர் 2ம் தேதி காந்தி பிறந்தார். இவரது இயற்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த காந்தி. துந்தையார் பெயர் காபா காந்தி. தாயார் பெயர் புத்திலிபாய். இவருக்கும் க்தூரிபாய் அம்மையாருக்கும் இவரது 13ம் வயதில் திருமணம் நடந்தது. திருமணம் ஆணபின்பும் உயர்நிலைப் பள்ளியில் படித்து தேறினார். 1888ல் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று திரும்பினார். பின்னர் ராஜ்காட், பம்பாய் ஆகிய இரு இடங்களிலும் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

**தென்னாப்பிக்காவில்காந்தி:**

1892ல் போர்பந்தரிலுள்ள ஒரு முஸ்லீம் வணிகரின் வழக்கு சம்பந்தமாக தென்னாப்பிரிக்காவிலுள்ள நேட்டால் என்ற இடத்திற்குச் சென்றார். ஆனால் அங்கு வாழ்ந்த இந்தியர்களின் அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பினார். அரசாங்கம் இந்தியர்களை இழிவாகவும், கொடுமையாகவும் நடத்தியதால், அவர்களின் துன்பம் துடைக்க தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். 'நேட்டால் இந்திய காங்கிரஸ்' என்ற அமைப்பை நிறுவி ஆங்கிலேயரின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக போராடினார். சுமார் 21 ஆண்டுகள் இடைவிடாமல் போராடியதின் விளைவாக இந்தியர்களுக்கு எதிரான பல சட்டங்கள் நீக்கப்பட்டன. இந்திய மக்களின் இழிநிலையையும், துன்பத்தையும் போக்கினார்.

தென் ஆப்பிரிக்காவில்தான் முதன்முதலாக சத்தியாகிரகம் என்ற புதிய முறை இயக்கத்தைக் கையாண்டார். அன்பை அடிப்படையாகக் கொண்டு, பகைவனையும் நேசித்து வன்முறைகளில் ஈடுபடாமல் கொடுமைகளை அகற்ற உழைப்பதே சத்தியாகிரகத்தின் அடிப்படையாகும்.

**இந்தியா திரும்புதல்:**

தென் ஆப்பிரிக்காவின் தான் கையாண்டு வெற்றி கண்ட சத்தியாகிரகப் போராட்ட முறையை இந்தியாவிலும் கையாண்டு இந்தியாவின் விடுதலைக்காகப் போராட காந்திஜி தீர்மானித்து 1915 ஜனவரி மாத் 9ம் தேதி தென் ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பினார். அப்போது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி போராட்டத்தை நடத்தி சந்தது. இந்தியாவின் அடிமைத்தளையை நீக்க மிகவும் கடினமான பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்குமெனக் கண்டார். எனவே பொதுநலத்திற்காக தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்யக்கூடிய தொண்டர்களை உருவாக்க தீர்மானித்தார். அதற்காக 1915 மே 25ல் அகமதாபாத்தில் சபர்மதி ஆற்றின் அருகே ஆசிரமம் ஒன்றை நிறுவினார். கதர் இயக்கத்தைத் துவங்கினார். கிராமக் கைத்தொழிலுக்குப் புத்துயிர் அளித்தார். தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். தியாக உணர்ச்சி மக்களிடம் வளரச் செய்தார். எனவே தான் மக்கள் இவரை ‘மகாத்மா’ என்று போற்றினார்.

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு :**

1917ல் காந்தி பீஹார் மாநிலத்திலுள்ள சம்பரான் என்ற இடத்திலுள்ள அவுரி பயிரிடும் தோட்டத் தொழிலாளர்களின் துன்பங்களைப் போக்க சத்தியாகிரகம் நடத்தினார். அது பெரும் வெற்றி பெற்றது.இந்த வெற்றியே காந்தியை இந்திய அரசியல் தலைமைப் பதவிக்கு ஆளாக்கியது. 1919ல் ஆங்கிலேயர் கொண்டு வந்த ரௌலட் சட்டங்களை எதிர்த்தார். 1919 ஏப்ரல் 6ம் தேதி நாடு முழுவதும் ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தில் வன்முறை ஏற்பட்டதால் வருந்தி மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப்பின் ஆங்கிலேயரின் நேர்மைக் குணத்தில் நம்பிக்கை இழந்தார் காந்தி. எனவே ஆங்கில அரசுடன் ஒத்துழைக்காமலிருக்க 1920 வெப்டம்பர் மாதம் சட்ட மறுப்பு இயக்கத்தைத் துவங்கினார். இதிலும் சில இடங்களில் வன்முறை ஏற்பட்டதால் வருந்தி ஐந்து நாள் உ்ணணாவிரதம் இருந்தார். இப்போராட்டத்தில் காந்திக்கு ஆறு ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1924 செப்டம்பர் மாதம் நாட்டின் பல இடங்களில் இந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. ஏராளமானவர் கொல்லப்பட்டனர். இவற்றைத்தடுக்க செப்டம்பர் 24ம் தேதி முதல் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். 1932ல் தாழ்த்தப்பட்ட மக்களை இந்து சமூகத்திலிருந்து பிரித்து,தேர்தலில் தனித்தொகுதியாக்க அரசாங்கம் முயன்றது. இதை எதிர்த்து காந்தி பூனா நகரில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார். அரசு இதனால் தனது திட்டத்தைகைவிடவே உ்ணணாவிரதத்தை நிறுத்தினார். இதைத் தொடர்ந்து 1927ல் சைமன்குழு புறகணிப்பு, 1930ல் உப்பு சத்தியாகிரகம் ஆகிய இயக்கங்களை நடத்தினார். 1930ல் லண்டனில் ஆரம்பித்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

இரண்டாவது உலகப்போரின் போது இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரமடைந்தது. 1942 ஆகஸ்ட் 8ம் தேதி 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார் காந்தி. இதனால் காந்தி உட்பட, எல்லா தலைவர்களையும் பிடித்து சிறையிலடைந்தது அரசு. இவருடைய மனைவி கஸ்தூரிபாய் 1944 பிப்ரவரி 22ல் சிறையிலேயே காலமானார். 1945ல் காந்தி விடுதலை செய்யப்பட்டார். இரண்டாம் உலகப் போருக்குப்பின் இங்கிலாந்து தனது செல்வாக்கை இழந்ததாலும், அங்கு இந்தியாவுக்கு சுதந்திரம்வழங்குவதை ஆதரித்த தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்ததாலும் 1947 ஆகஸ்ட் 15ல் சுதந்திரமடைந்தது.

**காந்தியின்மரணம்:**

இந்தியா சுதந்திரமடைந்தாலும் இந்தியா– பாகிஸ்தான் என்ற இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இதனால் நாடெங்கும் இந்து முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டது. முஸ்லீம்களிடம் அன்பாக இருக்க வேண்டுமென்றும் பாகிஸ்தான் வளர்ச்சிக்காக இந்தியா 12 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் காந்திஜி கூறி வந்தார். இது இந்துக்களுக்கு கோபமூட்டியது. 1948 ஜனவரி 30ல் காந்திஜி பிராத்தனை கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த போது நாதூராம் கோட்சே என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். சிவகாருண்யமே வடிவாக, சத்தியமே குறியாக, சாந்தமே நெறியாக, ஏழைகளின் துயர் துடைப்பதே தொண்டாக வாழ்ந்த காந்தியடிகள் மறைந்தார்.

## முகமது அலிஜின்னா

**இளமைக் காலம்:**

இவர் 1876ல் கராச்சியில் கோஜா பிரிவைச் சேர்ந்த ஒரு வியாபாரக் குடும்பத்தில் பிறந்தார். தனது இளமைக்கால பள்ளிக் கல்வியை கராச்சியிலும்,லாகூரிலும் முடித்தார். சட்டக்கல்வி பயின்று 1896ல் வழக்கறிஞர் ஆனார். அப்போது 'வழக்கறிஞர் பட்டம் பெற்ற மிக இளமையான இந்தியர் இவரே' 1897ல் பம்பாய் சென்று ஒரு கிரிமினல் வழக்கறிஞராக தொழிலை ஆரம்பித்தார். நல்ல வருமானம் கிடைத்தது. இளமையிலேயே திருமணமாகிவிட்டது. இவரது முதல் மனைவி இறந்தபின் 1918ல் ரத்தன்பாய் என்ற கோடீஸ்வரியைத் திருமணம் செய்து கொண்டார். 1929ல் அவரும் இறந்துவிடவே, இவரது கடைசிக்காலம் வரை கவனித்துக் கொண்டது ஜின்னாவின் சகோதரி பாத்திமா ஆவார்.

**அரசியல் வாழ்க்கை:**

இவரது அரசியல் வாழ்க்கை 1905ல் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தபோது ஆரம்பமானது. கோபால கிருஷ்ண கோகலே, பெரோஷா மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். 1906ம் வருடம் 'முஸ்லீம் லீக்' என்ற அமைப்பு தோன்றுவதற்கு இவரும் காரணமாவார். " இந்துக்களும் முஸ்லீம்களும் நன்றாக சேர்ந்து சட்டத்திற்குட்பட்டு அரசியல் ரீதியாகப் போராடினால்தான் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற முடியும்" என்பது இவரது நம்பிக்கை. 1910ல் பம்பாய் நகர முஸ்லீம்களால் இம்பீரியல் கவுன்சிலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1912ல் வருடத்திற்குப் பிறகு அரசியலில் தீவிரமாகக்

குதித்தார். 1913ல் கராச்சியில் கூடிய முஸ்லீம் லீக் மாநாட்டில் பங்கு கொண்டு, லீக்கில் சேர்ந்தார். 1919ல் முஸ்லீம் லீக்கின் தலைவரானார்.

**லக்னோ உடன்படிக்கை: 1916**

விடுதலைப் போராட்டத்தில் காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஒன்றாக இணைந்து போராட வேண்டும் என்று ஜின்னா முயற்சி எடுத்ததின் விளைவாக ஏற்பட்டதே லக்னோ உடன்படிக்கை. இதன்படி முஸ்லீம்களுக்கு அரசு அளித்த தனித் தொகுதி முறையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது. அத்துடன் இதுவரைக்கும் கொடுக்கப்படாத பஞ்சாப், மத்திய மாகாணங்களிலும் தனித் தொகுதி தேர்தல் முறையை ஏற்கவும் காங்கிரஸ்சம்மதித்தது. இது 1919ம் வருடத்திய சட்டத்தில் இடம் பெற்றது. முஸ்லீம்களுக்கு அதிக பிரதிநிதத்துவம் ஏற்படுத்திக் கொடுத்த ஜின்னா முஸ்லீம்களால் புகழப்பட்டார். 'இந்து முஸ்லீம் ஒற்றுமையின் சிற்பி' என்று என்று புகழ்ந்தார் சரோஜினி நாயுடு. (பின்னால் நடக்கபோவது அவருக்கு தெரிவில்லை).

**விடுதலைப் போராட்டத்தில் ஜின்னா:**

1920ல் காந்திஜி ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் சேர மறுத்தார் ஜின்னா. ஆதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரசிலிருந்து விலகினார். துன்னாட்சி இயக்கத்திலும் பங்கு கொள்ளவில்லை. 1920 முதல் 1923 வரை எந்த பொது நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளாமல் இருந்தார். ஆனால் அடுத்த ஐந்து ஆண்டு காலம் வரை முஸ்லீம் மக்களை ஒன்றுபடுத்த முயற்சி எடுத்தார். முஸ்லீம் மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் ஒலே அமைப்பாக 'முஸ்லீம் லீக்கை' மாற்றினார்.

1928 டிசம்பரில் நேரு அறிக்கை கல்கத்தாவில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்டது. இதனை ஜின்னா எதிர்த்தார். அத்துடன் சில திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றில் ஒன்று முஸ்லீம்களாக இருக்க வேண்டும். என்பது இதனை மாநாடு ஏற்றுக் கொள்ளாததால் ஜின்னாவும், பல முஸ்லீம் தலைவர்களும் வெளியேறினர்.

**ஜின்னாவின் 14 அம்சத் திட்டம்: 1929**

நேரு அறிக்கையை நிராகரித்த ஜின்னா 1929ல் கூடிய முஸ்லீம் லீக் மாநாட்டில் தனது 14 அம்ச திட்டத்தை வெளியிட்டார். வருங்கால அரசியல் அமைப்பு எதுவும் இந்த 14 அமச அடிப்படையில் அமைந்ததால்தான் முஸ்லீம்கள் ஏற்பர் என்று முழங்கினார். அவரது பதினான்கு அமசங்கள் வருமாறு: "கூட்டாட்சி முறையில் எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் இருக்க வேண்டும். மத்திய சபையில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மாநிலங்களில் சிறுபான்மையினருக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும். முழு சமய உரிமை வழங்கவேண்டும். அரசாங்கப் பணியில் முஸ்லீம்களுக்குப் போதிய பங்கு தர வேண்டும். முஸ்லீம் கலாசார வளர்ச்சி, கல்வி வளர்ச்சிக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். மந்திரி சபைகளில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம்களாக இருக்கவேண்டும்." ஆகியவைகள் ஆகும். ஜின்னாவின் இந்த 14 அம்சத்திட்டத்தின் அடிப்படையில்தான் பாகிஸ்தான் கோரிக்கை எழுப்பும் வரையில் முஸ்லீம்கள் தங்கள் அரசியல் போராட்டத்தை அமைத்துக் கொண்டனர். 1930ல் லண்டனில்

நடைடிபற்ற வட்டமேஜை மாநாட்டில் ஜின்னாவின் பிடிவாதத்தில் சிறுபான்மையினர் பிரச்சனைக்கு எந்த முடிவும் காண முடியவில்லை.

**அரசியலில் தீவிர பங்கு:**

**1936ம்** ஆண்டு வரை கட்சியை பலப்படுத்தினார் ஜின்னா. முஸ்லீம் மக்களை நேரில் சென்று சந்தித்தார். 1936ல் நடைபெற்ற தேர்தலில் லீக் அதிக வெற்றி பெறவில்லை. ஆனால் முஸ்லீம் மக்களிடம் காணப்பட்ட சுதந்திர உணர்வையும் காங்கிரஸ் தலைவர்களிடையே காணப்பட்ட வேறுபாடுகளையும் பயன்படுத்திக் கொண்டார். 1939ல் 2ம் உலகப்போர் ஆரம்பித்தபோது, முஸ்லீம் மக்களின் ஆதரவைப் பெற ஆங்கிலேயர் முயன்றனர். அதற்காக ஜின்னாவை முஸ்லீம்களின் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். 1940 மார்ச் மாதம் கூடிய முஸ்லீம்லீக் மாநாட்டில் பத்து மில்லியன் முஸ்லீம் மக்களுக்கு தனி நாடு தேவை என்று முழக்கமிட்டார். இதனால் ஜின்னாவின் புகழ் உயர்ந்தது. பெருந்தலைவர் ஆகிவிட்டார். "இந்தியா என்பது ஒரு நாடு அல்ல, இரு நாடுகள்" என்ற அடிப்படையிலேயே எந்த அரசியல் திட்டமும் அமைய வேண்டுமென்றும், தங்களின் தலைவிதியை முஸ்லீம்களே நிர்ணயித்துத் தீர்ப்புக்கு அவர்கள் உட்பட மாட்டார்கள்" என்றும் அந்த மாநாட்டிலேயே அறிவித்தார். இவ்வாறு வகுப்புவாத அடிப்படையில் 'தனிநாடு' கோரிக்கையை அரசு முன் வைத்தார் ஜின்னா.

**பாகிஸ்தானின் உதயம் :**

1942 ஆகஸ்ட் 8ம் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றி ஆரம்பித்த வெள்ளையனே வெளியேறு போராட்டத்தை ஜின்னா எதிர்த்தார். முஸ்லீம்கள் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது ' என்று அறிவித்தார். வெள்ளையனே வெளியேறு என்று மக்கள் குரல் கொடுத்தபோது 'பிரித்துவிட்டு வெளியேறு' என்றார் ஜின்னா. இப்போராட்டம் அடக்கப்பட்டபின் காந்தி ஜின்னாவை சந்தித்தார். அப்போது காந்தியிடம் 'இந்துக்களும் முஸ்லீம்களும் தனித்தனி தேசிய இனங்கள். எனவே இந்தியாவைப் பிரிப்பதை தவிர வேறு பரிகாரமே இல்லை' என்று பிடிவாதமாகப் பேசினார். 1946ல் காபினட் குழுவின் பரிந்துரைகளையும் எதிர்த்தார். தனது தனிநாடு கோரிக்கையை வலியுறுத்த 1946 ஆகஸ்ட் 16ல் 'நேரடி நடவடிக்கை' என்ற பெயரில் கொலை, கொள்ளை, தீவைப்பில் ஈடுபட முஸ்லீம் மக்களைத் தூண்டிவிட்டார். கல்கத்தாவில் ரத்த ஆறே ஓடியது. வகுப்புக் கலவரங்கள் நாடு முழுவதும் பரவியதால் ஜின்னாவின் பிரிவினை வாத கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. மவுண்ட்பேட்டன் திட்டப்படி பாகிஸ்தான் உதயமானது.

1947 ஆகஸ்ட் 11ல் பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை கராச்சியில் கூடி ஜின்னாவைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. ஆகஸ்ட் 14ல் பாகிஸ்தான் ஆட்சிப் பொறுப்பை ஜின்னாவின் தலைமையில் பாகிஸ்தானியரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆகஸ்ட் 15-ல் பாக்கிஸ்தானின் முதல் தலைமை ஆளுனராகப் பதவி ஏற்றார் ஜின்னா வயதாகிவிட்டாலும் அதிக உழைப்பின் காரணமாகவும் இளைப்பு ஏற்பட்டு 1948-ல் ஜின்னா இறந்தார்.

# அலகு - V

## இரண்டாம் உலகப் போரும் விளைவுகளும்

1939, செப்டம்பரில்இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. ஜனநாய சுதந்திரத்தைக் காக்க விரும்புவதாகக் கூறி இங்கிலாந்தும் ஜெர்மனிக்கு எதிராகப் போரில் குதித்தது. அது சமயம் இந்திய அரசப் பிரதிநிதியாக இருந்த லின்லித்கோ பிரபு இந்தியத் தலைவர்களின் கருத்தையோ, ஒப்புதலையோ பெறாது இங்கிலாந்துக்கு ஆதரவாக இந்தியாவும் போரில் ஈடுபடும் என அறிவித்தார். இங்கிலாந்துக்கு எவ்வித நிபந்தனையுமின்றி முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தார் காந்திஜி. ஆனால் காங்கிரஸ்க் கட்வி அதனை ஆதரிக்கவில்லை. சுபாஸ் சந்திரபோஸ்,“இங்கிலாந்தின் துன்பமே இந்தியாவின் இன்பம்” என்றார். 1939, அக்டோபர் 10ல் கூடிய காங்கிரசு செயற்குழு ஜெர்மனியின் ஆக்கிரமிப்பைக் கண்டித்ததோடு, போரின் முடிவில் இந்தியாவுக்கு அரசியல் விடுதலை அளிக்கப்படுமென உறுதி கூறினாலே போரில் இங்கிலாந்துடன் ஒத்துழைக்க முடியும் எனவும் தீர்மானம் நிறைவேற்றியது..∴ “ஜனநாயக சுதந்திரத்துக்கும், பாசிச ஆக்கிரமிப்புக்குமிடையே நடைபெறும் போரில் ஜனநாயகத்தின் பக்கமே எங்கள் அனுதாபம் இருக்கும்” என்றார் நேரு.

வீட்டை எரிய விட்டு எரிகிற வீட்டில் எடுத்ததுவரை ஆதாயம் என்ற கொள்கையைக் கொண்டிருந்த ஜின்னா, முஸ்லீம்களின் நலனைப் பாதுகாக்கவும், முஸ்லீம் வீகின் ஒப்புதலின்றி அரசியல் சட்டம் இயற்றாதிருக்கவும் அரசு ஒப்புக் கொள்வதாயின் போர் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக அறிவித்தார். காங்கிரசு அமைச்சரவை பதவி விலகியதைக் கொண்டாட விரும்பிய அவர் டிசம்பர் 22ம் நாளை “விடுதலை நாளாக” கொண்டாடுமாறு முஸ்லீம்களைக் கேட்டுக் கொண்டார்.

1940ம் ஆண்டுப் போர் நிலைஇங்கிலாந்துக்குப் பாதகமாகவே இருந்தது. பல இடங்களிலும் அது தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. அந்நிலையிலும் இங்கிலாந்தின் அழிவில் இந்திய விடுதலையைத் தான் விரும்பவில்லை என்றார் காந்திஜி. அதே ஆண்டில் பூனாவில் கூடிய காங்கிரசுச் செயற்குழு, போருக்குப்பின் இந்திய விடுதலை உரிமையை ஏற்று அனைத்துக் கட்சியினரும் பங்கு கொள்ளும் ஒரு தேசிய அரசை அமைக்க ஆங்கில அரசு ஏற்றுக் கொள்வதாயின் போர் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதாக அறிவித்தது. அதே சமயம் இந்தியத் தலைவர்களோடு கருத்துப் பரிமாற்றம் கொண்ட அரசப்பிரதிநிதி ஆகஸ்டு 8ம் நாள் தனது “ஆகஸ்டு அறிவிப்பினை” வெளியிட்டார்.

**ஆகஸ்டு அறிவிப்பு:** அரசப் பிரதிநிதியின் ஆகஸ்டுஅறிவிப்பில் காணப்பட்டவை:

- இந்தியாவுக்கு தன்னாட்சி நிலை அளிப்பதில் பிரிட்டிஷ் அரசு உறுதி கொண்டுள்ளது.
- போருக்குப் பின் அனைத்துப் பிரிவினரின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் சட்ட அமைப்புக்குழு அமைக்கப்படும்.

- தலைமை ஆளுநரின் நிர்வாக சபையில் அனைத்துக் கட்சியினரும் இடம்பெறும் வகையில் அச்சபை விரிவாக்கப்படும்.
- அனைத்துக் கட்சியினரும் அடங்கிய போர் ஆலோசனைக் குழு அமைக்கப்படும்.
- ஒரு பெரும் பிரிவினரின் விருப்பத்துக்கு மாறாக மற்றொரு பிரிவினரிடம் ஆளும் உரிமையை ஒப்படைக்காது.

காங்கிரசின் தேசிய அரசுக் கொள்கையும், அரசியல் விடுதலைத் திட்டமும் ஆகஸ்டு அறிவிப்பில் இடம் பெறாததால் அவ்வறிவிப்பினை ஏற்க மறுத்துவிட்டது அக்கட்சி. தனது கொள்கைகளை அரசப் பிரதிநிதி ஏற்க மறுத்ததால் முஸ்லீம் லீகும் ஆகஸ்டு அறிவிப்பை ஏற்க மறுத்தது.

**தனி நபர் சத்தியாகிரகம்:** 1940, அக்டோபரில் இங்கிலாந்தின் போர் நிலை பெரும் பாதகமாயிருந்தது. ஆங்கில ஆட்சியை அடித்து நொறுக்கி அகற்றிட, அதுவே அருமையான வாய்ப்பு எனக் கருதினார் சுபாஸ் சந்திரபோஸ். ஆக்டோபர் 13ல் லார்தாவில் கூடிய காங்கிரசுச் செயங்குழுக் கூட்டத்தில் தனது “தனி நபர் சத்தியாகிரகத்” திட்டத்தை அறிவித்தார் காந்திஜி.பெருமளவு மக்கள் பங்கு கொள்ளும் இயக்கத்தைத் தொடங்கினால் அரசுக்குப் பெரும் தொல்லையாக இருக்கும் எனக் கருதியே இத்திட்டத்தை அறிவித்தார். காந்திஜியின் சீடரான வினோபாபாவே தனி நபர் சத்தியாக்கிரகத்தைத் துவக்கி வைத்தார். போர் எதிர்ப்புச் சொற்பொழிவுகளுக்காக வினோபா, நேரு போன்ற தலைவர்களும், 14,000 தனிநபர் சத்தியாக்கிரகிகளும் சிறை ஏகினர்.

**மக்**களின் நல்லெண்ணத்தை ஈட்ட விரும்பிய அரசப் பிரதிநிதி தனது நிர்வாகசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 7லிருந்து12 ஆக அதிகரித்து அப்பதவிகளில் இந்தியர்களை நியமித்தார். 1941 செம்பரில் அனைத்துத் தனிநபர் சத்தியாகிரகிகளையும் விடுதலை செய்தார். அதே சமயம் உலகப் போரில் அச்சு நாடுகளே தொடர்ந்து வெற்றிகளைக் குவித்திடக் கண்ட காங்கிரசுக் கட்சி தனது தனிநபர் சத்தியாகிரகத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

## கிரிப்ஸ் தூதுக்குழு (Cripps Mission)

**1942ல்** போர் நிலை மிக மோசமாயிருந்தது. தென்கிழக்கு ஆசியாவில் பெரும் வெற்றி பெற்ற ஜப்பான் இந்தியாவையும் தாக்கக் கூடிய அபாயம் எழுந்தது. நாஜிக்-பாசிசக் கொள்கைகளைக் காங்கிரசுக் கட்சி எதிர்த்த போதிலும் இங்கிலாந்தின் போர் நடவடிக்கைகளை ஆதரிக்க மறுத்தது. இந்தியத் தலைவர்களின் கோரிக்கைகளில் சிலவற்றை ஏற்குமாறு ஆங்கில ஆட்சியாளர்களை சீனத்தலைவர் சியாங்கேசேக் கேட்டு கொண்டார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட்டும் அடலாண்டிக் சாசனத்தின் அடிப்படையில் தனது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளும் உரிமை இந்தியாவுக்கும் அளிக்கப்படும் என்றார். அனைத்துக்கும் ஆமலாக சுபாஸ் சந்திரபோஸ் இந்தியாவை விட்டு ரகசியமாக வெளியேறி இங்கிலாந்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். ஆகவே இந்தியாவின்

ஒத்துழைப்பைப் பெறும் நோக்கோடு இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு முடிவு காண சர்ஸ்டா.ஃ.போர்டு கிரிப்ஸ் என்பவரை “கிரிப்ஸ் தூதுக்குழு” வாக இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் அனுப்பி வைத்தார். 1942, மார்ச் 22ல் இந்தியாவை அடைந்த கிரிப்ஸ் பல தலைவர்களுடன் பேச்சு நடத்தியபின் தனது திட்டத்தை அறிவித்தார்.

**கிரிப்ஸ் திட்டம்** : 1. போர் முடிந்ததும் இந்திய அரசியல் அமைப்பினை உருவாக்கிட ஓர் அமைப்பு தேர்தல் மூலம் உருவாக்கப்படும்.

2. இந்திய சுதேச அரசுகளும் அதில் இணைந்து கொள்ளலாம்.

3. புதிய அரசியல் அமைப்பினை ஏற்ப மறுக்கும் மாநிலங்கள் தனி ஆட்சி கொள்ள அனுமதிக்கப்படும்.

4. இன, சமயச் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்க உரிய உடன்பாடு செய்து கொள்ளப்படும்.

5. போர்க்கால இந்தியப் பாதுகாப்புப் பொறுப்பு இங்கிலாந்திடமே இருக்கும். ஆனால் மக்களின் ஒத்துழைப்புடன் போர்த் தேவைகளை இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும்.

6. போருக்குப் பின் தன்னாட்சி நிலை பெறும் இந்தியா, விரும்பினால் காமன்வெல்த்தில் சேரலாம்.

இந்தியாவில் பொறுப்புள்ள அரசு எப்போது ஏற்படும் என கிரிப்ஸ் திட்டம் அறிவிக்கவில்லை. அவர் அளித்ததெல்லாம் உறுதி மொழிச் சொற்களே. மாநிலங்களும், சுதேச அரசுகளும் தனியாட்சி பெற்றிட வகை செய்யப்பட்டது. அரசப் பிரதிநிதியின் தலைமையில் ஒரு தேசிய அரசு ஏற்படவேண்டுமென காங்கிரசின் கொள்கை ஏற்கப்படவில்லை. எனவே கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க காங்கிரசு கட்சி மறுத்தது. முஸ்லீம்களுக்கெனத் தனி அரசியல் அமைப்பு அவையை உருவாக்கிடவும், பாகிஸ்தான், அமைப்புக் கொள்கையை ஏற்றிடவும் மறுத்ததால் கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க முஸ்லீம் லீக் மறுத்தது. சீக்கியர்கள், தாழ்த்தப்பட்டோர் போன்ற மக்களும் தங்கள் நலனுக்கென அத்திட்டத்தில் எதுவுமில்லை எனக்கூறி அத்திட்டத்தினை நிராகரித்தனர். இந்நிலையில் கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைந்ததில் வியப்பேதுமில்லை.

### வெள்ளையனே வெளியேறு இயக்கம்

கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியுற்றதால் இந்திய அரசியல் சூழ்நிலை மிக மோசமாகியது. ஆங்கிலேயர்களின் நல்லெண்ணத்தை இந்தியர்கள் புரிந்து கொள்ளவில்லையென மேல் நாடுகளில் பிரச்சாரம் செய்யப்பட்டது. காங்கிரசுக் கட்சி இந்தியரின் தனிக் கட்சி அல்லவென்றும், அதனிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்கக் கூடாதெனவும் சிலர் கூறராயினர். இந்நிலையில் 1942, ஆகஸ்டு 8ல் பம்பாயில் நடைடிபற்ற காங்கிரசுக் கட்சி மாநாட்டில் வரலாற்றுப் புகழ்பெற்ற “இந்தியாவை விட்டு வெளியேறு” என்னும் தீர்மானம் நிறைவேறியது. அதுவே“வெள்ளையனே வெளியேறு” இயக்கமாயிற்று.

“இந்தியாவின் நலனுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றிக்கும் ஆங்கிலேயரின் ஆட்சி அகற்றப்படுவது அவசியம். இந்திய விடுதலைப்பெற மக்களுக்குள்ள உரிமையை காங்கிரசுக் கட்சி அங்கீகரித்து, வன்முறையற்ற அமைதி வழியில் மக்கள் பெரும் பங்கு பெறும் போராட்டத்தினைத் தொடங்க அனுமதிக்கிறது” என அத்தீர்மானம் கூறியது.

தீர்மானம் நிறைவேற்றிய பின்னும் அரசின் நிலையை அறியும் நோக்குடன் இயக்கத்தை உடனடியாகத் தொடங்கிடாது காங்கிரசுக் கட்சி காத்திருந்தது. இயக்கம் தொடங்கும் முன் அதை நசுக்கிட ஆட்சியாளர்கள் அவசரகோலமாகச் சில நடவடிக்கைகள் எடுத்தனர். மறுநாள் காலைக் கதிரவன் கண்ணில்படும் முன் காந்திஜியும், காங்கிரசுக்கட்சி செயற்குழு உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து கடைஅடைப்புக்கள், வேலை நிறுத்தங்கள், ஊர்வலங்கள், கண்டனக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியன நாடெங்கும் நிகழ்ந்தன. தடியடி, துப்பாக்கி, அசவரச் சட்டங்கள் ஆகியன அரசின் ஆயுதங்களாயின. ஆதனால் ஏறத்தாழ 2000 பேர் கொல்லப்பட்டனர். 6000 பேர் படுகாயமுற்றனர். 1,50,000 பேர் சிறை சென்றனர். 15 இலட்ச ரூபாய் கூட்டுத் தண்டனையாக வசூலிக்கப்பட்டது. காங்கிரசுக் கட்சியும் சட்டவிரோதக் கட்சியெனத் தடை செய்யப்பட்டது.

**ஆகஸ்டுப் புரட்சி**

காங்கிரசுத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து “ஆகஸ்டு புரட்சி” ஆரம்பித்தது. வழிகாட்டிட தலைவர் எவரும் இல்லா நிலையில் அது மக்களின் இயக்கமாயிற்று. புகைவண்டி நிலையங்களும், காவல் நிலையங்களும் எரிக்கப்பட்டன. மக்கள் தலைவர்களின் விடுதலை வேண்டி மாணவருலகின் மாண்புறு கிளர்ச்சியும் நடைடிபற்றது. பெரும் நகரங்களில் தொழில்கள் அனைத்தும் இயங்கா நிலை பெற்றன. தடையின்றித் தடியடிப்பிரயோகம் தொடர்ந்தது. 47 இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. மகளிர் பலரின் மானம் பறிபோயிற்று. 1028 பேர் கொல்லப்பட்டனர். 3215 பேர் படுகாயமுற்றனர். ஒரு இலட்சம் பேர் சிறை சென்றனர். பலரது சொத்துக்கள் பறிமுதலாயின. அருணாஆசப்அலி லோகியா, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆகியோர் தலைமறைவாகி அரசுக்கு ஓயாத தலைவலி கொடுத்தனர். ‘வரலாற்றில் பிரெஞ்சுப் புரட்சிக்கும், ரஷ்யப்புரட்சிக்கும் உள்ள அடம் ஆகஸ்டுப்புரட்சிக்கும் உண்டு’ என்றார் ஜெயப்பிரகாசர்.

ஆகஸ்டுப் புரட்சி மக்களின் வுரட்சியாகும். ஆமைதி வழியும் வன்முறையும் அதில் இரண்டறக் கலந்திருந்தன. அரசு நிர்வாகம் நிலைகுலைந்து போயிற்று. புரட்சித் தீயில் தன்னாட்சிநிலைக் கொள்கை சாம்பலாயிற்று. இங்கிலாந்து இந்தியாவை விட்டு வெளியேறிய தீரவேண்டும். இந்திய விடுதலை ஏற்பட்டே ஆகவேண்டும் என்ற நிலையே நிலைத்து நின்றது. அத்தகைய அறுதியான நிலைக்கு ஆகஸ்டுப் புரட்சி அடித்தளமாக அமைந்தது. இயக்கம் தொடங்கும்முன் தனது தொண்டர்களுக்கு “செய் அல்லது செத்துமடி” என்ற கொள்கையைக் கடைப் பிடிக்குமாறு கேட்டுக்கொண்ட காந்திஜி போராட்ட நிகழ்ச்சிகளைக் கண்டு மனம் வருந்தியவராய் 1943, பிப்ரவரி 10ல் தனது 21நாள் உண்ணா விரதத்தைத் தொடங்கினார். இடையிடையே அவர் இறந்துவிட்க்கூடும் என்ற அச்சநிலை உருவான போதிலும் இறுதியில்

அவரது உண்ணாவிரதம் வெற்றியுடன் முடிவுற்றது. ஆகஸ்டுப் புரட்சியில் முஸ்லீம் லீக் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருந்ததோடு ஆகஸ்டுப்புரட்சியை நசுக்கிடவும், போரில் வெற்றி பெறவும் ஆங்கில அரசுக்கு உறுதுணையும் செய்தது.

**இராஜாஜியின் திட்டம்**

குாங்கிரஸ்-முஸ்லீம் லீக் கருத்து வேறுபாட்டினை அகற்றிடவும், நாட்டில் செயலற்ற நிலையை மாற்றிடவும் 1944, மார்ச்சில் இராஜகோபாலாச்சாரி தனது “இராஜாஜி திட்டத்தை” வெளியிட்டார். அதன்படி: 1.காங்கிரசின் இடைக்கால அரசுக் கொள்கையை முஸ்லீம் லீக் ஏற்க வேண்டும். 2. முஸ்லீம் லீகின் தனிநாடு கோரிக்கை போருக்குப்பின் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். 3. நூட்டுப்பிரிவினை ஏற்கப்பட்டால், அருநாடுகளின் நலன்களைக் கொண்ட உடன்பாடு ஒன்று ஏற்படவேண்டும். 4. மக்களின் இடமாற்றம் கூயவிருப்பில் நடைபெற வேண்டும். இராஜாஜியின் திட்டம் ஒரு தற்கொலைத் திட்டமே எனக்கருதியே காங்கிரசு அதனை ஏற்க மறுக்கவே அவர் காங்கிரசிலிருந்தே வெளியேறினார். விடுதலைக் கொள்கையில் கருத்தொற்றுமை கண்டிட காந்திஜியும், ஜின்னாவும் நடத்திய பேச்சு வார்த்தைகள் பயனற்றுப் போயின.

**வேவல் திட்டம்**

இந்திய விடுதலை குறித்த தனது திட்டத்தினை அரசப்பிரதிநிதியான வேவல்பிரபு 1945, ஜீன், 14ல் வானொலி அறிக்கையின் மூலம் வெளியிட்டார். அதன்படி: 1. சும எண்ணிக்கையிலான இந்து-முஸ்லீம் உறுப்பினர்களைக் கொண்டதாக நிர்வாகசபை விரிவாக்கப்படும் 2. நிர்வாகசபை இடைக்கால அரசாகச் செயல்படும் 3. பின்னாளின் இந்தியர்கள் தங்களுக்கென தனியே ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கிக் கொள்ளலாம் 4. முாநிலங்களிலும் கலப்பு அமைச்சரவைகளே ஏற்படும்.

வேவல் திட்டம் வெளியானதும் சிறையிலிருந்த காங்கிரசுத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். அத்திட்டத்தைப் பற்றி விவாதிக்க 1945, ஜீன் 29ல் சிம்லாவில் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இந்தியத் தலைவர்கள் 22 பேர் கலந்துக்கொண்ட அம்மாநாட்டில் முஸ்லீம் லீக் ஏற்றுக்கொள்ளும் முஸ்லீம்களே முஸ்லீம்களின் பிரதிநிதிகளாக நிர்வாகசபையில் இடம்பெற வேண்டுமென ஜின்னா வலியுறுத்தியதால் வேவலின் திட்டம் தோல்வியுற்றது. இந்து-முஜ்லீம் வேற்றுமை ஆட்சியாளர்களுக்கு மகிழ்ச்சியையே அளித்தது.

**கடற்படையினர் புரட்சி**

1946, பிப்ரவரி, 19 கடற்படையினரின் புரட்சி பம்பாயில் நிகழ்ந்தது. ஆட்சியாளரின் இன வேறுபாட்டுக் கொள்கை, தேசீய இழிவுக் கொள்கை, உணவு-ஊதிய முறைகளில் வேறுபாடு போன்ற காரணங்களை முன்னிட்டுத் தொடங்கிய கடற்படையினரின் புரட்சி சென்னை, கல்கத்தா, கராச்சிப் பகுதிகளுக்கும் பரவியது. கடற்படையின் 22 கலங்கள் புரட்சியாளர்களின் ஆதிக்கத்தில் இயங்கின. புரட்சியை அடக்கப் படைபலம் பயன்படுத்தப்பட்டதில் 200 பேர் கொல்லப்பட்டனர். 1000 பேருக்கு ஆமல் படுகாயமுற்றனர். இறுதியில் வல்லபாய் படேல் தலையிட்டு வற்புறுத்தியதன்பேரில் புரட்சியாளர்கள் சரணடைந்தனர். இந்தியத் தேசீய இயக்கம் என்னும் நீரோட்டத்தால் இந்தியப்

படையினரும்இழுக்கப்படுவது கண்டு ஆங்கில ஆட்சியாளர் அதிர்சிசி அடைந்தனர். நேத்தாஜியின் தலைமையில் போர்க் காலத்தில் செயல்பட்ட இந்தியத் தேசியப் படையினரின் போர் முறைகள் கண்டு அவர்கள் விழிப்புற்றனர். அதிகார மாற்றத்தை அதிக நாட்களுக்கு நீடிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்தனர்.

## காபினெட் தூதுக்குழு

இரண்டாம் உலகப்போர் முடீவுற்றதும் இந்திய அரசியல் சூழ்நிலை முற்றிலும் மாறியது. இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் தொழிற்கட்சி வெற்றிபெற்று அட்லி பிரதமரானார். தேர்தல் கால உறுதி மொழிகளுக்கேற்ப இந்தியரின் தேவையை உணர்ந்து சில அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறையிலிருந்த அரசியல் தலைவர்கள் அனைவரையும் வேவல் பிரபு விடுதலை செய்தார். இந்தியாவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு சர் ஸ்டா.ஃபோர்டு கிரிப்ஸ், பெதிக்லாரன்ஸ், அலெக்நாண்டர் ஆகியோர் அடங்கிய தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1943, மார்ச், 23ல் இந்தியாவை அடைந்த அக்குழு மறுநாள் டில்லியை அடைந்தது. காங்கிரசு தலைவர்களுடனும், முஸ்லீம் லீக் தலைவர்களுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னும் ஒரு முடிவும் ஏற்படாது போகவே தனது தனித்திட்டத்தை அக்குழு அறிவித்தது. அக்குழுவின் பரிந்துரைகளாவன:

- பிரிட்டிஷ் இந்தியப் பகுதியும், சுதேச அரசுகளும் இணைந்த இந்திய நாடு உருவாக வேண்டும். வெளிவிவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து, நிதி போன்றவை அதன் பொறுப்பிலிருக்கும்.
- இந்திய, சுதேச அரசுப் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றம் ஏற்படும் வகுப்புவாதச் சிக்கல் குறித்த சட்டம் இரு பெரும் சமுதாய உறுப்பினர்களின் பெரும்பாலான உறுப்பினர்களும், சட்டமன்றத்தின் பெரும்பாலான உறுப்பினர்களும் இருக்கும்போதே நிறைவேற்றப்படும்.
- மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளைத் தவிர்த்து ஏனைய துறைகளனைத்தும் மாநிலங்களிடமே இருக்கும்.
- மாநிலங்கள் விரும்புமாயின் அவைக்குழுக்களாக இணைந்தும் இயங்கலாம்.
- மைய, மாநில அரசியல் அமைப்பினை 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்திட உரிய உரிமைகள் அதில் இடம் பெற்றிருக்க வேண்டும்.
- மறைமுகத் தேர்தலின் மூலம் 385 உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் அமைப்புச் சபை ஏற்படுத்தப்படும். அதில் மாநிலங்களின் உறுப்பினர்களாக 292 பேரும், சுதேச அரசுகளின் உறுப்பினர்களாக 93 பேரும் இருப்பர்.
- இனவழி மக்கள் தொகைக்கேற்ப மாநிலங்களின் உறுப்பினர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும.

- நாட்டுபிரிவினை வேண்டாத இந்து உறுப்பினர்களும், பாக்கிஸ்தான் பிரிவினை வேண்டும் முஸ்லீம உறுப்பினர்களும் மாநிலங்களுக்கான அரசியல் சட்டத்தை உருவாக்கிய பின்னர் மைய அரசின் அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும்.
- அரசியல் சட்டம் உருவாகும் வரை இந்தியர்களையே கொண்ட இடைக்கால அரசு ஒன்று ஏற்பட வேண்டும்.
- அதிகாரமாற்றம் குறித்து அரசியல் அமைப்பு அவைக்கும், ஆங்கில அரசுக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்பட வேண்டும்.

காபினெட் தூதுக்குழுவின் பரிந்துரைப்படி 1946, ஜீலையில் அரசியல் அமைப்பு அவைக்கான தேர்தல் நடைடிபற்றது. மாநிலங்களிலிருந்து 292 பேரும், தலைமை ஆணையாளர்களின் ஆட்சிப்பகுதிகளிலிருந்து 4 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் காங்கிரசுக்கு 212 இடங்களும், முஸ்லீம் லீக்கு 73 இடங்களும், பிற கட்சிகளுக்கு 11 இடங்களும் கிடைத்தன.

**இடைக்கால அரசு**

அமைச்சகத தூதுக்குழுவின் பரிந்துரைகளை இரு கட்சியினரும் தொடக்கத்தில் ஏற்றுக் கொண்டனர். 1946, ஆகஸ்டு, 12ல் ஓர் இடைக்கால அரசை அமைக்குமாறு ஜவஹர்லால் நேரு கேட்டுக் கொள்ளப்பட்டார். அவ்வரசில் இடம் பெறவேண்டிய முஸ்லீம் உறுப்பினர்களை நியமிக்கும் உரிமை முஸ்லீம் லீகுக்குஅளிக்கப்படவேண்டுமென ஜின்னா வலியுறுத்தியதை அரசப் பிரதிநிதியும், தூதுக்குழுவினரும் ஏற்க மறுக்கவே நேருவின் தலைமையிலான இடைக்கால அரசில் பங்கு கொள்ள முஸ்லீம் லீக் மறுத்துவிட்டது.

1946, ஆகஸ்டு16ம்நாளை ‘நேரடி செயல் நாள்’(Direct Action Day) என அறிவித்தார் ஜின்னா. ஆதன் விளைவாக நாடெங்கும் இந்து-முஸ்லீம் கலகங்கள் தோன்றின. அந்நாள் இந்திய வரலாற்றில் கறுப்புக்கறை படிந்த நாளாயிற்று. கல்கத்தாவில் மட்டும் ஏழாயிரம் பேர்இனக் கொலைக்கு ஆளாயினர். கொலையும், கொள்ளையும் அழிவின் எல்லையைச் சந்தித்தன. இறுதியில் அரசப்பிரதிநிதியின் தலையீடு காரணமாக இடைக்கால அரசில் இடம் பெற முஸ்லீம் லீக் இணங்கியது. அரசில் இடம் பெற்ற முஸ்லீம் லீகினர் அரசரின் நண்பர்களாகவும், உள்ளிருந்து குழிப்பறிப்போராகவும் இயங்கியதால் இடைக்கால அரசு தடுமாறியது.

**அட்லியின் அறிக்கை:**

காங்கிரசு-முஸ்லீம் லீக் வேறுபாடுகள் வளர்ந்தனவேயொழிய, அதனைத் தீர்க்கும் முயற்சியில் வேவல் தோல்வியே கண்டார். ஆட்சியாளன் குறிக்கோள் குறித்து இநரியரின் எண்ணத்தில் எள்ளளவு ஐயமும் இடம்பெறக்கூடாது எனக் கருதிய அட்லி 1947, பிப்ரவரி 20ல் இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதன்படி 1948ஈ ஜீன் இறுதிக்குள்ளாக இந்தியாவை விட்டு இங்கிலாந்து வெளியேறும் என அறிவிக்கப்பட்டது.

**மௌண்ட்பேட்டன் திட்டம்**

அட்லியின் அறிக்கையொட்டி இந்தியாவின் இறுதிஅரசப் பிரதிநிதியாக மௌண்ட்பேட்டன் பிரபு பதவி ஏற்றார். இந்திய விடுதலையை விரைவு படுத்தும் நோக்குடன் பதவியேற்ற அவர் காங்கிரசு முஸ்லீம் லீக் தலைவர்களுடன் உரையாடி ஒரு முடிவு கண்டார். இங்கிலாந்து சென்று தனது தாயன அரசுடன் கலந்து ஆலோசித்த பின் தனது திட்டத்தைஅறிவித்தார். அதன்படி,1) இந்தியத் துணைக்கண்டம் இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிக்கப்படும் 2) இந்து, முஸ்லீம் மக்களின் பெரும்பான்மை அடிப்படையில் வங்காளமும், பஞ்சாபும் பிரிக்கப்படும். 3) வடமேற்கு எல்லைப்புற மக்களின் முடிவு அறிய வாக்கெடுப்பு நடத்தப்படும்.4) அஸ்ஸாமின் கில்கட் மாவட்டத்திலும் மக்கள் விருப்பமறிய வாக்கெடுப்பு நடத்தப்படும். 5) இந்திய விடுதலைக்குப்பின் காமன்வெல்த்தில் சேருவதா, இல்லையா என்பதை அந்நாடு முடிவு செய்யும் 6) எல்லைச் சிக்கல் குறித்து ஒரு முடிவு காண ஒரு எல்லைக்குழு ஏற்படும்.

மௌண்ட் பேட்டனின் திட்டத்தை அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்த வேண்டிய பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மக்கள் முடிவு அறியப்பட்டது. அதன்பின்னர் 1947, ஜீலை, 18ல் இங்கிலாந்து பாராளுமன்றம் இந்திய விடுதலைச் சட்டத்தை நிறைவேற்றியது.

**மாநிலங்களின் மறு சீரமைப்பு**

1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா சுதந்திரம் பெற்ற போது சுதேச சமஸ்தானங்களின் எண்ணிக்கை மொத்தம் 554 ஆக இருந்தன. எனவே இந்தியா சுதந்திரம் அடைந்த உடனே முதலாவது தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை இந்திய சமஸ்தானங்களை இணைப்பதாகும். இந்த சமஸ்தானங்களின் மொத்தப் பரப்பளவு 5 லட்சம் சதுர மைல்கள். இதில் 8 கோடியே 65 லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவைகளி சிறியதும் பெரியதுமாக இந்தியா மூீவதும் பரவிக்கிடந்தன. இவைகளை ஒன்று சேர்ந்து இந்தியாவுடன் இணைத்த பெருமை வல்லபாய் படலையே சாரும்.

**சமஸ்தானங்களில் ஒருங்கிணைப்பு:**

இந்தியா பாகிஸ்தான் பிரிவினை உறுதி என்ற சூழ்நிலையில் சமஸ்தானங்கள் தங்களுக்குச் சுதந்திரமாகச் செயல்பட உரிமை உண்டுஎன்று நினைத்தன. இதனை இந்திய தேசியக் காங்கிரசும், தலைவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. “இந்தியா டொமினியாக இருந்தபோது பிரிட்டிஷ் அரசரின் மேலாதிக்கத்தைகீழ் இருந்த சமஸ்தானங்கள். சுதந்திரமடைந்தபின் பிரிட்டிஷ் அரசரின் வாரிசாக ஏற்பட்ட இந்திய அரசின் மேலாதிக்கத்தின் கீழ்தான் இருக்கும். எந்த நிலையிலும் சமஸ்தானங்கள் சுதந்திரமாக இருக்க முடியாது” என்று 1947 ஜுன் 17ல் டாக்டர். அம்பேத்கார் தான் வெளியிட்ட அறிக்கையில் கூறினார்.

மத்தியஅரசக்கும் சமஸ்தானங்களுக்குமிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக 19476 ஜீலை 5ல் சர்தார் வல்லபாய் படேலின் தலைமையில் 'மாநிலங்களுக்கான அமைச்சகம்' ஒன்று அமைக்கப்பட்டது. இந்த அமைச்சகத்தின் செயலராக வி.பி. மேனன் என்ற அனுபவமும் திறமையும் பெற்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். படேல் தனது அறிவுக் கூர்மையாலும், அரசியல் அனுபவத்தாலும் 'ஐக்கிய இந்தியா' என்ற குறிக்கோளை அடைய வெகு வேகமாகச் செயலில் ஈடுபட்டார்.

சுதேச மன்னர்கள் இந்தியாவுடன் சேரும் வகையில் 'இணைவுப் பத்திரம்'(Instrument of Accession) ஒன்று உருவாக்கப்பட்டது. அதன்படி சுதேச அரசுகள் பாதுகாப்பு, அயல் நாட்டுறவு போக்குவரத்துச் செய்தித்தொடர்புகள் ஆகியவற்றை இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் மற்ற விவகாரங்களில் தங்கள் விருப்பம் போல் நடந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. மேலும் படேல் சுதேச மன்னர்களுக்கு' இனத்தால் மொழியால், பண்பாடு கலாச்சாரத்தால்' ஒன்றுபட்ட மக்களை இணைத்து ஐக்கிய இந்தியாவை உருவாக்க ஒத்துழைப்பு தரும்படி வேண்டுகொள் விடுத்தார். அவருடைய முயற்சியின் விளைவாக பல சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைந்தன. இணைய மறுத்த மன்னர்கள் படேலின் எச்சரிக்கையாலும் மக்களின் எதிர்ப்பாலும், தவிர்க்க முடியாத ஆபத்துக்களாலும் இந்திய அரசுடன் இணைவதற்குச் சம்மதித்தனர்.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட சமஸ்தானங்கள் இந்திய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டன. இறுதியாக இந்தியாவில் கீழ்க்கண்ட நான்கு வகையான மகாணங்கள் அமைக்கப்பட்டன.

பிரிவு 1: இஸ்ஸாம், பீகார், பம்பாய், மத்தியப் பிரதேசம், சென்னை, ஒரிசா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், பஞ்சாப்.

பிரிவு 2: ஹைதராபாத்,ஜம்மு காஷ்மீர், மத்திய பாரத், மைசூர், பாடியாலா, கிழக்கு பஞ்சாப் மாகாணக்கூட்டு, ராஜஸ்தான், சௌராஷ்டிரா, திருவாங்கூர்-கொச்சின்.

பிரிவு 3: ஆஜ்மீர், போபால், கூர்க், டில்லி,'ஹிமாசல் பிரதேசம் சுட்ச், விந்தியப் பிரதேசம், மணிப்பூர், திரிபூரா.

பிரிவு 4: அந்தமான் நிகோபார் தீவுகள்.

இவ்வாறு சர்தார்படேல் பொறுப்பேற்ற ஓராண்டு காலத்திற்குள் ஜினகாத், ஐதராபாத் காஷ்மீர் ஆகிய அரசுகளைத் தவிர, மற்ற எல்லா சுதேச அரசுகளும் (1949 நவம்பருக்குள்) இந்தியாவுடன் இணைந்துவிட்டன. இந்த மாகாணங்களின் ஒருங்கிணைப்பு இந்திய வரலாற்றில் நடைபெற்றுள்ள முக்கிய நிகழ்ச்சியாகும். ஆனால் மாகாணங்களின் இணைப்புடன் வேலை முடிந்துவிடவில்லை. இந்த மகாணங்களில் இந்திய அரசியலமைப்பை நிலை நிறுத்துவதும், பொறுப்புள்ள அரசாங்கத்தையும் நிர்வாகத்தையும் அமைப்பது மிக முக்கியமான பணியாகும்.

**மாநிலங்களின் மறுசீரமைப்பு:**

ஒருங்கிணைப்பின்படி புதிதாக ஒருவான மாகாணங்கள் பரப்பிலும் மக்கள் தொகையிலும், பொருளாதார முறையிலும் முக்கியமாக மொழி வகையிலும் முரண்பட்டுக் காணப்பட்டன. எந்த ஒரு அடிப்படையான கொள்கையில் இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை. எனவே மாகாணங்களின் எல்லைகளை ஆமலும் சிறப்பாகவும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும் மாற்றி அமைக்க வேண்டுமென்ற பொதுவான கருத்து நிலவியது. சுதந்திரம் பெறும் முன்னரே இந்தியாவில் மொழி அடிப்படையில் மாகாணங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை 1920ல் நாகபுரியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் விடுத்திருந்தது. ஆனால் இப்போது உள்ள சூழ்நிலையில் மொழி அடிப்படையில் மாகாணங்களைப் பிரித்தால் அது மீண்டம் பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று தலைவா்கள் நினைத்தாா்கள்.

மாநிலங்களின் மறுசீரமைப்பிற்காக தாா் குழு என்ற 'மாநில அமைப்புக்குழு' உருவாக்கப்பட்டது. ஆனால் அக்குழு மொழி அடிப்படையில் மாகாணங்கள் மாற்றி அமைக்கப்படுவதை ஆதரிக்கவில்லை. அக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்வதற்கு நேரு, படேல், பட்டாபி சீதாராமையா ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

**மொழிவழி மாநில சீரமைப்பு:**

மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டால் அது நிா்வாக எளிமைக்கு உகந்தது என்று கருதப்பட்டது. மாநில மொழியை ஒவ்வொரு மாநிலமும் அரசாங்க அலுவல்களுக்குப் பயன்படுத்தி வந்தால் 'பாமர மனிதா்களின் அரசாங்கம்' என்ற பெருமை மாநிலங்களுக்குக் கிடைக்கும். மேலும் ஒரு மாநிலத்தில் குடிமக்களின் முழு ஆளுமை வளா்ச்சி தாய்மொழி வழிக் கல்வியாக தான் இயலும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மொழிவாரி மாகாண அமைப்புக்கு வித்திட்டவா் ஆந்திர மாநிலத்தைச் சோ்ந்த பொட்டி ஸ்ரீராமலு என்பவராவாா். இவா் மொழி அடிப்படையில் ஆந்திர மாநிலப் பிரிவினை கோரி 57 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தே 1952 டிசம்பா் 15ம் தேதி உயிா் விட்டாா். எனவே இந்திய அரசானது கொள்கை அளவில் மொழி வாரி மாகாண சீரமைப்பிற்கு ஒப்புக் கொண்டது. இவ்வாறு 1953ல் முதன் முதலாக ஆந்திர அமாழி வாரி அமைக்கப்பட்டது. பின்னா் அமைக்கப்பட்ட மொழி வாரி மாநில மறுசீரமைப்புக்குழுவின் பரிந்துரையின்படி 20 மாவட்டங்களையும், 2,75,000 சதுர மைல்களையும் கொண்ட புதிய ஆந்திர மாநிலம் 1956ம் நவம்பா் 1ம் தேதி உதயமானது.

**மொழிவழி மாநில மறுசீரமைப்புக்குக்குழு: 1953**

ஆந்திரா பெற்ற வெற்றி பிற மாகாணங்களிலும் மொழிவரி மாகாணங்களுக்கான கிளா்ச்சிகள் தொடங்கக் காரணமானது. எனவே இதைப்பற்றி ஆராய மாநிலங்களின் மறுசீரமைப்புக்குழு அமைப்பாக 1953 டிசம்பா் 22ம் தேதி அப்போதைய பிரதமா் நேரு பாராளுமன்றத்தில் அறிவித்தாா். அதன்படி பசல் அலி, ஹிருதய நாத் குன்ஸ்ரு, சா்தாா் K.M.

பணிக்கா் ஆகியோா் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு 1955 செப்டம்பா் 30ல் தனது அறிக்கையை சமா்ப்பித்தது. மொழி அடிப்படையில் மாகாணங்களை மாற்றியமைக்கப் பரிந்துரை செய்தது. மக்களின் மனநிலை, நிர்வாகம், நீதி, தேசிய உணா்வு போன்ற அனைத்தும் ஆராய்ந்து அதன் அடிப்படையிலேயே தனது பரிந்துரைகளைச் சமா்ப்பித்தது. அவை பின்வருமாறு.

- எல்லா மாநிலங்களும் சமமாக நடத்தப்படவேண்டும் அவைகளுக்கு மத்தியக் கூட்டமைப்பில் ஒரே சீரான தகுதி அளிக்கப்பட வேண்டும்.
- இந்தியா 16 மாநிலங்களாகவும் மூன்று மத்திய நிர்வாகப் பகுதிகளாகவும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
- திருவாங்கூர், கொச்சி, மைசூர், குடகுகட்ச், மத்தியபாரத்,போபால், பாட்டியாலா, கிழக்கு பஞ்சாப், இமாசல பிரதேசம், ஆஜ்மீர் ஆகியவை முற்றிலுமாக மாற்றி அமைக்கபட வேண்டும்.
- பி-பிரிவு மாநிலங்களில் ஜனாதிபதியின் எஜெண்டாக செயல்பட்ட ராஜபிரமுக்குகள் என்று அமைப்பை ஒழித்துவிட வேண்டும்.
- இந்தியைத் தவிர பிற அமாழிகளைக் கற்பிப்பதற்கும், ஆங்கிலத்தைத் தொடா்ந்து வைத்துக் கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட வேண்டும்.
-

**மாநில மறு சீரமைப்புச் சட்டம் : 1956**

இந்தக் குழுவின் அறிக்கையைப்பற்றி பல கண்டணங்களும் புகழுரைகளும் குவிந்தன. எதிா்கட்சிகள் இப்பிரச்சனையை பெரிதுபடுத்தி காங்கிரஸ் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முயன்றன. மேலும் அவை மொழி வெறி உணா்வைத் தீவிரமாகப் பரப்பின. எனவே பாராளுமன்றம் 1956 ஜீலை மாதம் மேற்கண்ட குழுவின் பரிந்துரைகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்து 'மாநிலங்களின் மறுசீரமைப்புச் சட்டத்தை' இயற்றியது. 1956 ஆகஸ்ட் 31ல் அது சட்டமானது.

இந்தச் சட்டத்தின்படி, 14 மாகாணங்களும், ஐந்து மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளும் உருவாக்கப்பட்டன. பிரிவு 1 மாநிலங்களான: ஆந்திரப் பிரதேசம், சென்னை, அஸ்ஸாம், பீகார், பம்பாய், கேரளா, மத்திய பிரதேசம், மைசூர், பஞ்சாப், இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய 13 மாநிலங்களும், ஒரு 2 பிரிவு மாநிலமும், டில்லி, இமாசல பிரதேசம், மணிப்பூர், திரிபுரா மற்றும் இலட்சத் தீவு, மினிக்காய் அமிந்தித் தீவுகள், ஆகிய 5 மத்திய அரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் உருவாக்கப்பட்டன. மேலும் இந்தியா ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு மத்திய அமைச்சா் தலைவராகவும் அம்மாநிலங்களின் முதல் மந்திரிகளையும் ஒவ்வொரு மாநிலத்திலிமிருந்து இரண்டு பிற அமைச்சா்களையும் கொண்ட 'மண்டலக்குழு' அமைக்கப்பட்டது. இக்குழுக்கள் சம்பந்தப்பட்ட மண்டலங்களின் எல்லைத் தகராறுகள், சமூகத் திட்டங்கள், போக்குவரத்து ஆகியவை பற்றி விவாதிக்கவும் மத்திய அரசுக்கு சில பிரச்சனைகள் குறித்து ஆலோசனை கூறவும் அழைக்கப்பட்டன.

இந்த மொழிவாரி மாநில மறுசீரமைப்பு சில மாநிலங்களைத் திருப்திப்படுத்தவில்லை. உதாரணமாக மராத்தி பேசும் மக்களும், குஜராத்தி பேசும் மக்களும் ஒன்றுபட்டு வாழ விரும்பவில்லை. எனவே மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து குஜராத் 1960ல் தனி மாநிலமாகப் பிரிந்தது. 1966ல் பஞ்சாபும் பிரிக்கப்பட்டு ஹரியானா என்ற புதிய மாநிலம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு பல புதிய மாநிலங்களும், மத்திய நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளும் உருவாக்கப்பட்டன.

தற்சமயம் இந்தியாவில் அருணாசலப்பிரதேசம், அஸ்ஸாம், ஆந்திரப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், கோவா, சிக்கிம், தமிழ்நாடு, திரிபுரா, நாகலாந்து, பஞ்சாப், பீகார், மத்தியபிரதேசம், மணிப்பூர், மகாராஷ்டிரம், பிசோரம், மேகாலாயர், மேற்குவங்காளம், ராஜஸ்தான், ஜம்முகாஷ்மீர், ஹரியானா, ஹிமாச்சலப்பிரதேசம், ஆகிய மாநிலங்களும், அந்தமான் நிக்கோபார் தீவுகள், இலட்சத் தீவுகள் சண்டிக்கார், டாமன் & டையூ தாத்ரா & ஹவேலி பாண்டிச்சேரி ஆகிய ஆறு மத்திய ஆட்சிப் பகுதிகளும், தேசியத் தலைநகரப் பகுதியாக டில்லியும் உள்ளன. மாநிலங்களின் நிர்வாகத்தை ஆளுநர், மாநலங்களின் சட்டசபைக்குப் பொறுப்புள்ள அமைச்சர் குழுவைக் கொண்டு கவனித்தார். ஆனால் மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட 'துணைநிலை ஆளுநர்' மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

## ஐந்தாண்டுத் திட்டங்கள்

இந்தியா விடுதலையடைந்தபின் 1950 மார்ச்சில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் ஒரு 'திட்டக்குழு' அமைக்கப்பட்டது. நாட்டு வளங்களை முழுமையாகவும், செம்மையாகவும் பயன்படுத்த ஒரு திட்டத்தைத் தயாரிப்பதுவே இக்குழுவின் குறிக்கோளாக இருந்தது. அதன்படி பல ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாயின. இந்திய ஐந்தாண்டுத் திட்டமானது 'மக்காளட்சி முறைத் திட்டமாகும்'. ஏனெனில் திட்டத்தை வகுப்பதிலும், நிறைவேற்றுவதிலும், மக்களின் கருத்துக்களும் உதவியும் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இந்தியத் திட்டமானது 'நாடு தழுவிய திட்டமன்று' இந்திய பொருளாதாரத்தின் எல்லா துறைகளுக்கும் கூட்டாகத் திட்டங்கள் இயற்றப்படுவதில்லை. பொதுத்துறைக்கு மட்டுமே திட்டம் வரையப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இந்திய திட்டமானது ஒரு 'சமத்துவத்திட்ட' மாகும். வசதியும் வருமானமும் குறைந்த பெரும்பான்மையான குடிமக்களுக்குத் திட்டத்தின் பயன்கள் கிடைக்க வேண்டும். எல்லா மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரவேண்டும். செல்வ வருமான ஏற்றத்தாழ்வுகள் குறைய வேண்டும் என்பன போன்ற பல சமத்துவ இயல்புகள் இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் உள்ளார்ந்திருக்கின்றன.

**திட்ட அமைப்பு:**

திட்டமிடுவதற்கு அடிப்படை புள்ளி விரங்களே! இந்த புள்ளி விபரங்களை திரட்டுவதற்காக இந்தியாவில் பல அமைப்புகள் உள்ளன. மத்திய புள்ளி விபரக்கழகம், தேசியத் திட்டக் குழுவின் திட்ட ஆராய்ச்சிக்குழு, மைய நீர் மின்சாரக்குழு போன்ற குழுக்கள் மூலமாக எல்லா வகையான அடிப்படையான புள்ளி விாரங்கள் திரட்டப்படுகின்றன. இந்தப்புள்ளி விபரங்களின் அடிப்படையிலேயே எதிர்பார்க்கப்படும் மக்கள் பெருக்கம், உற்பத்தி பெருக்கம் வீதம், விரும்பப்படும் வளர்ச்சி வீதம், திட்டத்தில் சிறப்பிடம் கொடுக்கப்படத்தக்கவை. பொருளாதார வளர்ச்சியின் போக்கு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்களை வரைகின்றனர். நிதிமூலவளங்கள், பருப்பொருள் சார்ந்த மூலவளங்கள் ஆகியவற்றின் இருப்பு, எதிர்பார்க்கப்படும் அளவு, காலம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு திட்டத்தின் முக்கியமான நோக்கங்களும், இலக்குகளும் வரையறுக்கப்படுகின்றன.

**முதல் ஐந்தாண்டுத் திட்டம் : 1951-56**

இந்தியா சுதரந்திரமடைந்போது மிகவும் மோசமான பொருளாதார நிலையிலிருந்தது. பாகிஸ்தான் பிரிவினையால் செழிப்பு மிக்க வேளாண்மை விளைப்பொருள் நிலங்கள் யாவும் பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்து விட்டன. அத்துடன் அந்த நாட்டிலிருந்து ஏராளமான அகதிகள் இந்தியாவுக்குள் வந்து கொண்டிருந்தனர். எனவே வளர்ச்சிக்கு அடிப்படைத் தெவையான, சமுதாய பொருளாதார பின்னமைப்புகளைத் தோற்றுவித்தல், அகதிகள் புனர்வாழ்வு, உணர்வுப் பிரச்சனைகளைத் தீர்த்தல், உள்ளமைப்பு வசதிகளை அதிகரித்தல், ஆகியவையே முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் திட்ட படிவத்தின் அடிப்படையில் அமைக்கப்படவில்லையென்றாலும், அதில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கருத்துக்களை ஆராயும்போது ஏரோடு-தோமர் (Herod-Domar model) அடிப்படையில் அமைந்துள்ளது என்பது பொருளியல் வல்லுநர்களின் கருத்து.

ஏரோடு-தோமர் பொருளாதார வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையில், முதலீட்டிற்கும், வெளியீட்டிற்கும் இடையில் தேவைப்படும் ‘கட்டுமானக் காலம்’ இரண்டு ஆண்டுகள் எனவும், திட்டகால சேமிப்பு வீதம் 3:1 ஆகப் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஆண்டொன்றுக்கு 2 % முதல் 2 ¼ வரை பெருகும் என்றும் ‘இந்திய மையத் திட்டக்குழு’ மதிப்பிட்டது. இவைகளையே முதலாம் ஐந்தாண்டு திட்டகாலத்தில் பலனாக எதிர்பார்த்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறை 1960 கோடி ரூபாய் முதலீடும், தனியார் துறைகள் 1800 கோடி ரூபாய் முதலீடும் செய்தன. இத்திட்டத்தில் விவசாயம் முன்னுரிமை பெற்றது. சமூகக் கூட்டமைப்பை உருவாக்குதல் அடுத்த முன்னுரிமை பெற்றது. நாடு முழுவதும் வேளாண்மைத் திறனை வளர்க்கவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் சமூக நலத்திட்டங்கள் செயலுருப் பெற்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. உணவு உற்பத்தியின் இலக்கு 61.6 மில்லியன் டன்கள். ஆனால் அமைந்தது 65.8 மில்லியன் டன் ஆகும். நாட்டு வருமான உயர்வு இலக்கு 11 % என்றாலும் கைகூடியது 18% ஆகும். இதனால் அடுத்த திட்டங்களுக்கு நல்ல ஊக்கம் கிடைத்தது.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் : 1956-61**

இரண்டாவது ஐந்தாண்டு திட்ட வடிவத்தை ‘மகலனோபிசு’ என்பவர் உருவாக்கினார். அவர் 1952ல் தனது ‘கணக்குத் திட்ட படிவத்தை’ வெளியிட்டார். ‘நான்கு துறைத் திட்ட படிவம்’ ஒன்றை அமைத்து ஒவ்வொரு துறைக்கும் அதிக அளவு எவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு துறையும் எவ்வளவு வருமானத்தையும் வேலையையும் தோற்றுவிக்கும் என்றும் கணக்கிட்டுக் குறிப்பிட்டார்.

இரண்டாவது திட்டத்தின் நோக்கம் முதல் திட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. விரைந்து தொழில் மயமாக்கலுக்குத் தளம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. “கனரகப் பொருள் உற்பத்தியில் பெருமளவு முதலீடு செய்தால் வேலை வாய்ப்புகள் பெருகும். புதிய தொழிலாளர்கள் வேலை பெறுவார்கள். முன்னேற விளைவுகள் தானாமக்களைச் சென்றடையும் என்பது பேராவிரியர் மகலநோபிசு அவர்களின் எண்ணமாகும். இத்திட்டத்தில் அரசாங்கம் 4800 கோடி ரூபாயும், தனியார் நிறுவனங்கள் 3100 கோடி ரூபாயும் முதலீடு செய்தன. இந்த திட்டகாலத்தில் நட்பு நாடுகளிடம் கடன் பெற்று, பிலாய்,ரூர்கேலா, துர்காபூர் ஆகிய இடங்களில் இரும்பு எ஼கு தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. செய்தித் தொடர்பிலும் போக்குவரத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டது. எட்டு மில்லியன் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. கப்பல் கட்டும் தொழிற்சாலை ஒன்று புதிதாக உருவாகியது. குப்பல் ஏற்றுமதியும் இரண்டு மடங்கானது. அஞ்சலங்களும், தொலைபேசி அலுவலகங்களும் இரண்டு மடங்காக உயர்ந்தன.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்: 1961-66**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கென ஒரு தனித்திட்ட படிவம் பயன்படுத்தப்படவில்லை. என்றாலும் மகலனோபிசின் நான்கு துறைத் திட்டப்படிவம் ஜே.சாண்டியின் செய்முறைதிட்டப்படிவம் சக்கரவர்த்தி என்பவரின் திட்டப்படிவம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டம் வரையப்பட்டது.

தற்சார்பும், தன்னாக்கத்திறனும் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவது, சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் வாயப்பளித்து அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது,திட்டங்களின் நிதியாக்கத்தில் அயல்நாட்டு உதவியின் பங்கினைக் குறைக்க ஏற்றுமதிகளை அதிகரிப்பது. தோழில்நுட்ப மற்றும் அறிவியல் கல்வியை வளரச் செய்து மனித வளத்தை மேம்படுத்துவது, வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான உணவு உற்பத்தி செய்தல், இந்தியாவின் ஆதாரக் தொழில்களான எ஼கு, எரிபொருள் மின்சக்தி,

இரசாயனப் பொருட்களின் உற்பத்தி இவற்றை விரிபடுத்துதல் ஆகியவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களாக அமைந்தன. இத்திட்டத்தின் மொத்த செலவு 12,767 கோடி ரூபாய் ஆகும்.

ஆனால் திட்டகால, இறுதியில் ஆண்டு நாட்டு வருமான உயர்வு விகிதம் எதிர்பார்க்கப்பட்ட 5% அளவுக்கு உயரவில்லை. உணவு உற்பத்தி ஆண்டொன்றுக்கு 2% (இலக்கு 6%) சராசரி தொழில் உற்பத்தி 5.7 % (இலக்கு 14%) முமே உயர்ந்தது. இவ்வாறு

தற்சார்பு நோக்கத்தை அடைய முடியாமல் போய்விட்டது. அதற்கு முக்கிய காரணம் 1962ல் சீனாவுடனும் 1965ல் பாகிஸ்தானுடன் ஏற்பட்ட போர்களே காரணம். இவற்றுடன் நாட்டின் ஏற்பட்ட வறட்சியினாலும் பெருமளவில் பற்றாக்குறையும், பண வீக்கமும், ஏற்பட்டன. மொத்தத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முன்னேற்றத்திட்டமாக அமையவில்லை. இத்திட்ட காலத்தில் கடைசி ஆண்டுகளில் மேலும் பல இன்னல்கள் ஏற்பட்டதால் நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் தள்ளி வைக்கப்பட்டது.

**ஆண்டுத் திட்டங்கள்: 1966-67, 1967-68, 1968-69**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தோன்றிய எதிர்பாராத நிகழ்வுகளால் ஒவ்வொரு ஆண்டின் தேவைக்கேற்ப ஆண்டுதோறும் திட்டத்தைத் தீட்ட அரசு தீர்மானித்தது.இதன்படி ஆண்டுத் திட்டங்கள் செயல்பட ஆரம்பித்தன. பணவீக்கமில்லாத நியாயமான வளர்ச்சி வீதங்களை பெற்று வளர்ந்து வரும் சமுதாயத்தை வலுப்படுத்துவதே இந்த ஆண்டுத் திட்டங்களின் நோக்கமாகும். ஏற்கெனவே உருவாக்கப்பட்ட உள்ளமைப்புகளை முழுமையாகப் பயன்படுத்தி வலுப்படுததுவதும் நோக்கமாக அமைந்தது.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969-74)**

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969-74) 1969ல் துவங்கியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மக்கள் நலனை பாதிக்காத அளவில் தேசிய உற்பத்தியை அதிக அளவில் விரிவுபடுத்த வேண்டும் என்பதேயாகும். எனவே பணவீக்கத்தைத் தடுப்பதற்கும், நுகர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்தவும் நாட்டு வருமானம் அனைவருக்கும் சம அளவில் செலவிடப்படுவதற்கும், அதனால் நாடு தன்னிறைவு பெறுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத்தின் மொத்த முதலீடு 24,882 கோடி ரூபாயாகும்.

**ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம் (1974-79)**

ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்டம் (1974-79) ‘வறுமையை ஒழிப்பதை’யே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன் ஒதுக்கீட்டுத் தொகை 39,303 கோடியாகும். இத்திட்டத்தில் ஆரம்பக் கல்வியை உயர்த்துவதற்கும், கிராம சுகாதார முன்னேற்றத்திற்கும், குடிநீர் வசதிக்கும், வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கும் அதிக அளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த ஐந்தாம் ‘ஐந்தாண்டுத் திட்டத்தை’ ஜனதாகட்சி 1977ல் பதவிக்கு வந்தபோது பறக்கணித்துவிட்டது. ஒவ்வொரு ஆண்டிலும் நடப்பிலுள்ள விலையை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஜனதா ஆட்சி’சுழலும் திட்டத்தை’ அறிமுகம் செய்தது. இத்தகைய முதல் ‘சுழலும் ஐந்தாண்டுத் திட்டம்’ (1978-83) குறித்த திட்டங்களை உருவாக்குவதற்கு முன்பே ஜனதா அரசு வீழ்ச்சியடைந்தது. அதன்பின் பதவிக்கு வந்த இந்திரா காங்கிரஸ் அரசு சுழலும் திட்டத்தை நீக்கிவிட்டது.

**ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்**(1980-85)தின். ஒதுக்கீட்டுத் தொகை 1.09.2917 கோடி ரூபாய் ஆகும். வளர்ச்சி விகிதம் 5.2%என தீர்மானிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டு திட்டத்தின் (1985-90) நோக்கங்கள் உணவு தானிய உற்பத்தி, வேலை வாய்ப்பபு, உற்பத்திப் பெருக்கம்

போன்றவைகளாகும். திட்ட ஒதுக்கீடு 3,48,148 கோடி ரூபாய் ஏழாம் திட்டம் 1990 முடிவுற்ற போதிலும், எட்டாம் திட்டம் உடனடியாக அமல் செய்யப்படவில்லை. ஆட்சிமாற்றம், நிலையற்ற அரசியல் சூழல் போன்றவற்றால் 1990-91-92 கால கட்டங்களில் ஓராண்டுத் திட்டங்கள் (1992-97) செயல்படுத்தப்பட்டது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் (1992-97) சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. தற்போது ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டம் (1997-2002) நடைமுறையில் உள்ளது.

இவ்வாறு கடந்த 50 ஆண்டு காலமாக இந்தியா தனது பொருளாதார முன்னேற்றத்தைப் பெற திட்டமிட்ட பாதையில் வலுவாகச் சென்று கொண்டிருக்கிறது. பொதுவாக ஏழ்மையை, நாட்டை விட்டு விரட்டுவது, எல்லா துறையிலும் தன்னிறைவு பெறுவதையே ஐந்தாண்டுத் திட்டங்கள் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளன. இயற்கையும், மக்களும் ஒத்துழைத்தால் இந்த ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் இந்தியா உலக நாடுகளிடையே உன்னதமான நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.

## உயர் கல்வி வளர்ச்சி

1854 முதல் 1882 வரை உயர்கல்வித்துறை நல்வளர்ச்சி பெற்றது. 1857ல் சென்னை, பம்பாய், கல்கத்தா, பல்கலைகழகங்கள் ஏற்படுத்துப்பட்டன. 1882ல் லாகூரில் ஒரு பல்கலைகழகம் உருவாயிற்று. பல மாநிலங்களில் “கல்வித்துறை” உருவாக்கப்பட்டது. 1870ம் ஆண்டு மேயோ பிரபுவின் காலத்தில் கல்வித்துறை மாநில அரசுத் துறையாயிற்று.

### ஹண்டர் கல்வித்துறை

1854ம் ஆண்டுக்குப் பின் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிபற்றி ஆய்ந்திடவும் ஏற்பட வேண்டிய மாற்றம் குறித்து அறிக்கை அளித்திடவும் ரிப்பன் பிரபு காலத்தில் 1882ல் “ஹண்டர் கல்விக் குழு” ஒன்று ஹண்டர் என்பாரின் தலைமையில் அமைக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கை அறிவிப்பதாவது: 1) கல்வி வளர்ச்சிக்குத் தடை ஏற்படாத வகையில் அரசின் கட்டுபாட்டிலுள்ள கல்வி நிறுவனங்கள் இந்தியர்களின் பொறுப்புக்கு மாற்றப்பட வேண்டும். 2) கல்லூரிகளுக்கு சாதாரண மற்றும் சிறப்பு மானியங்கள் அளிக்கப்பட வேண்டும். 3) கல்லூரிக்கட்டணம் குறித்தும், கல்வி உதவித் தொகை குறித்தும் பொது விதிகள் ஏற்படவேண்டும். 4) மொகம்மதியரின் கல்வி வளர்ச்சியில் தனிக்கவனம் வெலுத்தப்பட வேண்டும். 5) தொடக்கப்பள்ளிகள் அனைத்தும் அரசு கல்வி அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படவேண்டும். 6) மாநில அரசுகளின் வருவாயில் ஒரு பகுதி தொடக்கக் கல்விக்கென ஒதுக்கப்படவேண்டம். 7) உயர்நிலைப் பள்ளிகள் தனியாரின் பொறுப்பில் இயங்க வேண்டும்.

பொதுவாக ஹண்டர் கல்விக்குழு தாய்மொழிக் கல்வியையும் கல்வித்துறையில் தனியார் ஈடுபாட்டையும் இந்தியமயக் கல்விமுறையையும் தொழிற்கல்வி முறையையும் ஆதரித்தது எனக் கருதலாம்.

### கர்சனின் காலம்

கர்சன்பிரபுவின் காலத்தில் அரசின் கல்விக் கொள்கையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. மக்களின் எண்ணங்களை எடுத்தியம்பும் தலைவர்களை உருவாக்காது அவைத் தறைக்கான எழுத்தர்களை மட்டுமே உருவாக்கும் குறிக்கோளினைக் கொண்டதாக கல்வித்துறை இயங்கிடவே, அதனை மாற்றியமைக்க சர்தாமஸ் ராலே என்பாரின் தலைமையில் 1902ஆம் ஆண்டு "ராலே குழு" ஒன்றை அமைத்தார். அக்குழுவின் அறிக்கையை ஏற்ற கர்சன் 1904ஆம் ஆண்டு பல்கலைக் கழகச் சட்டத்தினை இயற்றினார். அதன்படி, 1. பல்கலைகழகங்கள் தேர்வு நடத்தும் பொறுப்போடு கல்வி அளிக்கும் பொறுப்பினையும் மேற்கொள்ள வேண்டும். 2. ஆட்சிப் பேரவை (Senate)உறுப்பினர் எண்ணிக்கையைக் குறித்து "தேர்தல் கோட்பாட்டினை"யும் புகுத்த வேண்டும். 3. பேராசிரியர்கள் இடம்பெறும் "ஆட்சிக்குழு(Syndicate)" அமைப்புக்குச் சட்டபூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். 4. பல்கரைகழகங்கள் செயல்படும் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும். 5. கல்வித்துறையின் விதிகளுக்கேற்ப செயல்படும் பள்ளிகளே அங்கீகரிக்கப்பட வேண்டும். கர்சனின் கல்விக் கொள்கை இந்திய மக்களின் நாட்டுப்பற்றை அழித்திடவும், பல்கலைகழகங்கள் அரசு அதிகாரிகளின் கட்டுபாட்டில் இயங்கும் தன்மை கொண்டதாக அமைந்திடவும் வழிவகுத்தது.

**உயர் கல்வியின் வளர்ச்சி:**

1913ஆம் ஆண்டின் அரசுத் தீர்மானமொன்று அரசின் உயர் கல்விக் கோட்பாட்டினைத் தெளிவுபடுத்தியது. ஒவ்வொரு மாநிலத்திலும்தனித்தனிப் பல்கலைகழகங்கள் உருவாவதை அரவு ஆதரித்தது. இக் கோட்பாட்டிற்கிணங்க 5 ஆண்டு காலத்திற்குள்ளாக காசி பல்கலைக்கழகம், உஸ்மானியா பல்கலைகழகம், அலிகார் பல்கலைக்கழகம் போன்ற பல்கலைகழகங்கள் அமைக்கப்பட்டன. செம்ஸ்போர்டு பிரபு காலத்தில் கல்கத்தா பல்கலைக்கழகச் சிக்கலை ஆராயவென "சேட்லர் குழு"( Sadler Commission) என அறியப்படும் "கல்கத்தா பல்கலைகழகக் குழு" ஒன்று 1917-இல் ஏற்படுத்தப்பட்டது. 1919-ல் அக்குழு அளித்த அறிக்கை உயர் கல்வி குறித்த அனைத்துச் சிக்கலையும் ஆராய்ந்தது. அவ்வறிக்கை அறிவித்ததாவது: 1) கல்கத்தா பல்கலைக் கழகத்துடன் இந்திய அரசு கொண்டுள்ள தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும் 2) மகளிர் கல்விக்கென தனியமைப்பு ஏற்பட வேண்டும். 3) தொழில் துறை, மற்றும் வேலை வாய்ப்புத் துறைக் கல்வி முறைகளில் மாற்றமும் சீர்திருத்தமும் ஏற்படவேண்டும். 4) இடைநிலைக் கல்வியில் தாய்மொழியும் உயர் கல்வியில் ஆங்கிலமும் பாடமொழியாக இடம்பெற வேண்டும். இக்குழுவின் அறிக்கையொட்டி 1920ல் டாக்கா, லக்னோ பல்கலைகழகங்களும் 1921ல் அலகாபாத் பல்கலைகழகக் கழகமும் 1922ல் டில்லி பல்கலை கழகமும், நிறுவப்பட்டன. இக்காலத்தேதான் வணிகமும், தொழிற் பயிற்சியும் பல்கலைகழகப் பாடங்களாக இடம் பெற்றன. 1919ம் ஆண்டின் இந்தியச் சட்டப்படி கல்வித்துறை மாற்றப்பட்ட துறையாகி இந்திய அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டது. கல்வி வளர்ச்சியில் இந்திய அமைச்சர்கள் அதிகக் கவனம் செலுத்தினர்.

**ஆதாரக் கல்வி**

தேசிய நோக்கில் கல்விச் சிக்கல் குறித்து ஆராயவென கல்வி நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றினை 1936ல் காந்திஜி அமைத்தார். அவர் மேற்கொண்ட தொடர்நா முயற்சியின் விளைவாக “ஆதாரக்கல்வித் திட்டம்” உருவாயிற்று. இம்முறையில் மாணவர்கள் தொழிற் மூலம் கல்வி பெறுவர். நூல் நூற்றல், நெசவு, தச்சுவேலை போன்ற கைத்தொழில்கள் பள்ளியில் இடம் பெறும் கல்வியின் மையமாகத் தொழிவே இடம்பெறும். புதிநான்கு வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்விஅளிக்கப்பட வேண்டம். இத்திட்டம் தன்னிறைவுக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். உண்மை, அழகு, நற்றன்மை, நீதி போன்ற நல்ல நெறிமுறைக் கோட்பாடுகளை வலியுறுத்தும். இத்திட்டம் “வார்தா கல்வித்திட்டம்” எனவும் அறியப்படும்.

**கல்விக் குழுக்கள்**

1943இல் இந்திய அரசின் கல்வித்துறை ஆலோசகராக இருந்த சர் ஜான் சார்ஜன்ட் என்பாரின் தலைமையில் ஒரு கல்விக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு அளித்த திட்டமே “சார்ஜன்ட் கல்வித்திட்டம்” ஆகும். அதன்படி (1) 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்க ஆவண்டும். (2) ஆசிரியர் பதவிக்கான தேர்வுமுறை, தகுதி, பயிற்சி, பணிநிலை போன்ற ஏற்பாடுகள் வரையறுக்கப்படவேண்டும். (3) கீழ் நிலை ஆதாரப் பள்ளிகள், மேல்நிலை ஆதாரப்பள்ளிகள் என்ற இருநிலை ஆதாரப்பள்ளிகள் தொடக்கக் கல்விக்கென ஏற்படவேண்டும். (4) மகளிரையே ஆசிரியைகளாகக் கொண்ட பாலர் கல்விக்கூடங்கள் அமையக்கப்பட வேண்டும் (5) நாடு தழுவிய அளவில் தேசிய இளைஞர் இயக்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இந்திய விடுதலைக்குப் பின் பல்கலைக் கழகக் கல்விநிலை பற்றி ஆராயவென “இராதாகிருஷ்ணன்” குழு ஒன்று 1949-இல் ஏற்படுத்தப்பட்டது. ஓராண்டுக்கால ஆய்வுக்குப்பின் பல்கலைக் கழகங்களின் அமைப்பு விதிகள், கற்பிக்கப்படவேண்டிய பாடங்கள், பாடமொழி, போதனைத்தரம் குறித்து ஓர் அறிக்கையை அளித்தது அக்குழு. அவ்வறிக்கையில் காண்பபட்டவையாவன: 1. சுாந்திநிகேதள், ஜமியா மில்லியா போன்ற கல்வி நிறுவனங்களின் அமைப்பில் ஊரகப் பல்கலைகழகங்கள் அமைத்தல், 2. கல்விக்கு அதிக நிதி ஒதுக்குதல், மாணவர்களின் உதவித் தொகையையும், மானியத்தையும் அதிகரித்தல் 3. ஆங்கில மொழியை அகற்றி தாய்மொழிக்கு இடமளித்தல். 4. இடைநிலை உயர்நிலைக் கல்வி நிறுவனங்களில் இருபாலரும் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்தல்.

**பல்கலைக்கழக மானியக்குழு**

பல்கலைகழக மானியக்குழு ஒன்றினை மைய அரசு அமைத்திடும் வகையில் பல்கலைக் கழக மானியக் குழச் சட்டம் ஒன்றினை இந்திய நாடாளுமன்றம் 1956ல் நிறைவேற்றியது. அக்குழு ஒரு தலைவரையும், ஒன்பது உறுப்பினர்களையும் கொண்டிருக்கும். பல்வேறு பல்கலைக்கழகங்களுடனும் தொடர்பு கொண்டு கல்வியின் தரம், தேர்வுமுறை, ஆராய்ச்சி ஆகியன குறித்து அக்குழு முடிவெடுக்கும் பல்கலைக் கழகங்களின் கல்வித் தரத்தை உயர்த்தமாறு ஆலோசனை அளிக்கவும் அவற்றின் நிதித்தேவையினை ஆராய்ந்து

மானியம் வழங்கவும் உரிமை பெற்றுள்ளது. புகுப் பல்கலைக்கழகங்களைத் தோற்றுவிக்கவும் பல்கலைக் கழகங்களின் செயல் முறைகளை விரிவாக்கவும் அக்குழுவின் அனுமதி தேவை. பல்கலைக் கழக மானியக் குழுவின் விதிமுறைகளுக்கேற்ப டிசயல்படத் தவறும் பல்கலைக் கழகங்களுக்கு மானிய உதவியையும் நிறுத்தலாம்.

விடுதலைக்குப்பின் கல்வி வளர்ச்சிக்கென பல குழுக்கள் அமைக்கப்பட்டன. மையவரசின் முயற்சி காரணமாக நாடு முழுவதும் ஒரே சீரான கல்விமுறை செயல்படத் தொடங்கியுள்ளது. கல்வித்துறை வளர்ச்சி நோக்கில் எய்திட்ட சாதனைகளைவிட நிறைவேற்ற வேண்டியசெயல் முறைகளே அதிகம் உள்ளதெனக் கருதலாம். இந்திய ஜனநாயகத்தின் வெற்றி எதிர்காலக் கல்வித்துறை வளர்ச்சியைப் பொறுத்தே உள்ளது எனலாம்.

## இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை

இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகநாடுகளின் உறவு முறையில் மிகுதியும் சிக்கல்களும் குழப்பங்களும் நிறைந்துள்ளன. போர் அறிவிப்பு எதுவுமின்றிப் போர் தொடங்கி நிறுத்தப்படுகிறது. ஒரு பெரும் போரின் போது நாடுகளிடையே இணக்கம் ஏற்பட அரசியல் வேறுபாடுகளோ பொருளாதாரக் கொள்கை மாறுபாடுகளோ தடையாக இருப்பதில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பின் ரஷ்யா அமெரிக்கா ஆகிய இரு நாடுகளே உலக வல்லரசுகளாக ஒருவெடுத்தன. ரஷ்யாவின் தலைமையிலான பொதுவுடைமை நாடுகள் தனியொரு அரசியல்- பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு முகாமாகவும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைமையிலான முதலாளித்துவ மேலைநாடுகள் தங்களுக்குந்த அரசியல்-பொருளாதாரக் கோட்பாடுகளின் அடிப்படையில் மற்றொரு முகாமாகவும் பிரிந்தன. தங்களின் அரசியில்-பொருளாதாரக் கோட்பாடுகளே உலகம் தழுவிய அளவில் இறுதி வெற்றிகான வேண்டுமென்ற நோக்கில் இரு முகாம்களும் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாயின. போரின் பேரழிவைக் க்ணட பின்னர் இரு முகாம்களும் படை வலிமையைப் பயன்படுத்திப் போரில் ஈடுபடாது. பெரும் நாசத்தை விளைவிக்காது. ஒன்றையொன்று அச்சுறுத்தியும், நெருக்கடி நிலையை உருவாக்கியும், ஒருவகைப் போர்ச் சூழலை உருவாக்கின. இவ்வகையான மறைமுகப் போர் மிரட்டல் போர் அல்லது கெடுபிடிப்போர் என அறியப்படும். இக்கெடுபிடிப்போர் நிலை நீடித்து ஒரு வேளை உண்மையான போரே வெடிக்குமாயின் தங்களைக் காத்துக் கொள்ள விரும்பிய இரு முகாம்களும் இராணுவக் கூட்டமைப்புகளையும் உருவாக்கின. மேலைநாடுகளின் “சீட்டோ”(Seato)“நோட்டோ”(Nato)“சென்டோ” (Cento)ஆகிய இராணுவக் கூட்டமைப்புக்களும் ரஷ்யச் சார்பு நாடுகளின் “வார்சா ஒப்பந்தம்”(Warsaw Pact)
ஏன்ற இராணுவக் கூட்டமைப்பும் அவ்வகையைச் சார்ந்தனவே.

**நடுநிலைக் கொள்ளை:**

வளர்ச்சி பெற்ற நாடுகளிடையே தோன்றிய ரஷ்ய-அமெரிக்க முகாம் பிரிவினையும் இராணுவக் சுட்டமைப்புக்களும் வல்லரசுகளின் அணுகுண்டு உற்பத்திப் பெருக்கம்

உலகநாடுகளின் அமைதிக்கு ஊறு விளைவித்தன. புதிதாக விடுதலை பெற்ற நாடுகளைத் தங்கள் முகாம்களில் விரிவும் வலிவுமே அடுத்த போருக்கான ஆயத்த நிலை எனக்கண்ட ஜவஹர்லால்நேரு உலக அமைதி கருதியும் இந்தியாவின் பாதுகாப்புக் கருதியும் இந்திய மக்களின் வளமான வாழ்வு கருதியும் சிறப்புமிகு வெளியுறவுக் கொள்கையை உருவாக்கினார். இருபதாம் நூற்றாண்டின் அரச தந்திரச் சாலையில் அப்போதுதான் காலடி எடுத்து வைத்த நாடு இந்தியா அரசதந்திரச் செயல்பாட்டில் இந்தியர் எவருக்கும் ஆங்கிலேயர்கள் பயிற்சி அளித்ததில்லை. ஆயினும் உலக வரலாற்றினை ஆராய்ந்தும் உலகப் பயணங்களை மேற்கொண்டும் அனைத்துலக அரசியல்-பொருளாதாரக் கோட்பாடுகளை அறிந்தும் சிறப்பு மிகு அனுபவம் பெற்றிருந்த நேரு தனது தாயகத்துக்கென தரணி புகழ்ந்திடும் 'நடுநிலைக் கொள்கை' என்னும் புதியதோர் வெளியுறவுக் கொள்கையை உருவாக்கினார். அக்கொள்கை நடுநிலைமை எனவும் கூட்டுச்சேராமை எனவும் வழங்கப்படுகிறது.இக்கோட்பாட்டின்படி எம்முகாமுடனும் இந்தியநாடு இணையாது. இருமுகாம்களிடையே போர் ஏற்படாது தடுக்கவும் உலக அதைமிக்கு ஆபத்து நேராதிருக்கவும் இந்தியா பணியாற்றும். அவரது கொள்கை விளக்கப்ப டிநன்மைக்கும் தீமைக்கும்மிடையே செயலற்றிருப்பதல்ல நடுநிலைமை. நல்லன எவை, தீயனஎவை என ஆராய்ந்து தீர்ப்பளிப்பதே நடுநிலைமை. இரு முகாம்களுக்குமிடையே போர் ஏற்படுமானால் அதில் தலையீட்டு அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட தேவைப்படும். மிரட்டல் போர் நீடித்திருந்த சூழ்நிலையில் எம்முகாமுடனும் சேருவதாயினும் அது இந்தியாவை போரை நோக்கி இட்டுச் செல்வதாகும் எனக் கருதினார். பொருளாதார வளர்ச்சியிலும் படை வலிமையிலும் போதுமான வளர்ச்சி பெறாதிருப்பினும் உலக அமைதிக்கான பணியினைத் தொடர்ந்திட முடியும் என அவர் நம்பினார். நடுநிலைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் உலகநாடுகளுடனான நல்லுறவை இந்தியா உருவாக்கி கொண்டது.

**இங்கிலாந்துடன் உறவு**

இந்தியா விடுதலையடைந்தவுடன் எழுந்த வினா காமன்வெல்த்தில் தொடர்ந்து உறுப்பினராக நீடிப்பதா, இல்லையா, என்பதே. இங்கிலாந்தும் அதன் குடியேற்ற ஆதிக்கநாடுகளும் தங்களின் பொது நலனை முன்னிட்டு உருவாக்கிக் கொண்ட அமைப்பே காமன்வெல்த். இந்தியாவில் விடுதலைக்கும் குடியரசுத் தன்மைக்கும் எவ்வகையிலும் ஊறு நேராது என உறுதியாகத் தெரிந்த பின்னர் காமன்வெல்த் (Commonwealth) இந்தியா தொடர்ந்து நீடிக்கும் என்றார் நேரு. 1949ல் இங்கிலாந்து தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்தபோது இந்தியாவவும் தனது நாணயத்தின் மதிப்பைக் குறைத்தது. காமன்வெல்த் உறவும் ரூபாய்-ஸ்டெர்லிங் நாணயத்தொடர்பும் இந்தியாவின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. சூயஸ்கால்வாய் விவகாரத்திலும் காங்கோ விவகாரத்திலும் இங்கிலாந்தின் கோட்பாடுகளுக்கு எதிராக இந்தியக் கொள்கை அமைந்திருந்த போதும் கோவாவின் மீது இந்தியா படையெடுத்த போது இங்கிலாந்தின் கொள்கை மாறுபட்டிருந்த போதும்

இருநாடுகளுக்குமிடையே உறவு நிலையில் பெரும் மாற்றம் ஏற்படவில்லை. 1962ல் சீனா இந்தியாவின் மீது படையெடுத்த போது இங்கிலாந்து இந்தியாவை ஆதரித்தது.

**அமெரிக்காவுடன் உறவு** :

முதல் உலகப் போர் வரை உலக அரங்கிலிருந்து ஒதுங்கி இருந்த நாடு அமெரிக்க ஐக்கிய நாடுகள். இந்திய விடுதலையைத் தொடக்கத்திலருந்தே அந்நாடு ஆதரித்து வந்துள்ளது. அதன் தலைமையில் செயல்படும் “நேட்டோ”, “சீட்டோ”, “சென்டோ” ஆகிய இராணுவக் கூட்டமைப்புக்கள்’ பொதுவுடைமைக் கோட்பாட்டுக்கு எதிரான அமைப்புக்களே எனக் கூறப்படினும் அதனை இந்தியா ஆதரிக்கவில்லை. நேருவின் நடுநிலைக் கொள்கையையோ, பஞ்சசீலக் கொள்கையையோ அந்நாடு ஆதரித்ததில்லை. கொரியாவிலும், வியட்நாமிலும் அமெரிக்கப் படையினர் ஆடுபடுத்தப்படட்டதை இந்தியா வன்மையாகக் கண்டித்தது. இத்தகைய வேறுபாடுகளுக்கிடையேயும் உலகின் இருபெரும் ஜனநாயக நாடுகளுக்கிடையேயான உறவு நிலை சீர்கேடு அடையவில்லை. இந்தியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கான பொருளாதார உதவியையும், அந்நாடு தொடர்ந்து அளித்து வந்துள்ளது. இந்தியா-பாகிஸ்தான் போர் ஏற்படும்போதெல்லாம் இலு நாடுகளின் உறவு நிலையில் சிறிது சிக்கல் எழுவதுண்டு. ஆயி-னும் இருநாடுகளுக்குமிடையே நட்புறவு நீடிக்கிறது. சீனப்போரின் போது இந்தியாவை முற்றிலும் ஆதரித்து நின்ற நாடு அமெரிக்காவே.

**ரஷ்யாவுடன் உறவு:**

ஜோசப் ஸ்டாலின் காலத்தில் இந்திய ரஷ்ய உறவு நிலை ஆழவேர் விட்டிருந்ததாகக் கூற முடியாது. இரு வேறு அரசியல் முறைகளைக் கொண்டிருந்த இந்தியாவும் ரஷ்யாவும் நெருங்கிய நட்புக்கொள்ள இயலாது என்றே கருதப்பட்டது. ஆயினும் ஸ்டாலின் மரணத்திற்குப்பின் ரஷ்யத் தலைவரான குரச்சேவின் காலத்தில் இந்திய-ரஷ்ய நட்புறவு நெருக்கம் கண்டது. இந்தியாவின் நடுநிலைக் கொள்கையையும் பஞ்சசீலக் கொள்கையையும் ஆதரித்த முதலாவது வல்லரசு ரஷ்யாவே. ஊலக அமைதி குறித்து இரு நாடுகளும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. சீனா பொதுவுடமை நாடாக இருந்திட்டபோதும் அதன் இந்தியப் படையெடுப்பைக் கண்டித்தது ரஷ்யா. புாகிஸ்தானுடனான சிக்கலில் எப்போதும் இந்தியாவையே ஆதரித்து வந்துள்ளது. நாடுகளுக்கிடையேயான நட்புறவுக்கு இலக்கணம் வகுத்திருப்பது இந்திய-ரஷ்ய நட்புறவே.

**பாகிஸ்தானுடன் உறவு:**

உலக இஸ்லாமிய நாடுகளில் பெரிது பாகிஸ்தான். ஓர் இஸ்லாமிய நாடாக உருவாகி, அஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இயங்குவது இந்நாடு. சமயம் சாராமையும் சம தர்மமுமே இந்தியாவின் அடிப்படைக் கோட்பாடுகள். இந்தியாவுடனான பாகிஸ்தானிய உறவு சந்தேகம், வெறுப்பு, பொறாமை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. விடுதலைப் போரின் போதும் விடுதலைக்குப் பின்னரும் வெடித்திட்ட இனக்கலகங்கள் பசுமையாகவே உள்ளன. காஷ்மீர் சிக்கல், சிந்து நீர்ச்சிக்கல் போன்ற சில சிக்கல்கள் இருநாடுகளின் உறவில் பிளவினை உருவாக்கியுள்ளன. நேருவின் ஆட்சிக் காலத்தில் இருநாடுகளும் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை.

**சீனாவுடன் உறவு:**

1959ஆம் ஆண்டு வரை இந்திய-சீன நட்புறவு திறந்தமனம், நட்புத் தன்மை கொண்டதாகவே அமைந்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபையில் சீனா இடம் பெற்றிடப் பெரிதும் முயன்றது. இரு நாடுகளுக்குமிடையே கலை, பண்பாடுக் குழுக்களின் பரிமாற்றம் நடைபெற்றது. இந்தோ-சீனா அரசியல் சிக்கல் குறித்து ஜெனிவா மாநாடு ஒன்று 1954ல் கூட்டப்பட்ட போது சீனப் பிரதிநிதியாக அதில் கலந்து கொண்ட அந்நாட்டின் தலைமை அமைச்சா் சூ-யென்-லாய் இந்தியாவிற்கு வருகை புரிந்தார். நேருவும், சூ-யென்-லாயும் டில்லியில் கலந்துரையாயெ பின் நாடுகளுக்கிடையேயான நட்புறவினையேயும் உலக அமைதியையும் குறிக்கோள்களாகக் கொண்ட “பஞ்சசீலக் கொள்கை” உருவாயிற்று. பஞ்சசீலக் கோட்பாடுகளாவன: 1. நாடுகளுக்கிடையேயான எல்லைகளையும் அமைப்பினையும் மதித்தல். 2. பிற நாடுகளின் மீது ஆக்கிரமிப்புச் செய்யாதிருத்தல் 3. பிற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாதிருத்தல் 4. நாடுகளுக்கிடையே சமத்துவ அடிப்படையில் ஒத்துழைப்புக் காணுதல் 5. அமைதியுடன் கூடி வாழுதல் பாருலகின் அமைதிக்கும் வளர்ச்சிக்கும் பஞ்சசீலக் கொள்கையே பெரிதும் பயன்படும் எனப்பலரும் நம்பினர். ஆனால் 1962ல் நடைபெற்ற சீனப்படையெடுப்பு அத்தகைய நம்பிக்கையைச் சிதறடித்தது.